
புதிய சட்டப் பேரவை - தலைமைச் செயலக வளாகம் திறப்பு விழா - சிறப்பு மலர்

2010



புதிய சட்டப் பேரவை - தலைமைச் செயலக வளாகத்தின் தோற்றம்



வடிவமைத்து,
அச்சிட்டு
வழங்கியோர் : ஈகிள் பிரஸ், சென்னை– 600 013.


புதிய சட்டப் பேரவை - தலைமைச் செயலக வளாகம் திறப்பு விழா - சிறப்பு மலர்

13-3-2010

ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் மைய நோக்க விளக்கப் பாடல்

முதலமைச்சர் கலைஞர்



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் –
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் –
உழைத்து வாழ்வோம்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!

போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!


அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி –
ஓதி வளரும் உயிரான உலக மொழி –
நம் மொழி – நம் மொழி – அதுவே
செம்மொழி – செம்மொழி – நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!



''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''



திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல்
குடியரசுத் தலைவர்




டாக்டர் மன்மோகன் சிங்
பாரதப் பிரதமர்



திருமதி சோனியா காந்தி
ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்




மேதகு திரு. சுர்ஜித் சிங் பர்னாலா
ஆளுநர்




மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி
முதலமைச்சர்



பெருந்தலைவர் திரு. கே. காமராஜ்
முன்னாள் முதலமைச்சர்



பேரறிஞர் திரு. சி.என். அண்ணாதுரை
முன்னாள் முதலமைச்சர்



மக்கள் திலகம் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்
முன்னாள் முதலமைச்சர்



மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்
பேரவைத் தலைவர்



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்
பேரவை முன்னவர்



மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்
துணை முதலமைச்சர்



மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி
பேரவைத் துணைத் தலைவர்



செல்வி ஜெ ஜெயலலிதா
எதிர்க்கட்சித் தலைவர்

தமிழ்நாடு அமைச்சரவை – 13–5–2006



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்): திரு. பரிதி இளம்வழுதி, திரு. இ. பெரியசாமி, திரு. கே.என். நேரு, திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. மு.க. ஸ்டாலின், பேராசிரியர் க. அன்பழகன், மேதகு திரு. சுர்ஜித் சிங் பர்னாலா (ஆளுநர்), கலைஞர் மு. கருணாநிதி (முதலமைச்சர்), திரு. ஆற்காடு நா. வீராசாமி திரு. கோ.சி. மணி, திரு. துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. எ.வ. வேலு

நிற்போர் (இடமிருந்து வலம்): திரு. உ. மதிவாணன், திருமதி. ஆ. தமிழரசி, டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரு. என். செல்வராஜ், திரு. சி.நா.மீ. உபயதுல்லா, திரு. என் கே கே பி. ராஜா, திரு. தா.மோ. அன்பரசன், திரு. சுப. தங்கவேலன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. கே.ஆர். பெரியகருப்பன், திரு. தங்கம் தென்னரசு, திரு. டி.பி.எம். மைதீன்கான், திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், திருமதி பி. கீதா ஜீவன், திரு. கே.பி.பி. சாமி, திரு. க. ராமச்சந்திரன்



सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA

MESSAGE

I am happy to learn that the new building complex of the Tamil Nadu Legislative Assembly is being inaugurated on March 13, 2010.


In a democratic nation, members of the Legislative Assemblies represent the will of the people. The people look-up to their representatives for articulating their concerns and meeting their aspirations. Therefore, MLAs are a link between the people and the Government of the state. I am confident that the Legislative Assembly will continue to uphold the true spirit of democracy and fulfill the aspirations of the people.

On this occasion, I extend my greetings and felicitations to all members of the Assembly and wish the event every success.

Pratibha Patil

(Pratibha Devisingh Patil)

New Delhi
February 15, 2010



सत्यमेव जयते

उप-राष्ट्रपति, भारत

VICE-PRESIDENT OF INDIA

MESSAGE

I am pleased to know that a new Complex of the Tamil Nadu Legislative Assembly is being inaugurated on 13th March, 2010 and a commemorative Souvenir is being published on this occasion.


I am confident that this new Complex of the Tamil Nadu Legislative Assembly would be more aesthetic and spacious and would facilitate legislative business.

My best wishes for the success of the inauguration ceremony and the commemorative Souvenir.

(M. HAMID ANSARI)

New Delhi

10th February, 2010



सत्यमेव जयते

प्रधान मंत्री

Prime Minister

MESSAGE

I am glad to know that a New Legislature Complex of the Tamil Nadu Assembly is being inaugurated on 13 March, 2010. The Tamil Nadu Assembly has been a remarkable nursery for legislators and parliamentarians. It has nurtured great patriots and nation-builders like C. Rajagopalachari, K. Kamaraj, C. Annadurai, C. Subramaniam, M.G. Ramachandran and M. Karunanidhi. I hope that the Tamil Nadu Assembly will carry on its glorious tradition of informed debate and its role as the forum for the expression of the will of the people.

On this solemn occasion, I convey my greetings to all those who were associated with the new Complex.

Manmohan Singh

(Manmohan Singh)


New Delhi

20 February, 2010

INDIAN NATIONAL CONGRESS

ALL INDIA CONGRESS COMMITTEE

24, AKBAR ROAD, NEW DELHI - 110 001



MESSAGE

On the auspicious occasion of the opening of the new Legislative Assembly and Secretariat Complex in Chennai, I send my warm felicitations to the Chief Minister Thiru M Karunanidhi, the honourable Members of the Legislative Assembly and the people of Tamil Nadu.

The new Legislative Assembly complex is, of course, a magnificent symbol of a vibrant and modern democracy. But it is also a pioneering project which I hope will serve as an inspiration for architectural projects in other parts of the country. Its design was chosen after a global selection process, and it is a fine example of green architecture in the way it conserves use of energy and water, without compromising on the well-being and comfort of all those who use the building. Equally impressive is the imaginative and creative way in which the building draws on classical Tamil architecture and translates it into the idioms of the 21st century.

From the very beginning of the conception of the project, it is Chief Minister Thiru M Karunanidhi's close personal interest, input and supervision that have resulted in this superb new addition to Tamil Nadu's rich architectural heritage, in which not just the people of Tamil Nadu but all Indians can take justifiable pride.

(SONIA GANDHI)
President

New Delhi
February 26, 2010



सत्यमेव जयते

अध्यक्ष, लोक सभा
SPEAKER, LOK SABHA

New Delhi
February, 2010

MESSAGE

I am glad to learn that a new Legislature Complex has been constructed for Tamil Nadu and that the Assembly Secretariat is bringing out a Souvenir to mark the opening of the Complex on 13 March 2010.

Tamil Nadu has a long history and vibrant tradition of legislative institutions. Its Legislature has been instrumental for enacting several path-breaking legislations helping to bring about remarkable changes in the society. Its Assembly has also produced many Statesmen and leaders of stature for the State and the country. I hope the new Assembly complex will also come to be known for such unique and distinctive accomplishments in the service of the people of the State and of the country at large.

I extend my congratulations and best wishes to the Government and the people of Tamil Nadu on this occasion.

Meira Kumar (Smt.)



26th February, 2010

MESSAGE

It is a great occasion that the newly constructed complex of the Tamil Nadu Legislative Assembly in Chennai is to be inaugurated on 13th March 2010 with the participation of Hon'ble Prime Minister of India, Dr. Manmohan Singh, the Chairperson of UPA, Tmt. Sonia Gandhi, the Chief Minister and other dignitaries and a souvenir is being brought out in commemoration of this historic event.

In Tamil Nadu, the Legislative Assembly has a historic past, debates and discussions are held here in the true spirit of democracy. Many leaders and policies have emerged out of this great institution and contributed to the growth of the nation.

The efforts to have such a great institution by Hon'ble Chief Minister of Tamil Nadu, Dr. Kalaignar M. Karunanidhi, through his initiatives, dynamic efforts and personal attention towards the construction of this aesthetic and modern complex for the Tamil Nadu Legislative Assembly deserves commendation. I am sure, this will go into the annals of history of modern India and Tamil Nadu in particular.

My warm felicitations to Hon'ble Chief Minister of Tamil Nadu, Dr. Kalaignar M. Karunanidhi, Hon'ble Speaker of Tamil Nadu Legislative Assembly, Thiru R. Avudaiappan and to the Members of the Tamil Nadu Legislative Assembly on this historic occasion.

I record my sincere thanks to Hon'ble Prime Minister of India and the Chairperson of UPA for their consent to grace the occasion.

I wish the function and the publication of the Special Commemorative Souvenir, a grand success.

(SURJIT SINGH BARNALA)
GOVERNOR OF TAMIL NADU



அமைச்சர்,
இரசாயனம் மற்றும் உரத்துறை
இந்திய அரசு
சாஸ்திரி பவன், புது தில்லி – 110115

सत्यमेव जयते

நாள் : 04.02.2010

வாழ்த்துச் செய்தி


தமிழகத்தில் ''சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம்'', சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மிகப் பிரம்மாண்டமான வடிவமைப்பில் புதிதாகக் கட்டப்பட்டு, 13–3–2010 அன்று திறந்து வைக்கப்படுவதும், அதனையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடுவதும் அறிந்து மெத்தவும் மகிழ்கிறேன்.

உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் உருவாக்கியுள்ள கலைச் செல்வங்கள் என்றும் காலத்தை வென்று நிற்கவல்லவை; அவர் புகழ்பாடி நிற்கும் அரிய வேலைப்பாடுகள் கொண்டவை; அவற்றுள், வள்ளுவர் கோட்டம், சிலப்பதிகாரக் கலைக்கூடம் போன்ற கலைநயம் கமழும் கட்டடங்கள்; அம்பேத்கர் மணிமண்டபம் முதலான பல எழில் குலுங்கும் மண்டபங்கள்; பேறிஞர் அண்ணா நினைவிடம், மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் போன்ற பல நினைவகங்கள்; முக்கடல்கள் சங்கமிக்கும் குமரிமுனையில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை முதலான எண்ணற்ற சான்றோர், முடிமன்னர், புலவர் பெருமக்களின் திருவுருவச் சிலைகள்; பல்வேறு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள்; நூற்றுக்கணக்கான மேம்பாலங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. அனைத்திற்கும் முத்தாய்ப்பாக! மணிமகுடமாக! மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உருவாக்கியுள்ள உன்னதமான கட்டடம், ''சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம்!'' இது, இன்று மட்டுமல்ல; எதிர்கால வரலாறும் போற்றிப் பாராட்டும் கலையோவியம்!

மகத்தான இந்தக் கலைக்காவியத்தை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் புகழ்சால் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில், சான்றாண்மைமிக்க இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் திறந்து வைப்பது தமிழ் மக்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் திருப்பணியாகும்.

தமிழ்நாடு சட்டப் பேரவை – தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழா தமிழகத்தின் புகழ்பாடி, எழுச்சியுடன் நிகழ என் இதயம் கனிந்து வாழ்த்துகிறேன்.

(மு.க. அழகிரி)



17, GREENWAYS ROAD,
CHENNAI - 600 028.

MESSAGE

I am happy to learn that the Government of Tamil Nadu is going to have a new Legislative Assembly Building, and a new Secretariat. The present assembly building, I am told, is inadequate in space and because of the vast expansion of volume of work, it has necessitated for construction of a new building.

The Tamil Nadu Legislative Assembly has passed many landmark resolutions in the present Assembly Building, mainly for the upliftment of the weaker sections, to name a few, Equal Rights in the property for Women, Reservation for the Backward Classes in the Educational Institutions, etc.

I hope the new assembly building will also pave way for passing many innovative resolutions for the betterment of the poor and downtrodden and for the progress of the people of Tamil Nadu in general.

I wish the function a grand success.

Place : Chennai
Date : 06.02.2010

(H.L. GOKHALE)
CHIEF JUSTICE



பொருளடக்கம்

கட்டுரைகள்

வரலாற்றுப் பொன்னேட்டில் வைரமுத்திரைகள் பதிக்கட்டும் தமிழ்நாடு சட்டப் பேரவை - தலைமைச் செயலக வளாகம்!

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி
தமிழக முதலமைச்சர்

தமிழகத்தின் தலைநகர் சென்னை மாநகரில் – ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், "தமிழ்நாடு சட்டப் பேரவை – தலைமைச் செயலக வளாகம்" புதிதாகக் கட்டப்பட்டு இன்று திறக்கப்படுகிறது. இத்திருநாளை என் வாழ்வில் இன்பம் அளித்திடும் நன்னாளாக எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

"நெஞ்சுக்கு நீதி" நூலின் முதல் பாகத்தை எழுதும்போது, அதன் தொடக்கத்தில் எனது வாழ்வில் மகிழ்ச்சி அளித்த நாள்களாக நான் பிறந்த நாள், என் திருமண நாள், அறிவாசான் பெரியாரைச் சந்தித்த நாள், அருமைத் தலைவர் அண்ணா அவர்களைச் சந்தித்த நாள், மொழி காக்கும் போரில் முதன்முறையாகச் சிறையேகிய நாள் அத்தனையும் எனக்கு இன்பம் தருபவை; நினைந்து மகிழத்தக்கவை எனக் குறிப்பிட்டுள்ளதை இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

அதன்பின், எனக்கு மகிழ்ச்சி அளித்திடும் அத்தகைய நாள்களின் பட்டியலில் பல்வேறு நாள்கள் இடம் பெற்றிருந்தாலும், அந்த வரிசையில் மற்றொரு பொன்னாளாக அமையும் நன்னாள் என்றே இந்நாளைப் போற்றுகிறேன்!

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பிடும் பணியில் ஈடுபட்டதற்காகப் புதுவையில் சதிகாரர்கள் தாக்கி, நான் செத்துவிட்டதாகக் கருதி, என்னைச் சாக்கடையில் தூக்கி வீசிவிட்டுச் சென்றிட அச்சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்குத் தமது கையாலேயே மருந்திட்டு ஈரோட்டுக் குருகுலத்திற்கு அழைத்துச் சென்று எனக்குப் பகுத்தறிவுப் பாடம் புகட்டிய தந்தை பெரியார்! 1953இல் கல்லக்குடி போராட்டக் குழுவின் தலைவனாகவும், 1963இல் மொழிப் போரின் தளபதியாகவும் என்னை நியமித்து; 1967இல் பொதுப் பணித் துறை அமைச்சராக உயர்த்தி அழகுபார்த்து அறிவுரைகள் வழங்கி, அரவணைத்து வழிகாட்டி நெறிப்படுத்தித் தமிழ் மொழி, இனமான உணர்வோடு தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்திட அரசியல் உலகில் என்னை ஆற்றுப்படுத்திய என் ஆசான் – தமிழகத்தில் ஆயிரம் ஆண்டு இருட்படலத்தை விலக்கி, நாட்டின் எல்லாத் துறைகளையும் புதுமைக்கு ஏற்ப ஒரேயடியாகப் புரட்டிப் போட்ட மாமேதை பேரறிஞர் அண்ணா! – ஆகியோரின் வழியில் எனது ஜனநாயகப் பணிகள் வடிவெடுக்கத் தொடங்கியதை, இவ்வேளையில் பெருமிதத்தோடு நினைவு கூர்கிறேன்.

1956 இல் திருச்சி மாநகரில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் கழகம் தேர்தலில் போட்டியிடும் என முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1957 முதல் இதுவரை பதினோரு முறை சட்டப் பேரவைத் தேர்தல்களில் போட்டியிட்ட எனக்குத் தமிழக மக்கள் பேராதரவு அளித்து, போட்டியிட்ட தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி தேடித் தந்தனர்.

1952 ஆம் ஆண்டு முதல் சென்னை அரசினர் தோட்டத்தில், நடைபெற்று வந்த சட்டப் பேரவை, 1957 ஆம் ஆண்டு முதல் புனித ஜார்ஜ் கோட்டையில் செயல்படத் தொடங்கியது.

அந்தக் காலகட்டத்தில்தான், குளித்தலை சட்டப் பேரவை தொகுதி உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்டு, முதன்முதலாகப் பேரவைக்குள் காலடி எடுத்து வைத்தேன். அப்போது எனது குளித்தலை தொகுதியைச் சேர்ந்த நங்கவரத்தில் விவசாயிகளின் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. அப்போராட்டம் குறித்து கன்னிப் பேச்சாக சட்டமன்றத்தில் நான் ஆற்றிய உரை விவசாயிகளின் உரிமை முழக்கமாக எதிரொலித்ததை நாடறியும். அதுமுதல், தமிழகச் சட்டப் பேரவையில் நடைபெற்ற அனைத்து விவாதங்களிலும் கலந்துகொண்டு ஏழை எளிய தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின்

முன்னேற்றத்திற்காக, குறிப்பாக விவசாயிகள், நெசவாளர்கள், பல்வகைத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், காவலர்கள், மகளிர், ஊனமுற்றோர், நலிந்தோர் என ஒவ்வொரு பிரிவினரின் முன்னேற்றத்திற்காகவும் வாதாடியுள்ளேன்.

1967 இல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, 'சென்னை மாநிலம்' என்ற பெயர், "தமிழ்நாடு" என மாற்றப்பட்டது; "சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும்" என்றும், "தமிழகத்திற்குத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளே போதும்" என்றும் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன.

1969இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப்பின், தமிழகத்தை ஆளும் பொறுப்புக்கு நான் இருக்க வேண்டும்; அப்படிச் செயல்படுகிற நாளெல்லாம் உள்ளத்தில் இன்பம் துள்ளும் நாளாகவே இருந்திருக்கின்றது என்று நான் கருதியதன் அடிப்படையில், தமிழகத்தில் வாழும் ஏழை, எளிய, மக்களின் மேன்மைக்காக இதுவரை பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

பல ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் "ஸ்டேட்ஸ்மேன்" பத்திரிகை நிருபரிடம் நான் பேசும்போது, "வெளிநாடுகளைப் போல அற்புத விஞ்ஞான முன்னேற்றங்கள் தமிழ்நாட்டிற்கு வரவேண்டுமென்று ஆசை இருந்தாலும், அதற்கு நீண்டகாலம் பிடிப்பதைப் பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை; எங்கள் நோக்கமெல்லாம் இங்குள்ள சாதாரண மக்களை மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் வாழச் செய்ய வேண்டுமென்பதுதான்" என்று கூறியதும், அதே அடிப்படையில்தான்!



புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அடிக்கல் நாட்டுதல்

ஆளாக்கப்பட்டது முதல் – இடையிடையே கார்மேகங்கள் சூழ்ந்தாலும், இதுவரை ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று; சமுதாயத்தின் அடித்தளத்திலே கிடக்கிற மக்களுக்கு மனம் குளிரத்தக்க வண்ணம் ஒவ்வொரு நாளும் அரசின் சார்பில் ஏதாவது செய்துகொண்டே

"என்ன செய்திருக்கிறோம், ஏழை எளியவர் களுக்கு?" என்று எண்ணாத நேரமில்லை என் வாழ்நாளில்!

இந்த எண்ணத்தின் பயனாகத்தான் ஏழை எளியோர் ஏற்றம் பெற எண்ணற்ற திட்டங்களைத்

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளோம். இந்தத் திட்டங்களையெல்லாம் வார்த்தெடுக்கும் உலைக் கூடமாக இதுவரை திகழ்ந்து வந்துள்ளது புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்த சட்டமன்றப் பேரவையும், தலைமைச் செயலகமும் என்பதை நன்றிப் பெருக்கோடு எண்ணிப் பார்க்கிறேன் இந்நாளில்!

தொலைநோக்கோடு சிந்தித்துச் செயல்படுத்திடும் திட்டங்களே மக்களின் வரவேற்பைப் பெற்று வெற்றிகளைக் குவித்திட முடியும்.

புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவை மண்டபம், தலைமைச்செயலகம் ஆகியவற்றில் ஏற்பட்ட இட நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, அதனை விரிவுபடுத்துவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமை கருதி, நாட்டின் எதிர்கால வளர்ச்சிகள், ஏற்படப்போகும் முன்னேற்றங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டமன்றப் பேரவைக்காகவும், அரசின் தலைமைச் செயலக அலுவலகத்திற்காகவும் நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டியது அவசியம் – காலத்தின் கட்டாயம் எனத் தமிழக அரசு முடிவு செய்தது.

அந்த முடிவின்படி, எனது 50 ஆண்டுகாலச் சட்டமன்றப் பேரவைப் பணிகளைப் பாராட்டி 12–5–2007 அன்று பேரவையில் நடைபெற்ற விழாவில், "சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் புதிதாகக் கட்டப்படும்" என அறிவிக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய கட்டடத்திற்கான வடிவமைப்பைத் தேர்வு செய்வதற்காகவும், அதனைக் கட்டி முடிப்பதற்காகவும் உலக அளவில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கலந்து கொண்ட நிறுவனங்களுள் ஜெர்மன் நாட்டினைச் சேர்ந்த "ஜீ.எம்.பி. இன்டர்நேஷனல்" என்னும் பன்னாட்டு நிறுவனம் வல்லுநர் குழுவால் தகுதிவாய்ந்த நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டு, 15–2–2008 அன்று அந்நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்தது.

அதனைத் தொடர்ந்து, தமிழக சட்டப் பேரவையில் 20–3–2008 அன்று அளிக்கப்பட்ட 2008–2009ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நமது பாரம்பரிய திராவிடக் கட்டடக் கலை முறையில் வடிவமைத்திடுவதற்கான கட்டட வடிவமைப்பு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்றும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அந்த அறிவிப்பினையொட்டி, சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா 12.6.2008 அன்று நடைபெற்றது. தரைத்தளம் மற்றும் 6 மேல் தளங்கள் கொண்ட 86 ஆயிரத்து 458 சதுர மீட்டர் பரப்பளவுடைய "பிளாக் – ஏ கட்டடம்", தரைத்தளம் மற்றும் 7 மேல் தளங்கள் கொண்ட 73 ஆயிரத்து 399 சதுர மீட்டர் பரப்பளவுடைய "பிளாக் – பி கட்டடம்" என இரண்டு கட்டடங்கள் கட்டவும்; அவற்றுள் புதிய சட்டமன்றப் பேரவை, முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றுடன் மற்றும் சில முக்கிய துறைகள் பிளாக் – ஏ கட்டடத்திலும், அரசின் மற்ற அனைத்துத் துறைகளும் பிளாக் – பி கட்டடத்திலும் அமையும் வகையில் திட்டமிடப்பட்டது.



நிதிநிலை அறிக்கை தாக்கல் – முதல்வரும் நிதியமைச்சரும்

அத்திட்டத்தின்படி, தமிழக அரசினுடைய பொதுப்பணித் துறையின் மேற்பார்வையில் ஜீ.எம்.பி. நிறுவனத்தின் மூலம் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து – பொங்கும் குருதியைப் பொழியும் வியர்வையாய் வடித்து பிளாக் – ஏ கட்டடம், ஏறத்தாழ 450 கோடி ரூபாய்ச் செலவில் கட்டி

முடிக்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டதுமுதல், வாரந்தோறும் இரண்டு, மூன்றுமுறைகள் நேரில் வந்து இதன் வளர்நிலைகள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டுள்ளேன். அவ்வமயங்களில் நான் வழங்கிய அறிவுரைகளையும் ஏற்று, வருங்கால வரலாற்றில் காவியமாகத் திகழப் போகும் இந்தக் கலை ஓவியம் யான் விழைந்த வண்ணமே குறுகிய காலத்தில், எழில் குலுங்கிடக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பிளாக் – பி கட்டடம், ஏறத்தாழ 280 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்படுகிறது. இதன் கட்டுமானப் பணிகளை 2011 மார்ச்சு இறுதிக்குள் நிறைவேற்றி முடித்திடவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை – தலைமைச் செயலக வளாகக் கட்டுமானப் பணிகளில் உள்ளத்தாலும், உடலாலும் ஓய்வின்றி முழுமையாக ஈடுபட்ட எனதருமைத் தொழிலாள நண்பர்கள், கட்டுமான நிறுவனத்தினர், பொறியாளர்கள், தமிழக அரசின் பல்வேறு நிலை அதிகாரிகள் அனைவரையும் அகங்குளிரப் பாராட்டுகிறேன்! அவர்கள் அனைவரையும் இதயங்கனிந்து, ஊற்றெடுக்கும் நன்றியுணர்வோடு வணங்குகிறேன்! வாழ்த்தி மகிழ்கிறேன்!

புதுமைபொங்கும் அதிநவீன வசதிகளோடும், மிகுந்த வலிவோடும், வனப்போடும் அமைந்துள்ள புதிய இந்தச் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் வீற்றிருந்து மக்கள் பணி ஆற்றிடும் வாய்ப்புகளைப் பெற்றிடும் அருமை நண்பர்கள், கரும்பினில் கோது நீக்கிச் சாறு பிழிந்து சர்க்கரையாகத் தரும் கண்மணிகளாகத் தேவையற்ற வாதங்களை நீக்கி, அவையின் பொன்னான நேரத்தை வீணாக்காமல் அறிவுக்கும், அறிவியலுக்கும் உகந்தமுறையில், நமது தமிழ்ச் சமுதாயம் உலகில் உன்னத நிலை பெற வேண்டுமே எனும் உணர்வோடு, புதியபுதிய திட்டங்களை உருவாக்கிடுவதிலும், அவற்றை விரைவாகவும், விவேகமாகவும் செயல்படுத்துவதிலும் ஆக்கபூர்வமான வகையில் ஆலோசனைகள் வழங்கிடும் ஜனநாயகச் செல்வங்களாகத் திகழ்ந்து, தங்கள் கடமைகளை ஆற்றிப் பெருமைகள் பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

என்னுடைய கனவை நனவாக்கும் விதமாக இந்த பிரமாண்டமான வளாகம் உருவாகிட ஒத்துழைப்பை நல்கிய – எல்லாம் சரியாக நடக்க வேண்டுமென்று கண்ணும் கருத்துமாய்க் கடமையாற்றும் தலைமைச் செயலாளர், திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., முகம் சுளிக்காது முறுவல் மாறாது நிதி வழங்கும் நிதித் துறைச் செயலாளர், திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., எப்போதும் சிரித்த முகத்தோடு ஓய்வறியாது செயலாற்றும் பொதுப் பணித் துறை செயலாளர் திரு. எஸ். ராமசுந்தரம், இ.ஆ.ப., நான் சென்ற போதெல்லாம் இனிய முகத்தோடு என்னை வரவேற்று பணியில் அக்கறை காட்டிய பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) திரு. எஸ். கருணாகரன் ஆகியோருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நொடிதோறும் எனக்குப் பெருமிதத்தையும், புத்துணர்வையும், புதுத்தெம்பையும் அளித்துவரும் என் இனிய தமிழினமும், தாய்த் தமிழகமும் பொலிவும் வலிவும் பெற்றுப் புகழையும், பாராட்டுகளையும் குவித்து, உலகில் உன்னத நிலைபெறத்தக்க வகையில் இந்த, “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம்” நாட்டில் முழுமையான சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், சமதர்மத்தையும் நிலைநாட்டுதற்குரிய சட்டங்களையும், திட்டங்களையும் வகுத்து – வரலாற்றுப் பொன்னேட்டில் வைரமுத்திரைகள் பதித்துப் புகழொளி பரப்பிட எனது உளங்கனிந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கிறேன்!

வாழ்க தமிழ்நாடு சட்டப் பேரவை – தலைமைச் செயலக வளாகம்! வெல்க ஜனநாயகம்!

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம்

சட்டப்பேரவை உறுப்பினர்களின் தொகுதிகளில் மக்கள் பணிக்கு அலுவலகம் கட்டுவதற்கான ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுள்ளார்கள் என்று 26–5–1998 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவையில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க ஒவ்வொரு தொகுதியிலும் அலுவலகம் கட்டுவதற்கான திட்டம் 1998–ல் முதன்முதலாகக் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், 710 சதுர அடியில், ரூ.4.50 இலட்சம் செலவில் அரசு நிலத்தில் அலுவலகம் கட்டுவதற்கும் ரூ.35,000 செலவில் அலுவலகத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கும் வகை செய்யப்பட்டது. இத்தொகை 2006 டிசம்பரில் ரூ.6.9 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

சிறப்புக்குரிய பதின்மூன்றாவது சட்டப் பேரவை

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

பேரவைத் தலைவர்

உலக நாடுகளில் இயங்கிவரும் ஆட்சி முறைகளில் மக்களாட்சி முறையே மிகவும் சிறந்தது எனப் போற்றப்படுகிறது. தனி மனித உரிமைகளையும் உயர்வினையும் பாதுகாத்து அதே நேரத்தில் பொது நலனையும் பேணி வளர்த்து வளம் பெறச் செய்வதே மக்களாட்சி முறையின் குறிக்கோளாக உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பானதுதான் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றமாகும்.

1919 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் (Government of India Act, 1919) மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன் முதலாக இடம்பெறத் தொடங்கினார்கள். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது.

அதன் பின்னர் 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் (Government of India Act, 1935) கீழ் சென்னை மாகாணத்திலே சட்டமன்றப் பேரவை, மேலவை என இரு அவைகள் செயல்பட வழிவகுக்கப்பட்டது. அதன்படி 1937 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னை சட்டமன்றப் பேரவை செயல்பட ஆரம்பித்தது. இச்சட்டமன்றப் பேரவை முதன்முதலில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட் மண்டபத்திலும், மேலவை சென்னை கோட்டையிலுள்ள சட்டமன்றத்திலும் இயங்கியது. சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள தற்போதைய இராஜாஜி மண்டபத்திலும் சில காலம் சட்டப் பேரவை இயங்கியது.

1950 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி இந்தியா குடியரசு ஆன பின்பு 1952 ஆம் ஆண்டு தொடங்கிய முதலாவது சட்டப் பேரவை முதல் 2006 ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிற 13–வது சட்டப் பேரவை வரை வரலாற்றுச் சிறப்புக்குரிய பல தலைவர்கள் முதலமைச்சர்களாகவும், பேரவைத் தலைவர்களாகவும் இருந்து சட்டப் பேரவைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

1996 ஆம் ஆண்டு தமிழகத்தின் 11–வது சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குத் தேர்வு செய்யப் பெற்று, தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற அந்த அவையில், நானும் உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்.

தமிழகத்தில் சட்டமன்றம் தொடங்கி 75 ஆண்டு பவள விழாவும் சட்டப் பேரவை தொடங்கி 60 ஆண்டு வைர விழாவும் ஒருசேர ஒரு மகத்தான விழாவாக தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டாடப்பட்டபொழுது, அவை உறுப்பினராக இருந்த நானும் அதில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது இப்பேரவையின் தலைவராக இருந்தவர் கழகத்தின் மூத்த உறுப்பினர், தென்னகத்திலே தோன்றி வளர்ந்த பண்பாளர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் ஆவார்கள்.

2006 ஆம் ஆண்டு 13–வது சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் 5–வது முறையாகத் தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தலைவர் கலைஞர் அவர்கள், 13–வது சட்டப் பேரவையில் வரலாற்றுச் சிறப்புக்குரிய பேரவைத் தலைவர் இருக்கையில் ஒட்டுமொத்த உறுப்பினர்களின் ஆதரவோடு என்னை அமரவைத்து, தமிழ்நாடு ஒரு ஜனநாயகத் தோட்டம் என்பதை நாட்டுக்கு, உலகுக்கு அறிவிக்க அனைவரும் உதவிடுவோம் என்று வாழ்த்தி, அமர வைத்த பெருமையைப் பெற்றேன்.

தமிழக சட்டமன்ற வரலாற்றில் 50 ஆண்டுகால சட்டமன்றப் பணிக்காக பொன் விழா கண்ட ஒரே முதல்வர் என்ற நிலையில், "சட்டப் பேரவையில் கலைஞர் –பொன்விழா"– 11–5–2007 மற்றும் 12–5–2007 ஆகிய இரண்டு நாட்கள் இந்த அவையிலே நான் பேரவைத் தலைவராக இருக்கிற காலத்தில் கொண்டாடப்பெற்றது. பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், இந்தியத் திருநாட்டின் பழம்பெரும் அரசியல் கட்சியான, பாரதத் திருநாட்டை தற்பொழுது வழிநடத்தி செல்லும், இந்திய தேசிய காங்கிரசின் தலைவியாக உள்ள அன்னை சோனியா காந்தி அவர்களும், நாடாளுமன்றத்தின் அப்போதைய தலைவர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களும், தமிழகத்தின் ஆளுநர் அவர்களும், பல தலைவர்களும், தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்தி பெருமைப்படுத்திய நிகழ்ச்சி, தமிழக வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சியாகும்.

அப்பொன் விழா நிகழ்ச்சியின் இரண்டாவது நாள், நமது முதல்வர் அவர்கள் வழங்கிய ஏற்புரையில் சட்டப் பேரவைக்கு புதிய கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, 12–6–2008 அன்று புதிய சட்டமன்றத்திற்கு அடிக்கல் நாட்டு விழா ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நடைபெற்றது. நான் பேரவைத் தலைவராக இருந்து, புதிய சட்டமன்றப் பேரவைக்கு அடிக்கல் நாட்டுவிழா மற்றும் அதன் திறப்பு விழா ஆகியவற்றில் கலந்து கொள்கிற ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது.

தமிழக வரலாற்றிலே சட்டமன்றப் பேரவை தொடங்கி 1937 ஆம் ஆண்டு முதல் சட்டப் பேரவைத் தலைவராக பல தலைவர்கள் இருந்து சபையை நடத்தியுள்ளார்கள்.

பேரவைத் தலைவர் பதவி என்பது ஒரு பெரும் பணியாகக் கொள்ளப்பெறுகிறது. அவை பேரவைத் தலைவருக்கு அளித்துள்ள அதிகாரத்தின்படி பேரவைத் தலைவர் பேரவையின் ஒட்டுமொத்த விருப்புகளை நிறைவேற்றுபவராகச் செயல்படுகிறார். இவர் வகிக்கும் பதவி தனிநபரைத் தாண்டி நிற்கிறது. அவைத் தலைவர் கண்ணியம், நேர்மை, பொறுமை, உறுதி, திறமை ஆகிய பண்புகளோடு நயத்தக்க நாகரிகமுடையவராக, எல்லோரும் போற்றும் வகையில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். பேரவைத் தலைவரிடம் உள்ள தலையாய பண்பு நடுநிலைமையாகும். தனிப்பட்ட முறையில் பேரவைத் தலைவருக்கு அரசியல் அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், அவருடைய தீர்ப்புகளிலே அவை இம்மியளவும் தலைகாட்டாமல் பேரவையின் மதிப்பையும், கண்ணியத்தையும் கண்ணுங்கருத்துமாகப் பேணும் பெரும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு உள்ளது.

பேரவையில் சில நேரங்களில் அமளி ஏற்படும்போது, எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு ஆட்பட்டாலும், அவையின் கண்ணியத்தைக் காக்க, அமைதி ஏற்பட, எனக்குள்ள அதிகாரம் சில நேரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் தவிர்க்க முடியாதவை.

சட்டமன்றம் கூடும் நாட்களிலெல்லாம் அவை தொடங்கியது முதல் முடியும் வரை அவைக்கு வந்திருந்து அவை நடவடிக்கைகளில் கலந்து கொண்டு அவை சுமுகமாக நடைபெற வேண்டும் என்பதிலே மிக அக்கறை கொண்டவர் நமது முதல்வர் அவர்கள்.

அவையில் உறுப்பினர்கள் பேசுவதற்குரிய நேரம் குறித்து சர்ச்சை எழும்பொழுதெல்லாம் எதிர்க்கட்சி மற்றும் மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை முழுமையாக ஆற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, ஆளுங்கட்சி உறுப்பினர்களுடைய நேரத்தைக் குறைத்துக் கொண்டு அதில் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கும் உயரிய பண்பினைக் கொண்டிருந்தார்.

பாரம்பரியம் மிக்க, நெடிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள இப்பேரவையிலே நிறைவேற்றப்பெற்ற பல்வேறு சட்டங்களும், தனித் தீர்மானங்களும், மக்களிடையே சமுதாய, பொருளாதாரச் சமத்துவத்தை உருவாக்கிட வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும், தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதுடன் பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டக் கூடியதாய் அமைந்துள்ளன என்பதைப் பெருமையுடன் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணத்தை செயலாக்க சட்டம், தமிழை ஆட்சி மொழியாக்க சட்டம், குடியிருப்பு மனைச் சட்டம், பெண்களுக்கு சொத்தில் உரிமை வழங்கிட சட்டம், மாநில சுயாட்சிக்கான தீர்மானம், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு, கேலி செய்தலை தடுக்க

சட்டம், வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டம், ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம், தமிழ்மொழி பயில்வதைக் கட்டாயமாக்கும் சட்டம், காமராஜர் பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடும் சட்டம், இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு ஒதுக்கீடு வழங்க சட்டம், திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்டம், அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு சட்டம் இவைபோன்ற எண்ணற்ற சரித்திரச் சாதனைகளின் பயன்களைச் சாமானியர்களும் பெற்றிட சட்டம் உருவாக்கி ஏனைய பிற மாநிலங்களுக்கு முன்னோடியாய், இந்தியத் திருநாட்டிற்கு வழிகாட்டியாய்த் தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு, மக்களுக்காக எண்ணற்ற நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்திவரும் நிலையில், மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களைப் பற்றி இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஏழை—எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த, அவர்களின் இல்லங்களில் ஒளிசேர்க்க, உண்ண உணவுக்காக ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, உடுக்க ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை, இருக்க இலவச வீட்டுமனைப் பட்டா, இலவச எரிவாயு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், ஏழைகளின் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகிய வாழ்வாதாரத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற தலைவர் கலைஞர் அவர்கள், தமிழக மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

தமிழகம், குடிசைகளே இல்லாத மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, 21 இலட்சம் கூரைவீடுகளை கான்கிரீட் வீடுகளாகக் கட்டி இலவசமாக வழங்கும் திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். இந்தியத் திருநாட்டிலே இத்திட்டம் ஒரு மகத்தான முன்னோடித் திட்டம்; அனைவராலும் பாராட்டப்பெறும் திட்டமாகும்.

நமது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் அயராத உழைப்பால் பாரம்பரிய கலை நுணுக்கத்தோடு உருவாக்கப் பெற்றுள்ள இப்புதிய சட்டப் பேரவையில் பல அத்தியாயங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. தலைவர் கலைஞர் அவர்கள், சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா கொண்டாடியதுபோல், சட்டமன்றத்தில் கலைஞர் வைர விழாவையும் நாமெல்லாம் ஒன்றிணைந்து கொண்டாடுவோம் என்ற நம்பிக்கையில், தலைவர் கலைஞர் அவர்களின் நம்பிக்கைக்கும் எண்ணத்திற்கும் ஏற்ப இந்த அவையை கண்ணியமிக்கதாக, கட்டுப்பாடோடு அனைத்து உறுப்பினர்களையும் அரவணைத்துக் கொண்டுசெல்லும் வகையில் எனது செயல்பாடுகளும், பணிகளும் அமையும்.

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்களின் வளர்ச்சிக்காக இப்புதிய சட்டப் பேரவையில் மேலும் பல வரலாற்றுச் சிறப்புமிக்க புரட்சிகரமான சட்ட திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்களின் அரசு அறிவித்து நிறைவேற்றும் வகையில் இப்புதிய சட்டமன்றம் செயல்படும் என்பது உறுதி.

ஓய்வு என்பது வேலை செய்து கொண்டிருப்பதுதான் என உணர்பவர்களே பொதுத் தொண்டில் ஊக்கமுடையவர்களாக இருக்க முடியும்.

– கலைஞர்

மக்கள் ஆட்சியின் மாட்சி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்

நிதியமைச்சர்

அமெரிக்க நாட்டில் நிரந்தர அடிமைகளாக, இரக்கமற்றோரிடம் சிக்கி கொடுமைக்காளாகி இருந்த கறுப்பு இனத்தாருக்கு, சுதந்திர வாழ்வுரிமை வழங்கிய அந்நாட்டுக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் கூறினார்,

''ஜனநாயகம் என்பது மக்களால், மக்களைக் கொண்டு, மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சி'' என்று.

''மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் முழு வாழ்வுரிமை கொண்டவன். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் மூன்றுமே உரிமை வாழ்வின் அடிப்படையாம்'' என்றும், ''மனிதன் ஒவ்வொருவனும் பிறக்கும்போது சுதந்திரமாகத்தான் பிறக்கிறான்; பிறந்த பின்னர்தான், அந்தச் சமுதாயப் பழக்கமான மத நம்பிக்கை வழியில் பிறக்கும் எதேச்சாதிகாரக் கட்டளை போன்ற தளைகளால் கை, கால்கள் பிணைக்கப்பட்ட அடிமையாகின்றான்'' என்றும் பிரஞ்சு சிந்தனையாளர் ரூசோ கூறினார்.

ஒப்புநிலை, உடன்பிறப்புரிமை, சிந்திக்கவும் செயற்படவும் தடையற்ற உரிமை ஆகியவை உறுதி



முதல்வரும் பேராசிரியரும்

செய்யப்பட்ட சமுதாயத்திலேயே மக்கள் நிறைவான வாழ்வு பெறுவர். மனிதனின் முழுமையானதும், முறையானதுமான உரிமை வாழ்வுக்கு வழிகோல வல்லது, தன்னாட்சி உரிமை கொண்டுள்ள ஜனநாயக முறை காக்கும் சட்டமன்றமே ஆகும்.

மானிடத்தின் வரலாற்றில், ஒரு நாட்டு மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசாட்சியை, அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்துக்கொள்ள வாய்ப்பாவது, ஜனநாயக முறைதான்.

ஜனநாயகம் என்பது, மக்கள் வாக்களித்துத் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும், அவர்கள் முறைப்படி கூடி, விவாதித்து, பெரும்பான்மையினர் செய்யும் முடிவினால் சில தீர்மானங்களையோ, சட்டங்களையோ நிறைவேற்றுவது மட்டுமல்ல; அதை மக்கள் மதித்து ஏற்கும் முறையில் ஆட்சியாளர்களும், நீதிமன்றத்தாரும் நிறைவேற்றி வைப்பதுவும் ஆகும்.

''நான் அறிந்தவரையில், சிலபல குறைபாடுகளுக்கு இடமாகலாம் எனினும், அதை விரைவில் களைந்திடும் வாய்ப்பு அளிக்கும் ஆட்சிமுறை, ஜனநாயக முறைதான்'' என்றார் அறிஞர் அண்ணா.

ஜனநாயகம் என்பது, ஊராட்சி மன்றம், மாவட்ட ஆட்சி மன்றம், மாநிலச் சட்டமன்றம், நாடாளுமன்றம், ஐக்கிய நாடுகள் மன்றம் முதலான எதுவாயினும், அம்மன்றத்தில் அதற்குரியவர்களாக இடம்பெற்றவர்கள் கூடி, கருத்துகளைப் பரிமாறிக்கொண்டபின், பெரும்பான்மையோர் செய்யும் முடிவை அனைவரும் ஏற்பதும், செயற்படுத்துவதுமே ஆகும்.

மன்னராட்சி என்பது, அந்தப் பீடத்தில் உள்ளவரின் கடமை உணர்ச்சியையும், நீதி, நியாயத்தை மதிப்பதையும் பொறுத்தது. ஜனநாயக முறைப்படியான மக்களாட்சி என்பது, பல பேர் கூடிச் செயற்படும் முறையால், பொது நீதியும், நியாயமும் காக்கப்படும் வாய்ப்பு மிகுதியும் உடையது.

ஜனநாயகத்தின் உயரிய நோக்கம், அந்நாட்டுக் குடிமக்களின் நன்மையே. அது வேறுபாடுகட்கிடையே

உடன்பாடு காண்பதிலும், ஒத்துப்போவதிலுமே உள்ளது. அதன் மூலம் மக்கள் அடையும் பொதுநலனுக்காக ஒவ்வொருவரிடமும் பிறருக்கு விட்டுத்தரும் பக்குவம் வளரவேண்டும்.

ஒரு குடியிருப்புக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்வு செய்ய குடவோலை முறையில் வாக்குகள் எடுத்த செய்தியைப் பத்தாவது நூற்றாண்டில் பதிவான உத்தரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கின்றது. நீண்ட காலமாகவே தமிழ்நாட்டில் குடியிருப்புகளும், கோயில்களும் அமைந்த ஊர்களின் பொதுநலப் பணிகளை அவ்வூர் கிராம வாரியத்தார் முறைப்படி கூடித் தீர்மானித்து நிறைவேற்றி வந்துள்ளனர்.

ஜனநாயகத்தின் ஒளிபடைத்த கண்களும், ஒலிகேட்கும் காதுகளும் முறையான உறுப்பினர்கள் கூடும் சட்டமன்றமே. அதன்மூலம் சமுதாயத்தின் தேவையையும், நிலைமையையும் ஆட்சியாளர்கள் அறிந்து செயற்பட முடியும்.

அந்தச் சட்டமன்றத்தின் ஆட்சி வட்டாரத்துக்கு உட்பட்டவர் எவரும், அதன் முடிவையோ, சட்டத்தையோ அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அந்தச் சட்டத்தின் விதிகட்குக் கட்டுப்பட்டவரே ஆவர். சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம், நீதிமன்றத் தீர்ப்பால் ஏற்க மறுக்கப்பட்டாலோ அல்லாமல், அது நடைமுறையில் நிறைவேற்றுதற்கு உரியதாகும்.

ஜனநாயகம் என்பது, ஆட்சி நடத்துவதற்கென்று வகுக்கப்பட்டதொரு முறை மட்டுமல்ல; அது மனித இனத்தின் அமைதியான முன்னேற்றத்துக்கும், மேம்பாட்டுக்கும் ஏற்ற வாழ்க்கை முறையுங்கூட.

மக்களாட்சியில் குடிமக்கள் தமது வாக்குரிமையைச் சிந்தித்துப் பார்த்து, தகுதியுடையவர்க்கு வழங்குவதன்மூலமே, ஒரு நல்லாட்சியை உருவாக்க முடியும். வேறுவகையான ஆட்சி முறைகளில் நாட்டு மக்களின் விருப்பம் மதிக்கப்படுவதற்கு இடமில்லை.

அறிஞர் அண்ணா கூறியது போன்று, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்னும் உணர்வை வளர்ப்பதே, மாற்றுக் கட்சியினர் கருத்தை உரிய முறையில் மதித்து, ஆராய்ந்து, தக்கவற்றை ஏற்றிடும் மனப்பக்குவத்தைப் பெறும் வழியாகும்.

'மனிதன் கூடிவாழும் விலங்கு' என்று கூறுவர். ஒரு குடும்பமோ, அன்றிக் குடியிருப்போ எதுவாயினும் அங்கு மக்கள் கூடிவாழும் சூழ்நிலையினால் ஏற்படும் நெருக்கத்தில் சில தொல்லைகளோ, வேறுபாடுகளோ, மாறுபாடுகளோ எழுவது இயற்கையே. கூடிவாழ்வதில் உள்ள நன்மைக்காகவும், தேவைக்காகவும் மாறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்கான ஆர்வமும், வேட்கையும் அவர்களிடம் வளரும். உரையாடலில் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதில் ஏற்படும் ஆர்வமே ஒரு சமுதாயமாகக் கூடிவாழ்வதற்கு ஏதுவாகும். அதனால் ஒவ்வொருவரிடமும் தன்னம்பிக்கை வளர்வதுடன், ஒரு பாதுகாப்பு உணர்வும் ஏற்படுகிறது.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது, நாட்டு மக்கள் நடைமுறையில் தெளிந்திருக்கக்கூடிய உண்மை. ஒன்று சேர்ந்து அனைவரின் தேவையையும் நிறைவேற்றி வாழ்வதை வலியுறுத்தவே,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்று உணர்த்தினார் திருவள்ளுவர்.

ஜனநாயக நடைமுறையில் அரசியல் கட்சிகளிடையே, தங்கள் வலிமையை வெளிப்படுத்தும் வகையில், மக்களின் ஆதரவைத் திரட்டிக் காட்டுவது, அவரவர் கொள்கையை வெற்றிபெறச் செய்யும் வழியாகும். அதன் தொடர்ச்சியாகப் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் தனது வேட்பாளர் வெற்றிபெற வேண்டுமென்று பாடுபடுவது, போட்டியே அன்றிப் பகையாகாது. எத்துறையில் நடைபெறும் போட்டி எதுவாயினும், வெற்றிபெறுவது ஒன்றே நோக்கமாகும். மாறாகப் பகை எனிலோ, மாற்றாரைத் தோல்வியுறச் செய்வது மட்டுமன்றி, மறுபடியும் தலையெடுக்கவொட்டாமல் செய்யவேண்டும் என்னும் வெறியும் வளர இடமாகும்.

ஒரு நாட்டு மக்களால் தமது நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் பெரும்பான்மையான பிரதிநிதிகளால் அமைக்கப்படும் அரசு, ஆட்சிமன்றத்தில் அமர்ந்து செயல்படும்போது, ஆட்சி நடத்துவதற்குத் தேவைப்படும் சட்டப்படியான அதிகாரம் உடையதாகும். இல்லையெனில், ஆட்சி என்பதற்குப் பொருளும் பயனும் இல்லை; சட்டப்படியான நிருவாகம் நடத்தவும் முடியாது. ஆனால், ஆளும் வாய்ப்பினால் அதிகாரம் ஒருவரிடம் இருப்பதனாலேயே, அவர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் என்பதிலிருந்து விலக்குப்பெற முடியாது. அவர் மற்ற குடிமக்களைவிட எந்தவகையிலும் உயர்தகுதி பெற்றவராகவோ, சிறப்புரிமையும், சலுகையும் கொண்டவராகவோ ஆக மாட்டார்.

சட்டமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்குக் கிடைத்துள்ள அதிகாரம், குடிமக்களுக்கு நன்மை, நீதி, நியாயம் கிடைக்குமாறு செய்திடவே அன்றித் தத்தம் நலனுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக அல்ல. மிகப் பெரும்பான்மையான நாட்டு மக்களின் நலனைக் காத்திட, மிகப் பெரியதொரு கதவுக்குப் போடும் சிறியதொரு பூட்டுப்போன்று அவ்வதிகாரம் அமையும். குறைந்த எண்ணிக்கையினராக உள்ள மக்கள் பிரதிநிதிகட்குப் பூட்டைப் போன்று நாட்டு மக்களைக் காவல் செய்யும் கடமை உண்டு. கள்ளச் சாவி போடுவது போன்ற இழிசெயல், துரோகம், சதி போன்ற கடுமையான குற்றமாகும்.

“மருத்துவர் கைப்பையிலும், பெட்டியிலும் உள்ள நோய் தீர்க்கவல்ல மருந்துகள் பலவும் நோயுற்றவர்கட்குப் பயன்படுத்துவதற்கே! ஆட்சியில் அமர்வோருக்கு வாய்க்கும் அதிகாரம், மக்கட்கு எசமானராக இருப்பதற்காகவோ, அவர்களை நாட்டாண்மை செய்வதற்காகவோ அல்ல; மாறாக, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்குரிய கடமையை முறை தவறாது செய்வதற்கே! இவையே மக்களாட்சியின் தனிச் சிறப்பாகும். பேச்சுரிமை, எழுத்துரிமை, இயக்கம் நடத்தும் உரிமை யாவும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளாகும்.

எண்ண, இயம்ப, எழுத, ஒன்றாகக்கூட, ஓர் இயக்கமாகச் செயல்பட, கருத்தைப் பரப்பும் ஊடகங்களைப் பயன்படுத்த குடிமக்கள் உரிமை உடையவர். அரசமைப்புச் சட்டப்படி அவை ஒரு நாட்டுக் குடிமகனின் அடிப்படை உரிமைகள் ஆகும். சுதந்திரம் என்பது, தளையில்லாமல் நடமாடுவதும், பூட்டி வைக்கப்படாமல் உலவுவதும், அந்நிய ஆட்சியிலிருந்து விடுபடுவதும் மட்டுமல்ல; மனிதன் தன் மனதில் தோன்றும் கருத்தை, தாம் எண்ணுகின்ற வகையில் பேசியும், எழுதியும் வெளியிடுவதற்கும், அப்படிப்பட்ட கருத்துக்கு ஆதரவு திரட்டுவதற்கும், கூட்டமாகச் சேர்ந்து கலந்தாலோசிக்கவும் உரிமை பெற்றவனாக இருப்பதே.

ஜனநாயகம் என்பது, மக்கள் உரிமைக் குரலை ஒலிப்பதுடன், அவர்தம் முறையான விருப்பத்தை நிறைவேற்ற, சட்டம் இயற்றுவதற்கான உரிமைகொண்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட சட்டமன்றத்தையும்; சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களையும், முடிவுகளையும் அரசின் சார்பில் நிறைவேற்றுவதற்கான அரசின் நிருவாக அமைப்பையும்; சட்டமன்ற முடிவுகள் அரசியல் அமைப்புச் சட்ட விதிமுறைகட்கு முரண்படாமல் உள்ளனவா என்பதைக் கண்காணிக்கவும், தீர்மானிக்கவும், தகுதியுடைய நீதிமன்றத்தையும் கொண்டு மூன்று பிரிவாகச் செயற்படுகின்றது. ஜனநாயக மாளிகையை இந்த மூன்று தூண்களுமே தாங்கியுள்ளன. குடிமக்களுக்கு நாட்டு நடப்பு தெளிவாக விளங்குவதற்குத் துணைசெய்யும் நான்காவது தூண் என்று ஏற்குமாறு ஊடகங்கள் அமைந்துள்ளன.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம், தீர்மானம் ஆகியவை அரசமைப்புச் சட்ட விதிகட்கும், நோக்கத்துக்கும், அச்சட்டத்தில் குடிமக்கட்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகட்கும் மாறுபட்டுள்ளதா என்பதைத்தான் நீதிமன்றம் தீர்மானித்து அறிவுறுத்தலாமே அன்றி, பேரவைத் தலைவர் அதிகாரத்துக்கு உட்பட்ட சட்டமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்தோ, சட்டமன்றக் கூட்டத்தில் மேற்கொண்ட முறைகள் குறித்தோ, சில உறுப்பினர்கள் சட்டமன்றக் கட்டுப்பாட்டை மீறியோ, மன்றம் நடைபெறமுடியாமல் தடைசெய்யும் செயலில் ஈடுபட்டது குறித்தோ, விசாரிக்கவோ நடவடிக்கை எடுக்கவோ முடியாது. அப்படிப்பட்டவற்றில் இறையாண்மை கொண்ட பேரவையின் தலைவர் மட்டுமே நடவடிக்கை எடுக்கும் முழு அதிகாரம் பெற்றவராதலின், அவர் எடுக்கும் நடவடிக்கையே இறுதியானதாகும். அதுகுறித்து, அதே சட்டமன்றத்தின் தலைவரிடத்தில் அன்றி, வேறு எந்த மன்றத்திலும், எவரிடமும் மேல்முறையீடு செய்யவியலாது.

நாடாளுமன்ற முறைப்படி சட்டமன்றம் இறையாண்மை என்னும் முழு உரிமை உடைய அமைப்பாதலின், உறுப்பினர்கள் மன்றத்தில் பேசுவதற்கு முழு சுதந்திரமுடையவர்கள். எந்த உறுப்பினரையும், வேறு எவரும் எதைப்பற்றியேனும் இப்படித்தான் பேச வேண்டும், இதைக் கூறலாகாது என்று கட்டுப்படுத்தவோ, அச்சுறுத்தவோ முடியாது, கூடாது. அப்படி எவரேனும் உறுப்பினர் உரிமையில் குறுக்கிட்டால் அது உறுப்பினரின் உரிமையில் செய்த தலையீடாகுமாதலின், அவர்மீது நடவடிக்கை எடுக்கச் சட்டமன்றத்துக்கு உரிமை உண்டு. அவையில் உறுப்பினருக்குப் பேச்சுரிமை இருந்தாலும்,

அவையில் உள்ள அமைச்சர் முதலான எவர்மீதும் குற்றச்சாட்டு எதுவும் கொண்டு வருவதாயின், அதற்கான முதல் நிலை (Prima Facie) அடிப்படையான சான்றுகளைப் பேசுவதற்கு முன்னதாக அவைத் தலைவரிடம் காண்பித்து அவரது இசைவைப் பெற்றிருக்கவேண்டும். உறுப்பினரின் பேச்சுரிமை காரணமாக உறுப்பினர் எவரும் அவையில், அவை மரபுக்கு மாறான முறையில் (unparliamentary word) ஒரு கடுஞ்சொல்லையோ, பிறரை இழிவுபடுத்தும் சொல்லையோ பயன்படுத்த லாகாது. விதிக்கு மாறாகப் பயன்படுத்தப்படும் சொற்களை அவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி அறிவிப்பார். அந்த விவரத்தை ஊடகங்களும் வெளியிடலாகாது.

சட்டமன்றத்தின் உயிரோட்டம், அங்கு நிகழும் விவாதத்தின் தர உயர்வினாலும், கருத்துத் தெளிவினாலும், உறுப்பினர்களின் கடமை உணர்வினாலுமே சிறக்கின்றது. அந்த அடிப்படையில் மன்றத்தின் அன்றாட நடவடிக்கையில், முதல் ஒரு மணி நேரம் உறுப்பினர்களின் கேள்வி நேரமாக இருப்பது பயன்மிக்கதாகும். அதைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் இசைவுடன் உறுப்பினர் எழுப்பும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், அவை ஒத்திவைப்புத் தீர்மானங்களும் விவாதத்திற்கு ஏற்கப்படும். மக்களைப் பாதிப்பதால் அவர்களிடம் பதற்றம் ஏற்படுத்தக்கூடியதொரு நாட்டு நடப்பு பற்றி, அரசின் உடனடி கவனத்தை ஈர்த்து, நிருவாக இயந்திரத்தை முடுக்கிவிடப் பயன்படுவதால் அவை முக்கியத்துவம் உடையவை ஆகும்.

அடுத்து, அவையில் எடுத்துக்கொள்ளப்படும் பொருள் குறித்த விவாதத்தில், ஆளுங்கட்சியைச் சார்ந்த அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் முக்கியமாகப் பங்கேற்பர். பிற கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும், அவரவர் கட்சிக்குப் பங்கிட்டு வழங்கியுள்ள நேரத்தில், அந்தந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் சிலர், அவரவர் கட்சியில் கிடைக்கும் வாய்ப்புக்கேற்ப பங்கேற்றுப் பேசுவர். விவாதம் முடியும்போது, சட்டப்படி, தேவைப்படின் உறுப்பினர்களின் வாக்கு எடுக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டு அவை ஒத்திவைக்கப்படும்.

குறிப்பாகப் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம், சட்டமன்றத்துக்கென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்டதிட்ட விதிகளின்படி பேரவைத் தலைவரால் நடத்தப்படுகிறது என்றாலும், அவையில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடி முக்கியத்துவம் வாய்ந்த கட்சியாக இருப்பது எதிர்க் கட்சி. சட்டமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடி எந்தக் கட்சி அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ளதோ, அதுவே எதிர்க்கட்சியாக அறிவிக்கப்படும்.

அறிஞர் அண்ணாவின் கருத்துப்படி விரைந்து ஓடும் மோட்டாருக்கு 'நிறுத்தி' (Brake) எப்படியோ, ஒரு வண்டியில் பூட்டப்பட்ட காளைக்கு மூக்கணாங்கயிறு எப்படியோ அப்படித்தான் ஆளுங்கட்சியின் செயற்பாட்டின் விளைவால் கேடு நேராதவாறு எச்சரித்துத் தடுக்கக்கூடியது எதிர்க்கட்சி என்பதால், ஜனநாயக முறையில் நடைபெறும் ஆட்சி செம்மையாக செயற்பட எதிர்க்கட்சியே சிறப்பானதொரு பங்களிப்பதாகும்.

எனவே, மக்களாட்சி முறையினால் ஒரு நாட்டு மக்கள் பெறவேண்டிய சிறந்த பயன்களை அடைய, நீதிமன்றம், நிருவாக இயந்திரம், சட்டமன்றம் ஆகிய மூன்றும் குறைபாடுகட்கு இடமின்றி அவற்றின் கடமையை நிறைவேற்றவேண்டும். எனினும், அவற்றுள் சட்டமன்றம் முறையாகக் கடமையாற்றவில்லையெனில், ஜனநாயகம் அதன் தகுதியை இழக்கும்!

அனுபவம் ஒரு பள்ளிக்கூடம் – ஆனால் அதில் ஆணவக்காரர்கள் கற்றுத் தேர்வதில்லை.

– கலைஞர்

சிகரங்களுக்குச் சிகரமாய் அமைந்துள்ள சட்டமன்ற வளாகப் புதிய கட்டடம்

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்
துணை முதலமைச்சர்

''வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்''

குடி தழிஇ கோலோச்சும் நல் அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்தும் வேலல்ல; குடிமக்களை வாழ வைக்கும் வளையாத செங்கோல்தான்.

நீதி நெறி வழுவாமல் அரசு நடைபெற்றால் அந்த அரசை நீதியே காப்பாற்றும் என்று ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே அய்யன் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

நாட்டு மக்களை அரவணைத்து, அவர்களின் நலன்களை ஆராய்ந்து அறிந்து, அவர்தம் தேவைகளை கேட்காமலேயே தேடிச்சென்று தருகின்ற, நீதி வாழுவாத ஆட்சி நடத்தி வருபவர்தான் நம் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்.



முதல்வருடன் துணை முதல்வர்

காலத்தால் அழியாத சரித்திரச் சாதனைகள் பலவற்றையும் படைத்து வருகின்றார். இந்த சாதனை சிகரங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல அமைந்துள்ள முத்தாய்ப்பான வரலாற்றுச் சின்னம்தான், தலைவர் கலைஞரின் கனவுத் திட்டமான புதிய

சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலகக் கட்டட வளாகம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மாமன்னன் இராசராச சோழன் தன் பொற்கால ஆட்சியில் கட்டி இன்றளவும் தமிழர்தம் பெருமையை தரணிக்கு எடுத்துரைத்து ஓங்கி உயர்ந்து நிற்கும் தஞ்சை இராச ராசேச்சுவரத்தைப் போல், இன்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ் மாநிலத்தின் நிர்வாக தலைமையகமாக புதிய சட்டமன்ற கட்டடத்தை தமிழகத்திற்கு வழங்கியுள்ளார்.

12–5–2007 அன்று நடைபெற்ற ''சட்ட சபையில் 50 ஆண்டுகள்'' பொன்விழா நிகழ்ச்சிகளின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக, சென்னை – ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்கான முயற்சியை தமிழக அரசு மேற்கொண்டது.

சட்டமன்றப் பேரவைச் செயலகம் மற்றும் தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகளுக்கான கட்டடங்களுடன், இப்புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் அமைக்கப்படுகிறது.

இந்தப் புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் 2010 மார்ச் 13 ஆம் தேதியன்று காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான திருமதி சோனியாகாந்தி அவர்கள் முன்னிலையில், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது.

புதிய சட்டமன்றப் பேரவை கட்டுமானப் பணிகளை தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அனைவரையும் ஊக்கப்படுத்தி, பணிகளைத் துரிதப்படுத்தி, கட்டடம் கவினுற அரிய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி பணிகள் விரைந்து முடிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பணியில் பொன்விழாக் கண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 11 முறை சட்டமன்ற உறுப்பினராக, ஒரு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராக, ஐந்தாம் முறை தமிழக முதலமைச்சராக கோலோச்சுபவர். அவரின் எண்ணப்படி சென்னை அண்ணா சாலையில் ஒரு வாயிலில் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலையும், மற்றொரு வாயிலில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் திருவுருவச் சிலையும், சற்றருகே பெருந்தலைவர் காமராஜர் உருவச்சிலையும் அமைந்துள்ள பகுதியில், ஓமந்தூரார் அவர்களின் பெயரைத் தாங்கியுள்ள அரசினர் தோட்டத்தில், புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் பிரமிக்கத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டு பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது.

தற்போது பயன்பாட்டிலுள்ள சட்டமன்ற கட்டடத்தின் வரலாறு, படிப்போரை வியக்கவைப்பது. கடைசியாக நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரின் நிறைவு நாளில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் சில குறிப்புகளை சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

டெல்லியில் உள்ள செங்கோட்டை, சக்கரவர்த்தி ஷாஜஹானால் கட்டப்பட்ட மொகலாயப் பேரரசின் மிகப்பெரிய சின்னம் என்பதைப்போல், புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் சின்னம் ஆகும்.

இங்கிலாந்து நாட்டின் 24 வணிகர்கள் சேர்ந்து பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியைத் தொடங்கி இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய முனைந்தனர். கிழக்கிந்திய கம்பெனியின் அலுவலர் பிரான்சிஸ் டே என்பவர் விஜயநகர அரசின் உள்ளூர் நிர்வாகி களிடமிருந்து செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள இந்த இடத்தைப் பெற்றார்.

தற்போது தலைமைச் செயலகத்திலுள்ள அணிவகுப்பு மைதானம் இருக்கும் இடத்தில், Fort House என்ற ஒரு சிறிய கட்டடத்தை ''பிரான்சிஸ் டே'' கட்டினார்.

1640–ல் புனித செயிண்ட் ஜார்ஜ் நினைவு தினமான ஏப்ரல் 23 அன்று, இந்தக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தபோது, இதற்கு புனித ஜார்ஜ் கோட்டை (St.George Fort) என்று பெயரிடப் பட்டது. 1678–ல் இக்கோட்டை வளாகத்தில் மிகத்தொன்மையான புனித மேரி ஆலயம் கட்டப்பட்டது.

1695–ல் ''பிரான்சிஸ் டே'' கட்டிய ஃபோர்ட் ஹவுஸ் (Fort House) இடிக்கப்பட்டு, தற்போது தலைமைச் செயலகம் அமைந்திருக்கும் வளாகத்தின் நடுவே அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்பட்டு அதில் ஆளுநர் இல்லமும் அவரது அலுவலகமும் அமைக்கப்பட்டது.



தந்தை பெரியார் நடத்திவைக்கும் சுயமரியாதைத் திருமணம்

அதையொட்டி படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அவை இப்போதுள்ள தலைமைச் செயலகக் கட்டடமாக உருவெடுத்துள்ளது. தற்போதைய தலைமைச் செயலகத்தின் புதிய கட்டடமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வளாகத்தை நமது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் கட்டினார். அதன் உச்சியில், நாமக்கல் கவிஞரின் ''தமிழனென்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா!'' என்ற கவிதை வரிகளை அமைத்து ஒளியூட்டவும் செய்தார்.

1910 ஆம் ஆண்டில், அதாவது சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய சட்டமன்றப் பேரவை மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது.

சென்னை மாகாண சட்டசபைக்கு 1920–ல் நடைபெற்ற முதல் தேர்தலில் திராவிட இயக்கத்தின் வேர் கட்சியான நீதிக் கட்சி வெற்றிபெற்று திரு. சுப்பராயலு ரெட்டியார் முதலமைச்சரானார்.

சென்னை மாகாணத்திலேயே முதன் முதலாக 1920 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி சட்டமன்றத்தில் First Premier ''முதல் பிரிமியர்'' என்ற முதலமைச்சர் பதவியைப் பெற்ற பெருமை நீதிக் கட்சிக்கும், அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பராயலு ரெட்டியாருக்கும்தான் சாரும். அப்பொழுது சட்டமன்றத்தை 12–1–1921 அன்று கன்னாட் கோமகன் தொடங்கி வைத்தார்.

சென்னை மாகாண ஆளுநராக இருந்த விலிங்டன் பிரபு அவர்களும், அவரது துணைவியாரும் 6–3–1922 அன்று தேக்கு மரத்தால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் நிறைந்த இருக்கையைப் பரிசாக அளித்தனர்.

அதுவே இதுவரை பேரவைத் தலைவரின் இருக்கையாக பயன்படுத்தப்பட்டு வந்தது. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதேபோன்று புதிய இருக்கையை உருவாக்குமாறு தெரிவித்தார். தற்போது நாமே உருவாக்கிய புதிய ஆசனம் பேரவைத் தலைவரின் இருக்கையாக பயன்பட உள்ளது. பழையன கழிந்து புதியன புகுந்துள்ளன. 1920–ல் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி 1937 ஏப்ரல் வரை சுமார் 17 ஆண்டு காலம் தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

அந்தக் காலக்கட்டத்தில்தான், நாட்டிலேயே முதன் முதலாக அரசுப் பணிகளில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் (கம்யூனல் ஜி.ஓ.) பெண்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட சட்டங்களை நிறைவேற்றி சரித்திரம் மறவாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது.

நீதிக் கட்சி ஆட்சியில் சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர், பி. சுப்பராயன், பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், பி.டி. ராஜன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தனர்.

14–7–1937 அன்று மூதறிஞர் இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது. இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்திய ஆங்கில அரசைக் கண்டித்து இராஜாஜி அமைச்சரவை 30–10–1939–ல் ராஜினாமா செய்தது. அன்று முதல் 30–4–1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது.

1946–ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வென்று ஆந்திர கேசரி டி. பிரகாசம் முதலமைச்சராக பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவை 23–3–1947 அன்று பதவி விலகியது. அன்றே ஓமந்தூரார் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இவரே முதல் சுதந்திரத்திருநாளை 15–8–1947–ல் கொண்டாடிய முதலமைச்சர் என்ற பெருமைக்கு உரியவர்.

1952 ஆம் ஆண்டு அரசினர் தோட்டத்தில் புதிய சட்டசபை மண்டபம் கட்டப்பட்டு, அதனை 2–5–1952 அன்று ஆளுநர் ஸ்ரீ பிரகாசா திறந்து வைத்தார். அதுவே பின்னர் பாலர் அரங்கமாகவும், தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கலைவாணர் அரங்கமாகவும் விளங்கியது.

1957 தேர்தலுக்குப் பிறகு மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில், பேரவைக் கூட்டங்கள் நடைபெறத் தொடங்கி, கடந்த கூட்டத் தொடர் வரை நடைபெற்றது.

1957–ல் பேரவை இந்த வளாகத்திற்கு வந்ததற்குப் பிறகு, தொடர்ந்து இந்த அவையில் உறுப்பினராக இருந்து சட்டமன்றப் பணியில் பொன் விழாவையும் கண்டு இன்றளவும் அவையை அலங்கரித்து, ஈடு இணையற்ற சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் தலைவர்தான் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.

ஓமந்தூராருக்குப் பிறகு, பி.எஸ். குமாரசாமி ராஜா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தார்கள்.

அதன் பின்னர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், திருமதி ஜானகி அம்மையார் அவர்களும், செல்வி ஜெயலலிதா அவர்களும், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் முதலமைச்சர்களாக அந்த மாமன்றத்திலே இருந்திருக்கிறார்கள்.

1967–ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனார். 1969–ல் நமது தலைவர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தற்போது 5–வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழகத்தை வழி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சரித்திரப் புகழ்வாய்ந்த தீர்மானங்கள், சட்டங்கள், முடிவுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சில பின்வருமாறு :–

- பேரறிஞர் அண்ணா அவர்களால் சென்னை மாநிலத்திற்கு **"தமிழ்நாடு"** எனப் பெயர் சூட்டிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது;
- சுயமரியாதை மற்றும் சீர்திருத்த திருமணத்தை செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது;
- தமிழை ஆட்சி மொழியாக்கி – மும்மொழித் திட்டத்தை நிராகரித்து தமிழகத்தில் இருமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது;
- குடியிருப்பு மனைச் சட்டம் நிறைவேற்றியது;
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என ஆணையிட்டதும் அந்த மன்றம்தான்;
- மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது;
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமெனச் சட்டம் இயற்றி நடைமுறைப் படுத்தியது;
- பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்கிட சட்டம் கண்டது;
- சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணங் களுக்கு அங்கீகாரம் அளிக்க சட்டம் இயற்றப்பட்டது;

- தைப்புத்தாண்டு, தை முதல் நாளில் தொடக்கம் எனும் சட்டம்;
- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ஆம் தேதியை அவருடைய பிறந்த நாளை சட்டப் பூர்வமாக எல்லாப் பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும் எனச் சட்டம் கண்டதும் இந்த மன்றத்தில்தான்;

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தால் அழித்திட இயலாத வரலாற்றுச் சின்னங்களாக, கடல் கொண்ட பூம்புகாரின் சிறப்பை வெளிப்படுத்திடும் மாடங்களையும், வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை புகழ் கூறும் வண்ணம் வள்ளுவர் கோட்டத்தையும், கடல் கொண்ட தமிழ்கூறு நல்லுலகின் பெருமை கூறும் வண்ணம், ஆழிப்பேரலைக்கும் அசையாத வள்ளுவர் சிலையை கன்னியாகுமரியிலும் அமைத்துள்ளார். அவரே இந்தப் புதிய சட்டமன்ற வளாகத்தையும் நமக்கு அளித்துள்ளார்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய அரைக்கோள வடிவிலான விதானம் இந்த மண்டபத்தின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. நவீன கட்டட வடிவமைப்பில், தமிழர்தம் கட்டடக் கலையின் கூறுகளைக் கொண்டு, இந்த அழகிய வளாகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டமன்ற வளாகம், இனி தமிழகத்தின் நிர்வாகத் தலைமையிடமாக விளங்கும்; தமிழக மக்கள் பயன்பெறும் வண்ணம் மக்களாட்சி மாண்புடன் செயல்படும். நலவாழ்வு அரசு என்ற கோட்பாட்டை பின்பற்றி சட்டங்களை இயற்றி, நிதியைப் பகிர்ந்தளித்து, மக்களுக்கு பணியாற்றும். பல்லாண்டுகளாக தமிழக சட்டமன்றம் இந்திய திருநாட்டிற்கே முன்னோடியாக விளங்கி, பல சாதனைகளைப் படைத்து வருகின்றது.

இவைபோன்ற எண்ணற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளைச் சாமானியர்களும் பெற்றிட சட்டம் உருவாக்கி, ஏனைய பிற மாநிலங்களுக்கும் முன்னோடியாய், இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாய், தமிழகம் திகழ்ந்திட வழிகாட்டியது தமிழக சட்டமன்றம்.

இந்த சாதனைச் சரித்திரம் தலைவர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்தில் தொடர இருக்கிறது.

தமிழ் வாழ்க!
தமிழகம் தலைநிமிர்ந்து வளர்ந்திடுக!
மக்களாட்சி மாண்புகள் இன்றுபோல் என்றும் மிளிர்ந்திடுக!

மெட்ரோ இரயில் திட்டம்



ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் வடிவமைக்கப்பட்டுள்ள மெட்ரோ இரயில் திட்டத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் 10-06-2009 அன்று அடிக்கல் நாட்டித் துவக்கி வைத்தார். இத்திட்டம், முதற் கட்டமாக கோயம்பேடு முதல் கிண்டி வரை நடைமுறைப்படுத்தப்படும். திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்கு, ரூ.11,680 கோடியும், மத்திய அரசின் பங்கு ரூ.2,960 கோடியுமாகும்.

இது குறித்த விவரம், 2009-2010 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டப் பேரவையும் தலைவர் கலைஞரும்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
மின்சாரத் துறை அமைச்சர்

தமிழக சட்டமன்றப் பேரவை வரலாற்றில், தலைவர் கலைஞர் அவர்களின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளதை நம்மில் பலர் அறிவர். தலைவர் கலைஞர் அவர்களின் சுயசரிதையான 'நெஞ்சுக்கு நீதியைப்' படிக்கும் வாய்ப்பு பெற்றவர்கள், கடந்த அறுபது– எழுபது ஆண்டுகளாக சட்டமன்றப் பேரவையில் நிகழ்ந்த முக்கிய விவாதங்கள் பற்றியும், இயற்றப்பட்ட முக்கிய சட்டங்கள் பற்றியும், அவற்றால் ஏற்பட்ட பலன்கள் பற்றியும் நன்கு அறிந்திடும் வாய்ப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பர். ஏனெனில், 1957ஆம் ஆண்டு முதல் முறை சட்டமன்ற உறுப்பினரான கலைஞர், அன்று முதல் தொடர்ந்து இன்றுவரை சட்டமன்றப் பேரவை உறுப்பினராக – இடையில் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த நாட்கள் தவிர்த்து – தொடர்ந்து தமிழக மக்களுக்காகப் பணியாற்றி வருகிறார்.

1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பணியாற்றினார். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, கழகத் தோழர்களின் மகத்தான ஆதரவைப் பெற்று, ஐந்து முறை முதல் அமைச்சராகப் பொறுப்பேற்று, இச்சட்டப் பேரவைமூலம் நம் நாட்டிற்குப் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகின்றார். பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என முடிவெடுத்ததோ, அன்று முதல் தொடர்ந்து சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களில் பங்கேற்றது மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றார். தமிழகத்தில் மற்ற தலைவர்களுக்கு இல்லாத பெருமை தலைவர் கலைஞருக்கு மட்டுமே உண்டெனலாம். ஆம்! தான் போட்டியிட்ட சட்டமன்றத் தேர்தல்களில் ஒரு முறைகூட அவர் தோல்வி என்பதைக் கண்டதே இல்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லாத சிறப்பு இது. இந்த மகத்தான சாதனையை என்றென்றும் நினைவு கொள்ளும் வகையில் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியதை ''சட்டப் பேரவையில் கலைஞர் பொன் விழா'' என்று கடந்த 2007 ஆம் ஆண்டு மே மாதம் 11–12 தேதிகளில் அவருக்கு சிறப்பான விழா எடுக்கப்பட்டது. இதனையொட்டி அன்னை சோனியா அவர்கள், பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்ட நிகழ்ச்சியும், சட்டமன்றத்தில் மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா மற்றும் இந்தியப் பாராளுமன்றத்தின் மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய நிகழ்ச்சிகளும், நமது சட்டமன்ற வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். தமிழக சட்டமன்றப் பேரவையில் இதுபோன்று வேறு எந்தத் தலைவருக்கும் விழா எடுக்கப்பட்டதில்லை. இத்தகைய சிறப்பு நம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மட்டுமே கிடைத்தது. இது, கழகத் தோழர்கள் அனைவரும் பெருமைப் படத்தக்க நிகழ்வாகும்.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, சென்னை மாகாண மன்றத்திற்கு முதன்முதலாக 1920 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 30 ஆம் நாளில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி, திரு. சுப்பராயலு ரெட்டியார் அவர்களின் தலைமையில் முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் வழியைப் பற்றி நடக்கும் என்போன்ற

திராவிட இயக்கத் தோழர்களுக்கு, நமது கழகத்தின் தாய்க் கட்சியாம் – நீதிக் கட்சிதான் முதன் முதலில் இச்சட்டமன்றத்தில் அமைச்சரவையை அமைத்தது என்பது உள்ளபடியே பெருமைகொள்ளத்தக்க நிகழ்வாகும். தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறை தமிழக முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த போதுதான், அதாவது 1997 ஆம் ஆண்டுதான் மேலே



முதல்வர் மற்றும் துணை முதல்வருடன் மின்சாரத் துறை அமைச்சர்

குறிப்பிட்டுள்ள நீதிக் கட்சி அமைத்த முதல் அமைச்சரவை அமைக்கப்பட்டதற்கான பவள விழா நிகழ்ச்சியும், 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின்கீழ் முதன்முதலாக 1937 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைர விழா நிகழ்ச்சியும், ஒருங்கே தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுபோல தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பில் இருந்தபோதுதான், இந்திய சுதந்திரத்தின் வெள்ளி விழா, பொன் விழா மற்றும் வைர விழாக்கள் கொண்டாடப்பட்டன. இவையெல்லாம், தமிழக சட்டமன்ற வரலாற்றோடு நமது தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்வும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளமைக்குச் சில சான்றுகளே!

இந்த பாரம்பரியமிக்கப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, 1967ஆம் ஆண்டு நானும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, உறுப்பினரானேன். பின்பு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையின்கீழ் 1971–1976, 1989–1991, 1996–2001, 2001–2006 மற்றும் 2006 முதல் இதுநாள் வரை, சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படும் வாய்ப்பைப் பெற்ற நான், தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் மூன்று முறை அமைச்சராகப் பணிபுரியும் வாய்ப்பையும் பெற்றுள்ளேன். இக்கால கட்டங்களில் தலைவர் கலைஞர் அவர்கள், பேரவைக் கூட்டங்களுக்கும், அங்கு நடைபெறும் விவாதங்களுக்கும் அளிக்கும் முக்கியத்துவத்தையும், அவ்வப்போது பேரவையில் அவர் பேசுவதற்காக குறிப்பு தயாரிக்கும் பாங்கையும் நான் அருகில் இருந்தே கண்டவன். அப்போதெல்லாம் நான் கலைஞர் அவர்களின் ஜனநாயக உணர்வுகளையும், ஜனநாயகத்திற்கு அவர் தரும் மதிப்பையும் கண்டு வியந்துள்ளேன்.

இத்தகு பெருமையும், பாரம்பரியமும் மிக்க நமது தமிழக சட்டமன்றப் பேரவைக்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கைக்கு இன்று செயல்வடிவம் தந்துள்ளார் நமது ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமின்றி, இக்கட்டடம் கட்டப்படத் துவங்கிய நாளிலிருந்து, தினமும் நேரில் சென்று, கட்டடப் பணிகளை மேற்பார்வை இட்டதுடன் அல்லாமல், அரிய ஆலோசனைகளை வழங்கி, இக்கட்டடம் சிறப்பான முறையில் அமையப் பெறுவதற்குக் காரணமாய் இருந்தார். இந்த ஆண்டு (2010) மார்ச் மாதம் 13 ஆம் நாள், தமிழக வரலாற்றில் பொன்னெழுத்தில் பதியப்போகும் நாள். தலைவர் கலைஞர் அவர்களின் இலட்சியக் கட்டடத்தை மாண்புமிகு அன்னை சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில் நமது பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் திறந்து வைக்கும் பொன்னாள். சென்னையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பிரம்மாண்டமாக தலைவர் கலைஞர் அவர்கள் எழுப்பி இருக்கும் இந்த எழில் மாளிகை, காலத்தை வென்று கலைஞரின் புகழை நிலைநாட்டும் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை. ஆக்ராவில் அமைந்துள்ள தாஜ்மஹால், ஷாஜஹான் புகழை இன்றும் பாடி நிற்பது போலவும், தலைவர் கலைஞர் அவர்கள் குமரிக் கரையில் அய்யன் வள்ளுவருக்கு வானுயர எழுப்பியுள்ள திருவுருவச் சிலை, காலத்தையும் சுனாமியையும் வென்று நின்றிருப்பது போலவும், தற்போது சென்னையில் தலைவர் கலைஞர் கட்டியுள்ள சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலகக் கட்டடங்கள் காலத்தை வென்று கலைஞரின் புகழை இன்னும் பல காலங்களுக்கு நிலைநாட்டி நிற்கும் என்பது திண்ணம்.

கூட்டுறவுத் துறையின் எழுச்சி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி
கூட்டுறவுத் துறை அமைச்சர்

வரலாறு படைத்துவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் தமிழக அரசுக்குச் சொந்தமான ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டிடும் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்பட்டு 13-3-2010 அன்று நடைபெறும் புதிய சட்டப் பேரவை கட்டடத் திறப்பு விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

வாழும் வரலாறாய்த் திகழும் நம் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் 11-01-2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் நடந்த இறுதிக் கூட்டத்தின்போது சட்டமன்ற வரலாறு குறித்து ஆற்றிய உரை வரலாற்றில் இடம்பெறத் தக்க உரையாய் நம் நெஞ்சையெல்லாம் நிறைவுகொள்ளச் செய்தது.

இந்தியாவிற்கே வழிகாட்டிய விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தைச் செயல்படுத்திய முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு முதல் பயிர்க் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியே கிடையாது என்று மற்றும் ஒரு முன்னோடித் திட்டத்தை தமிழக விவசாயப் பெருமக்களுக்கு வழங்கி, தொடர்ந்து இந்தியாவிற்கே வழிகாட்டி வரும் நிலைக்கு இன்றைக்கு கூட்டுறவுத் துறையை முன்னேற்றியுள்ளார்கள்.

நலிந்த நிலையில் இருந்த கூட்டுறவு இயக்கத்தை மீட்டு, தலைசிறந்த நிலைக்கு உயர்த்த பல்வேறு நடவடிக்கைகளை தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

ஏழாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ததால், 22 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர். தள்ளுபடித் தொகை கிடைத்ததால் கூட்டுறவு அமைப்புகளின் நிதி ஆதாரம் பெருகியது. நீண்ட காலமாகத் திருப்பித் தரப்படாமல் நிலுவையில் இருந்த சுமார் 171 கோடி ரூபாய் வைப்புத் தொகையைத் திரும்ப வழங்கி கூட்டுறவு அமைப்புகள் மீதான நம்பிக்கையை மீட்டது நம் அரசு. கடந்த காலத்தில் கலைத்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் புத்துயிரூட்டி இதுவரை இவற்றின்மூலம் 145 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளின் பலனாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ஏற்பட்டிருந்த குவிந்த நட்டத்தை ஈடு செய்ய மத்திய அரசு 1008.34 கோடி ரூபாயும் மாநில அரசு 230.82 கோடி ரூபாயும் வழங்கியுள்ளன. மத்திய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் தேசிய வங்கியிடமிருந்து கடன் பெறும் தகுதியைப் பெற்றுவிட்டன.

2005-06 ஆம் ஆண்டில் 105 கோடி ரூபாயாக இருந்த உர விற்பனையை 2008-09 ஆம் ஆண்டில் 606 கோடி ரூபாயாக உயர்த்தி சாதனை படைத்தது தலைவர் கலைஞர் அவர்களின் அரசு.

அய்ந்து ஆண்டுகளுக்கும் மேலாக கடன் வழங்க இயலாத நிலையில் முற்றிலும் செயல்படாமல் இருந்த நிலவள வங்கிகளைப் புத்துயிரூட்டி அவற்றின்மூலம் சென்ற ஆண்டு மட்டும் 47 கோடி ரூபாய் அளவிற்கு நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

110 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இலாபம் ஈட்டும் சங்கங்களாக வளர்ச்சியடைய வைக்கப்பட்டன.

மலைவாழ் மக்களுக்கான பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் புத்துயிரூட்டி 2005-06 ஆம் ஆண்டு 25 கோடி ரூபாயாக இருந்த வணிகத்தை 2008-09 ஆம் ஆண்டில் 49 கோடி ரூபாயாக உயர்த்தி, இவை இன்று மரவள்ளிக்கிழங்கு விற்பனை முதல் பல்பொருள் அங்காடிகள் நடத்துவது வரையிலான

பணிகளை மேற்கொண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. 6.19 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய இயந்திரங்களை வழங்கி நலிவுற்றுக் கிடந்த கூட்டுறவு அச்சகங்கள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

கூட்டுறவு விவசாயக் கடன் அமைப்புகளைப் பொறுத்தவரை அரசு இரண்டு முக்கிய உத்திகளைப் புகுத்தியுள்ளது. முதலாவதாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளின் அனைத்துத் தேவைகளையும் ஒருமுகமாக நிறைவு செய்கின்ற ஒருங்கிணைந்த சேவை அமைப்பாகச் செயல்பட, கடன் வழங்கும் முறைகளைச் சீரமைத்தல், தரமான விதைகளை விற்பனை செய்தல், வேளாண் இடுபொருட்களான உரம் போன்றவற்றைத் தடையின்றி வழங்குதல், மண் பரிசோதனை முதலான உயர் தொழில்நுட்பங்களை வழங்குதல், வேளாண் கருவிகளை வாடகைக்கு விடுதல் போன்ற பல சேவைகளை விவசாயிகளுக்கு வழங்கும்.

இரண்டாவதாக, ஏழை, எளிய, சிறு, குறு விவசாயிகள், வங்கிகளை எளிதில் அணுகி கடன் பெற இயலாத விவசாயிகள், குத்தகை விவசாயிகள் ஆகியோரை பத்து பத்து விவசாயிகளாக ஒருங்கிணைத்து கூட்டுப் பொறுப்புக் குழுக்களாக கடன் பெற்று, வேளாண் பணிகளை கூட்டாக ஒருங்கிணைத்து, உயர் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி, செலவைக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகரித்து சிறு, குறு விவசாயிகளும் அதிக இலாபம் பெறும் வகையில் இக்கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமான இந்தத் திட்டத்தில், சென்ற ஆண்டு 10 ஆயிரம் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் சுழல் நிதியாக 10 கோடி ரூபாயும், பயிர்க் கடனாக 106.67 கோடி ரூபாயும் வழங்கப்பட்டதால், இக்குழு உறுப்பினர்கள் பெரும் பயனடைந்துள்ளனர். சென்ற ஆண்டு பயிர்க் கடன் குறியீடான 1,500 கோடி ரூபாயை விஞ்சி 1,570.99 கோடி ரூபாய் வழங்கியதில் 30 விழுக்காடு கடன் பெறாத புதிய விவசாயிகள் பயிர்க் கடனைப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு இதுவரை 1,905.82 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களின் பயனாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வரும் மொத்தக் கடன் 2005–06 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 514 கோடியாக இருந்தது 2008–09 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 940 கோடி ரூபாயாக உயர்ந்து, மொத்தக் கடன் வளர்ச்சி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதேபோல் கூட்டுறவு அமைப்புகளிலே உள்ள வைப்புத் தொகை 2005–06 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 963 கோடி ரூபாயாக இருந்தது, 2008–09 ஆம் ஆண்டில் 20 ஆயிரத்து 80 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. கூட்டுறவு அமைப்புகள் செய்த நுகர்பொருள் வணிகம் 2005–06 ஆம் ஆண்டைவிட 70 சதவீதம் உயர்ந்து 2008–09 ஆம் ஆண்டில் ஆயிரத்து 70 கோடியே 31 இலட்சம் ரூபாயை எட்டியுள்ளது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமைச் சங்கமான தமிழ்நாடு மாநில கூட்டுறவு விற்பனை இணையம் கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2008–09 ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டியுள்ளது.

இவ்வாறு அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளும் வலுவூட்டப்பட்டு, இவை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அந்த இலக்கை நோக்கி எழுச்சியுடன் பீடுநடை போட வைத்துள்ளார் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்நிலையில் நமக்கென்று நம்முடைய சொந்த இடத்திலே முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் விடா முயற்சியின் காரணமாக விரைந்து கட்டப்பட்ட புதிய சட்டமன்றக் கட்டடத்திலே தலைவர் அவர்களின் தலைமையில் திட்டங்கள் தீட்டி செயல்படக்கூடிய வாய்ப்பு கிடைப்பதை எண்ணி மிகவும் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

தமிழினம் சுய மரியாதையோடு வாழ வேண்டும் என்று பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களின் துணிவையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கனிவையும் ஒருங்கே பெற்று தமிழகத்தின் சுய மரியாதைச் சின்னமாய் புதிய சட்டப் பேரவை – தலைமைச் செயலகக் கட்டடத்தை உருவாக்கியிருக்கின்ற முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலிலே தமிழினம் எழுச்சி நடைபோடும்.

கலைஞர் கண்ட சட்டப் பேரவை கலாச்சார சின்னம்! கருவூலம்!

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,
வேளாண்மைத் துறை அமைச்சர்

உலகில் அந்தந்த நாட்டின் கலாச்சாரத்தின் அடிப்படையில், கலாச்சார சின்னங்களும், கட்டடங்களும் இருப்பதைக் காணமுடிகிறது. அவையெல்லாம் அந்த நாட்டின் பாரம்பரியத்தை, கலைப் பண்பாட்டை, மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளதை நாம் அறிவோம்.

தமிழகத்தின் வரலாற்றுச் சின்னங்களான மாமல்லபுரம், பல்லவ மன்னன் நரசிம்மவர்மனாலும், கல்லணை, கரிகால சோழனாலும், தஞ்சைப் பெரிய கோயில், இராஜ ராஜ சோழனாலும், கங்கைகொண்ட சோழபுரம், இராஜேந்திர சோழனாலும் உருவாக்கப் பட்டவை. இவ்வாறு தமிழகத்தில் அந்த நாட்களில் வாழ்ந்த, கலையுள்ளம் கொண்ட மன்னர்களாலும், அறிவியலாளர்களாலும் உருவாக்கப்பட்ட இந்த வரலாற்றுச் சின்னங்களை எல்லாம் நாம் இன்று எண்ணி போற்றி மகிழ்ந்துகொண்டிருக்கிறோம்.

தமிழகத்தில் திராவிட இயக்கம் தோன்றிய காலத்தில்தான் தமிழர்களுடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவைகளை எல்லாம் எடுத்துக்காட்டி, தமிழ் மொழியின் சிறப்பை நமக்கு எடுத்துரைத்து, தமிழ்ப் பற்றாளர்களாக நாம் உருவாகக் காரணமாக இருந்த தமிழ் அறிஞர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் போன்றவர்கள் நமக்குக் கலங்கரை விளக்காக இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க இயலாது.

நமது கலாச்சாரத்தை, பண்பாட்டை, நாகரிகத்தை உலகிற்குப் பறைசாற்றும் வண்ணம், தஞ்சை மாவட்டம், பூம்புகாரில் கற்புக்கரசி கண்ணகிக்கு எழில் மாடம் அமைத்து தமிழகத்துக்கும், தமிழ் மக்களுக்கும் சிறப்பைச் சேர்த்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

அதைப்போல, வாழ்க்கை நெறிமுறைகளை, தத்துவங்களை 133 அதிகாரங்களில் நமக்கு வகுத்துத் தந்த தெய்வப் புலவர் அய்யன் திருவள்ளுவருக்கு, தமிழகத்தின் தென்கோடி நகர் கன்னியாகுமரியில் 133 அடி உயர உருவச் சிலை அமைத்தும், வடகோடியில் தமிழகத் தலைநகர் சென்னையில், கண்ணைக் கவரும் வண்ணம் அய்யன் திருவள்ளுவர் பெயரில் அழகிய கோட்டம் ஒன்றை உருவாக்கி, அங்கே அய்யன் திருவள்ளுவரால் ஈரடியில் எழுதிய 1330 குறள்களையும் அமைத்து உலகெங்கும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும், நம் நாட்டு மக்களும் படித்துப்பார்த்து தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இவை அய்யன் திருவள்ளுவரின் எழுத்தாற்றல் மறைந்துபோகாது இருக்கும் வண்ணம் எழுப்பப்பட்ட சின்னங்கள் என்பதுதான் உண்மை.

1967 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், ''மதராஸ் ஸ்டேட்'' என்ற பெயரை ''தமிழ்நாடு'' என்று பெயர் மாற்றம் செய்ய, 18–7–1967 ஆம் நாள் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதன் பயனாய் 16–1–1969 முதல் ''தமிழ்நாடு'' என நாம் அழைத்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தமிழகப் பாடத் திட்டத்தில் இந்தியைக் கட்டாய பாடத் திட்டமாக திணிக்கக் கூடாது என்பதற்காக 23–1–1968 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து, பள்ளி–கல்லூரிகளில் மும்மொழி பாடத் திட்டம் இனி இல்லை; இன்று முதல் தமிழும், ஆங்கிலமும் மட்டுமே பாடத் திட்டத்தில் இருக்கும் என்றும், இந்தி மொழியைப் பாடத் திட்டத்தில் இருந்து நீக்கி, இருமொழி பாடத் திட்டத்தை நடைமுறைபடுத்தியவர் பேரறிஞர் அண்ணா.

அதைப்போல, தமிழ் அறிஞர்களாலும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மற்றும் இனமானப் பேராசிரியர் போன்ற தலைவர்கள் எல்லாம், சுய மரியாதை திருமணம், பகுத்தறிவுக் கொள்கையின் அடிப்படையில் நடக்க வேண்டும் என்று மேற்கொண்ட பிரச்சாரத்தின் பயனாய், அய்யர் இல்லாமல், அம்மி மிதிக்காமல், அருந்ததி பார்க்காமல் மாலையை மாற்றிக்கொண்ட திருமணங்கள் எல்லாம் செல்லாது என்றிருந்த இந்துத் திருமணச் சட்டத்தில் 1967 ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவந்து, அப்படிப்பட்ட சுய மரியாதைத் திருமணங்களும் செல்லும் என்ற சட்ட அங்கீகாரம் பேரறிஞர் அண்ணா அவர்களால் வழங்கப்பட்டதை, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவரும் கரவொலி எழுப்பி வரவேற்றதை தமிழக வரலாற்றில் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் கொள்கையில் கருத்து வேறுபட்டிருந்தாலும், "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற அரசியல் பண்பாடு நம் அரசியல் கட்சித் தலைவர்களிடம் இருந்திட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், தான் சொன்னதற்கு ஏற்ப தமிழகச் சட்டப் பேரவையில் முன்மாதிரியாக இருந்து மற்றவர்களுக்கு வழிகாட்டினார். பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோது ஒரு வருட காலத்திற்குள்ளாகவே அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டபோதும், அதைப் பொருட்படுத்தாமல் ஜனநாயகக் கடமையை ஆற்ற சட்டப் பேரவைக்கு நாள்தோறும் தவறாமல் வருகை தந்தார். அப்போது காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவைத் துணைத் தலைவராக இருந்த திரு. வினாயகம் அவர்கள், ஒரு கேள்வியின்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணாவைப் பார்த்து, "Your days are numbered" என்று சொன்னார். அதாவது, உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன என்றார். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறுகணமே புன்னகை பூத்த முகத்தோடு, திரு. விநாயகத்தின் பேச்சினை இடைமறித்து "My steps are measured", அதாவது "என்னுடைய அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன" என்றார். அதைக் கேட்டு அவையே அலைகடலென சிரிப்பலையில் ஆழ்ந்தது.

1974 ஆம் ஆண்டிற்கு முன்புவரை சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் மத்தியில் குடியரசுத் தலைவரும், மாநிலங்களில் ஆளுநர்களும் தேசிய கொடியேற்றி வந்தனர். 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் டெல்லி செங்கோட்டையில், குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவரும், சுதந்திர தினத்தன்று பிரதமரும் தேசிய கொடியை ஏற்றுவது போன்று மாநிலங்களில், சுதந்திர தினத்தன்று மாநில முதலமைச்சர்களும், குடியரசு தினத்தன்று மாநில ஆளுநர்களும் தேசிய கொடியை ஏற்ற வேண்டுமென்றும் மத்திய அரசுக்குப் பரிந்துரைத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்ற மத்திய அரசு, மாநிலங்களில் முதலமைச்சர்கள் சுதந்திர தினத்தன்று தேசிய கொடியேற்றி வைக்க உரிமை வழங்கியது. இதன் அடிப்படையில் தமிழகத்தில் முதன் முறையாக தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15–8–1974 ஆம் ஆண்டு தேசிய கொடியை எற்றி வைத்து, மாநிலத்தின் உரிமையை நிலைநாட்டினார். இதன் காரணமாகவே இந்தியா முழுவதும் உள்ள மற்ற மாநில முதலமைச்சர்களும் சுதந்திர நாளன்று கொடியேற்றுகின்ற அந்த உரிமையைப் பெற்று அகமகிழ்ந்தனர்.


தமிழகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் கூடுதல் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, 1970 ஆம் ஆண்டு திரு. ஏ.என். சட்டநாதன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் குழுவை அமைத்து அவரிடம் அறிக்கையைப் பெற்று, கூடுதல் இட ஒதுக்கீடு உருவாக்கித் தந்தது மட்டுமின்றி, தொடர்ந்து தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களைக் கைதூக்கிவிட, சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த முஸ்லீம்களுக்கு பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டில் 3.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயே மிகவும் பின்தங்கிய அருந்ததியின சமூகத்தினருக்கு 3 சதவீத தனி இட ஒதுக்கீட்டை வழங்கி, சமூக நீதி வழங்கிக் கொண்டிருப்பவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். மண்டல் குழுவின் பரிந்துரையினை ஏற்று பிற்பட்ட மக்களுக்கு இந்திய அளவில் வேலைவாய்ப்பில் 27 சதவீத இட ஒதுக்கீட்டை மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது பெற்றுத் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மேலும் இதர சமூக மக்களுக்கும் சமூக நீதி வழங்க சிந்தித்து,

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சமுதாயத்திலுள்ள அடித்தள மக்களைக் கைதூக்கிவிட பணியாற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

மாநிலத்திற்கு சுயாட்சி வழங்கிட வேண்டும் என்று நீதியரசர் இராஜமன்னார் அவர்கள் தலைமையில் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழகச் சட்டப் பேரவையில் 16–4–1974 அன்று தீர்மானம் நிறைவேற்றியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சென்னை அண்ணா சாலையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிலையாக நின்றுகொண்டு ஒரு விரல் காட்டி நிற்கும் அந்தக் காட்சியைப் பார்க்கின்றபோது ''நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாக தமிழகத்தைப் பற்றியும், தமிழக மக்களைப் பற்றியுமே சிந்தித்துக்கொண்டு, வாழ்ந்துவரும் என் தம்பி கலைஞர் ஒருவரால் மட்டுமே தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் பெருமை சேர்க்கமுடியும், தமிழ்நாட்டின் கலாச்சாரத்தைப் பாதுகாக்கமுடியும், தமிழ்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களை அமைக்கமுடியும், அவற்றைப் பாதுகாக்கமுடியும் என்று தன் ஆள் காட்டி விரலைக் காட்டுகிறார் பேரறிஞர் அண்ணா'' என்று நான் நினைத்துக்கொள்வது உண்டு.

பல நூறு சாதனைகளுக்கும் சொந்தக்காரரான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தன் சிந்தனை படைப்புகளுக்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாக, தமிழகத் தலைநகர் சென்னை, அண்ணா சாலையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, கலை நயத்துடன், எழில்மிகு தோற்றத்துடன் மிகப் பிரம்மாண்டமாக எழும்பியுள்ள, இந்தப் புதிய சட்டப் பேரவைக் கட்டட வளாகம் 13–3–2010–இல் திறப்பு விழா காண உள்ளது. இத்தகைய அரிய நிகழ்ச்சிகளை எண்ணும்போது கலைஞர் கண்ட சட்டப் பேரவை, கலாச்சார சின்னமாக மட்டுமின்றி காலமெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலமாகவும் உள்ளது.



''மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறி வருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன், முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்''

– பாபு ஜெகஜீவன்ராம்

(1975, ஜனவரியில் செங்கற்பட்டு, காட்டுப்பாக்கத்தில் தமிழக அரசால் கட்டப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்து பாபு ஜெகஜீவன்ராம் ஆற்றிய உரை)

வழிகாட்டும் கலைஞர்

மாண்புமிகு திரு. துரைமுருகன்
சட்டத் துறை அமைச்சர்

வரலாற்று மாமனிதர்கள் வாரத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் பிறப்பதில்லை;
நூற்றாண்டுக்கு ஒருவர் என்ற விகிதத்திலேயே பிறப்பதுண்டு.
அப்படி பிறந்திருப்பவர்தான் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.
தலைவர் கலைஞர் இருபதாம் நூற்றாண்டின் முக்கால் பகுதிக்கும்
இருபத்தி ஓராம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இன்றளவும்
இரண்டு நூற்றாண்டுகளுக்கும் கலைஞர் அவர்கள்தான்
ஒரு அதிசய புருஷர்.
அவர் மட்டும் வரலாற்று மனிதரல்ல;
அவர் ஆற்றிய பணிகளும் வரலாறு கடந்து நிற்பவைகளே!
அத்தகைய பட்டியலில் மேலும் ஒரு ஒளிமிகு
வைரமாக ஜொலிப்பது தான்

‘புதிய தலைமைச் செயலகமும்’

‘புதிய சட்டமன்ற வளாகமும்’

இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத அரிய பெரிய
காரியங்களை ஆற்றி வருகின்ற தலைவர் கலைஞர்,
இந்த இரண்டு கட்டடங்களைக் கட்டுவதிலும்,
எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்.
எந்த மாநிலத்திலும், இதற்கு இணையான
தலைமைச் செயலகமோ – சட்டமன்ற வளாகமோ
இல்லை என்றே சொல்லலாம்.
நமக்கு என்ன வரலாறு?
‘வரலாற்றுத் தலைவர் கலைஞர் வரலாற்றுச் சாதனைகளைப்
படைக்கும் போது உடனிருந்தோம்’ என்பதே
நமக்கு பெரிய வரலாறு!

வரலாறு வாழ்த்தும் கலைஞர்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி
உயர் கல்வித் துறை அமைச்சர்

அரசியல் சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் என்பார், அரசு அமைவதன் நோக்கமே மக்களுக்கு நல்வாழ்வை அமைத்துக் கொடுப்பதுதான் என்று கூறுகின்றார். இதனைச் செயல்படுத்த பல உத்திகளை வரையறுக்கின்றார். அதில் ஒன்றுதான் மக்களாட்சி முறையாகும். இந்த மக்களாட்சி முறையில் அரசின் மூன்று அங்கங்களாக சட்டமன்றம், நிர்வாகம், நீதிமன்றம் திகழ்கின்றன. இவற்றில் சட்டமன்றம் சட்டமியற்றும் மிக முக்கியமான பணியைச் செய்கிறது. இங்கு 18 ஆம் நூற்றாண்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஆங்கிலேயர், இந்தியாவைத் தங்கள் ஆளுகையின்கீழ் கொணர்ந்து, படிப்படியாக அரசு முறைகளை ஏற்படுத்தினார்கள். சட்டத்தின் ஆட்சி என்பது அவர்களின் அடிப்படைச் சித்தாந்தமாகும். அந்த அடிப்படையில் இந்தியாவை நிர்வாகம் செய்ய ஆரம்பித்த காலம்தொட்டு (1857) சட்டமியற்றுவதற்கு வேண்டிய ஆதார உத்திகளைப் படிப்படியாகக் கொண்டு வந்தனர்.

பாராளுமன்ற ஜனநாயகம் என்பது, சட்ட மன்றத்தில் பெரும்பான்மை அங்கத்தினர்களைக் கொண்ட கட்சி ஆட்சி அமைத்து, அதனுடைய கண்ணோட்டத்தின்படி சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் வைத்து விவாதித்து சட்டமியற்றி அதனைச் செயல்படுத்தி, மக்கள் நல்வாழ்வு வாழ வகை செய்வதாகும். இதனைத்தான் சமீபத்தில் தன்னுடைய 'Idea of Justice' என்ற புத்தகத்தில், நோபல் பரிசு பெற்ற அமர்த்திய சென் அவர்கள் ஜனநாயகம் என்பது விவாதத்தின் அடிப்படையில் முடிவெடுத்து செயல்படுத்தப்படுகின்ற ஜனநாயக முறை, பண்பு என்று சொல்கின்றார்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவிற்கு வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, காலப்போக்கில் இப்படிப்பட்ட, அதாவது விவாதத்தின் அடிப்படையில் உருவாக்கப்படு கின்ற, சட்டங்களின் மூலம் அரசு அமைய வேண்டும் என்ற சிறந்த நோக்கத்துடன், 1773–ல் ஒழுங்குமுறைச் சட்டத்திலிருந்து தொடங்கி, மக்களாட்சித் தத்துவக் கோட்பாட்டிற்கு வித்திட்டு, 1857–ல் ஆங்கில அரசு தானே முன்வந்து இந்திய நிர்வாகத்தை நடத்துகின்ற வேளையில், மாநிலங்களிலும் மேற்சொன்ன முறையில் சட்டமன்றத்திற்கு வித்திட்டது. இவையாவும் 1909, 1919, 1935 ஆம் ஆண்டுகளின் சட்டங்கள் வாயிலாக மேம்படுத்தப்பட்டு படிப்படியாக சட்டத்தின் ஆட்சி வலுப்பெற்றது.

சுதந்திர இந்தியாவில் நமக்கென ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி, அதன் வாயிலாக மத்தியிலும், மாநிலங்களிலும் சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த வகையில், ஆரம்பத்தில் சென்னை ராஜதானியாகத் தொடங்கி, 1956–ல் சென்னை மாகாணமாக மாறி பேரறிஞர் அண்ணா தலைமையில் 1967–ல் அமைந்த அவருடைய ஆட்சி சென்னை மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றி, சட்டமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தின் மூலம் ஆட்சி நடந்து கொண்டு வருகின்றது. தலைவர் கலைஞர் தலைமையில், அவர் ஐந்து முறை முதல்வராக, பல காலகட்டங்களில் பல மாற்றங்களைக் கொண்டு வந்து, பல சமூகப் பொருளாதார மாற்றங்களை சட்டத்தின் ஆட்சி மூலம் உருவாக்கி, இன்று புதிய வளாகத்தில் சட்டப் பேரவை அமைத்து ஜனநாயகத்தை பலப்படுத்திக் கொண்டிருப்பது ஒரு மகத்தான சாதனை, ஜனநாயகப் பண்பாகும். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் பல மாற்றங்களைத் தலைவர் கலைஞர் தலைமையில் கண்ட தமிழகம், புதிய வளாகத்தில் இன்னும் பல சமுதாய மாற்றங்களை, அண்ணா சொன்னதைப் போல் ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி மக்களாட்சித் தத்துவத்தின் வழியில் மக்கள் நல அரசு செயல்பட்டு வருகின்றதென்பதற்கு வேறென்ன விளக்கம் வேண்டும்!

பூம்புகாரைப் புதுப்பித்தார்; வள்ளுவர் கோட்டம் கண்டார்; வான்புகழ் வள்ளுவனுக்கு விண்ணைத் தொடும் சிலை எடுத்தார்; இன்று புதிய சட்டமன்ற–செயலகக் கட்டடம் தந்தார். இக்கலைச் சின்னங்கள் உள்ளவரை கலைஞர் புகழை வரலாறு வாழ்த்திக்கொண்டேயிருக்கும்!

தொலைநோக்காளர் கலைஞர்

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி,
செய்தித் துறை அமைச்சர்

தமிழக வரலாற்றில் திராவிட இயக்கம் தோன்றிய பின்னரே சமூக மறுமலர்ச்சிக் காலம் தொடங்கியது என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமே குறிக்கோள் என்றுதான் இயக்கங்கள் இயங்கி வந்தன என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது. நம் மண்ணை ஆதிக்கம் செய்ய வந்த வேற்று இனத்தவர் பலரும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி நம் செல்வங்களை அபகரித்தனர். அதன்பின் நம் வாழ்வுரிமையின் மீதும் ஆதிக்கம் செய்தனர். ஆனால் அந்த ஆதிக்கவாதிகள் மக்கள் சமுதாயத்தின் மான வாழ்வைப்பற்றிக் கவலைப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்ட காலக்கட்டங்களில் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருந்த (அதாவது அன்றைய சென்னை மாகாணம்) ஆங்கிலேய ஆட்சியின்கீழ் மண்ணின் மைந்தர்களான நீதிக் கட்சியினர் அரசியல் ரீதியாகவும், சட்டமன்ற ஜனநாயக அடிப்படையில் அரசுப் பொறுப்புகளில் ஈடுபட்டும், சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களது ஆட்சியில் அடித்தளத்து மக்களைக் கைதூக்கிவிட பல சட்டங்களையும், திட்டங்களையும் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள். அந்தக் காலக்கட்டத்தில், நம்முடைய அறிவாசான் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்தபோதுங்கூட சமூகப் பணி செய்த நீதிக் கட்சியை ஆதரித்தார். பின்னர் தனி இயக்கம் கண்டு தன்மானக் கொள்கையைத் தரணிக்குத் தந்து தமிழகத்தை வலம் வந்தார். பெரியாரின் கருத்துக் கனல் வீச்சால் ஈர்க்கப்பட்ட பேறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களைப் போன்ற எண்ணற்ற தன்மான இயக்க வீரர்களும் பெரியாரின் தலைமையில்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் கண்ணகி சிலையை சென்னை மெரினா கடற்கரை காமராசர் சாலையில் மீண்டும் 3–6–2006 அன்று திறந்து வைத்தல்

இயக்கம் கண்டு பணியாற்றத் தொடங்கியபோது, தாம் அரசியலில் ஈடுபடுவோம் என்றோ, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்றோ கருதியதில்லை. மாறாக, அவர்களது எண்ணம் முழுவதும் தமிழர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது ஒன்றே குறிக்கோளாயிருந்தது.

எனினும், காலமும், சமூகத் தேவையும், அரசியல் சூழலும், வலுவான கொள்கை அடிப்படையிலான ஒரு இயக்கத்தை உருவாக்கும் என்கிற உலக வரலாற்று நியதிப்படி 'திராவிட முன்னேற்றக் கழகம்' தோன்றியதன் விளைவாக, சுய மரியாதை என்ற உயரிய கொள்கையை



மூதறிஞர் இராஜாஜி நினைவிடம்

அடிப்படை நோக்கமாகக் கொண்டு இனமானம், மொழி உணர்வு, பகுத்தறிவு எண்ணங்கள் மக்களிடம் எழுச்சிபெற்றன. 1957ஆம் ஆண்டு 15 உறுப்பினர்கள் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் நுழைந்தபோது அந்த முதல் தேர்தலிலேயே மக்களின் நன்மதிப்பைப் பெற்று வெற்றிவாகை சூடிய தலைவர்தான் இன்றைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அன்று தொடங்கி தொடர்ந்து 53 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, உலக வரலாற்றில் யாரும் புரியாத சாதனையைத் தலைவர் கலைஞர் அவர்கள் படைத்து வருகிறார்.

'மதிநுட்பம் ஒன்றே அரசியலில் உயர வழி' என்றுதான் உலக அரசியல் வரலாறு நமக்கு உணர்த்தி வருகிறது. ஆனால் தலைவர் கலைஞர் அவர்களின் வரலாறோ, மதிநுட்பம் மட்டுமல்ல, மக்கள் நலனும் முதன்மையானது என்பதை எடுத்துக் காட்டுகிறது. திராவிட இயக்கக் கொள்கை உணர்வை, தமிழ்ப் பண்பாட்டுப் பெருமைகளை தன் இளம் வயதிலேயே உள்ளத்தில் ஆழமாகப் பதித்து, அதன்வழி தன் அரசியல் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், தனக்கு ஆட்சிப் பொறுப்பை மக்கள் வழங்கும் போதெல்லாம் தமிழ்ப் பண்பாட்டை மீட்டெடுக்கும் அரிய பணிகளைச் செய்து வந்திருக்கிறார்.

பன்னெடுங் காலமாக பண்பாட்டால் சிறந்து விளங்கிய உலகின் மூத்த குடியான தமிழ்க்குடி, இடையில் புகுந்த ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பால் தனது தனித் தன்மையை இழந்த நிலையை மாற்ற எண்ணங்கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், சுய மரியாதை இயக்கம், திராவிட இயக்கம், தனித் தமிழ் இயக்கம் நடத்திய போராட்டங்களை உணர்ந்திருந்த காரணத்தால், தனது ஆட்சிக் காலத்தில் தமிழை உயர்த்த, தமிழ்ப் பண்பாட்டைப் புதுப்பிக்க, தமிழ்நாட்டை மேம்படுத்த, தமிழினத்தை உலகோர் புகழ, பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறார்.

எதையும் ஊன்றிப் படித்து, நுணுகி ஆராய்ந்து மக்களுக்குத் தேவையான கருத்துகளை எளிமையாகத் தருவது தலைவர் கலைஞர் அவர்களின் தனித் தன்மையாகும். அப்படித்தான் தமிழர்களின் அறிவுச் சொத்தான திருக்குறளையும், தொல்காப்பியத்தையும் எளிமைப்படுத்தி எளியோரும் படித்திட இனிய தமிழில், எளிய நடையில் படைத்துத் தந்தார். அதேபோல செம்மொழித் தமிழின் புகழைப் பரப்ப சங்கத் தமிழையும் நமக்குத் தந்தார்.

இன்று இந்தியா பின்பற்றி வரும் ஜனநாயக முறை என்பது இங்கிலாந்து நாடாளுமன்ற ஜனநாயக முறையாகும். பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த நாடுகள்



பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம்

மட்டுமல்லாமல் பல நாடுகள் இதனையே பின்பற்றி தங்களுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கி அதன்வழி ஆட்சி நடத்துகின்றன. இந்த முறையில்தான் இந்தியாவில் மாநிலச் சட்டமன்றங்களும் இயங்கி வருகின்றன. ஆயினும் தமிழக வரலாற்றில் பிற்காலச் சோழர்களின் காலத்தில் குடவோலை முறையில் தேர்தல் நடைபெற்றன என்பதை உத்தரமேரூர் கல்வெட்டுகள் உரைக்கின்றன. இச்செய்தியை வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களோ சங்க காலத்திலேயே தேர்தல் முறை இருந்தது என்ற செய்தியை 1997 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14–ஆம் நாள், தமிழக சட்டமன்றப் பவள விழா, சட்டப்பேரவை வைர விழா நடைபெற்றபோது குறிப்பிட்டார். 'சங்க காலத்தில் ஊர்த் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மக்கள் தங்களுக்குப் பிடித்தவர்களின் பெயர்களை ஓலைகளில் எழுதி அதனை ஊரின் நடுமண்டபம் ஒன்றிலே வைக்கப்பட்ட குடத்திலே போடுவார்கள். இந்தச் செய்தியை, சங்ககாலப் புலவர் ஒருவர் சங்கத் தமிழ் இலக்கியத்தில் போர்க்களக் காட்சி ஒன்றைப் பாடுகின்றபோது வெளிப்படுத்துகிறார்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பண்பாட்டை மீட்டெடுப்பதில், தமிழின் பெருமையை உலகத்திற்கு எடுத்துரைப்பதை தனது கடமையாகக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் இடைப்பட்ட காலத்தில் தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை தமிழினம் இழந்துவிடக் கூடாது என்கிற உயரிய நோக்கில் எதிர்காலத் தலைமுறை அறியும் வண்ணம் நினைவில் நிற்கும் நிலைத்த பணிகளை தனது ஆட்சிக் காலத்தில் செய்திருக்கிறார்.

➢ தமிழர் வாழ்க்கை நெறியை வெளிப்படுத்தும் திருக்குறளைத் தந்த அய்யன் திருவள்ளுவருக்கு சென்னையில் 'கோட்டம்' அமைத்தார்.

➢ குமரிமுனையில் வானளாவ உயர்ந்து நிற்கும் 'வள்ளுவர் சிலையை' நிறுவினார்.

➢ தமிழ்ப் பண்பாட்டின் சின்னமான கண்ணகிக்கு சென்னையில் 'சிலை' அமைத்தார்.

➢ பூம்புகாரில் தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் சிலப்பதிகாரத்தின் புகழைப் பேணிக் காக்கும் வகையில் 'எழுநிலை மாடமும், நிலா முற்றமும்' அமைத்தார்.

➢ தென்னாப்பிரிக்காவில் காந்தியாருடன் இணைந்து போராடிய தில்லையாடி வள்ளியம்மைக்கு 'நினைவு மண்டபம்' அமைத்தார், தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனார் இழுத்த 'செக்கை' தேடிக் கண்டு பிடித்து அதனை வரலாற்றுச் சின்னமாக்கினார்.

➢ பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை நினைவுச் சின்னம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் மாவீரன் பூலித்தேவன் நினைவு மண்டபம், திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடம், பாஞ்சாலங்குறிச்சி அருகே கவர்னகிரியில் 'வீரன் சுந்தரலிங்கம் நகர்', வேலூரில் சிப்பாய் புரட்சியில் உயிர்த் தியாகம் செய்த வீரத் தியாகிகளின் நினைவாக 'நினைவுத் தூண்', சென்னையில் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, பெரியவர் பக்தவத்சலம் நினைவிடங்கள், காயிதே மில்லத் மணிமண்டபம், தியாகிகள் மணிமண்டபம்.

➢ பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணி மண்டபம், தியாகி விசுவநாத தாஸ் நினைவில்லம், வ.வே.சு. ஐயர் நினைவில்லம், பரிதிமாற் கலைஞர் நினைவில்லம், காமராஜர் மணி மண்டபம், தியாக சீலர் கக்கன் மணி மண்டபம்.

➢ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், தியாகி கக்கன், தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்ற பாஷ்யம், ஜெய்ஹிந்த் செண்பகராமன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருக்கு சிலைகள் அமைப்பு.

➢ சென்னையில் இந்திய சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண்

என இப்படி நினைவுப் பணிகளை செய்து மக்களுக்காக வாழ்ந்து, போராடி, வரலாற்றில் நிலைத்திருக்கும் மாமனிதர்களுக்கு நிலைத்த புகழைப் பறைசாற்றும் நினைவுச் சின்னங்களை அமைத்துத் தந்த தலைவர் கலைஞர் அவர்கள், கோவையில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகப் பொதுமை பாடிய கணியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்றம் கிராமத்தில் (சிவகங்கை மாவட்டம், மகிபாலன்பட்டி) நினைவுச் சின்னமும், சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா மற்றும் செம்மொழிப் பெருமையை உலகெங்கும் கொண்டு சென்ற

கால்டுவெல் ஆகியோருக்கு நினைவு இல்லங்கள் அமைத்திடவும் ஆணையிட்டுள்ளார்.

மக்கள் நலத் திட்டங்களையும், மக்கள் வாழ்வை உயர்த்தும் சமூகச் சீர்திருத்த சட்டங்களையும் தமிழக சட்டமன்றத்தின் மூலமாகக் கொண்டுவந்து அதனைச் சிறந்த முறையில் செயல்படுத்தி இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் முன்மாதிரியாகத் திகழ்கின்ற



மாண்புமிகு முதல்வர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலையை திறந்து வைத்தல்

தலைவர் கலைஞர் அவர்கள், அடிப்படை வசதிப் பணிகளைச் செய்து கொடுப்பதோடு நின்றுவிடாமல், அரசு நிர்வாகத்தை மேம்படுத்துவதிலும், விரைந்து பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பழைய நடைமுறைகளை மாற்றியமைத்து, தேவையான அளவுக்கு அரசு ஊழியர்களை நியமித்து, புதிய துறைகளை ஏற்படுத்தி பல முன்மாதிரிகளைப் படைத்திருக்கிறார்.

ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டையில் 'தலைமைச் செயலகம்' இயங்கிவந்த நிலையில், இட நெருக்கடி ஏற்பட்டபோது, கோட்டை வளாகத்திலேயே பத்து மாடிக் கட்டடம் ஒன்றை அன்றைய மதிப்பில் ரூபாய் 132 இலட்சம் செலவில் கட்டி, 1975 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14 ஆம் நாள் 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்கிற பெயரில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் 35 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், தலைமைச் செயலகத்தில் மீண்டும் இட நெருக்கடி ஏற்பட்ட சூழலில் இப்போது புதிய கட்டடம் ஒன்றைக் கட்ட முடிவெடுத்து, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டப்பட்டுள்ளது.

1947ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நமக்கு விடுதலை கிடைத்தாலும், ஆங்கிலேயர் கட்டிய கட்டடத்தில்தான் இவ்வளவு காலம் அரசை நடத்தி வந்தோம். தலைவர் கலைஞர் அவர்களின் செயல்திறமிக்க சிந்தனை எடுத்த சீரிய முடிவால், புதிய சட்டமன்ற வளாகம் அமைக்கப்பட்டு, இப்போதுதான் ஆங்கிலேயர்களின் கட்டடத்திலிருந்து புதிய கட்டடத்திற்கு நாம் வரவிருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறை ஆட்சிப் பொறுப்பேற்கும்போதும், வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்வதில் முனைப்பாக இருந்து புதிய பணிகள் பலவற்றிற்கு அடித்தளமிடுவார். அகன்ற சாலைகள், போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்கும் பாலங்கள், மக்கள் தொகைப் பெருக்கத்தை ஈடுசெய்ய துணை நகரங்கள், சிறந்த போக்குவரத்து வசதியை அளிக்க புதிய பேருந்து நிலையங்கள், அரசு அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள், நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள், நடுத்தர மற்றும் அடிநிலையில் வாழும் மக்களுக்கும் குடியிருப்பு வசதிகள், வீட்டு மனைகள், விரிவான கழிவு நீரகற்றும் கட்டமைப்புகள், சுகாதாரமான குடிநீர் வசதியளிக்கும் மேல்நிலைத் தொட்டிகள், பொழுதுபோக்குப் பூங்காக்கள் எனப் புதிய கட்டுமானங்களை எதிர்காலத் தேவைக்கேற்ப விரிவான பரப்பளவில் உருவாக்குவது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுக்கே உரித்தான தலைமைப் பண்பாகும். இந்த அடிப்படையில் தான், தரைத் தளத்துடன் சேர்த்து எட்டுத் தளங்கள் அமைத்து ஆசியாவிலேயே மிகப் பிரமாண்டமான ஒரு மாநில அரசின் சட்டமன்றத்தை, தலைமைச் செயலகத்தை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

'நாளைய தினத்தைப் பற்றி மட்டுமே சிந்திப்பவன் அரசியல்வாதி; நாளைய தலைமுறையைப் பற்றி சிந்திப்பவனே மக்கள் தலைவன்'. தலைவர் கலைஞர் அவர்கள் மக்கள் தலைவராவார். அதனால்தான், எதிர்காலத் தலைமுறை ஏற்றம் பெற திட்டங்கள் வாயிலாக மனித நேயத்தையும், சட்டங்கள் வாயிலாக சமூக மறுமலர்ச்சியையும் உருவாக்குகிறார்.

இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டின் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் எப்படியிருக்கும் என்பதை இப்போதே தனது தொலைநோக்குப் பார்வையால் கண்டு, அதற்குத் தக்கவாறு திட்டமிட்டுப் பணியாற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் பல்வேறு புகழுக்கு மகுடம் வைத்ததைப் போல, தலைநகர் சென்னையில் தமிழகச் சட்டமன்றக் கட்டடம் நிமிர்ந்து நின்று பறைசாற்றுகிறது.

தாயினும் நல்லார் தலைவர் கலைஞர்

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி
பேரவைத் துணைத் தலைவர்

உலக நாகரிகத்தை உரசிப் பார்க்க விரும்புகிறவர்கள் கிரேக்க பூமியைத் தொட்டுப் பார்க்காமல் தொடர முடியாது. இந்தியாவில் மக்களாட்சியின் மகத்துவத்தைத் தரிசிக்க விரும்புகிறவர்கள், தமிழக சட்டப் பேரவையில் கலைஞர் என்னும் வாழும் சகாப்தத்தின் வழித்தடத்தை வணங்கிப் போற்றாமல் பயணிக்க முடியாது. முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் ஐம்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றியதற்காக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட விழா இன்னும் நினைவலைகளில் நிழலாடுகிறது. கட்சி மாச்சரியங்களைக் கடந்து தலைவருக்குப் புகழாரம் சூட்டியவர்களின் மையக் கருத்தில் மணிமகுடமாய் ஒளிர்ந்தது, வார்த்தைகளின் ஆக்கிரமிப்பில் அடக்கமுடியாத ஒரு ஒப்பற்ற ஜனநாயகவாதி தலைவர் என்பதே ஆகும்.

கால முகடுகளில் திராவிட இயக்கத்தின் அடிச்சுவடுகளைத் தேடுகிறபோது, 1957ஆம் ஆண்டின் தடம் சற்று அழுத்தமாகப் பதிந்திருப்பதைக் கண்கள் ஊடுருவிப் பார்க்காமல் ஓய்வதில்லை. 'வெட்டவெளியில் பேசி என்ன பயன், முடிந்தால் சட்ட சபைக்கு வாருங்கள்' என்ற அன்றைய ஆட்சியாளர்களின் கேள்விக்கு 1957ஆம் ஆண்டு விடை கிடைத்தது. அந்த ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைய மதராஸ் மாநிலத்தின் சட்டப் பேரவையில் முதலடி எடுத்து வைத்தது. தமிழனை உய்விக்கும் நெஞ்சுரத்தோடு பேரறிஞர் அண்ணா தம் தம்பிமார்களில் தலையாயவர்களான தலைவர் கலைஞரோடும் பேராசிரியப் பெருந்தகையோடும் மொத்தம் 15 கழக முன்னோடிகளுடன் சட்டப் பேரவையில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள், தமிழர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளிக்கீற்று வெளிப்பட்ட நாள். தமிழனின் தன்மான வரலாற்றுக்கு முதல் அத்தியாயம் எழுதும் பணி அன்றே தொடங்கிவிட்டது என்பது சாலப் பொருந்தும்.

1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டு காலம் இரண்டாவது எதிர்க் கட்சியாக, ஈரோட்டு ஏந்தல் தந்தை பெரியாரின் அடிபொற்றி திராவிட முன்னேற்றக் கழகம் புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்திருந்த பழைய சட்டப் பேரவை வளாகத்தில் சமுதாயத்திற்கான பணியைத் தொடங்கியது. அப்போதுதான் அந்தக் கோட்டையின் புனிதம் உண்மையிலேயே உணரப்பட்டது. மேடைப் பேச்சினால் தமிழ் நிலத்தில் செந்தமிழ் மணம் பரப்பிய கழகத் தலைவர்கள் சட்டப் பேரவையில் பைந்தமிழ் மணம் பாங்குடன் வீச தலையாய முயற்சி எடுத்தனர். சட்டமன்றத்தில் ஆளும் கட்சியில் இருந்த பழுத்த அரசியல்வாதிகளுடன் பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் நடத்திய வாத–விவாதங்கள், சொற்போர்கள் ஒன்றா, இரண்டா? அரசியல் நாகரிகம் புதியதோர் பரிமாணத்தை அடைந்த பொற்காலம் தொடங்கிய இடந்தான் பழைய சட்டப் பேரவை வளாகம்.

1962 ஆம் ஆண்டு 50 கழக முன்னோடி களுடன் சட்டமன்றத்திற்குள் எதிர்க்கட்சித் தலைவராய் அண்ணா பிரவேசித்தார். அவர்தம் தம்பிமார்களின் படைக்குத் தளபதியாய் எழுச்சிமிக்க இளைஞராய் இருந்த நம் தலைவர் கலைஞர் அவர்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக்கி அழகுபார்த்தார் அண்ணா. அந்நாளில் அண்ணாவும் கலைஞரும் ஆதாரங்களோடு ஆளும் கட்சியிடம் வைத்த வாதங்கள் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இருந்தும் ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரை குற்றஞ்சாட்டி வந்தனர். அதற்கு அண்ணா, 'நீங்கள் எதிர்க்கட்சி சரியில்லை என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் விரைவில் நீங்களே, அந்தக் குறையைப் போக்கி விடுவீர்கள் என்று எண்ணுகிறேன். நாங்கள் ஒரு காலத்தில் நீங்கள் இப்போது உள்ள இடத்தில் அமர வேண்டியவர்கள் என்பதால் பொறுப்புணர்ந்து அடக்கத்துடன் கூறுகிறேன்' என்று பதிலளித்தார்.

அண்ணாவின் அந்த வாக்கு எவ்வளவு தீர்க்கதரிசனமானது என்பது வெகு சீக்கிரத்திலேயே தெரியவந்தது. 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 137 இடங்களைக் கைப்பற்றி தமிழகத்தில் ஆட்சி அமைத்தது. மக்களாட்சி என்பது ஒரு ஆட்சி முறை மாத்திரமல்ல, ஒரு புது வாழ்க்கைக்கான வரவேற்புப் பத்திரம்; பொறுப்புக்களையும் பலன்களையும் பங்கிட்டுக்

கொள்ளும் ஒரு கூட்டு முயற்சி என்பதுதான் கழகத்தின் தாரக மந்திரமாக இருந்தது. அண்ணா முதலமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் சட்டப் பேரவையின் துணையோடு கொண்டுவந்த மாற்றங்கள் இன்றளவும் பேசப்படுகின்றன. அதுவரை மதராஸ் மாநிலம் என்று அழைக்கப்பட்டு வந்த நமது மாநிலத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்தது, தந்தை பெரியாரின் கொள்கையான சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் அரசாணையைக் கொண்டுவந்தது, இந்தியத் துணைக் கண்டம் முழுதும் மும்மொழித் திட்டம் நடைமுறையில் இருந்தபோது இரு மொழித் திட்டம் கொண்டுவந்து இங்கு இந்திக்கு இடமில்லை என்று தீர்மானம் நிறைவேற்றியது, பேருந்துகளில் திருக்குறள் இடம்பெறச் செய்தது, விதவைத் திருமணம் செய்து கொள்வோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை உள்ளிட்ட திராவிடக் கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்தது போன்ற பல பெருமைகளுக்குரியதுதான் பழைய சட்டப் பேரவை மண்டபம்.

அந்த சட்டப் பேரவை சந்தித்த பேரிழப்பு அண்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டில் தமிழர்களைத் தவிக்கவிட்டு மறைந்ததுதான் என்று வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது. தமிழகத்தை இருள் சூழ்ந்துவிட்டிருந்த அந்த வேளையில், அண்ணா எடுத்துச் சென்ற திராவிட தீபத்தைக் கையிலெடுத்து தமிழர்களை வழிநடத்துவோர் யார் என்ற கேள்விக்கு பதில் கிடைக்க வெகுநேரம் ஆகவில்லை. கடந்தகால நினைவுகளில் கரைந்து போகாமல், எதிர்கால கனவுகளில் தோய்ந்து போகாமல், நிகழ்காலத்தில் சஞ்சரித்து, எதுவரினும் அஞ்சாது, கண் துஞ்சாது எடுத்த இலக்கை அடையவல்ல நெஞ்சுறுதியும் தலைமைப் பண்பும் ஒருங்கே பெற்றவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒருவரே என்று ஒருமனதாக முடிவானது. ஆள்பவருக்குத் தேவையான அரிய குணநலன்கள் இருந்ததனாலன்றோ அண்ணா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இவரிடம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்? கொள்கையால் தம்மை ஈர்த்தவரும், சுவாசத்தைவிட நெருக்கமானவருமான அண்ணாவின் இழப்பைத் தன் நெஞ்சில் சுமந்துகொண்டு, தமிழ் இனத்தையும் மொழியையும் காக்கும் பெரும் பொறுப்பையும் இதயத்தில் ஏந்தி, தலைவர் அதே சட்டப் பேரவையில் முதலமைச்சராகத் தன் பயணத்தைத் தொடங்கி இன்று நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்த நாற்பது ஆண்டுகளில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று சீரிய பணியாற்றி வரும் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் ஆற்றிய உரைகள் எத்தனை? தமிழர்களின் தன்மானப் பிரமிடுகளை நிமிர்த்தி நேர் செய்த, காலத்தால் அழியாத, சுயமரியாதைக் கனல் பரப்பிய மின்னல் சரங்களல்லவா அவை! முதல் சில ஆண்டுகளிலேயே கொண்டு வரப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள்தான் எத்தனை? குடிசை மாற்று வாரியம், பிச்சைக்காரர்–தொழு நோயாளர் மறுவாழ்வு இல்லங்கள், கண்ணொளித் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோருக்கு தனித்தனி துறைகள், போலீசாரின் தேவைகளை உணர இந்தியாவிலேயே முதன்முதலாக போலீஸ் கமிஷன், தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதி, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், பெண்களுக்கு சொத்துரிமை, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், மொழிப்போர்த் தியாகிகளுக்கு ஓய்வூதியம், ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள், மாநில திட்டக் குழு அமைப்பு, இப்படி எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

1969 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டுவரை குடியரசு தலைவராக இருந்த திரு. வி.வி. கிரி அவர்கள் ‘தமிழ்நாடு இந்தியாவிற்கு வழிகாட்டுகிறது’ என்று வாயாரப் புகழ்ந்தாரே, அந்தப் புகழுக்கு உரியதாக தமிழகத்தை மாற்றிய பெருமைக்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் மக்கள் சமுத்திரத்தின் புகழ் அலையில் மிதந்து வருவதில் வியப்பில்லை அல்லவா? சர்வோதயம் என்னும் வேள்வியில் புடம்போடப்பட்ட சொக்கத் தங்கமாம் லோக்நாயக் ஜெயப்பிரகாசரின் பாராட்டைப் பெற்ற தலைவரின் திட்டங்களால் தமிழகம் முழுப் பயன் அடைந்தது என்பது வரலாறு. தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தியது மட்டுமின்றி தமிழ் இனத்தின் பழம்பெரும் சிறப்புகளை நினைவு கூரும் வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்த பூம்புகார் கலைக்கூடம், வள்ளுவர் கோட்டம், கட்டபொம்மன் கோட்டை, திருவள்ளுவர் சிலை இவையெல்லாம் உலகத் தமிழர்களின் உள்ளத்தில் ஒளி பாய்ச்சும் கலாச்சார கலங்கரை விளக்கங்களாக இருப்பதிலே நமக்கு எத்தனை பெருமை!

ஆகஸ்ட் 15, சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் பிரதமர் கொடியேற்றுவது போன்று மாநிலங்களில் ஆளுநருக்கு பதில் முதல்வர்களே மூவர்ணக் கொடியை ஏற்றவேண்டும் என்ற உரிமையை அந்நாள் பிரதமர் இந்திரா காந்தியிடம் கோரிப் பெற்றதை தமிழினமே பாராட்டுகிறது. 1974 ஆம் ஆண்டு முதல் தத்தம் மாநிலத் தலைநகரில் சுதந்திர தினத்தன்று கொடியேற்றும் போதெல்லாம், முதல்வர்கள்

நினைவுகூரும் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய், வாழும் வரலாறாக இருப்பவர் நம் தலைவர்.

இல்லாமையும் கல்லாமையும்தான் தமிழக மக்களின் தலைவிதி என்றிருந்ததை மாற்றி, புது விதி எழுத புறப்பட்ட நம் தலைவர் சட்டப் பேரவையின் துணையோடு சாதித்ததை, மக்களுக்கு வளம் சேர்த்துக் கொண்டிருக்கும் திட்டங்கள் பறைசாற்றுகின்றன. பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, மீளாப் பிணியின் கோரப் பிடியிலிருந்து பாமர மக்களைக் காத்திட உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், அடுப்பை ஊதி ஊதிப் புகையால் கண்பூத்துப் போன தாய்மார்களுக்கு வரப்பிரசாதமாக இலவச எரிவாயு அடுப்பு, மன மகிழ்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, யாரையும் எதிர்நோக்காமல் பசியார ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று கடந்த சில ஆண்டுகளில் மட்டும் எத்தனையோ ஏற்றமிகு திட்டங்கள்! அருந்ததி இன மக்களை அரவணைத்து, மூன்று சதவீத உள் ஒதுக்கீடு வழங்கிய தலைவரின் உருவம் இன்று அருந்ததியர் இல்லங்களில் மாத்திரமல்ல, அவர்கள் உள்ளங்களிலும் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கிறது. வறுமை அரக்கனின் வாய்க்குள் அகப்பட்டு நொறுங்கிக் கொண்டிருந்த மக்களை மீட்டு மறுவாழ்வு அளித்த மாமனிதரைப் புனிதர் என்று புகழின் உச்சியில் வைத்து மக்கள் போற்றுகின்றனர். கோடைக்கால ஆற்றுப் படுகைபோல் வெடித்துக் கிடந்த மக்களின் வாழ்க்கையில் கருணை மழை பொழிந்த வள்ளலைப் போற்றிப் பூரித்துப் போகின்றனர்.

சட்டப் பேரவையில் சில வேளைகளில் சுடு சொல்லால் சுட்டவர்களையும், கடுஞ்சொல்லால் கசையடி கொடுக்காமல், இன்சொல்லால் ஈர்த்து அவர் மனத்து இருள் நீக்கி வள்ளுவன் வழிநின்று 'நன்னயம் செய்துவிடும்' தலைவரின் விசால உள்ளம் கண்டு நான் பிரமித்துப் போயிருக்கிறேன். இதைக் குறிப்பிடுகிறபோது பழைய சட்டப் பேரவையின் கடைசி கூட்டத்தின் இறுதிநாளில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதை இங்கே நினைவுகூர்வது நலம் பயக்கும் என்று கருதுகிறேன். முதல்வர் அவர்கள் பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போன்று ஒன்றைச் சொன்னார்கள். ''இந்தப் பேரவையிலே எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக் கின்றன. விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடை பெற்றிருக்கின்றன. அவற்றையெல்லாம் மறந்து விட்டு, நாம் குடிசெல்கின்ற புதிய இடத்திலாவது நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப் பற்றிய நினைவு ஆகியவைகளோடு நம்முடைய பணியினைத் தொடங்க வேண்டும்'' என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கூறியது போன்று புதிய வளாகத்தில் புத்துணர்ச்சியோடு கடமையாற்ற வேண்டியது ஒவ்வொரு சட்டப் பேரவை உறுப்பினரின் கடமையன்றோ!

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

''ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்'' என்று 5-3-1997 ஆம் நாளன்று 1997-1998 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு செய்ததற்கிணங்க, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

1997-1998 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் அவ்வப்போது உயர்த்தி வழங்கப்பட்ட நிதியின் விவரம் வருமாறு :-

வருடம்	நிதி ஒதுக்கம் (ரூபாயில்)
1997-1998	25 இலட்சம்
1998-1999	35 இலட்சம்
1999-2000	50 இலட்சம்
2000-2001	77 இலட்சம்
2001-2002	82 இலட்சம்
2005-2006	1 கோடி
2006-2007	1 கோடி 20 இலட்சம்
2008-2009	1 கோடி 50 இலட்சம்
2009-2010	1 கோடி 70 இலட்சம்

முதல்வர் கலைஞருடன் பேராசிரியரும் ஆற்காட்டாரும்



சமுதாய நலன் காக்கும் கலைஞர்

திரு. அர. சக்கரபாணி
அரசுத் தலைமைக் கொறடா

"நமது சிந்தனைப் பூங்காவினை – எண்ணச் சோலையைப் புத்தம் புதியதாய்த் திருத்தியமைத்திடல் வேண்டும்; பலவண்ண மலரும், வாசம் வீசிடும் பூஞ்செடிகளும், கொடிகளும், முக்கனி சுவை தந்திடும் பல்வகை மரங்களும், சோலை தன்னில் பூத்துக் குலுங்கிடச் செய்தாக வேண்டும்! காலத்தால் பழமை மெருகேறித் தும்பும் தூசியும் படர்ந்து, மாசுகள் மலிந்து கிடக்கும் தமது எண்ணங்களையும், ஏற்பாடுகளையும், துப்புரவு செய்தாக வேண்டும்!"

எனச் சமுதாய முன்னேற்றம் காண 'அண்ணாமலை பேருரை'யின் வாயிலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களைத் தட்டி எழுப்பிய வாசகங்கள் இவை. மக்களாட்சித் தத்துவத்திற்கு மாண்பூட்டக்கூடிய சட்டமன்றத்திற்கும் இவ்வாசகங்கள் பொருந்தும் என, இவற்றைப் பொன்னேபோல் போற்றி இவற்றிற்குச் செயல்வடிவம் தந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இவரால் பயன்பெறாத சமுதாயம் எதுவும் இல்லை எனச் சொல்லத்தக்க வகையில், யாருமே எண்ணிப் பார்க்க முடியாத திட்டங்களை வகுப்பதில், அவற்றைச் செயலாக்குவதில் அவருக்கு நிகர் அவரே! அந்த வகையில் மக்களாட்சித் தத்துவத்தின் நான்கு முக்கிய தூண்களுள் முதல் தூணாக விளங்கும் சட்டமன்றம் பொலிவு பெறவேண்டும்; அதில் விவாதங்கள் நல்ல முறையில் அமைய வேண்டும்; அவ்வாறு அமைந்தால்தான் மக்களுக்குப் பயன்பெறும் சட்டங்களும், திட்டங்களும் உரிய வகையில் அவர்களைப் போய்ச் சேரும்; அவற்றை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடிய இரண்டாவது தூணாகிய நிருவாக அமைப்பும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்கிற இத்தனை நிலைமைகளையும் ஆய்ந்து, அறிந்து, சீர்தூக்கிப் பார்த்து, தெளிவான ஒரு முடிவை எடுத்தார்கள். அந்த முடிவுதான் இப்போது கட்டப்பட்ட புதிய சட்டமன்ற – தலைமைச் செயலக வளாகம்.

புனித ஜார்ஜ் கோட்டையில், தமிழகத்தின் முதல் முதலமைச்சராக விளங்கியவர் திரு. ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார்; அவர் பெயரையே அரசினர் தோட்டத்திற்குப் பெயரிட்டவர் நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்; அவர்தம் பெயராலேயே -- நம் அரசின் இடத்திலேயே -- நம் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞரின் எண்ணத்திலே கருவாகி, அவரின் நேரடிப் பார்வையிலே உருவாகி, இடைவிடாத அவர் ஊக்கத்தால் இப்போது திருவாகி ஒளிர்கின்ற இந்தப் புதிய சட்டமன்றக் கட்டடம், இனி மென்மேலும் வரலாற்றைப் படைக்கப் போகிறது!

புனித ஜார்ஜ் கோட்டையில் மேற்கொண்ட சமுதாய நலப் பணிகளை, இப்போது அமையப்போகும், புதிய சட்டமன்றத்தில் தொடர்ந்து மேற்கொண்டு மேலும் பல புதிய வரலாற்றைப் படைக்கப்போகிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். சமுதாய நலப் பணியில் நாட்டங்கொண்டு, இடைவிடாது இமைசோராமல் சிந்தித்து இதுகாறும் அவரால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். எனினும், ஒன்றிரண்டு முத்தாய்ப்பான திட்டங்களை மட்டும் இத்தருணத்தில் கூறுவது பொருத்தமெனக் கருதுகிறேன்.

6–5–1989ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமைச் சட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக நிறைவேற்றப்பட்டது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவின்மீது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், செங்கற்பட்டில் 1929ஆம் ஆண்டு நடைபெற்ற சுய மரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி தமது உரையில் கூறியதாவது:

"இப்படிப்பட்ட புரட்சிகரமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, என்னுடைய ஐந்தாவது வயதிலே நிறைவேற்றப்பட்ட அந்த மாநாட்டின் தீர்மானங்களை 60 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, என்னுடைய 65–வது

வயதிலே இந்த மாமன்றத்திலே சட்டங்களாக, திட்டங்களாகக் கொண்டு வருகின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்றால், அது எனக்கு, என்னுடைய அமைச்சர் பெருமக்களுக்கு, இந்த அவைக்குப் பெருமை சேர்க்கக்கூடிய ஒன்று.'' மேலும் தலைவர் கலைஞர் பேசுகையில், ''இந்தச் சட்டம் நிறைவேறுகின்ற நேரத்தில் இதற்கு அடிகோலிய பழம்பெரும் தலைவர்கள் அத்தனை பேருக்கும் இந்தத் தீர்மானங்களைச் செங்கற்பட்டு சுய மரியாதை மாநாட்டிலேயே அன்றைக்கு முன்மொழிந்த சபாபதி முதலியார் அவர்கள் இன்றைக்கு இல்லாமல் இருந்தாலும்கூட, அவர்களுடைய திக்கு நோக்கி தெண்டனிட்டு, வணக்கம் தெரிவித்து, அந்தச் சுய மரியாதை மாநாட்டிற்கு அடிகோலிய தந்தை பெரியார் அவர்கள் வாழ்க, அவருடைய வழித் தோன்றல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க! வாழ்க! என்று கூறி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கின்றேன்.''

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட இதேபோன்ற சட்டங்கள் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் முன்மாதிரியாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளன. பின்னாளில், இந்திய அரசு இதேபோன்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. இதன் பெருமை, தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.

காலத்தின் வளர்ச்சிக்கேற்ப வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்தில் நோய்களின் தாக்கமும் பெருகியுள்ளது. அதுவும் சமுதாயத்தில், பொருளாதாரக் குறையுடைய ஏழையெளிய மக்களையும், குறைந்த செலவைக் கொண்டு மேற்கொள்ள இயலாத நோய்கள் தாக்கி வாட்டுகின்றன. அதிக செலவுசெய்து சிகிச்சை பெறமுடியாமல் தவிக்கும் அவர்களின் நிலை கண்டு மனம் இளகிய தலைவர் கலைஞர் அவர்களின் மனத்தில் உடனே உதித்த திட்டம்தான் ''உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்''. இதயம் மற்றும் நெஞ்சக அறுவை சிகிச்சை, சீறுநீரக நோய்களுக்கான சிசிச்சை, மூளை மற்றும் நரம்பு மண்டல சிகிச்சை, இரைப்பை மற்றும் குடல் நோய்களுக்கான சிகிச்சை என 51 வகை நோய்களுக்கான சிகிச்சைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட 552 மருத்துவமனைகளில் அளிக்கப்படும் என்றார். அதன் விளைவாக 25-2-2010 வரை, ஒரு கோடியே 44 இலட்சம் குடும்பத்தினர் இத்திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர் என்றும், 43 ஆயிரத்து 716 பேருக்கு 140 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் உயர் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்காகத் தனியே 1 கோடியே 22 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு, 90 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் நிறைவுற்றன எனவும் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமன்றி, தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளான காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, இன்னும் இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சட்டமன்றத்திற்கு முன்கூட்டியே வந்து, உரிய ஆலோசனைகளை வழங்குவதும், அப்பிரச்சினைகள் குறித்து நடைபெறும் விவாதங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களே அதிகம் பங்குபெறும் நிலையை உருவாக்குவதும் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கையாளும் தனித் திறமையாகும்.

சட்டமன்ற விவாதங்கள் நல்ல வகையிலும், பயனுள்ள முறையிலும் அமைய வேண்டும் என்பதிலும் சட்டமன்றத்தின் மாண்பு எவ்வகையிலும் கெடக்கூடாது என்பதிலும் உறுதியாக இருப்பவர் தலைவர் கலைஞர் அவர்கள். விவாதங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு அவர் இதுகாறும் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளே எடுத்துக்காட்டுகளாகும்.

தமது 53 ஆண்டுக் கால சட்டமன்ற வரலாற்றில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டுவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தற்போது பல்வேறு வசதிகளுடனும், அழகிய வேலைப்பாடுகளுடனும் கூடியவகையில் கட்டப்பட்ட புதிய சட்டமன்ற – தலைமைச் செயலக வளாகமானது, இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகளாவிய அளவில் புகழைத் தேடித் தரும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய வளாகத்தில் அமைந்து புகழை அடையப்போகும் சட்டமன்றமானது, மேலும் பல சமுதாய நலன்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மூலம் பெறும் என்பது திண்ணம்.

தமிழர்களின் நினைவுச் சின்னம்

திரு. டி. சுதர்சனம்
தலைவர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சி

ஜனநாயகத்தை முறியடித்து, சர்வாதிகாரத் திற்குக் கால்கோல் அமைத்த சம்பவங்கள், உலக நாடுகளில் நடைபெற்றதைச் சரித்திரம் நமக்குப் பாடமாக உணர்த்தி வருகிறது. 'அரசாங்கமா? நான்தான் அரசாங்கம்!' என்று கொக்கறித்தான் பதினான்காம் லூயி மன்னன். அவனைத் தூக்கியெறிய நடைபெற்றது தான் பிரெஞ்சுப் புரட்சி! அந்தப் புரட்சியிலிருந்து எழுந்ததுதான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அரிய தத்துவங்கள். இன்றைக்கும் உலகத்தில் ஜனநாயகத்தை இந்தத் தத்துவங்கள்தான் வழிநடத்தி வருகின்றன. பிரெஞ்சுப் புரட்சியில் உந்தப்பட்டு, உருவானதுதான் அமெரிக்கச் சுதந்திரம்! 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்காகப் பணியாற்றும், மக்கள் அரசு அமையவேண்டும்' என்ற உன்னதமான கோட்பாடு அங்கேதான் உருவானது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் 200 ஆண்டுகால அடிமை விலங்கை உடைத்தெறிந்து பெற்றதுதான் இந்தியச் சுதந்திரம்! சத்தியம், அஹிம்சை என்ற லட்சியங்கள் அடிப்படையில், மகாத்மா காந்தி தலைமையில் கத்தியின்றி ரத்தமின்றி இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த பெருமை நமக்கு உண்டு!

பிரிட்டிஷ் ஆட்சிகாலத்திலேயே, 1919ஆம் ஆண்டில் 'மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு' சீர்த்திருத்தங் களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின்மூலம் மக்களின் ஒரு பிரிவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அந்நாளைய மாகாணச் சட்டமன்றங்களில் முதன்முதலாகப் பொறுப்பேற்கத் தொடங்கினர். இதன்மூலம் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் அமைவதற்கு வழி ஏற்பட்டது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டாலும், இன்று நாம் காணுகிற முழுவடிவம் கட்டப்பட்டு 100 ஆண்டுகளாகிறது. சென்னை மாகாணத்திலேயே முதன்முறையாக 1920ஆம் ஆண்டுதான் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் பொறுப்பேற்கிற வாய்ப்பு ஏற்பட்டது.

நாடு விடுதலை அடைந்த ஆகஸ்டு 15, 1947 அன்று, சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த பெருமை ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியாருக்கு உண்டு. அவரது நேர்மையையும் எளிமையையும் போற்றும் வகையில்தான் புதிய சட்டமன்றம் அமையவிருக்கும் பகுதிக்கு 'ஓமந்தூரார் அரசினர் தோட்டம்' என்று பெயர்சூட்டி முதல்வர் கலைஞர் சிறப்புச் சேர்த்துள்ளார்.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிந்தபிறகு, இப்போதிருக்கும் தமிழ்நாடு உதயமானது. தமிழக சட்டப் பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 234 உறுப்பினர்களும், ஆங்கிலோ – இந்தியப் பிரதிநிதியாக ஒரு நியமன உறுப்பினரும் இடம்பெற்றனர். இவர்களுக்குத் தலைமைச் செயலக வளாகத்திலுள்ள சட்டப்பேரவை மண்டபமே போதுமானது என்பதால், அரசினர் தோட்ட வளாகத்தில் செயல்பட்டுவந்த சட்டப்பேரவை மீண்டும் தலைமைச் செயலக வளாகத்திற்கே மாற்றப்பட்டது.

1920முதல் 1937வரை சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சியின் ஆட்சி நடைபெற்றது. அக்காலகட்டத்தில் விடுதலை வேள்வியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருந்த காங்கிரஸ் பேரியக்கம் 1937 தேர்தலில் பங்கேற்று அமோக வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது. காங்கிரஸ் ஆட்சி 1967வரை நீடித்தது.

தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிசெய்த ஒன்பதரை ஆண்டுகாலமும் 'தமிழகத்தின் பொற்காலம்' என்று வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டு இன்றைக்கும் மின்னிக்கொண்டிருக்கின்றன. தமிழக சட்டமன்றத்தில் பல நல்ல நிகழ்வுகள் நடைபெற்று, அவை ஏடுகளில் பதிவாகி உள்ளன.

அக்காலங்களில் சட்டப் பேரவையில் வாக்குவாதம் முக்கியமாக, காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே தான் நடைபெறும். முக்கிய விவாதங்களில் எதிர்க்கட்சித்

தலைவர் என்ற முறையில் அண்ணா கடுமையாகப் பேசுவார். அதற்கு அவை முன்னவர் என்ற முறையில் சி.சுப்பிரமணியம் பதிலளிப்பார். இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்படக்கூடிய வாக்குவாதங்களை, ஆரோக்கியமான விவாதங்களைப் பொதுமக்கள் கண்டுகளிக்க பேரார்வம் காட்டுவார்கள். பார்வையாளர் மாடங்கள் நிரம்பி வழியும். அந்த அளவுக்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாகச் செயல்பட்டு வந்த பெருமை தமிழக சட்டப்பேரவைக்கு உண்டு! நாணயத்தின் ஒருபக்கம் சேதமடைந்தாலும் அது செல்லாததாகிவிடும் என்கிற உணர்வு, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருந்ததை யாரும் மறந்துவிட முடியாது.

1967இல் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழக ஆட்சி அமைந்தது. இன்றுவரை திராவிட இயக்கத்தின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இன்றைய தமிழக முதல்வர் அவர்களுக்கு இருக்கிற சட்டமன்ற அனுபவம் இந்தியாவிலேயே யாருக்கும் இருப்பதாகக் கூறமுடியாது. எழுத்தாளராக, பத்திரிகையாளராக, சொற்பொழிவாளராக, அரசியல் கட்சியை வழிநடத்தக்கூடிய தலைவராக, ஐந்துமுறை முதலமைச்சராகப் பொறுப்புவகித்து நிர்வாகத் திறமை மிக்கவராக, வாதத்திறமைமிக்க எதிர்க்கட்சித் தலைவராக எனப் பல்வேறு பரிமாணங்களை அரசியல் களத்தில் பெற்றவர் கலைஞர். அவரது நீண்ட அனுபவத்தின் காரணமாகக் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக சட்டமன்றத்தில் அவர் முன்னிலையில், ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்றதை இன்றைக்கும் சட்டமன்றப் பதிவேடுகளில் பார்க்க முடிகிறது.

தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஜனநாயக ரீதியான விவாதங்களில் முதல்வர் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே நம்பிக்கையும் ஈடுபாடும் உடையவராக இருந்துவந்ததை அனைவரும் அறிவர். எப்பொழுதுமே எந்தப் பிரச்சினையானாலும் அதை விவாதிப்பதற்கு, கருத்துமோதல் நடத்துவதற்குக் கலைஞர் எப்போதுமே தயாராக இருந்ததை எவரும் மறக்க இயலாது.

சட்டமன்ற விவாதங்கள் சுவையாகவும் அறிவு பூர்வமாகவும் இருக்கவேண்டும் என்பதில் கலைஞர் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். குறிப்பாக, அவரது விவாதங்களில் நகைச்சுவை கரைபுரண்டோடுவதைச் சட்டமன்றம் பலமுறை ரசித்து மகிழ்ந்திருக்கிறது.

ஒருமுறை உறுப்பினர் ஒருவர் 'நாமக்கல் ஆஞ்சநேயர் கோயிலின் அசையும் சொத்து எவ்வளவு, அசையா சொத்து எவ்வளவு' என்று கேட்ட துணைக் கேள்விக்கு, அறநிலையத்துறை அமைச்சர் பதில் சொல்ல முனைந்து, ஆனால் தயாரித்த பதில் இல்லையாதலால், சிறிதே தடுமாற்றம் அடைந்தார். முதல்வர் கலைஞர் அமைச்சரைக் கையமர்த்திவிட்டு, 'அசையும் சொத்துக்கள் அங்குவரும் பக்தர்கள், அசையா சொத்து அங்கே நிற்கும் ஆஞ்சநேயர்' என்று பதிலளித்து, அனைத்து உறுப்பினர்களையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்தவர் கலைஞர்.

நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணிகொண்ட தமிழக சட்டமன்றத்திற்குப் புதிய வளாகத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தமது மதிநுட்பத்தால் ஒரு சிற்பி, சிலையை அணுஅணுவாகச் செதுக்குவதுபோல செதுக்கி, உருவாக்கி இருக்கிறார். புதிய சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெறுகிற பணிகளை அவர் மேற்பார்வையிடாத நாளே இல்லை என்று சொல்லுகிற வகையில், பல தடவை நேரில் சென்று ஆய்வுசெய்து அறிவுரை வழங்கியிருக்கிறார்.

கடந்த காலங்களில் கலைஞர் அவர்களால் எழுப்பப்பட்ட வள்ளுவர் கோட்டமானாலும், குமரி முனையில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள அய்யன் வள்ளுவர் சிலையானாலும் அவற்றை உருவாக்குவதில் அவரது ஈடுபாடு என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். சாதிக்கவேண்டும் என்கிற உணர்வோடு எதையும் செய்து பழக்கப்பட்ட கலைஞர் அவர்கள் இன்றைக்கு சட்டப்பேரவை வளாகத்தைச் சாதித்து உருவாக்கி, சாதனை படைத்திருக்கிறார். அவரது சாதனை வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டு மின்னிக்கொண்டிருக்கும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை!

புதிய சட்டப்பேரவை வளாகத்தை எங்கே அமைப்பது என்கிற கேள்விக்கு கலைஞர் அவர்களால் தேர்வுசெய்யப்பட்ட இடத்தில்தான் புதிய சட்டப்பேரவை வளாகம் இன்றைக்கு அமைந்துள்ளது. எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகிற இடத்திற்கு மிக அருகில்தான் சட்டமன்ற வளாகம் அமைக்கப் பட்டிருக்கும். அந்த வகையிலே,

பல மாநிலங்களில் உள்ளதைப்போல, அருகிலுள்ள கர்நாடக மாநில சட்டமன்றமும் உறுப்பினர் தங்குகிற இடமும் மிக அருகில் இருப்பதை யாரும் மறந்துவிட முடியாது. பெங்களூருக்குச் செல்கிறவர்களுக்கு கர்நாடக மாநில சட்டமன்றம் அமைந்துள்ள 'விதான் சவுதா'வைப்போல தமிழகத்திற்கு ஒரு சட்டமன்றம் கம்பீரமாக இல்லையே என்கிற ஏக்கம் பல காலம் இருந்து வந்தது. இருக்கிற சட்டப்பேரவையை எத்தனை தடவைதான் புதுப்பித்துக் கொண்டிருப்பது என்கிற அலுப்பும் இருந்ததை எவரும் மறக்க இயலாது. எல்லாவற்றுக்கும் விடிவு ஏற்பட ஒரு காலம் வரும் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்! அதற்கொரு காலம் இன்றைக்குக் கலைஞர் அவர்களால் வந்திருக்கிறது.

தமிழர்களின் நீண்டநாளைய கனவு நிறைவேறி யிருக்கிறது. ஆம்! கலைஞர் அவர்களால் கனவு மெய்ப்பட்டிருக்கிறது! இந்தியாவின் நினைவுச் சின்னமாக நாடாளுமன்றம் விளங்கிவருகிறது. தமிழகத்தின் நினைவுச் சின்னமாகப் புதிய சட்டப்பேரவை விளங்கும் என்பது உறுதி!

தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களின் குடியிருப்பு இருக்கிற பகுதிக்கு மிக அருகிலேயே புதிய சட்டப்பேரவை அமைந்ததுதான் கலைஞரின் தொலைநோக்குப் பார்வைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இதன்மூலமாக அண்ணா சாலையிலே, தந்தை பெரியாரின் சிலைக்கு ஒருபக்கம் பெருந்தலைவர் காமராஜரின் சிலையும், மறுபக்கத்தில் அறிஞர் அண்ணாவின் சிலையும் அமைந்திருக்கிற ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலேயே இன்றைக்கு விண்ணைத் தொடுகிற வகையில் புதிய சட்டப்பேரவை வளாகம் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் கம்பீரமாக, அற்புதமாக எழுந்து நிற்கிறது.

உலகம் போற்றுகிற வகையில் நவீன தொழில் நுட்பத்துடன் அமைந்துள்ள புதிய சட்டப்பேரவை வளாகத்தின் திறப்பு விழாவுக்கு அன்னை சோனியா காந்தி அவர்களும் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் பங்கேற்று சிறப்பிக்க இருக்கிறார்கள். மத்தியிலும் மாநிலத்திலும் அமைந்திருக்கிற அரசுகளின் இணக்கமான போக்கின் காரணமாக இந்தியா வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிற காலகட்டத்தில், தமிழகம் தலைநிமிர்ந்து கம்பீரமாக நடைபோட்டு வருவதைத்தான் புதிய சட்டப்பேரவை வளாகம் உலகுக்கு உணர்த்துகிறது.

ஆனந்த ராகம்

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் எதிர்க் கட்சித் தலைவரின் பெயரைக் கூறுகின்றபோது ''கலைஞர் கருணாநிதி'' என்று இப்படி அந்தப் பெயரை ஒரு மாதிரி இழுத்துச் சொன்னார். ''இம்புடேஷன்'' செய்கிற மாதிரி சொன்னார்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் என் பெயரைக் கொஞ்சம் இப்படி இழுத்துச் சொன்னதற்குக் காரணம் அவருடைய பெயரிலேயே ராகம் இருக்கிறது, ராக ஆனந்தம். அதனால் கொஞ்சம் ராகம் போட்டுச் சொன்னார் என்று நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். (பலத்த ஆரவாரம்)

– 27–8–1977 அன்று சட்டப் பேரவையில்

காலத்தின் தேவைக்கு கலைஞர் கண்ட ஜனநாயகப் பட்டறை

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
சட்டப் பேரவை உறுப்பினர்

நமது சட்டமன்றங்களும் பாராளுமன்றமும் அரசியல் சாசனச் சட்டத்தின் படைப்புகள். நமது அரசியல் சாசனச் சட்டம் அறுபது ஆண்டுகளை நிறைவுசெய்து மணி விழா கொண்டாடும் மகத்தான வேளையில் தமிழகச் சட்டப் பேரவை ஒரு புதிய முகவரிக்குப் புலம்பெயர்வது தமிழகத்தின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று நிகழ்வு. கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலனி ஆதிக்கமும் தங்கள் அதிகாரத்தினை இந்த மண்ணில் நிலைநிறுத்திக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட மண்டபங்களில் சுதந்திர இந்தியர்கள் அமர்ந்து பரிபாலனம் செய்வது பெருமைதான் என்றாலும், சுதந்திர இந்தியாவின் மண்ணை, சுதந்திர இந்தியாவின் தண்ணீரைக் கொண்டு பிசைந்து, சுதந்திர இந்தியாவின் நிர்வாகம், சுதந்திர இந்தியாவின், சுதந்திரமான தமிழகத்திற்கு சுந்தரமான ஒரு மாளிகை – அதன் ''ஜனநாயக சுவாசத்திற்காக'' உருவாக்கப்பட்டுள்ளது என்றால் அது நம் வாழ்நாளின் மகத்தான பெருமை அல்லவா?

சுதந்திர இந்தியாவில், தமிழகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் பல புதிய திருப்பங்களுக்குக் காரணமாக இருந்து, அதன் புதிய பரிணாமங்களைத் துவக்கி வைத்தவர் கலைஞர் என்பதை வரலாறு தெரிந்த யாரும் மறுக்க முடியாது. சுதந்திர இந்தியாவின் அறுபதாண்டு கால சரித்திரத்தில், யாருக்கும் கிட்டாத வரலாற்றுப் பெருமையாக அதிகமான ஆண்டுகள் தமிழக அரசியலின் மையப் புள்ளியாக இருந்து அரசின் நிர்வாகம் என்னும் தேரை சாரதியாய் இயக்கி வந்தவர் கலைஞர். காலத்தை வென்று நிற்கும் பல மகத்தான சாதனைகளுக்கு அவர் காரணகர்த்தர் என்றாலும், புதிய சட்டமன்ற வளாகம் கலைஞர் தமிழகத்திற்குத் தந்த பங்களிப்பிற்கு ஜனநாயகம் தந்துள்ள காலத்தினால் அழியாத வரலாற்றுச் சான்றாக என்றும் நிற்கும். அடுத்த ஆயிரம் ஆண்டுகள் தமிழக ஜனநாயகத்தின் ஊற்றுக்கண்ணாகச் செயல்பட இருக்கும் இந்தச் சட்டமன்றப் பேரவை, காலத்தை வென்ற கலைஞரின் சாதனைகளுக்கு என்றென்றும் கட்டியம் கூறும்.

மாற்றங்களை, புரட்சிகளை – சிந்தித்தவர், போதித்தவர் கலைஞர் என்ற அளவோடு நின்று விடாமல் அந்த மாற்றங்களையும் புரட்சிகளையும் முதலில் தானே உள்வாங்கிக் கொண்டு அந்த மாற்றங்களையும், அதன் தாக்கங்களையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைத் தனது இயக்கத்திடமும், தமிழ்நாட்டிலும் உருவாக்கித் தந்த வாழ்க்கை, கலைஞருடைய வாழ்க்கை.

தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் பெருந்தலைவர் காமராஜர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் மாற்றங்களை முன்னறியும் தொலைநோக்குப் பார்வையும், அந்த மாற்றங்களுக்காக சமூகத்தைத் தயார் செய்யும் சலியாத உழைப்பும், தியாக மனப்பான்மையும் கொண்டவர்களாக இருந்த காரணத்தினால்தான் இன்று கல்வியில், சமூக நீதியில், தொழிலில், பொருளாதாரத்தில், அரசு நிர்வாகத்தில், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் தமிழகம் இந்தியாவின் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாமல், எந்த சமுதாயம் தனக்குள்ளே மூடிக்கொண்டதோ அது வளர்ச்சிப் பாதையில் பின்னுக்குத் தள்ளப்பட்டதையும், தனது சமுதாயச் சாளரங்களைத் திறந்து புதிய காற்றினை எந்த சமூகம் அனுமதித்ததோ, அது முன்னேற்றப் பாதையில் வெற்றி பெற்றதையும் சரித்திரம் நமக்குச் சான்றளித்திருக்கிறது. முகலாயச் சக்கரவர்த்தி ஜஹாங்கீரிடம் ஐரோப்பியர் ஒருவர் வந்து அச்சு இயந்திரத்தையும் பேப்பரையும் காட்டி அதனைப் பயன்படுத்துமாறு கேட்டார். அவரோ, அவரது அவையில் இருந்த எழுத்தாளர்களைச் சுட்டிக்காட்டி அவர்களின் ஆற்றலும் திறமையும் தனது சாம்ராஜ்யத்தின் சேவையில் இருப்பதால் அச்சு இயந்திரம் தனது அரசுக்குத் தேவையில்லை என்று நிராகரித்து விட்டார். இந்தியாவின் அன்றைய ஆட்சியாளராக இருந்த பேரரசர் ஜஹாங்கீரின்

முடிவால் இந்தியாவில் ஐரோப்பிய வேகத்தில் அறிவு பரவலாக்கப்படவில்லை. நேர்மாறாக சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட பேப்பரையும், கொரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரத்தையும் ஐரோப்பியர்கள் தங்களதாக்கிக் கொண்டு மறுமலர்ச்சியின் பின்னால் அதிவேகப் பாய்ச்சலில் வளர்ந்தார்கள்.

ஐரோப்பாவில் விவசாயப் புரட்சி, தொழில் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டு பல்வேறு மாற்றங்கள் அங்கே நடந்து கொண்டிருந்தபோது அந்த மாற்றங்களின் வேகத்தையும், தாக்கத்தையும் உணர முடியாத அல்லது உணர விரும்பாத, தொலைநோக்குப் பார்வை இல்லாத சமகால இந்திய ஆட்சியாளர்களால், இந்தியாவில் ஐரோப்பிய வேகத்தில் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் விரிவுபடுத்த முடியவில்லை. சுதந்திரத்திற்குப் பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நமது முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திரா காந்தி, இளந்தலைவர் ராஜிவ் காந்தி போன்ற தன்னலமற்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கணினிமயம் போன்ற புரட்சிகரமான மாற்றங்களால் இன்று ஏற்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் இந்தியா, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைக்கூட பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னணியில் நிற்கிறது. நாட்டையும், சமூகத்தையும் வழிநடத்தும் தலைவர்கள் ஞானத்தோடும், தொலைநோக்குப் பார்வையுடனும் எடுக்கும் முடிவுகளைப் பொறுத்தே அந்தச் சமூகம் மற்றும் நாட்டின் எதிர்காலம் அமைகின்றது.

"Winners don't do different things, but they do things differently" என்ற ஷிவ கேராவின் வார்த்தைகளுக்கிணங்க, கலைஞர் அவர்கள், மாற்றிச் சிந்தித்ததோடு மட்டுமல்லாமல், தனது சமூகத்தின் பயணத்தின் மாற்றுப் பாதைக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதிலும் முனைப்போடு நின்றார் என்பதற்குப் புதிய சட்டப் பேரவை வளாகம் ஒரு எடுத்துக்காட்டு.

அதிகாரமும்–பொறுப்பும் (Authority and responsibility) ஒன்றில்லாமல் மற்றொன்றுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பதை நன்குணர்ந்த முதல்வர் கலைஞர் ஆட்சி, அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு வாளாவிருந்துவிடாமல், அடுத்த தலைமுறைகளுக்கு ஆற்ற வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றி வருவதன் உச்சகட்டம் புதிய தலைமைச் செயலகம்.

அடுத்த தலைமுறை ஆள்வதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும், சட்டங்களை விவாதித்து நிறைவேற்றிடவும், அரசுப் பணியை நிர்வகித்திடவும் ஜனநாயகப் பட்டறையை அமைத்துத் தந்துவிட்டார் கலைஞர். இந்த மாமன்றத்தில் வந்து அமர்ந்து, தமிழ்நாட்டின் நிர்வாகத்தை நடத்திட வரும் வருங்கால அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு, தாங்களே அந்த மாற்றங்களாக மாறி, மாற்றங்களின் வேகத்திற்கு தமிழகத்தைத் தயார் செய்ய மனமும், சக்தியும், விருப்பமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் இன்று இறைவனிடம் எனது வேண்டுதல்.

மாற்றங்களுக்குப் பாதை போட்டுக்கொண்டே பயணம் செய்த பெருந்தலைவர் காமராஜரும், முதல்வர் கலைஞரும் மாற்றங்களை ஏற்றுக்கொண்ட அதேநேரத்தில் மரபுகளைத் தள்ளிவைத்துவிடவில்லை. அவர்கள் என்றுமே கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிவிடவில்லை. முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் அவர்கள் முன்னெடுத்துச் சென்ற அதே நேரத்தில் ஜனநாயக நெறிமுறைகளை ஒருநாளும் கைவிடவில்லை. சுதந்திரமும், ஜனநாயகமும் அவர்களுக்கு சுவாசக் காற்றாகவே இருந்தன.

புதிய சட்டப் பேரவை வளாகத்தில் சுதந்திரமும் ஜனநாயகமும் தழைத்துச் செழிக்க வேண்டும். நமது ஜனநாயக அமைப்பை அச்சுறுத்தும் பிரச்சினைகளின் ஆழத்தை நன்குணர்ந்தவர்கள், இந்த மாமன்றத்தில் வந்து அமர வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிந்த பல தலைவர்களை வரலாறு அங்கீகரித்து ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மாற்றங்களுக்காக மக்கள் மகத்தான குதூகலத்தோடு காத்திருக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம் என்பதே நமக்கிருக்கும் வரலாற்றுப் பெருமை. பத்தாண்டுகளுக்கு முன்பு நாம் நினைத்துக்கூட பார்த்திராத, கற்பனைகூட செய்ய முடியாத, மனித வாழ்க்கையின் முகவரிகளையே மாற்றியமைக்கக்கூடிய நிகழ்வுகள், கண்டுபிடிப்புகள், இயக்கங்கள் மற்றும் கருத்தியல்களால் நாம் பிரமிப்படைந்துள்ளோம்.

நமது முன்னோர்கள், அவர்களுக்கு அன்று இருந்த தொலைநோக்குப் பார்வையில் நமக்கென்று உருவாக்கித் தந்துள்ள ஏற்பாடுகள், நிறுவனங்கள் மற்றும் தயாரிப்புகளால் எதிர்கொள்ள முடியாத அளவிற்கு மாற்றங்களின் வேகமும், தாக்கமும் ஆர்ப்பரித்து வருகின்றன. மாற்றங்களின் வேகத்திற்கேற்ப புதிய

ஏற்பாடுகளை, நிறுவனங்களை, உருவாக்க புதிய சட்டப் பேரவை ஒளி பிறக்கும் விவாத மண்டபமாக, பலதரப்பட்ட மக்களின் தேவைகளை, ஏக்கங்களை ஒலிக்க வேண்டும்.

9/11, 26/11, war on terror, India's moon stop, Naxals, T-20, Cell-phone, Low - cost flying, Fusion food, Facebook, MMS, size zero, Six-pack-abs, Blackberry, Bling, Made in China, Cheer Leaders, Sleeper cells, Plasma TVs, ipods, Botox, Meltdown, WMDs, Indian Idol, SEZs, Pingling, Playstation, wifi, Nano, Downloads, Twitter, Talibans, Recession, Biological Weapons, Rural-Urban divide, Page3, Blogging, Shopping Malls, Global warming, Outsourcing, Virus Mutation, Going green, Gay marriage, Neocon, Satellites, Holiday on the moon, GM seeds- இவைகள் அடுத்த தலைமுறையின் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் தனிமனித வாழ்க்கையைப் புரட்டிப் போடக் காத்திருக்கும் சில சவால்கள். இவைகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளும் மனமும், ஆற்றலும், விருப்பமும் நம்மில் பலருக்கு இல்லை என்பதை நாம் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களும் சவால்களைச் சந்திக்க விருப்பமுள்ளவர்களும், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனமுள்ளவர்களும் சமூகத்திற்கான முடிவுகளை எடுக்கும் அதிகார பீடத்தில் அமரவேண்டும்.

புதிய சட்டமன்றத்தில் அமர்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பெருந்தலைவர் காமராஜரைப்போல், முதல்வர் கலைஞரைப்போல் பிரச்சினைகளை உள்வாங்கும் மனப்பக்குவமும், அதன் தீர்வுகளை அலசி ஆராயும் நுண்ணறிவும், அந்த நுண்ணறிவுகளை நிறைவேற்றுவதில் அவர்களிருவருக்கும் இருந்த தளராத உழைப்பும் மற்றும் மன உறுதியும், பாரதத் தாயே! நீ தந்திடல் வேண்டும்.



கோட்டைக் கொடிக் கம்பம்

கோட்டைக்குக் கொடிக் கம்பம் வந்ததே ஒரு அற்புதமான கதையாகும். 1687 ஆம் வருடத்தில் கவர்னராக திரு. யேல் இருந்தபோது இக்கொடிக் கம்பம் நிறுவப்பட்டது. தரை தட்டி உடைந்த ''லாயல் அட்வெஞ்சர்'' என்ற கப்பலில் இருந்த தேக்குமரத்தாலான கம்பம் எடுக்கப்பட்டு கோட்டைக் கொத்தளத்தில் நிறுவப்பட்டது. 150 அடி உயரம் கொண்ட இக்கொடிக் கம்பம்தான் இந்தியாவிலேயே உயரமானதாகும். கவர்னர் திரு. யேல் இங்கிலாந்தின் செயின்ட் ஜார்ஜ் கிராஸ் வடிவத்துடன் கூடிய கொடியை இந்தக் கம்பத்தில் முதன்முறையாக 1687 ஆம் வருடத்தில் ஏற்றினார். இந்திய சுதந்திரத்தின்போது இதில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது.

இக்கொடிக் கம்பத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சுதந்திர தினத்தன்று (15–8–1974) தேசியக் கொடியை முதல் முதலாக ஏற்றி ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சர் கொடியேற்றும் புதிய சகாப்தத்தை உருவாக்கினார்கள். தேக்கு மரத்தினாலான இக்கம்பம் பழுதடைந்ததால் எஃகினாலான புதிய கொடிக் கம்பம் 1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

புதுமைகள் படைப்போம்

செல்வி கே. பாலபாரதி
சட்டப் பேரவை உறுப்பினர்

தமிழக சட்டப் பேரவையின் எழில்மிகு புதிய கட்டடம் தமிழக மக்களின் எதிர்கால வாழ்க்கையின் நம்பிக்கைச் சின்னமாக திகழ்கிறது. முந்தைய புனித ஜார்ஜ் கோட்டை உள்ளிட்ட கட்டடங்களின் மரபுகளையும், மாண்புகளையும், சாதனைகளையும், உள்ளடக்கிய தொடர்ச்சியும், நீட்சியுமாகவே – இப்புதிய கட்டடம் எழுந்துள்ளது. கட்டடம் என்பது வெறும் வண்ணப்பூச்சு மட்டுமல்ல. அங்கே நிகழ்த்தப்பட்ட தமிழகத்துத் தலைவர்களின் கருத்துரைகள், விவாதங்கள், இயற்றப்பட்ட சட்டங்கள், ஜனநாயகத்தின் உயிரோட்டமான நிகழ்வுகள், வரலாறுகள் என அனைத்தும் உள்ளடங்கியவையாகும்.

உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற உரிமையின் குரல், **நில உச்ச வரம்பா, மிச்ச வரம்பா** என்று அன்று நடந்த விவாதங்கள் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளன. நிலச் சீர்திருத்தம் போன்ற நடவடிக்கையை அரசு எடுத்து, விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட்டாலும் தமிழக கிராமப்புற உழைக்கும் மக்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் பல இலட்சக்கணக்கான விவசாயிகள் எதிர்காலத்தில் நல்வாழ்க்கை பெறுவதற்கும், புதிய சட்டமன்றப் பணிகள் அமைந்திட வேண்டும்.

தமிழகத்து விவசாயிகளை வாழ்விப்பதற்கும், வேளாண்மைத் தொழிலைப் பாதுகாத்து வளர்ப்பதற்கும், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடுவதற்கும், வேளாண் உற்பத்தி சார்ந்த, தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவதற்கும், உலகமயம், புதிய பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கத்தினால், நலிந்து வரும் சிறு, நடுத்தர தொழில்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கு உரிய திட்டமிடலும், செயல்பாடும் அமைந்திடுவதற்கும் புதிய சட்டமன்றக் கட்டடம் திட்டங்களைத் தீட்டட்டும்.

- மாநில சுயாட்சி உரிமைக்கு வலுமிக்க ஒன்றுபட்ட குரல் ஓங்கி ஒலித்திடவும்;
- தமிழகத்தில் கல்விச் செல்வத்தை அனைவரும் பெற்றிடவும்;
- ஆட்சி அதிகாரத்திலும், நிருவாகத்திலும், நீதிமன்றத்திலும் – தமிழ் மொழி கோலோச்சிடவும்;
- மத நல்லிணக்கம், மதச்சார்பற்ற தன்மை, தீண்டாமைக் கொடுமையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்றிடவும்;
- பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் உரிமை பாதுகாப்பு;
- பெண்கள், குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பு;
- மூட நம்பிக்கை, சமூகக் கொடுமைகளை விலக்குதல்

போன்றவற்றில் கடந்தகால சட்டமன்றம் ஆற்றிய பணிகள், எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளை ஒப்பிட்டு எதிர்காலத்தில் புதிய சட்டமன்றக் கட்டடம் புதுமைகளை சாதனைகளாகப் புரிந்திட வேண்டும்.

> "காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்,
> நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை"

என்ற மகாகவி பாரதியின் இலட்சிய கனவுகளை நிறைவேற்றும் வகையில் புதிய சட்டப் பேரவையில் புதுமைகள் படைப்போம்.

கலைஞர், பன்முகம் கொண்டவராக

திரு. எஸ்.வி. சேகர்
சட்டப் பேரவை உறுப்பினர்

1996–ல் எங்களின் 3500–வது நாடக விழாவிற்கு முதல்வர் என்ற முறையில் அழைக்க கலைஞரை நான் சந்தித்த இடம் அண்ணா அறிவாலய வளாகம், காலை 5–30 மணி. ''என்னப்பா, வாக்கிங் வரும்போது நாடகத்திற்குத் தேதி கேட்கிறாயே'' என்று சிரித்தபடியே கேட்டார்.

மிகச் சிறந்த நகைச்சுவை உணர்வுமிக்கவர் கலைஞர். பாராட்டும்போது பாரபட்சம் பார்க்காமல் வாய்நிறைய, மனமுவந்து பாராட்டுவதில் கலைஞருக்கு நிகர் கலைஞர் மட்டுமே. விழாவில் கலந்து கொண்ட கலைஞர் அவர்கள், ''எல்லா நாடகங்களிலும் செய்திகளைச் சேகரித்து நடத்துவதால் அவர் சேகர் என்று அழைக்கப்படுகின்றார். ஆங்கிலத்தில் 'timely wit' என்பார்களே, அந்த timing–ல் வல்லவர்'' என்று வாழ்த்தியது மறக்க முடியாத சம்பவம்.

சட்டமன்றத்தில் மாறுபட்ட கருத்துக்களை நான் சொன்ன போதிலும், அதில் உள்ள நகைச்சுவையை ரசிப்பவர் கலைஞர். பாசமிக்க குடும்பத் தலைவனாக, கட்சித் தொண்டர்களை அரவணைத்துச் செல்லும் நல்ல தலைவராக, நாட்டை வழிநடத்திச் செல்லும் அரசியல் ராஜதந்திரியாக, கலை உலக வசனகர்த்தாவாக, இலக்கியவாதியாக, பேச்சாளராக, மிகச் சிறந்த கலா ரசிகராக, இப்படிப் பன்முகம் கொண்டவராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராய் விளங்குகின்றவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

திராவிடப் பாரம்பரியத்தின் வெளிப்பாட்டுடனும், கலைநயத்துடனும் கலைஞரின் மேற்பார்வையில் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய சட்டமன்ற வளாகத்தில் அவருக்குப் பின் அணிவகுத்து அமரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் வரிசையில் நானும் அமரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது பெரும் பேறாகும்.

பெரியாருக்கு தரப்பட்ட பரிசு

திரு. முனு ஆதி: வைக்கம் வீரர் பெரியார் அவர்களுக்குத் தியாகிகள் நிலம் கொடுக்க முந்தைய அரசாங்கம் முன்வந்ததா? அப்படி இல்லை என்றால் நம் அரசாங்கமாவது கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை: இந்த அரசாங்கம் அமைந்த பிறகு தியாகிகள் நிலம்தான் பெரியார் அவர்களுக்குத் தரவேண்டும் என்பதல்ல. இந்த அமைச்சரவையே அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற பரிசுதான்.

– 20–6–1967 அன்று சட்டப் பேரவையில்

சட்டப் பேரவையில் மக்களாட்சி மாண்புகள்

திரு. செ. மாதவன்,
மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர்

தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தனியாக ஒரு புதிய கட்டடம் கட்டித் திறக்கப்படுவது வரலாற்றில் இடம்பெறுகிறது. நாடு விடுதலை பெற்ற பிறகு, தமிழ்நாடு சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று பல்லாண்டுகளாக வைக்கப்பட்ட வேண்டுகோள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியை நினைவுபடுத்தும் இன்றைய சட்டமன்றம், வரலாற்றில் இடம்பெற்றது. சுதந்திர நாட்டில் சுதந்திரமாகச் செயல்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடும் புதிய சட்டமன்றக் கட்டடம், புதிய வரலாற்றைப் படைத்திடப் போகின்றது. அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள சட்டமன்றக் கட்டடத்தைப் பார்ப்பதில் மக்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள்.

தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர்களாகப் பணியாற்றிய முதுபெரும் தமிழகத் தலைவர்கள், பெருந்தலைவர் காமராஜர், பக்தவத்சலனார், அறிஞர் அண்ணா ஆகிய அனைவரின் நல்லெண்ணத்தையும், பாராட்டையும் பெற்ற டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகச் சரித்திரத்தில், தமிழ்நாடு சட்டமன்றத்தின் சரித்திரத்தில் ஒரு புதிய வரலாற்றைப் படைத்திடும்வண்ணம் புதிய சட்டமன்றக் கட்டடம் அமைகின்றது. சட்டமன்ற உறுப்பினர்களின் நீண்டகாலக் கனவை நினைவாக்கும் வண்ணம் தமிழகச் சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் தோன்றியுள்ளது.

பெருந்தலைவர் காமராஜரும், பக்தவத்சலமும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது சட்டமன்றத்தில் ஆளும்கட்சி காங்கிரசுக் கட்சியும், பிரதான எதிர்க்கட்சி தி.மு.கழகமும் செயல்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் மக்கள் ஆட்சி மாண்பினை உயர்த்தியது வரலாறு. ஆளும் அரசு கொண்டுவந்த சட்ட மசோதாக்களுக்குத் திருத்தங்கள் கொடுத்து சுவையான பயனுள்ள விவாதங்கள் நடந்தது வரலாறு. ஜமீன்கள், இனாம்கள் ஒழிப்புச் சட்டங்கள் திருத்த மசோதாக்கள் மீதான விவாதத்தின்போது, அரசு கொண்டுவந்த மசோதாவுக்கு தி.மு. கழகத்தின் சார்பில் அன்றைய சட்டமன்ற உறுப்பினரான நான், ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். உடனே அன்றைய சட்ட அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் எழுந்து நின்று என்னுடைய சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவித்து ஜனநாயக மாண்பினை நிலை நிறுத்தினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், சட்டமன்ற நிகழ்ச்சிகளின்போது எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி செயல்பட்டு ஜனநாயக ஆட்சி முறைக்கு மகுடம் சூட்டினார்கள். அன்றைய முதுபெரும் தலைவர்கள் மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் ஆகியோரைச் சந்தித்து கருத்துக்களைக் கேட்டுவரச் செய்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. சட்டமன்ற நிகழ்ச்சிகளில் சூடான விவாதங்களில் மாற்றுக் கருத்துள்ளவர்கள் மனம் புண்படாது விவாதங்கள் நடைபெற்றது சரித்திரம்.

அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா வழியில் சட்டமன்றத்தில் புதிய சரித்திரம் படைத்த நிகழ்ச்சிகள் வரலாற்றில் பதிந்துள்ளன. டாக்டர் கலைஞர் அவர்களே எதிர்க்கட்சித் தலைவர்களின் வீடுகளுக்கே சென்று, கலந்தாய்வு செய்து, ஓர் அரசை நடத்துவதில் எதிர்க்கட்சிகளுக்கும் பங்குண்டு என்பதை, புதிய அணுகுமுறையில் நிலைநாட்டினார்கள். சட்டமன்றத்தில் சூடான விவாதங்களிலும் நகைச்சுவைக் கருத்துக்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை மகிழ்ச்சியடையச் செய்யும் செயல்கள் நடந்தேறின. மாற்றுக் கட்சித் தலைவர்களுக்கு நினைவு மண்டபங்கள்

எழுப்பி சரித்திரம் படைத்தார் கலைஞர். இன்றும் அந்தச் சரித்திரம் தொடர்கின்றது. புதிய சட்டமன்றக் கட்டடத்திலும் மக்களாட்சி மாண்பு உயர்ந்து வளர்ந்திட, டாக்டர் கலைஞர் அரசு புதிய வரலாறு படைத்திடப் போவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சியாக இருந்தபோது, சட்டமுன்வடிவுகள் மீது அதிக அளவு விவாதம் நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு மாநிலம் என்று பெயரிட்டு சென்னை என்ற பெயர் மாற்றப்பட வேண்டும் என்று தி.மு. கழகத்தின் சார்பில் வாதிடப்பட்டது. பிற்காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தி.மு. கழக ஆட்சியில் தமிழ்நாடு என்ற பெயர், சட்டரீதியாக மத்திய அரசு அனுமதியோடு நிறைவேற்றப்பட்டது. அதேபோல் இந்து மத சடங்குகளைப் பின்பற்றாது நடைபெற்ற சுய மரியாதைத் திருமணங்கள் செல்லும் என்றும், எதிர்காலத்தில் நடைபெறும் திருமணங்களும் செல்லும் என்று தி.மு. கழக அரசால் சட்டம் இயற்றப்பட்டு, அந்தச் சட்டம் மத்திய இந்து திருமணச் சட்டத்தின் ஒரு பகுதியாக இன்றும் நடைமுறையில் இருப்பது, சட்டப் பேரவையில் நடைபெற்ற சரித்திர நிகழ்ச்சியாகும். இதுபோன்ற சட்டங்கள் தயாரிக்கப்பட்டவுடன் எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய காங்கிரசுக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி முடிவுகள் எடுத்த சரித்திர நிகழ்ச்சிகள் தமிழகச் சட்டப் பேரவையில் நடந்தேறியுள்ளன. மாற்றுக் கட்சிகளின் கருத்துக் களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற கொள்கை தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் பதிந்துள்ளது மக்களாட்சி மாண்பினை வெளிப்படுத்துகின்றது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

இத்திட்டம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் 03-06-1989 அன்று தொடங்கப்பட்டு, எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் திருமணத்திற்கு உதவித் தொகையாக ரூ.5000 வழங்கப்பட்டு வந்தது.

பின்னர் திருமண நிதியுதவி பெறுவதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பாக நிர்ணயிக்கப்பட்டு, இவ்வுதவித் தொகை ரூ.10,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இடையில் நிறுத்தப்பட்டிருந்த இத்திட்டம், 3-6-2006 முதல் மீண்டும் தொடங்கப்பட்டு, திருமண நிதியுதவித் தொகையும் ரூ. 15,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. 20-3-2008 முதல் இத் தொகை ரூ.20,000/- ஆக மேலும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் ஜனவரி 2010 வரை 2,64,744 பயனாளிகள் 444.61 கோடி ரூபாய் பெற்று பயனடைந்துள்ளனர்.

விடுதலை பெறும் விழா

திரு. இராம. வீரப்பன்
முன்னாள் அமைச்சர்

இழந்த வரலாற்றுப் புகழை மீண்டும் பெறவும், மறைந்த வரலாறுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும், மக்களாட்சி தத்துவத்திற்கு அடித்தளமாக விளங்குகிற, சட்டமன்றத்திற்குப் புதிய கட்டட வளாகம் இன்று திறக்கப்படுகிறது. இந்தியாவின் தலைமை அமைச்சர், இந்தியாவை வழிநடத்திச் செல்கிற, ஆட்சிக்கு வழிகாட்டுகிற தலைவி, ஆகியோர் கலந்துகொள்ளும் மாபெரும் விழா! தமிழ் மக்களுக்குப் புது வழி காட்டிய பேரறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பியாம் முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் தானே, ஒரு ஆட்சி எத்தனையோ துறைகளுக்கு கட்டடங்கள் புதிதாகக் கட்டுகிற வழக்கத்தில் இதுவும் ஒன்றுதானே என்று யாராவது எண்ணக்கூடும். இது சட்டமன்றத்திற்கு கட்டப்பட்ட புதிய கட்டடம் மட்டுமல்ல, இந்தியா அடிமைப்பட்டிருந்த 250 ஆண்டுக்கால வரலாற்றையே மாற்றி புதுப்பிக்கிற–உயிரூட்டுகிற ஒரு சின்னம்.

இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் வெள்ளையர்கள் ஆதிக்கம் 300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்றாலும், அதற்கு அடித்தளம் இட்ட பகுதிகளில் சென்னை மாநகரம் முக்கிய இடத்தை வகிக்கிறது. அந்த அடிமை வரலாற்றிற்கு "செயின்ட் ஜார்ஜ் கோட்டை" என்று அழைக்கப்படுகிற தமிழக அரசின் நிருவாக அலுவலகமும், தமிழக அரசிற்கு சட்டங்களைத் தீட்டித் தருகிற சட்டமன்றமும் அமைந்திருக்கிற கோட்டை முதலிடம் வகிக்கிறது.

300 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கோட்டையில் 250 ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கிந்திய கம்பெனி வணிகத்திற்காகவும், அதற்குப் பிறகு மக்களை ஆதிக்கம் செய்வதற்காகவும் நிருவாக அலுவலகங்களை ஏற்படுத்திக் கொண்டது. 100 ஆண்டுகளுக்கு முன்பு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற வளாகம் அமைக்கப் பெற்றது. இதை மாற்றித்தான் புதிய வளாகம் அண்ணா சாலையில் கட்டப்பட்டு இன்று தொடக்க விழா நடைபெறுகிறது.

ஆகவே, இது ஒரு புதிய கட்டடத் திறப்புவிழா மட்டுமல்ல, அடிமை வரலாற்றை அழித்து விடுதலை பெறும் புதிய வரலாற்றிற்கு அடித்தளம் அமைக்கும் ஒரு விழா. 400 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. வளர்ந்திருக்கிற விஞ்ஞானத்தில் மிகக் குறுகிய காலத்தில், மிகப் பெரிய கட்டடத்தை எழுப்பி வரலாற்றைப் படைத்துக் கொண்டு இன்றைக்கு இந்த வளாகம் திறக்கப்படுகிறது. கட்டட வரலாற்றில், கட்டுமான வேலையில் தமிழன் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வரலாறு படைத்தவன். தஞ்சைத் தமிழ் மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கிற கல்லணையை அன்றைக்கே தமிழன் கற்களால் நிர்மாணித்திருக்கிறான். தஞ்சை பெரிய கோயிலை 216 அடி உயரத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கற்களாலேயே எழுப்பி வரலாறு படைத்திருக்கிறான். ஆகவே கட்டடக் கலையில் தேர்ந்த தமிழன், விஞ்ஞானத்தையும் இணைத்துக் கொண்டு வளர்ந்திருக்கிறான். அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த மாபெரும் கட்டட வளாகம். புதுமையான கட்டடம். இந்த வளாகத்தை உருவாக்கியதற்காக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரை வாழ்த்த வேண்டும்.

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்குப் பிறகு, நமக்குள்ளே அடிமைப்பட்டிருக்கிற முறைகள் ஒழிக்கப்படவேண்டும்; சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டும்; சமுதாயம் விடுதலை பெற வேண்டும் என்பதற்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயர்வளிக்க வேண்டும், வாழ்வளிக்க வேண்டும் என்பதற்காகவும், பொருளாதார விடுதலையைப் பெறவேண்டும் என்பதற்காகவும், விவாதித்து

சட்டங்களை உருவாக்கிய மாமன்றம் இந்தச் சட்டமன்றம்.

இது எல்லா சட்டமன்றங்களிலும் நடைபெறுவதுதானே என்று எண்ணக்கூடும். ஆனால் பல சட்டமன்றங்களுக்கு இத்தகைய அரிய வாய்ப்பு கிடைக்கவில்லை. காரணம் இந்தியத் துணைக்கண்டத்திலே அரசியல் விடுதலைக்காக விவாதித்திருக்கிறார்கள். பொருளாதார விடுதலைக்காக விவாதித்திருக்கிறார்கள். ஆனால் சமுதாய விடுதலையே தன்னுடைய தலைசிறந்த இலட்சியமாகக் கொண்டு விவாதித்த சட்டமன்றம் இந்த தமிழ்நாடு சட்டமன்றம்தான். ஆம், இது அப்பொழுது தமிழ்நாடு சட்டமன்றம் அல்ல, மெட்ராஸ் பிரசிடென்சி சட்டமன்றம்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற ஒரு அரசியல் அமைப்பை மட்டுமல்ல, சமுதாய விடுதலை இயக்கத்தையும் இணைத்து உருவாக்கி, 1967 மார்ச் திங்களிலே ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டார் பேரறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட சட்டமன்றத்திலேதான் ''தமிழ்நாடு'' என்ற பெயர் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. சட்டமன்றங்களில் பல சட்டங்கள் நிறைவேற்றப்படலாம். பின்னர் வருகிறவர்களால் மாற்றப்படலாம். ஆனால் என்றைக்கும் மாற்ற முடியாமல் வரலாற்றையே இணைத்துக் கொண்டு நிறைவேற்றப்படுகிற சட்டங்கள் தமிழகத்தின் சட்டமன்றத்தில் நிறைவேறியிருக்கின்றன. அப்படி நிறைவேறியிருக்கிற சட்டங்களில் தலைசிறந்த சட்டம்தான் ''தமிழ்நாடு'' என்று பெயர் வைத்த சட்டம்.

சமுதாயப் புரட்சியாக தந்தை பெரியார் சொன்ன சீர்திருத்தத்திற்கு எதிராக சடங்குகளோடு நடைபெறுகிற திருமணங்கள்தான் சட்டப்படி செல்லும். மற்றவை செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த அந்தச் சூழ்நிலையில், ஆணும், பெண்ணும் இணைந்து, பெற்றவர்கள் உற்றவர்கள் ஒத்துக்கொண்டு நடைபெறுகிற எந்தத் திருமணமும் செல்லும் என்று ''சுயமரியாதை திருமணச் சட்டம்'' என்று பெயர் வைத்திருக்கிற அந்தச் சட்டம் மனித வாழ்வியல் உரிமையை வழங்கிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

எல்லாப் பிரிவு மக்களும் ஆட்சியில், அதிகாரத்தில், படிப்பில், வாழ்க்கையில் உயரலாம் என்று காட்டுகிற வகுப்புவாத பிரதிநிதித்துவ சட்டத்தை, இட ஒதுக்கீட்டு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது இந்தச் சட்டமன்றம்.

இப்படி எத்தனையோ வரலாற்றுத் திருப்பங்களை உருவாக்கி தமிழனுக்கு புதிய வரலாறை ஏற்படுத்தியதோடு மட்டுமின்றி மற்றவர்களுக்கு இருப்பதைப்போல தமிழனுக்கும் ஒரு ஆண்டு இல்லாமல் போய்விட்டதே, மறைந்து போய்விட்டதே, அந்த மறைந்த ஆண்டை, உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் பிறந்த நாளைக் கொண்டு ''தை'' முதல் நாளை ஆண்டின் முதல் நாள் இதுதான் தமிழர்களுக்குப் புத்தாண்டு என்ற சட்டமும் நிறைவேற்றப்பட்டதே, இப்படி அடிப்படையில் மாற்ற முடியாத தமிழர்களுக்கு வாழ்வளித்த சட்டங்களையெல்லாம் வழங்கிய சட்டமன்றம்தான் இன்றைக்குப் புதிய கட்டடத்தைக் காணுகிறது.

இவையெல்லாவற்றையும் விட தமிழக சட்டமன்றத்திற்கு ஒரு புதிய வரலாறு நாட்டை ஆளும் முதல்வர்களாக பட்டதாரிகளே வரவேண்டும் என்ற எழுதப்படாத வரலாற்றை மாற்றியதும் இந்தச் சட்டமன்றம்தான். சட்டமன்றத்தில் அதிகம் பேசாத பெருந்தலைவர் காமராஜர், நடிப்புத் துறையிலிருந்து முதன்முதலாகப் பொறுப்பேற்ற புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., தமிழக வரலாற்றைப் புதிதாக எழுதிக் கொண்டிருக்கிற, பட்டம் பெறாத படைப்பாளர்–ஈடு இணையற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்துமுறை முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டு அறிஞர் அண்ணா உருவாக்கிய இலக்கிய உணர்வோடு நடத்தப்படுகிற சட்டமன்றம் இது.

பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் நுழைந்ததற்குப் பிறகுதான் சட்டமன்றமே ஒரு இலக்கிய அரங்கமாக மாறிய வரலாற்றைப் பெற்றிருக்கிறது. அண்ணா தொடங்கி வைத்தார்; இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அதை வளர்த்துக் கொண்டு வருகிறார். வாழ்வித்துக் கொண்டு வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற ஒரு மாணவர் தோன்றவில்லையானால், அண்ணா கண்ட இலட்சியங்கள் வெற்றி பெற்றிருக்காது. அண்ணா என்ற மாணவர் தோன்றவில்லையானால் தந்தை பெரியாருடைய இலட்சியங்கள் நிறைவேறியிருக்காது.

இப்படித் தொடர்ந்து வரலாற்றை உருவாக்கி, நிறைவேற்றிக் கொண்டு வருகிற வரலாற்றுச் சின்னமாக விளங்குவதுதான் புதிய தமிழ்நாட்டு சட்டமன்ற வளாகம். அடிமைச் சின்னத்திலிருந்து விடுதலை பெற்ற வரலாற்றை நினைவுபடுத்துகிற நாள்தான் இந்த நாள். அரசியல் விடுதலை பெற்றோம். நிருவாக விடுதலை பெற்றோம். இவையெல்லாவற்றையும் விட தமிழர்கள் விடுதலை பெற்ற நாள், விடுதலை பெறுகிற நாள் இந்த நாள்.

புதிய வரலாறு படைக்கும் கலைஞர்

திரு. சு. திருநாவுக்கரசர்
மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் மற்றும் தமிழக முன்னாள் அமைச்சர்

18 ஆம் நூற்றாண்டின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது தமிழகச் சட்டமன்றம். 12 உறுப்பினர்களோடு 18 ஆம் நூற்றாண்டில் தொடங்கி, தேர்ந்தெடுக்கப்படுகிற 234 சட்டமன்ற உறுப்பினர்களோடும், ஒரு நியமன உறுப்பினரோடும் செயல்படுகிற நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட புகழ்மிக்க சட்டமன்றமாகத் தமிழகச் சட்டமன்றம் திகழ்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 1952 ஜனவரி மாதம் நடைபெற்ற முதல் சட்டமன்றப் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து 1952 மார்ச் முதல் தேதி தமிழகச் சட்டமன்றம் உருவானது. சட்டமன்றப் பேரவைத் தேர்தல் நடைபெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1967 மார்ச் முதல் தேதி நான்காவது சட்டமன்றப் பேரவை உருவானது. 1967 ஜூலை மாதம் 18 ஆம் தேதி ஒருமனதாக அனைவராலும் ஏற்கப்பட்டு சென்னை மாநில சட்டமன்றப் பேரவை – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையாகவும் சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்றும் பெயர் சூட்டப்பட்டதன்மூலம் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு 1969 ஜனவரி 14 ஆம் தேதி முதல் சட்டப்பூர்வமாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை எனப் பெயர் பெற்றது.

இரு அவைகளோடு செயல்பட்டுவந்த தமிழகச் சட்டமன்றத்தில், 1986 மே 14 ஆம் தேதி 8–வது சட்டமன்றப் பேரவையின்போது சட்டமன்ற மேலவையைக் கலைக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1986 நவம்பர் 1 ஆம் தேதி முதல் பாராளுமன்றத்தால் ஏற்கப்பட்டு அமலுக்கு வந்தது.

தமிழ்நாடு சட்டமன்றம் செயல்பட்டு வரும் புனித ஜார்ஜ் கோட்டை, 1640 ஏப்ரல் 23 ஆம் தேதி முதல் இப்பெயருடன் திகழ்கிறது. இக்கோட்டையில் செயல்படும் சிறப்பான சட்டமன்ற வளாகத்துக்குள் இயங்கும் சட்டமன்றப் பேரவைத் தலைவரின் இருக்கை புகழ்மிக்க சிறப்பு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபு அவர்களாலும், அவரது துணைவியாராலும் பரிசாக 1922 மார்ச் 6 ஆம் தேதி வழங்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றத்தை அலங்கரிக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் மக்கள் நலன் காக்கும் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சூடான, சுவையான பயன் தரும் பல விவாதங்கள் நடைபெற்றுள்ளன. தமிழ் மொழி காக்க, தமிழ் இனம் காக்க தமிழ்நாட்டைக் காக்க பல சட்டங்கள் பல காலக்கட்டங்களில் நிறைவேற்றப் பட்டுள்ளன. பல பெருமக்கள் சட்டப் பேரவைத் தலைவர் களாக, துணைத் தலைவர்களாக, முதல்வர்களாக, எதிர்க்கட்சித் தலைவர்களாக, உறுப்பினர்களாக இருந்து ஜனநாயகம் தழைக்கப் பாடுபட்டுள்ளனர்.

இப்படிப் பழைய வரலாற்றுச் சிறப்புடன் திகழ்கிற தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கு, ஒரு புது வரலாற்றைத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். தமிழக வரலாற்றில் 5 முறை முதலமைச்சராகவும், இரண்டாவது சட்டமன்றப் பொதுத் தேர்தல் தொடங்கி, தான் போட்டியிட்ட எல்லா சட்டமன்றத் தேர்தல்களிலும் 11 முறை போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே தலைவராகவும் திகழ்பவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழ் அறிஞராகவும், மூத்த தலைவராகவும் திகழ்கிற அனுபவம் நிறைந்த முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தனது நேரடி மேற்பார்வையில் கட்டி முடித்திருக்கிற புதிய சட்டமன்ற வளாகம், தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் சின்னமாகத் திகழப்போவது உறுதி. கலை நயத்தோடு, கம்பீரமாக உருவாக்கப்பட்டுள்ள இச்சட்டமன்றப் பேரவைக் கட்டடம் ஜனநாயகம் உள்ளவரை என்றென்றும் நிலைத்து நின்று தமிழ் இனத்தின் பெயர் சொல்லும் அடையாளமாக விளங்கும் என்பது உறுதி.

புனித ஜார்ஜ் கோட்டையும் - தமிழகச் சட்டமன்ற வரலாறும்

திரு. சேடபட்டி இரா. முத்தையா
சட்டப் பேரவை முன்னாள் தலைவர்

தமிழகச் சட்டமன்றப் பேரவை செயல்பட்டு வந்துள்ள புனித ஜார்ஜ் கோட்டை, தலைநகர் டெல்லியில் அமைந்துள்ள இந்திய வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் "டெல்லி செங்கோட்டை"க்கு இணையான அதேபோன்றதொரு வரலாற்றுச் சின்னமாகவே கருதப்பட்டுவரும் ஓர் சரித்திரக் கோட்டை ஆகும்.

மொகலாயப் பேரரசு இந்தியத் திருநாட்டின் பெரும்பகுதியைத் தன் வசப்படுத்தி ஆண்ட காலக் கட்டத்தில் 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சக்கரவர்த்தி ஷாஜஹான் தன் பெயரும், புகழும் நிலைத்திடத்தக்க வகையில் பிரம்மாண்ட கம்பீரத்துடன் கட்டி முடித்த சரித்திரச் சின்னம்தான் டெல்லி செங்கோட்டை ஆகும்.

அதேபோன்று வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதானதுதான், 16 ஆம் நூற்றாண்டிலேயே அப்போதைய பிரிட்டிஷ் கம்பெனியினர் முதலில் தங்கள் நிர்வாகத்திற்காகவும், பின்னர் தங்கள் பாதுகாப்புக்காகவும் சுற்றிலும் அகன்ற அகழியுடன் கட்டிய புனித ஜார்ஜ் கோட்டையாகும்.

1640–ல் புனித ஜார்ஜ் நினைவு தினமான ஏப்ரல் 23–ல் இந்தக் கோட்டை கட்டப்பட்டதால் இதற்கு புனித ஜார்ஜ் கோட்டை (St. George Fort) என்று பெயரிடப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், டெல்லி செங்கோட்டை, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை இரண்டுக்கும் இன்னொரு சிறப்பம்சமும் உண்டு. இரு கோட்டைகளுக்கும் முகப்புகளில் அமைந்துள்ள கோட்டைக் கொத்தளங்களில்தான் மத்திய அரசின் சார்பில் டெல்லியிலும், தமிழக அரசின் சார்பில் சென்னையிலும் சுதந்திர தினக் கொடியேற்று விழாக்கள் நடைபெற்று வந்துள்ளன.

டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் பொறுப்பும், பெருமையும் சுதந்திரமடைந்த நாள் முதல், நாட்டின் பிரதமர்களுக்கு இருந்த நிலையில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மட்டும் மாநில ஆளுநர்கள்தான் கொடியினை ஏற்றி வந்தார்கள்.

நாட்டின் பிரதமர் மற்றும் மாநில முதல்வர்கள் என இருவருமே மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்கிறபோது நாட்டின் சுதந்திரத் திருநாள் கொண்டாட்டங்களில், மாநில முதல்வர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்ட உரிமையை வாதாடிப் பெற்றதோடு, அத்தகைய உரிமை தனக்கு மட்டும் பொருந்தும் என்றில்லாது, மற்ற மாநில முதலமைச்சர்களுக்கும் அதனைப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர்தான் என்பது குறிப்பிடத்தக்க ஓர் சாதனைச் சிறப்பாகும். அது முதல், சென்னைக் கோட்டையில் சுதந்திர தினக் கொடி நம் மாநில முதலமைச்சர்களால் ஏற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் மக்களாட்சி மகத்துவத்தை இவ்வாறு எல்லா மாநிலங்களும் பெறும் வாய்ப்பை – அதுவரை அரிதானதாகவும், இயலாததாகவும் இருந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்த நம் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் இன்று இதுவரை பேச்சளவிலே மட்டுமே இருந்துவந்த, 'சட்டமன்றத்திற்கான சொந்தக் கட்டடம்' என்ற முயற்சியிலும் முடிவெடுத்து, முதல் திறப்பு விழா காணும் இத்தருணம் வரை வெற்றியே கண்டுள்ளார். இவ்வெற்றிகளை எண்ணிப் பார்க்கும்போது,

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
> திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற "குறளோவியம்" தான் நினைவில் நிற்கின்றது.

இதே புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்றப் பேரவை மண்டபத்தில்தான் சட்டமன்றப் பேரவையின் பொன்விழாக் கொண்டாட்டமும் – தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பணிகளின் பொன்விழாக் கொண்டாட்டமும் நடைபெற்றுள்ளன.


இத்தகைய சிறப்புக்கள் பலவற்றை சட்டமன்றப் பேரவையில் நிகழ்த்திக் காட்டியுள்ள, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது சட்டமன்றப் பணிகளை இதே பேரவை மண்டபத்தில் ஆற்றி வந்துள்ள, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் புதியதோர் சட்டமன்ற வளாகத்தினை மிகப் பிரம்மாண்டமாகவும், அதி நேர்த்தியுடனும், திராவிடக் கலை நயமும், உலகத் தரம் வாய்ந்த நவீன தொழில்நுட்பமும் கொண்டதான ஓர் சீர்மிகு சரித்திரச் சின்னமாகவே கட்டி முடித்துள்ளார்கள்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் பழைய வரலாற்றுப் பெருமைகளையும் விஞ்சிய ஓர் வரலாற்றுச் சிறப்பாய் புதிய சட்டமன்றப் பேரவைக் கட்டடம் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலைத்திருக்க உள்ளது. அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் ஒரு கட்டட

குமரிமுனை வள்ளுவர் சிலை, சிங்காரச் சென்னைக்குப் பெருமை சேர்க்கும் வள்ளுவர் கோட்டம், சிலப்பதிகாரச் சிறப்பை விளக்கும் பூம்புகார் நகர் ஆகிய வரிசையில் சட்டமன்றப் பேரவைக்கென எழுப்பப்பட்டுள்ள புதிய சட்டமன்ற வளாகமும் என்றென்றும் திகழுவதாக உள்ளது.

நம்முடைய சட்டமன்ற வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கின் ஆங்கில ஆட்சியின்போது, பல்வேறு காலக் கட்டங்களில் இந்திய ஆட்சி நிர்வாகத்திற்கென பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இயற்றிய பல்வேறு சட்டங்கள் வாயிலாக இந்தியாவில் சட்டமியற்றுவதற்கான நிர்வாக சபைகள் அமைந்த செய்திகளை அறிய முடிகிறது.

1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம், 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் மற்றும் 1861, 1892 ஆகிய ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இந்திய



எழில்மிகு வள்ளுவர் கோட்டத்தின் தோற்றம்

வேலை என்றில்லாமல், ஒரு முதலமைச்சரே நாள்தோறும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்த்துப் பார்த்து, மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின், அவற்றை அவ்வப்போது உரிய வகையில் மாற்றம் செய்யச் செய்து கண்ணும் கருத்துமாய் செய்து முடித்துள்ள பாங்கினை, தமிழகமே இன்று வியந்து பாராட்டுகின்றது என்றால் மிகையில்லை. அவரது ஆட்சிக் காலங்களின் மாட்சியாக ஏற்கெனவே திகழும் வானுயர்ந்து நிற்கும்

சட்டமன்றங்கள் சட்டம், 1909 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் என்பன போன்ற சட்டங்களால் சட்டமியற்றும் நிர்வாக சபைகள் அமையவும், அவற்றில் இந்தியர்கள் சிலரேனும் இடம் பெறும் வாய்ப்புப் பெறவுமான நிலைகள் உருவாகின.

1919 ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சியால் இயற்றப்பட்ட "1919–இந்திய அரசுச் சட்டம்" என்ற

சட்டம்தான் முழுமையான சட்டமன்றங்கள் இந்தியாவில் அமையவும், அவற்றுக்குத் தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இடம்பெறவும் வழிவகை செய்தது. அச்சட்டத்தின்படி நம் சென்னை மாகாணத்திற்கு அமைந்தது "மதராஸ் ஸ்டேட் லெஜிஸ்லேச்சர்" என்றழைக்கப்பட்ட சட்டமன்றம் ஆகும். அச்சட்டமன்றத்திற்கு 1920–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில்தான் மக்கள் நேரடியாக வாக்களித்து, திராவிட இயக்கங்களுக்கெல்லாம் மூல அரசியல் வித்தாகத் திகழ்ந்த "நீதிக் கட்சி", மக்களிடம் நேரடி வாக்குப் பெற்ற ஆட்சியை அமைத்தது.

அக்காலத்தில் 1921 முதல் 1937 வரை சட்டமன்றக் கூட்டங்கள் புனித ஜார்ஜ் கோட்டையில் Council Hall என அழைக்கப்பட்ட தற்போதுள்ள பேரவை மண்டபத்தின் வட பகுதியில் சட்டமன்ற மேலவையாக இயங்கிய மண்டபத்தில் நடந்துள்ளன. இவ்வாறு 17 ஆண்டுகள் புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றம் இயங்கிய காலத்தில்தான் நீதிக் கட்சி ஆட்சி நடைபெற்று, சுப்புராய ரெட்டியார், பனகல் அரசர், பி. சுப்பராயன், பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், சர். பி.டி. இராசன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்துள்ளனர்.

சட்டமன்றப் பேரவைகள் புனித ஜார்ஜ் கோட்டையிலும், சில ஆண்டுகள் வெளியிலும் இயங்கி வந்த காலக்கட்டத்தில், சட்டமன்ற மேலவை, அதாவது Legislative Council என அழைக்கப்பட்ட அமைப்பும் 1921 முதல் இயங்கி வந்துள்ளது. சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகளாகும். ஆயினும், உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவர்; கற்றறிந்த மேதைகள், அறிஞர் பெருமக்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 3–ல் 1 பங்கினர் என்ற எண்ணிக்கையினரும் இம்மேலவைகளில் அங்கம் வகித்துள்ளனர். இம்மேலவை அக்காலத்தில் ஆன்றோர் அவை என்றும், மூத்தோர் சபை என்றும் கருதப்பட்டது.

சட்டமன்றப் பேரவை புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி, தற்போது நம் தமிழ் கலாச்சாரப் பெருமையினையும், திராவிடக் கட்டடக் கலை செழுமையினையும் பறை சாற்றும் வகையில் எழிலார்ந்த சின்னமாய் நம் போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது சீரிய முயற்சியால் எழுப்பப்பட்டுள்ள புதிய சட்டமன்ற வளாகத்தில் இயங்க உள்ளது.

செம்மாந்த சிறப்பும், பெருமையும் கொண்ட நம் சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கீர்த்திமிக்க பெருமக்கள் அமர்ந்திருந்து சட்டமன்ற நடவடிக்கைகளுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அதே நேரத்தில் ஓரிரு காலக்கட்டத்தில் சில கசப்பான விரும்பத்தகாத நிகழ்வுகள் நிகழ்ந்ததை மறுக்கவும் முடியாது.

கடந்தகாலச் சிறப்புகளைப் போற்றியும், சில காலக்கட்டங்களில் நேர்ந்துவிட்ட அத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டியும் இதே பேரவையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக உறுப்பினராக இருந்துள்ள பெருமைக்குரிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், புனித ஜார்ஜ் கோட்டையின் சட்டமன்றப் பேரவையில் கடைசி நாளன்று (11–01–2010) விவாதங்களை முடித்து வைத்துப் பேசியபோது தன் முடிவுரையில் தெரிவித்த கருத்துக்கள் என்றென்றும், இனிவரும் சட்டமன்ற உறுப்பினர் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டியவை ஆகும்.

"சட்டமன்றப் பேரவையிலே எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன. அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் மறந்து நாம் குடி செல்கின்ற புதிய இடத்திலாவது அந்த நிலைமை இல்லாது மேலும், நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப் பற்றிய நினைவு இவைகளோடு நம் பணியை அங்கே தொடங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறளுக்குப் படம் பிடித்தாற் போன்ற பொழிப்புரையாகவே தலைவர் கலைஞர் அவர்களின் இந்த சட்டமன்றப் பேரவை உரை அமைந்துள்ளது.

'உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் வேண்டும்' என்ற தலைவர் கலைஞர் அவர்களின் வழி நின்று தமிழகச் சட்டமன்றப் பேரவை "அல்லவை அகற்றி" "நல்லவை போற்றி" எல்லாச் சிறப்பும் கொண்டதாக அமைந்திடும் என்பது திண்ணம்.

தழைத்தோங்கட்டும் ஜனநாயகம்!

திரு. க. சுப்பு
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்

இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றம் உலகில் உள்ள நாடாளுமன்றங்களுக்கெல்லாம் தாய் என்று போற்றப்படுகிறது. அந்த நாட்டின் மக்கள் அவையும், மேன்மக்கள் அவையும் இணைந்துதான் நாடாளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது. முடியாட்சியின்கீழ் இருந்த இங்கிலாந்து நாட்டில் மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காக நீண்ட நெடிய போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இறுதியில் அதிகாரங்களை எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாமன்றத்துக்கே வழங்கிவிட்டுப் பெயரளவுக்கு முடியாட்சி முறை நடைபெற்று வருகிறது. அதே போன்று மேன்மக்களை (House of Lords) கொண்ட அவையை வைத்துக் கொண்டிருந்தாலும் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட அவையாக மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சார்பாளர்களைக் கொண்ட மக்கள் அவையே (House of Commons) விளங்கி வருகிறது.

இங்கிலாந்து நாட்டில் நிலவி வரும் நாடாளுமன்ற ஜனநாயக முறையைப் பின்பற்றியே இந்தியாவிலும் மக்கள் அவையையும் மாநிலங்கள் அவையையும் கொண்ட நாடாளுமன்றம் இயங்கி வருகிறது. மக்களவைக்கு நேரடியாகவே மக்களால் சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மாநிலங்களவையைப் பொறுத்தவரை மாநிலங்களின் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. சட்டப்பேரவைத் தொகுதிகளில் இருந்து சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநிலங்கள் அவைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். ஆயினும், நாட்டின் பிரதமராக வருபவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மக்களவைக்கே வழங்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களவை உறுப்பினராக இருப்பவர் பிரதமர் உட்பட எந்த அமைச்சர் பொறுப்புக்கும் தெரிவு செய்யப்படலாம். எனினும் மக்களவையில் வாக்களிக்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

மக்களவை உறுப்பினர்களுக்கும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரியான அதிகாரங்களும், சிறப்பு உரிமைகளும், விதிவிலக்குகளும் வழங்கப் பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அச்சமின்றி, சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கும், எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் செயல்படுவதற்கும் இத்தகைய அதிகாரங்களும், சிறப்பு உரிமைகளும், விதிவிலக்குகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் பேசியதற்காகவோ, வாக்களித்ததற்காகவோ எந்த ஓர் உறுப்பினர் மீதும் எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது. இத்தகைய உரிமைகள் மற்ற குடிமக்களுக்கு வழங்கப்படவில்லை. மக்களவையிலோ, மாநிலங்களவையிலோ நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் மாநிலங்களின் சட்டமன்றங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் அந்தந்த அவையின் தலைவரே அதிகாரமும் பொறுப்பும் வாய்ந்தவராக விளங்கி வருகிறார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு – 105 மற்றும் 194 ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள் மற்றும் விதிவிலக்குகள் முதலானவை எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றத்துக்கு இருக்கும் அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள் மற்றும் விதிவிலக்குகள் போன்றவற்றை இங்குள்ள உறுப்பினர்களும் பெற்றிருப்பார்கள் என்று தொடக்கத்தில் கூறப்பட்டிருந்தது. ஆயினும், 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 44 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் அவ்வப்போது வரையறுத்துக் கூறும் உரிமைகளை உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையும் பெற்றிருக்கும் என்று கூறப்பட்டது. அவ்வாறு சட்டத்தின்மூலம் வரையறுத்துக் கூறப்படும் வரை 44 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நாடாளுமன்றமும் அதன் உறுப்பினர்களும் பெற்றிருந்த சிறப்பு உரிமைகள் தொடரும் என்றும் கூறப்பட்டது. அதன்படி, 1978 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பெற்றிருந்த

அதிகாரங்களும், சிறப்பு உரிமைகளும், விதிவிலக்குகள் போன்றவையும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

சட்டப் பேரவை கூடும் ஒவ்வொரு நாளும் முதல் ஒரு மணி நேரம் வினா–விடை நேரமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. அந்த நேரத்தை இரத்துச் செய்வதற்கோ, மாற்றியமைப்பதற்கோ யாருக்கும் அதிகாரமில்லை. கேள்வி நேரத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை பேரவைத் தலைவர் கொண்டுவரும்போது, அந்தத் தீர்மானத்திற்கு ஒரே ஓர் உறுப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விட முடியாது. அந்தளவிற்கு உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, அவையில் கொண்டுவரப்படும் எந்தவொரு சட்டமுன்வடிவிற்கும் திருத்தங்களைக் `கொண்டுவந்து, எவ்விதமான கட்டுப்பாடுமில்லாமல், விதிகளுக்குட்பட்டு உரையாற்றும் உரிமையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதேபோன்று, மானியக் கோரிக்கைகளின்மீது, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துப் பேசும் உரிமையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவைதவிர, உரிமைப் பிரச்சினை, ஒழுங்குப் பிரச்சினை போன்றவற்றை எழுப்புவதற்கான உரிமையும், ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவற்றை கொண்டுவருவதற்கான உரிமையும் எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இருக்கிறது. இதேபோன்று தனி நபர் தீர்மானங்களும், தனியார் சட்டமுன்வடிவுகளும் கொண்டுவரப்படுவதற்கான வாய்ப்புகளும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக் கின்றன.

இத்தகைய வாய்ப்புகளை உறுப்பினர் ஒருவர் பயன்படுத்திக்கொண்டால், அவர் சட்டப் பேரவையில் தன்னுடைய பணிகளைப் போற்றத்தக்கவகையில் ஆற்ற முடியும்.

அப்துல்காதரும் அமாவாசையும்!

தமிழ் வளர்ச்சி என்பதும், கலைஞர் நீண்ட நாட்களுக்கு வாழ வேண்டும் என்று சொல்வதும் ஒன்றே என்பதனால் (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்களுக்கு நான் கீதையிலே உள்ள ஒரு ஸ்லோகத்தைச் சொல்லிவிடுகிறேன். கீதை, கலைஞரைப் பற்றிச் சொல்வது:

"பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே"

கலைஞரே, யுகம் யுகமாக நீங்கள் வாழவேண்டும்.

இந்த அவையிலே நான்கு முறை நம்முடைய தமிழ்நாட்டின் கோயில்களைப்பற்றிப் பேசியிருக்கிறோம். என்னுடைய அருமை நண்பர் தம்பி அப்துல் பாசித் அவர்கள் பெருமாள் கோயிலைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். என்னுடைய அருமைத் தம்பி சையத் கௌஸ் பாஷா அவர்கள் மீனாட்சி அம்மன் கோயிலைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் தமிழகத்திலே "அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்?" என்பது இருக்கவே கூடாது?

சட்டப் பேரவையில் திரு. கு. ஹசன் அலி (09-07-2009)

பயனுள்ள கேள்வி நேரம்

திரு. மா. செல்வராஜ்
சட்டப் பேரவைச் செயலாளர்

சட்டமன்றத்தில் வினாக்கள்–விடைகள் நேரத்தினை முறையாகப் பயன்படுத்துதல், மானியக் கோரிக்கைகள் மற்றும் சட்டமுன்வடிவுகள்மீது கருத்துகளைக் கூறி அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல், சட்டமன்றப் பேரவையின் குழு உறுப்பினராகப் பணியாற்றுதல், பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து பெறுகின்ற தகவல்களைக் கொண்டு சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் நேரிடையாக கலந்துபேசி பொதுமக்களுக்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றுதல் போன்றவை சட்டமன்ற உறுப்பினர்களின் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன.

உறுப்பினர்களுக்கு வினாக்கள் மூலம் தகவல்கள் பெறுவதற்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குமான உரிமைகள் படிப்படியாக அளிக்கப்பட்டுள்ளன.

1853, சார்ட்டர் சட்டத்தின்கீழ் சட்டங்களையும், விதிமுறைகளையும் அமைப்பதற்காக முதல் சட்டமன்றக் கவுன்சில் அமைக்கப்பட்டபோது, அரசு நிர்வாகத்தின் மீது உறுப்பினர்கள் உரிமையோடு கேள்விகளைக் கேட்கின்ற நிலை இல்லை. பின்பு, 1861 ஆம் ஆண்டில் இந்திய கவுன்சில் சட்டத்தின்மூலம் சட்டமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உறுப்பினர்கள் வினாக்கள் மூலம் தகவல்களைப் பெற முடிந்தது. 1892, இந்திய கவுன்சில் சட்டத்தின்கீழ், உறுப்பினர்கள் வினாக்களை ஆறு நாட்கள் முன்னறிவிப்புடன் செயலாளருக்கு அனுப்பி வைக்கும் முறை கொண்டு வரப்பட்டது. 1909, இந்திய கவுன்சில் சட்டத்திற்கிணங்க பேரவையில் முதன்முதலாகத் துணைக் கேள்விகளைக் கேட்கின்ற வழிமுறை ஏற்படுத்தப்பட்டது. துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுப்பினரின் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்க மறுக்கவும், தனியே ஒரு வினா எழுப்பினால் விளக்கம் அளிக்க முடியும் என்று அவர் தெரிவிக்கும் நடைமுறையும் கொண்டு வரப்பட்டது. பின்பு, 1919 ஆம் ஆண்டில் மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்கிணங்க, பொது நல நோக்கில் கேட்கப்படும் வினாக்கள் தொடர்பாக செயலாளருக்கு முன்னறிவிப்புக் கொடுக்க காலவரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

1921, செப்டம்பர் 5 ஆம் நாள், சர் பிரெடரிக் ஒயிட் (Sir Frederick Whyte) என்பவர் தலைவராகத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உடுக்குறியிட்ட நடைமுறையை (Star System) இங்கிலாந்து பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். இதைத் தொடர்ந்து உடுக்குறியிட்ட கேள்விகளுக்கு மட்டுமே பாராளுமன்றத்தில் வாய்மொழியாக அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

இவற்றிற்குப் பிறகுதான் உடுக்குறியிட்ட வினாக்கள் (Starred Questions), உடுக்குறியிடாத வினாக்கள் (Unstarred Questions) எனப் பிரிக்கின்ற நடைமுறை கொண்டு வரப்பட்டு 1937 ஆம் ஆண்டிலிருந்து 1947–ல் இந்தியா சுதந்திரம் அடையும் வரையிலும், உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களின் எண்ணிக்கைக்கு வரையறை ஏதும் இல்லாத நிலை, வினா எண்களின் வரிசைக்கிரமமான வகையில் நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பது போன்ற சில மாற்றங்கள் ஏற்பட்டன.

1950, ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த பின்பு, முதலாவது சட்டமன்றம் 1952 ஆம் ஆண்டில் கூடியது. சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் கேள்வி நேரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உறுப்பினர் ஒருவரின் தொகுதி சம்பந்தமான பிரச்சினை மட்டுமல்ல, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் எழுகின்ற பிரச்சினைகள், பொதுவான கருத்துகள் ஆகியவை குறித்து சட்டமன்ற உறுப்பினர் தனது வினாக்களை எழுப்பி அமைச்சரின் பதில்களைப் பெற முடியும் என்பதால் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமானால் அவர்கள் சட்டமன்றப் பேரவை வினா–விடை நேரத்தில்

தவறாது கலந்து கொள்வது அவசியமாகிறது. சட்டமன்ற நிகழ்ச்சியின், முதல் ஒரு மணி நேரம் வினா–விடைகளுக்கான நேரமாக ஒதுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் இதர பிரச்சினைகளை உறுப்பினர்கள் எழுப்பக்கூடாது. பேரவை நடந்து கொண்டிருக்கும்போது வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமானால் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஒப்புக் கொண்டாலன்றி அந்நேரத்தை ஒத்திவைக்க இயலாது. இவற்றிலிருந்து சட்டமன்றத்தில் வினாக்கள்–விடைகள் நேரத்தின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம்.

உறுப்பினரின் வினாக்கள், உடுக்குறியிட்ட வினா (Starred), உடுக்குறியிடாத வினா (Unstarred) என இருவகைப்படும். உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டுமே வரிசைக்கிரமமான எண்கள் அடிப்படையில் சட்டமன்றப் பேரவை கூடும் நாட்களில் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு அமைச்சர்களின் வாய்மொழி மூலமாகப் பதிலளிக்கப்படுகின்றன. உடுக்குறியிடாத வினாக்களுக்கான பதில்கள் பேரவைச் செயலகத்தின் மூலம் புத்தக வடிவில் உறுப்பினர்களுக்குப் பேரவையில் வைக்கப்படுகின்றன. இவற்றின் மீது எந்த விவாதமும் துணைக் கேள்விகளும் எழுப்ப இயலாது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் முன்னிலையில் வினாக்கள் குலுக்கல் முறையில் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் வினாப் பட்டியலில் 20 உடுக்குறியிட்ட வினாக்கள் சேர்க்கப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் பதிலளிக்கப்படுகின்றன. ஏற்கெனவே விடுபட்டுப்போன அல்லது தள்ளி வைக்கப்பட்ட வினாக்களையும் இவற்றோடு கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையும் அங்கு உள்ளது. இந்தியா முழுவதும் நாடாளுமன்ற ஆளுகை உள்ளதால் அவற்றின் பொருள் அதிக அளவு எண்ணிக்கையிலான துணைக் கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. துணைக் கேள்விகளை அனுமதிப்பதும் மறுப்பதும் அவைத் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

ஒரே பொருளைக் கொண்ட வினாக்களைப் பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற நேர்வில் குலுக்கல் முறையில் சேர்க்கப்பட்ட வினா மட்டுமே அனுமதி பெற்றதாகவும் அதே பொருளை உடைய இதர உறுப்பினர்களின் வினாக்கள் அனுமதி மறுக்கப் பட்டதாகவும் நாடாளுமன்றத்தில் கருதப்படுகின்றன. இத்தகைய நடைமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இல்லை என்பதோடு அனைத்து உறுப்பினர்களும் அவ்வினாவிற்கான விவாதத்தில் பங்குபெறும் வாய்ப்பினையும் பெறுகிறார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒருவர் உடுக்குறியிட்ட அல்லது உடுக்குறியிடாத வினாவைப் பேரவைச் செயலாளருக்கு அனுப்பினால் அவ்வினா விடையளிக்கப்படும் வரை அல்லது சட்டமன்றப் பேரவைக் காலம் முடியும் வரை செயலில் இருக்கும். நாடாளுமன்றத்தில் வினாக்களுக்கு 5 நாள் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட கூட்டத்தொடர் முடிந்தவுடன் அந்த வினா செயலிழந்து விடுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள மேற்கூறிய சில வேறுபாடுகளைத் தவிர நமது நாடாளுமன்றத்தில் பின்பற்றப்படும் விதிமுறைகளே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வினாக்கள்–விடைகள் நேரத்திலும் பின்பற்றப்படுகின்றன.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வினாவாக இருப்பின், உறுப்பினர் ஒருவர் முன்னறிவிப்பைச் செயலாளருக்குக் கொடுத்து பேரவைத் தலைவர் அவர்களால் அரை மணி நேரத்திற்கு அது அனுமதிக்கப்படுமாயின் அந்த வினா அரை மணி நேர வினாவாகக் கருதப்படுகிறது. அரை மணி நேர விவாதத்திற்குப் பின்பு எவ்வித தீர்மானமும் வாக்கெடுப்பும் இன்றி விவாதம் தானாகவே முடிந்து விடும். வாரத்தில் மூன்று நாள் கூட்டங்களில் அரை மணி நேர வினாவிற்கு பேரவைத் தலைவர் நேரத்தினை ஒதுக்கலாம். அம்மாதிரி விவாதத்தை எழுப்ப விரும்பும் உறுப்பினர் ஒருவர், எந்த நாளில் அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகச் செயலாளருக்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அதில் எந்தெந்த முக்கியக் கூறுகள் பற்றி விவாதம் எழுப்ப விரும்புகிறார் என்பதையும், விவாதம் கோருவதற்கான காரணங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

வினாவின் முக்கியத்துவத்தைக் கருதி பேரவைத் தலைவர், ஒரு வினாவைக் குறுகிய கால வினாவாக அனுமதிக்கலாம். குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்புக் கொடுப்பதற்கு முன் அதற்குரிய படிவத்தில் தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் இசைவினையும் பெற வேண்டும். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குறுகிய கால வினாவானது வினாப் பட்டியலில் வரிசைப்படி கூடுதலாகக் கடைசியில் சேர்க்கப்படுகிறது. சட்டமன்றப் பேரவை கூடுமுன் 10 நாட்களுக்குள் குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படுவதும் ஒரே பொருள் குறித்த உறுப்பினர்களில் நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்களின்

பெயர்கள் அவ்வினாவில் சேர்க்கப்படுகிறது என்பதும் விதியாக உள்ளது. பொதுவாக, சட்டமன்றக் கூட்டத் தொடரில் குறைந்த எண்ணிக்கையிலேயே குறுகிய கால வினாக்கள் அனுமதிக்கப்பட்டு விடையளிக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் வினாக்களுக்கான படிவங்களைப் பெற்று உறுப்பினர்கள் தங்களது வினாக்களை வழங்குகிறார்கள். உடுக்குறியிட்ட வினாக்களுக்கான பொருள் தெளிவாக இருக்க வேண்டுமேயன்றி, வாதங்கள், குற்றச்சாட்டுக்கள், யூகங்கள், கேலிக்கூத்து போன்றவை கொண்டிருக்கக் கூடாது. தனிப்பட்ட ஒருவரின் நடத்தையைப் பற்றியோ, ஒழுக்கத்தைப் பற்றியோ குறிப்பிடும் வகையில் வினாக்கள் அமையக் கூடாது. மேலும், நீதிமன்ற விசாரணையில் இல்லாத பொருளாகவும் வினாக்கள் இருத்தல் வேண்டும். உறுப்பினர் ஒருவர் வினாக்களை எழுப்பும்போது, மிக நீண்டதாக ஒரு அறிக்கை போன்று இல்லாத வகையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் சுருக்கமாக இருக்க வேண்டும். அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் பற்றியோ, விடையில் அடங்க முடியாத அளவிற்குப் பரந்த ஒரு கொள்கை விளக்கத்தையோ, ஏற்கெனவே விடையளிக்கப்பட்ட பொருள்கள் பற்றியோ வினாக்கள் கொண்டிருந்தால் அந்த வினாக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அற்பமான பொருள்கள் பற்றியதாகவும் சாதாரண பழைய வரலாறு குறித்த தகவல்களைப் பெறக்கூடிய தாகவும் எளிதாகக் கிடைக்கக் கூடிய ஆவணங்கள் மூலம் பெறக்கூடிய தகவல்களைக் கொண்டதாகவும் வினாக்கள் இருப்பின் அத்தகைய வினாக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களின் வினா ஒன்று நீண்ட புள்ளி விவரங்களைக் கோருவதாகவும் அறிக்கை அளிக்கக் கூடிய விவரங்களைக் கொண்டதாகவும் குறைந்த முக்கியத்துவம் உள்ளதாகவும் இருக்குமேயானால் அந்த வினாக்கள் உடுக்குறியிட்ட வினாக்களாக அல்லாமல் உடுக்குறியிடாத வினாக்களாகக் கருதப்படும் நிலை ஏற்படுகிறது.

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, உறுப்பினர்கள் தங்களுடைய வினாக்களை தயாரித்து பேரவைச் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். புதிதாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அளிக்கும் வினாக்கள் நீண்ட அறிக்கையைக் கொண்டதாக அமைவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. எனினும், சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர்களுக்குச் சட்டமன்றப் பேரவை விதிகள், வழிகாட்டிகள் குறித்த புத்தகங்கள் ஆகியவை வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு வினாக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்கிற விளக்கமும் பயிற்சியும் பேரவைச் செயலகத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, உறுப்பினர்களுடைய வினா, உடுக்குறியிட்ட வினாவாக அமைவதற்கு பொருளும் எழுதும் முறையும் மிகவும் அவசியமாகிறது.

உறுப்பினரின் வினாவிற்கான முன்னறிவிப்பில் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட முக்கிய பொருள்கள் அடங்கியிருக்குமானால் பொருளின் முக்கியத்துவத்தைக் கருதி அதனைத் தனித் தனி வினாவாக எடுத்துக்கொண்டு பேரவைச் செயலகமே நடவடிக்கை எடுக்கிறது. உறுப்பினர்கள் வினா கேட்பதற்கான விவரங்கள் அனைத்தையும் வெள்ளைத் தாளில்கூட எழுதி செயலகத்திற்கு அளிக்கலாம். எனினும், இதற்கென்று பேரவைச் செயலகத்தில் வழங்கப்படும் படிவத்தைப் பயன்படுத்துவதுதான் சிறந்தது. உறுப்பினர் அளிக்கின்ற வினாக்கள் பேரவைச் செயலகத்தில் ஒப்புதலுக்குப் பின்பு தட்டச்சு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பதில்களுக்காக அனுப்பப்படுகின்றன. வினாவிற்கான விடை பேரவைச் செயலகத்தில் பெறப்பட்ட பின்பு அவ்வினாவிற்கு மாற்று விடை அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் விரும்பினால் பேரவைச் செயலகத்திற்கு முன்னதாகவே அதனை அளிக்க வேண்டும்.

உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட வினாக்கள் பேரவைச் செயலகத்தின் மூலம் பதினைந்து நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என்றும் துறையிலிருந்து பதில்கள் பெறப்பட்டு 42 நாட்களுக்குள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் பேரவை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதிகளவு வினாக்கள் பெறப்படுவதன் காரணமாக எல்லா வினாக்களையும் பேரவை நிகழ்ச்சியில் சேர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. சட்டமன்றப் பேரவையில் தற்பொழுது பத்து வினாக்கள் நாள்தோறும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு பத்து வினாக்களுக்கும் மாண்புமிகு அமைச்சர்களால் பதிலளிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர்கள் மூலம் துணைக் கேள்விகள் அதிகளவு கேட்கப்பட்டு பதில்கள் அளிக்கப்படுவதால் பெரும்பாலான நாட்களில் முதல் ஒரு மணி நேர வினா–விடை நேரம் நீட்டிக்கப்பட்டே வருகிறது. நாடாளுமன்ற மக்களவையில் இருபது உடுக்குறியிட்ட வினாக்கள் நாள்தோறும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட போதிலும் ஐந்து அல்லது ஆறு உடுக்குறியிட்ட

வினாக்களுக்கு மட்டுமே கேள்வி நேரத்தில் மாண்புமிகு அமைச்சர்களால் விடையளிக்கப்படுகின்றன. அதிக அளவு துணைக் கேள்விகள் கேட்கப்படுவதே இதற்குக் காரணமாகும். பல்வேறு கால கட்டங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விடுபட்ட வினாக்கள் மறுநாள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விடையளிக்கப் பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவையில் பொதுவாக, வினாக்கள்–விடைகள் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரைத் தவிர இதர துறைகளின் அமைச்சர்கள்தான் அதிக நேரம் பதிலளிப்பது வழக்கமாக உள்ளது. எனினும், 1996–2001 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 136 உடுக்குறியிட்ட வினாக் களுக்குப் பேரவையில் பதிலளித்துள்ளார்கள். 970 உடுக்குறியிடாத வினாக் களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விடைகளும் சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பட்டன. ஒரே சட்டமன்றப் பேரவை காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கேள்விகளுக்கு மாண்புமிகு முதல்வர் பதிலளிக்கும் இத்தகைய நிகழ்வு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இதுவரை ஏற்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே சட்டப் பேரவைக் காலத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர், சட்டப் பேரவையில் 136 உடுக்குறியிட்ட கேள்விகளுக்கு பதிலளித்ததும், 970 உடுக்குறியிடாத கேள்விகளுக்கு விடையளித்து பேரவையில் வைக்கப் பட்டதும், கேள்வி நேரத்தில் ஒரே நாளில் தொடர்ந்து 32 நிமிடங்கள் பதிலளித்ததும் முதலமைச்சர் பதில் அளிப்பதில் சட்டப் பேரவை வரலாற்றில் இதுவரை ஏற்படாத நிகழ்வு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடுக்குறியிட்ட வினாக்களுக்கான பதில்களை அளிக்கும்போது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதிக எண்ணிக்கையில் துணைக் கேள்விகளைக் கேட்டு அவ்வுறுப்பினர்களின் தொகுதி சம்பந்தப்பட்ட உறுதிமொழிகளையும் அதிக அளவு பெறுகின்ற நிலை கடந்த சட்டமன்றப் பேரவையிலும் தற்போது பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையிலும் தொடர்கிறது. குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7–12–2006 அன்று 2 மூலக் கேள்விகளுக்கும், அந்த மூலக் கேள்விகளுக்குக் கேட்கப்பட்ட 15 துணைக் கேள்விகளுக்கும் ஒரே சமயம் பதிலளித்தது மட்டுமின்றி இவற்றின் மூலம் 10 உறுதிமொழிகளையும் உறுப்பினர்களுக்கு அளித்துள்ளார்கள். அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் மட்டும் உரையாற்றிய மொத்த நேரம் 32 நிமிடங்கள் ஆகும். முதலமைச்சர் பதிலளிப்பதில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றிலேயே இத்தகைய நிகழ்வு இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுத் துறைகளின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து நாள்தோறும் சட்டமன்றத்தில் மூலக் கேள்வி அளித்த உறுப்பினருக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கு பேரவைத் தலைவர் அனுமதி அளிக்கிறார்கள். மூலக் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த பின்பு, துணைக் கேள்விகள் கேட்பதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்தைப் பெறும் வகையில் உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு தங்களது ஒரு கையினை உயர்த்த வேண்டும். ஒரே வினாவில் அனைத்து உறுப்பினர்களின் துணைக் கேள்விகளுக்கும் பதிலளிக்க இயலாது என்கின்ற காரணத்தினால் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சரை உறுப்பினர் ஒருவர் தாம் கோரும் தகவல்கள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த இயலாது. எனினும், நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்டமன்றப் பேரவையிலும் உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தகுந்த பதில்களை அளிக்கின்ற கடமையுடையவர்கள் ஆவர்.

ஒரு உறுப்பினர் தாம் எழுப்புகின்ற வினாப் பொருள் தமிழ்நாட்டின் எந்தத் தொகுதியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம் என்பதால், அரசின் ஆக்கபூர்வமான பணிகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை அரசு நிறைவேற்றிட துரிதப்படுத்துவதற்கும் வினாக்கள்–விடைகள் நேரம் உறுப்பினர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.



மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி
முதலமைச்சர்

வரலாற்றுக் குறிப்புகள்

உள்ளடக்கம்

புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாறு

பண்டைய காலம் தொட்டு ரோமானியர்கள், கிரேக்கர்கள், அரேபியர்கள் ஆகியோர் தமிழ் நாட்டினருடன் வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர் என்பதற்கு பல்வேறு கல்வெட்டுகள் சான்றாக உள்ளன. மேலும், தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி ஆதிகாலத்திலிருந்தே வணிகர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு இருந்ததால், பிற்காலத்தில் கடல்வழி வாணிபம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்திய வாசனைத் திரவியங்களுக்கு மேலை நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருந்தது. குறிப்பாக மிளகு, இலவங்கம், ஏலக்காய் போன்ற பொருட்களுக்கு அதிக கிராக்கி இருந்தது. மேலும் துணி ஆடைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஏனெனில், இந்திய ஓவியர்கள் வண்ணங்கள் தீட்டுவதில் ஐரோப்பியரைவிட சிறந்து விளங்கினர். மசூலிப்பட்டினம் மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் இந்த வண்ணம் தீட்டும் சாயத்துக்கு மூலப் பொருளான செடிகள் கிடைத்ததால் இந்தியாவிலிருந்து தயாரிக்கப்படும் துணி வகைகள் மிகவும் பிரசித்தி பெற்றவையாக இருந்தன. இந்தத் துணி வகைகளை ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தனர். சிறந்த வர்த்தக தொடர்புகளைத் தேடி பல்வேறு நாட்டினரும் நமது நாட்டின் கடற்கரைகளை வந்தடைந்தாலும், போர்ச்சுக்கீசியர்கள் அதில் முன்னிலையில் இருந்தனர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பக்கம் தமது கவனத்தைச் செலுத்திய அவர்கள் 1522 ஆம் ஆண்டு சாந்தோம் பகுதியில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்களும், டேனியர்களும், பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் வந்தனர்.

16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் டச்சுக்காரர்கள் மிளகின் விலையை மிக அதிக அளவுக்கு உயர்த்தியதால் இங்கிலாந்தைச் சேர்ந்த 24 வணிகர்கள் சேர்ந்து பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியைத் தொடங்கி இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய முனைந்தனர்.

1608–ல் முதல் முறையாக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் மேற்குக் கடற்கரையிலிருந்த சூரத் நகரைத்தான் முதலில் அடைந்தனர். அப்போது இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த முகலாய சக்கரவர்த்தியான ஜஹாங்கீர் மன்னனின் ஒப்புதலுடன் சர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேயர் சூரத்தில் ஒரு தொழிலகத்தை அமைத்து தமது வணிகத்தை ஆரம்பிக்க வித்திட்டார். பின்னர், சிறிது சிறிதாக இந்தியாவின் கடற்கரைப் பகுதியில் தனது வணிகத்தை வளர்ச்சியடையச் செய்தார். ஆங்கிலேய குடும்பங்கள் இந்திய நகரங்களில் குடியேற ஆரம்பித்தன. அவர்கள் அப்போது முதலாவதாகக் குடியேறிய இடம் மதராசாகும். பிறகுதான் கல்கத்தா, பம்பாய் அவர்களது ஆளுகையின்கீழ் வந்தன.

1630 ஆம் ஆண்டின் ஆரம்ப கட்டத்தில் இந்தியாவின் இரு பக்கங்களிலும் உள்ள கடலோரங்களில் இருந்து வியாபாரத்தை நடத்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தங்களுக்கென ஒரு நிரந்தர அடித்தளத்தைத் தேடியது. ஒருபுறம் கூவம் நதியாலும், வடக்கில் அக்காலத்தில் பாய்ந்த எழும்பூர் நதியாலும், சூழப்பட்ட ஒரு மணல் பரப்பு அவர்களது கவனத்தை ஈர்த்தது. ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி அலுவலரான திரு. பிரான்சிஸ் டே என்பவர் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியாலும், அவரது உயர் அதிகாரி ஆன்ட்ரூ கோகன் என்பவர் அளித்த ஊக்கத்தாலும் சுமார் 5 கி.மீ. நீளமும் 2 கி.மீ. அகலமும் உள்ள அந்தத் திட்டு கம்பெனிக்குக் கிடைத்தது. திரு. தாமர்லா வெங்கடாத்ரி என்பவர் வடக்கே பழவேற்காடு முதல் தெற்கில் சாந்தோம் வரையிலான இடத்தை விஜயநகர மன்னரின் பிரதிநியாக ஆண்டு வந்தார். பின்னர் திரு. டேயின் இந்திய உதவியாளரான பேரி திம்மண்ணா மற்றும் திரு. வெங்கடாத்ரியின் சகோதரர் திரு. அய்யப்ப தாமர்லா ஆகியோர் உதவியோடு இப்பகுதிக்கான உரிமைப் பத்திரம் ஆங்கிலேயரால் பெறப்பட்டது. 1639 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாள் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், 1640 ஆம் ஆண்டு திரு. டே தனது சொந்தச் செலவில் கோட்டையைக் கட்டும் பணியைத் தொடங்கி 1640 ஆம் வருடம் புனித ஜார்ஜ் தினமான ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளன்று கோட்டையைக் கட்டி முடித்தார். எனவே, அதற்கு புனித ஜார்ஜ் கோட்டை எனப் பெயரிடப்பட்டது. பின்னர், கோட்டைக்குள்

ஆங்கிலேய வணிகர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியேறினர். கோட்டைக்குள் வெள்ளையர்கள் வாழ்ந்த பகுதி ''வெள்ளையர் நகரம்'' என்றும், வெளியே வடக்குப் பகுதியில் உள்ளூர் கலைஞர்கள், நெசவாளர்கள் வாழ்ந்த பகுதி ''கருப்பர் நகரம்'' என்றும் அழைக்கப்பட்டது. ஆங்கிலேயரது குடியிருப்பை நிருவகிக்க ஏஜென்சி ஒன்று அமைக்கப்பட்டது. ஆன்ட்ரூ கோகன் அதன் முதல் ஏஜென்டாக நியமிக்கப்பட்டார். 1652 முதல் 1655 வரை புனித ஜார்ஜ் கோட்டை என்பது ஜாவா ஆங்கிலேய தலைமையிடத்தின் ஆளுமையிலிருந்து விடுவிக்கப்பட்டு ஒரு மாகாணம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு அதன் தலைவர் பிரசிடென்ட் என்று அழைக்கப்பட்டார். எனினும், 1655 முதல் 1684 வரை மீண்டும் தனி ஏஜென்சி என்ற நிலைக்கு அது தள்ளப்பட்டு, 1684–ல் மாகாண நிலையை அடைந்து எலிஹு யேல் என்பவர் பிரசிடென்ட் என்ற பொறுப்பில் நியமிக்கப் பெற்றார். ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டைக் கைக்கொள்ளவோ அல்லது ஆட்சி செய்யும் எண்ணத்திலோ வரவில்லை. அவர்கள் வெறும் வணிகத்திற்காகத்தான் வந்தார்கள். திரு. டே வந்த கப்பல் ஒரு சிறிய சாதாரண கப்பல் தான்.

கிழக்கிந்தியக் கம்பெனி முதலில் வர்த்தகப் பணியை மட்டுமே மேற்கொண்டாலும், படிப்படியாக உள்ளூர் குற்றங்களில் நீதி வழங்கத் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக அவர்களது ஆதிக்கமும் ஆட்சி பலமும் அதிகரித்தது. கம்பெனியின் ஏஜென்டுகளும், பிரசிடென்டுகளும் இருந்த இடத்தில், 1661 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்மூலம் கோட்டை நிர்வாக அதிகாரியாக திரு. ஜார்ஜ் பாக்ஸ்கிராப்ட் நியமிக்கப்பட்டார். முதலில் திருவல்லிக்கேணி கிராமம் 1667–ல் கோல்கொண்டா சுல்தானிடமிருந்து வாங்கப்பட்டது. அக்காலத்தில் சென்னையில் உள்ளூர் மக்களுக்கான Choultry Court எனப்படும் நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. அப்போது இந்தியர்களுக்காக அவர்கள் கொடுத்த தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. உதாரணமாக, கூலிகள் இருவர் கள்ள நாணயம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவர்களை வண்டியில் கட்டி வைத்து ''கருப்பு டவுன்'' சுற்றிலும் வீதிகளில் அழைத்துச் சென்று சாட்டையால் தொடர்ந்து 3 நாட்களுக்கு அடிக்க வேண்டும் என்றும், ஊர் எல்லைக்குள் அவர்கள் மீண்டும் வரலாகாது என்றும், அப்படி வந்தால் அவர்களின் காதுகள் வெட்டப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆக, ஆங்கிலேயரது தண்டனைகள் இந்தியர்களைப் பொறுத்தவரையில் காட்டுமிராண்டித்தனமானதாக இருந்தன. அப்போது அது குறித்து கேட்பார் எவரும் இல்லை. 1678–ல் ஆளுநர் ஸ்டிரேயின்ஷாம் மாஸ்டர் என்பவர் Superior Court என்ற மேல் நீதிமன்றத்தை அமைத்தார். 1680–ல் மிகத் தொன்மையான புனித மேரி ஆலயமும் கட்டப்பட்டது. மிகப் பழமையான சலவைக் கல்லாலான கல்லறைகள் இதன் அருகே இன்றும் உள்ளன. இந்த கிறிஸ்துவ ஆலயத்தில் திரு. எலிஹு யேல் அவர்களின் திருமணமும், பின்னர் 1753–ல் இராபர்ட் கிளைவின் திருமணமும் நடைபெற்றுள்ளன. திரு. எலிஹு யேல் 1687 முதல் 1692 வரை கோட்டையின் பிரசிடென்டாக இருந்தார்.

தேக்கு மரத்தினாலான, ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோட்டைக் கொடி மரத்தில் கம்பெனியின் கொடிக்குப் பதிலாக திரு. யேல் காலத்தில் பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டது. பிரான்சிஸ் டே கட்டிய 'ஃபோர்ட் ஹவுஸ்' இடிக்கப்பட்டு 1695–ல் அதன் கிழக்கே தற்போதைய தலைமைச் செயலகம் அமைந்திருக்கும் வளாகத்தின் நடுவே புதிய கட்டடம் கட்டி ஆளுநர் இல்லமும் அலுவலகமும் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக திருவொற்றியூர், கத்திவாக்கம், நுங்கம்பாக்கம், வியாசர்பாடி மற்றும் சாத்தங்காடு என புதிய இடங்களைத் தங்கள் ஆளுகையின்கீழ் கொண்டு வந்தனர். எழும்பூர், புரசைவாக்கம் இடையில் இருந்த 2 சிறிய கிராமங்களிலும் தங்களின் உரிமையை நிலைநாட்டி, வரி வசூல் செய்துகொண்டிருந்தனர். ஆங்கிலேயர்கள் ஏதாவது ஒரு இடத்தை தங்களது வசம் எடுப்பதற்கு முதலில் அவ்விடத்தை தமக்குப் பிடித்த இந்தியருக்கு வாடகைக்கு அளித்துவிட்டு சில காலத்தில் அதைத் திரும்பப் பெற்று, தங்களது உரிமையை நிலைநாட்டும் வழியைப் பின்பற்றினர். 1734–ல் நெசவாளர்களின் இருப்பிடமாக சிந்தாதரிப்பேட்டை அமைக்கப்பட்டது. 1742–ல் வேப்பேரி, எண்ணூர் போன்ற இடங்கள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1700 முதல் 1774 வரை புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களுக்குத் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அதன் பிறகு கல்கத்தா தலைமையிடமாக இருந்தது. 1727 ஆம் ஆண்டு மதராஸ் பட்டினத்தில் அரசு வருமானம் 64,000 பகோடாக்களாக இருந்தது. அதில் சரி பாதி சுங்க வரிமூலமும், ஆறில் ஒரு பாகம் வெற்றிலை, புகையிலை மீதான வரிமூலமும், பன்னிரெண்டில் ஒரு பாகம் நாணயத் தயாரிப்பிலிருந்தும், மீதம் மற்ற வரிகள்மூலமும் கிடைத்தவையாகும். ஆங்கிலப் பேரரசைத்

தொடங்கிவைத்த இராபர்ட் கிளைவுடன் பிரெஞ்சுக்காரர்கள் முதன்முதலில் போரிட்டு 1746–ல் புனித ஜார்ஜ் கோட்டையைத் தங்கள் வசம் கொண்டு வந்தனர். பிரெஞ்சுப் படைத் தளபதியான டி லா போர்டனாயிஸ் (De la Bourdonnais) 1746 ஆம் வருடம் செப்டம்பர் முதல் தேதியன்று, ஆங்கிலக் கப்பற்படை வடக்கு நோக்கிச் சென்றிருப்பதைத் தெரிந்துகொண்டு, தனது வீரர்களுடன் ஒன்பது கப்பல்களுடன் இரண்டு பீரங்கி குண்டு வீசும் கப்பல்களைக் கொண்டு மதராசின்மீது திடீர்த் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினார். எதிர்ப்பு ஒன்றும் இல்லாத நிலையில், காலையில் அவர் சாந்தோமுக்குத் தெற்கில் 600 காலாட் படையினருடன் தரை வழித் தாக்குதல் நடத்தி வடக்கு நோக்கி நகர்ந்தார். மற்ற வீரர்கள் திருவல்லிக்கேணி கோயிலருகில் இறங்கினர். கோட்டையை தெற்கிலிருந்து முன்னேறி தாக்க ஆரம்பித்தபோது கோட்டையின் பீரங்கிகள் இவர்களை நிறுத்த இயலவில்லை. பெண்கள் வெளியேற அனுமதி கேட்டபோது பிரெஞ்சுக்காரர்களால் அனுமதி மறுக்கப்பட்டது.



புனித மேரி ஆலயத்துடன் ஜார்ஜ் கோட்டையின் பழமையான தோற்றம்

அப்போது மெட்ராஸ் கம்பெனித் தலைவராக இருந்தவரும், மற்ற மூத்த அதிகாரிகளும் கலந்தாலோசித்தனர். கேப்டன் எக்மன் என்பவரைத் தவிர மற்றெல்லோரும் இந்தத் தாக்குதலை கோட்டையால் சமாளிக்க இயலாதெனக் கூறிவிட்டனர். (இவர்மீது பின்னர் வழக்கு தொடரப்பட்டது. இவர் பீரங்கிகளையும் வீரர்களையும் தயார் நிலையில் வைத்திருக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டாலும், பின்னர் அவரது வேண்டுகோளுக்கிணங்க அவருக்கு ஒய்வூதியம் அளிக்கப்பட்டது.)

டி லா போர்டனாயிஸ் செப்டம்பர் 4 ஆம் தேதியன்று 1,800 படை வீரர்களுடன், முன்னேறி 5 ஆம் தேதியன்று சிந்தாதரிப்பேட்டையை அடைந்தார். 7 ஆம் தேதியன்று கோட்டையின்மீது தாக்குதல் நடந்தது. அதே நேரத்தில் கடலினின்றும் பீரங்கிகள் கோட்டையை நோக்கிச் சுட்டன. 8 ஆம் தேதிவரை குண்டு வீச்சு நடந்தது. அப்போதைய கவர்னர் செயலிழந்து இருந்ததால், 8 ஆம் தேதி மாலை அவரது தூதுவரால் ஒரு கடிதம் பிரெஞ்சுத் தளபதிக்கு அனுப்பப்பட்டது. அதன்படி சரணாகதி உடன்படிக்கை ஏற்பட வேண்டி, தாக்குதலை நிறுத்துமாறு கோரப்பட்டது. ஆங்கிலேயர்கள் எதிரிகளுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருவதற்குத் தயாராக இருந்தனர். எனினும், டி லா போர்டனாயிஸ் கோட்டை ஆக்கிரமிப்பில் கண்ணும் கருத்துமாய் இருந்து வெற்றி பெற்றார். பிரிட்டிஷ்காரரான இராபர்ட் கிளைவ் தன் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

மேலும் 1746–ல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆற்காடு நவாப் படைகளுக்கும் போர் மூண்டது. இது அடையாறு ஆற்றுப் போர் (Battle of Adyar River) என்று வர்ணிக்கப்பட்டது. இப்போரில் வாள், கத்தியுடன் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட

ஆற்காடு நவாப் படை துப்பாக்கி, பீரங்கிகளுடன் 250 வீரர்கள் கொண்ட பிரெஞ்சுப் படையுடன் மோதி சின்னாபின்னமாக்கப்பட்டது. இதன்மூலம் சாந்தோம் உட்பட அதைச் சுற்றியுள்ள இடங்களை பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றினர். 1749 ஆம் ஆண்டு Aix-la-Chappelle Treaty அடிப்படையில் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கோட்டை மீண்டும் ஆங்கிலேயர்கள் கைக்கு வந்ததும், ஆங்கிலேயர்கள் கோட்டையை வலுப்படுத்தி அகழி அமைத்தனர்.

1749–ல் இராபர்ட் கிளைவ் சென்னை திரும்பியபோது கோட்டையின் பொறுப்பாளரானார். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கோட்டையை வலுப்படுத்தும் வழியைக் கண்டுகொண்ட ஆங்கிலேயர், கோட்டைப் பாதுகாப்பை அதிகரித்தனர். கோட்டையின் வடக்கே ஓடிக்கொண்டிருந்த எழும்பூர் ஆற்றின் பாதையை மாற்றி அதனை ஒரு அகழியாக்க முயற்சி மேற்கொண்ட நிலையில், பிரெஞ்சுக்காரரான லாலி என்பவரால் 1758–59–ல் கோட்டை மீண்டும் முற்றுகையிடப்பட்டது. அப்போது கோட்டையிலிருந்த கல்லறைகள் மற்றும் புனித மேரி ஆலயத்தின் அருகிலமைந்த கல்லறைக் கற்கள் சேதம் அடைந்தன.

பிரெஞ்சு முற்றுகை முடிந்த பின்னர் பலத்த சேதம் அடைந்த கோட்டையைப் புனரமைத்து பலப்படுத்தும் பணி 1783 வரை நடைபெற்றது. பழைய கருப்பர் நகரத்தின் பகுதி முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டு பீரங்கிகள் நிறுத்தக்கூடிய இடமாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் விரிவுபடுத்தப்பட்ட கோட்டை வடிவத்தில் பெருத்த மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. கோட்டை வளாகத்திற்குள் வெல்லஸ்லி இல்லம், முன்னர் அட்மிரால்டி நீதிமன்றங்கள் நடந்த கிளைவ் இல்லம், டவுன் ஹால், ஆங்கிலேயர் படைகள் தங்கிய பாரக்ஸ் கட்டடங்கள் ஆகியவை தற்போதும் உள்ளன.

1695–ல் கட்டப்பட்ட ஆளுநரது அலுவலகத்தை ஒட்டி பக்கவாட்டில் பின்னர் படிப்படியாக கட்டடம் எழுப்பப்பட்டு அது இப்போதுள்ள தலைமைச் செயலகக் கட்டடமாக உருவெடுத்தது. பிரெஞ்சுக்காரர்கள் ஆக்கிரமிப்புக்கு முன்னர், மண்டபக் கட்டடத்தில் கருப்புப் படிகத்தாலான 32 கல் தூண்கள் இருந்தன. பிரெஞ்சுக்காரர்கள், ஆக்கிரமிப்பின்போது இவற்றினை எடுத்துச் சென்றுவிட்டனர். இக்கருப்புப் படிகக் கல் தூண்களில் 20 தூண்கள் மட்டும் மீண்டும் கொணரப்பட்டு 1910–ல் சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டபோது கட்டடத்தின் பகுதியாக அமைந்து அணி சேர்த்தன.

கோட்டைக்குள் கிழக்குப்புறம் உள்ள கோட்டை அருங்காட்சியகக் கட்டடம் 1790–ல் கட்டி முடிக்கப்பட்டது. முதலில் அங்கு மதராஸ் வங்கியின் அலுவலகம் இருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. வணிகர்கள் கூடி ஆலோசிக்கும் இடமும் அங்கே அமைந்திருந்தது. 1796–ல் இக்கட்டடத்தின் மேல், சென்னையின் முதல் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. 1841 வரை செயல்பட்ட அக்கலங்கரை விளக்கம் முதலில் எஸ்பிளனேட்டிற்கும், பிறகு உயர் நீதிமன்றக் கட்டடத்தில் அமைந்த உயர்ந்த கோபுரம் ஒன்றிற்கும் மாற்றப்பட்டது. கோட்டை



புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள அருங்காட்சியகத்தின் பழமையான தோற்றம்

அதிகாரிகளின் உணவகமாகப் பின்னர் செயல்பட்டு வந்த இக்கட்டடம், 1948–ல் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையின் மொத்த பரப்பளவு 107.50 ஏக்கர். தற்போது தலைமைச் செயலகம் செயல்படும் பிரதான கட்டடம் 1781 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பல ஆண்டுகளுக்கு ஆளுநரின் இல்லமாகவும், அரசு விழாக்கள் நடைபெறும் இடமாகவும் பயன்பட்டது.

தலைமைச் செயலகத் துறைகள் இட நெருக்கடியின்றிச் செயல்பட ஏதுவாக தரைத் தளம் மற்றும் பத்து தளங்கள் கொண்ட நாமக்கல் கவிஞர் மாளிகை, ரூ.132 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 14–8–1975 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தின் பத்தாவது தளத்தில் மாநாட்டுக் கூடம் அமைந்துள்ளது.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்படும் புதிய சட்டமன்ற வளாகத்தினையொட்டி தலைமைச் செயலகத் துறைகளுக்கான பல்லடுக்குக் கட்டடங்களும் அரசால் கட்டப்பட்டு வருகின்றன.

ORIGIN AND EVOLUTION OF THE TAMIL NADU LEGISLATURE

The present Tamil Nadu is the residuary part of the erstwhile Madras Presidency. The Presidency comprised of the present Tamil Nadu, some parts of the present States of Orissa, Kerala, Karnataka and Andhra Pradesh excluding the former native State of Nizam. Besides Madras Presidency, there were two other Presidencies, viz., Presidency of Bombay and Presidency of Calcutta. Each of the Presidencies was in charge of a Governor. To start with, the Presidencies were independent of each other, but the Regulating Act, 1773 termed the Governor of Bengal as Governor General of Bengal and made him the supreme head of all the Presidencies. At the same time, the legislative power in the Presidencies was also recognised. This was however, discontinued by the Charter Act of 1833 which concentrated all the legislative powers in the Governor-General-in-Council and deprived the local Governments viz., Presidencies, of their power of independent legislation. The Indian Councils Act of 1861 restored the legislative powers taken away by the Charter Act of 1833. The Legislature of the Madras Presidency was given the power to make laws for "peace and good Government". The Provincial Legislative Council was constituted by the addition to the Governor's Executive Council, of 4 to 8 ad hoc members of whom at least half were to be non-officials nominated by the Governor for a period of two years and the Advocate-General. The Provincial Legislative Council could not interfere with the laws passed by the Central Legislature. All Bills passed by the Provincial Councils required the assent of the Governor-General and even after that, they could be disallowed by the Queen to whom they had to be referred to.

The Government of India Act, 1909 enlarged the strength of the Legislative Council of the province from 20 to 50. The Legislative Council for the first time, had an indirect election resulting in non-official majority in the House for the first time.

The first conscious advance in the direction of Responsible Government was the reform of 1919 known as Montague - Chelmsford Reforms.

The Madras Legislative Council was set up in 1921 under the Government of India Act, 1919. The term of the Council was for a period of three years. It consisted of 132 Members of which 34 were nominated by the Governor and the rest were elected. It met for the first time on the 9th January 1921 at Fort St. George, Madras. The Council was inaugurated by the Duke of Connaught, a paternal uncle of the King of England, on the 12th January 1921 on the request made by the Governor Lord Willingdon. The Governor addressed the Council on the 14th February 1921. The Second and Third Councils, under this Act were constituted after the General Elections held in 1923 and 1926 respectively. The Fourth Legislative Council met for the first time on the 6th November 1930 after the General Elections held during the year and its life was extended

from time to time and it lasted till the provincial autonomy under the Government of India Act, 1935 came into operation.

The Government of India Act, 1935 marked the next stride in the evolution of Legislatures. The Act provided for an All India Federation and the constituent units of the Federation were to be the Governor's Province and Indian States. The Act established a bi-cameral Legislature in the Province of Madras as it was then called with a Legislative Assembly consisting of 215 Members and Legislative Council having 56 Members.

The First Legislative Assembly under this Act was constituted in July 1937 after general elections. The Legislature consisted of the Governor and the two Chambers called the Provincial Legislative Council and the Provincial Legislative Assembly. The Legislative Council was a permanent body not subject to dissolution, but, as nearly as one-third of the Members thereon retired every three years. It consisted of not less than 54 and not more than 56 members composed of 35 General Seats, 7 Mohameddan Seats, 1 European Seat, 3 Indian Christian Seats and not less than 8 and not more than 10 members nominated by the Governor. The Legislative Assembly consisting of 215 Members of which, 146 were elected from general seats of which 30 seats were reserved for Scheduled Castes. The number of seats to be filled by persons chosen to represent various electorates are, 1 for Backward Areas and Tribes, 28 for Mohameddans, 2 for Anglo-Indians, 3 for Europeans, 8 for Indian Christians, 6 for Representatives of Commerce and Industry, etc., 6 for Landholders, 1 for University, 6 for representatives of Labour and 8 for Women of which 6 were general.

Although the Government of India Act was passed in 1935, the part relating to the Provinces came into operation only in 1937. The Congress Party in the Legislature formed the Government in July 1937. The Ministry, however, resigned in October 1939 due to the proclamation of emergency on account of World War II and the Legislature ceased to function. After the war was over, General elections were held in March 1946 under the Government of India Act, 1935. The First Session of the Second Legislative Assembly under the Government of India Act, 1935 constituted in 1946, met on the 24th May 1946.

Then came the Indian Independence Act, 1947, under which two independent Dominions known respectively as India and Pakistan were created and paramountcy of the British Crown lapsed and the power of British Parliament to legislate for India ceased. The Provincial Legislatures elected under the Government of India Act, 1935 were empowered to function as such, subject to certain adaptations and modifications until the Constitution came into force. The Constitution of India came into force with effect from the 26th January 1950 and the existing Legislatures were allowed to function as Provincial Legislatures.

The First Legislature of the erstwhile Madras State under the Constitution of India was constituted on 1st March 1952, after the first General Elections held in January 1952 on the basis of adult suffrage.

According to the Delimitation of Parliamentary and Assembly Constituencies

(Madras) Order, 1951 made by the President under sections 6 and 9 of the Representation of the People Act, 1950, the then Composite Madras Assembly consisted of 375 seats to be filled by election distributed in 309 Constituencies - 243 single member Constituencies, 62 double member Constituencies in each of which a seat had been reserved for Scheduled Castes and four-two member Constituencies in each of which a seat had been reserved for Scheduled Tribes. Three seats were uncontested. The elections were contested only in respect of remaining 372 seats and one Member was nominated by the Governor under Article 333 of the Constitution to represent Anglo-Indians.

On the 1st October 1953, a separate Andhra State consisting of the Telugu speaking areas of the Composite Madras State was formed and the Kannada speaking area of Bellary District was also merged with the then Mysore State with effect from the above date and as a consequence, the strength of the Assembly was reduced to 231. The States Reorganisation Act, 1956 came into effect from the 1st November 1956 and consequently the constituencies in the erstwhile Malabar Districts were merged with the Kerala State and as a consequence, the strength of the Assembly was further reduced to 190. The Tamil speaking area of Kerala (the present Kanniyakumari District) and Shencottah taluk were added to Madras State. Subsequently, according to the State Reorganisation Act, 1956, the strength of the Madras Legislative Assembly was raised to 205 distributed in 167 territorial constituencies, 37 two-member constituencies in each of which a seat had been reserved for Scheduled Castes and one two-member constituency in which a seat had been reserved for Scheduled Tribes.

The Second Legislative Assembly which was constituted on the 1st April 1957 after the General Elections, held in March 1957 consisted of 205 elected Members besides one nominated Member. During the term of the Assembly in 1959, as result of the adjustment of Boundaries between Andhra Pradesh and the Madras (Alteration of Boundaries) Act, 1959, one member from the Andhra Pradesh Legislative Assembly was allotted to Madras and consequently the strength of the Madras Assembly was increased to 206.

By the Two-Member Constituencies (Abolition) Act, 1961, the 38 double-member Constituencies were abolished and an equal number of single-member constituencies were reserved for Scheduled Castes and Scheduled Tribes. However, there was no change in the strength of territorial constituencies in Madras Assembly which had remained as 206.

The Third Assembly was constituted on the 3rd March 1962 after the General Elections held in February, 1962. The strength of the Assembly Continued to be 206. By the Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1965, the number of territorial constituencies in Madras was increased to 234, out of which forty two seats were reserved for Scheduled Castes and two seats for Scheduled Tribes besides one member nominated by the Governor from the Anglo-Indian Community under Article 333 of the Constitution of India.

The Fourth Assembly was constituted on the 1st March 1967 after the General Elections held in February, 1967. It consisted of 234 territorial Constituencies of which 42 had been reserved for the Scheduled Castes and 2 for Scheduled Tribes besides one nominated Member. During the term of this Assembly on the 18th July 1967, the House by a resolution unanimously adopted and recommended that steps be taken by the State Government to secure necessary amendment to the Constitution of India to change the name of Madras State as "Tamil Nadu". Accordingly, the Madras State (Alteration of Name) Act, 1968 (Central Act 53 of 1968) was passed by the Parliament and came into force on the 14th January 1969. Consequently, the nomenclature "Madras Legislative Assembly" was changed as "Tamil Nadu Legislative Assembly".

From 1967 onwards, the strength of the Assembly continued to remain as 234, besides a nominated member.

The Fifth Assembly was constituted on 15th March 1971 after the General Elections held in March 1971.

After the General Elections held in June 1977, the Sixth Assembly was constituted on the 30th June 1977.

The Seventh Assembly was constituted on the 9th June 1980 after the General Elections held in May 1980.

The Eighth Assembly was constituted on the 16th January 1985 after the General Elections held on the 24th December 1984.

Thereafter, Tamil Nadu Legislative Council (Abolition) Bill, 1986 was passed by both the Houses of Parliament and received the assent of the President on the 30th August 1986. The Act came into force on the 1st November 1986. The Tamil Nadu Legislative Council was thus abolished with effect from the 1st November 1986.

The bi-cameral legislature established in 1937 under the Government of India Act, 1935 has become a unicameral Legislature in Tamil Nadu from the 1st November 1986 onwards.

The Ninth Legislative Assembly was constituted on the 27th January 1989 after the General Elections held on the 21st January 1989.

The Tenth Legislative Assembly was constituted on the 24th June 1991 after the General Elections held on the 15th June 1991.

The Eleventh Legislative Assembly was constituted on the 13th May 1996 after the General Elections held on the 27th April 1996 and 2nd May 1996.

The Twelfth Legislative Assembly was constituted on the 14th May 2001 after the General Elections held on the 10th May 2001.

The Thirteenth Legislative Assembly was constituted on the 12th May 2006 after the General Elections held on the 8th May 2006. The meetings of the First to Twelfth sessions of the Thirteenth Assembly were held in the Legislative Assembly Chamber, Fort St. George, Secretariat, Chennai-600009 and the meetings of the Thirteenth session commencing from 19th March 2010 will be held in the Assembly Chamber, New Legislative Assembly—Secretariat Complex, Omanthoorar Government Estate, Chennai-600002.

வரலாற்றுப் பாதையில் தமிழ்நாடு சட்டமன்றம்

இந்திய அரசமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பின்பு சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் ஆகியவை ஜனநாயகத்தின் முக்கிய தூண்களாகக் கருதப்பட்டு தனித்தனியே அவை முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றில் சட்டமன்றம், மக்களது அன்றாட வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை நேரடியாகத் தொடக்கூடிய சட்டமியற்றும் மிக முக்கியமான பணியைச் செய்கிறது. மன்னர் காலங்களில் சட்டமியற்ற தனி அமைப்பு என்றில்லாமல் சட்டமியற்றல், நிருவாகம் மற்றும் நீதி வழங்கல் ஆகிய மூன்று பணிகளுமே பொதுவாக மன்னரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தொடக்கத்தில் தமிழ்நாட்டில் ஒழுங்குமுறைகள் இயற்றும் அதிகாரம் 1799–ல் தொடங்கப்பட்ட ஆளுநரின் நிருவாகச் சபையோடு இணைந்திருந்தாலும், சட்டமன்றம் என்ற அமைப்பு பிற்காலத்திலேயே தோன்றியது.

1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

இச்சட்டம் சட்டமன்றங்களின் தொடக்கத்திற்கு வித்திட்டது எனலாம். ஏனெனில், இதன்மூலம் முதன்முறையாக கவர்னர்–ஜெனரலின் நிருவாகச் சபையில் சட்டமியற்றுவதற்கென்றே நான்காவதாக சட்ட அறிஞர் என்ற ஓர் உறுப்பினர் நியமிக்கப்பெற வழி பிறந்தது. எனினும் அவருக்கு வாக்களிக்கும் அதிகாரம் தரப்படவில்லை.

அப்போது பெண்டிங் பிரபு கவர்னர்–ஜெனரலாக இருந்தார். இந்தியாவில் ஆங்கிலேயக் கல்வி முறையை அறிமுகப்படுத்திய மெகாலே பிரபு, நிருவாகச் சபைக்கு நான்காவது உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். பிரதிநிதித்துவ அமைப்பு இந்தியாவிற்கு வேண்டுமெனவும், ஒரு சிறந்த அரசமைப்புச் சட்டம் வேண்டுமெனவும் மெகாலே விரும்பினார். மாகாணங்களில் கவர்னரின் நிருவாகச் சபையிடமிருந்த சட்டமியற்றும் அதிகாரத்தை இச்சட்டம் பறித்தது. அவ்வதிகாரம் அனைத்தும் கவர்னர்–ஜெனரலின் நிருவாகச் சபைக்கு வழங்கப்பட்டது. நிருவாகச் சபையின் நடவடிக்கைக் குறிப்புகளைப் பொதுமக்களும் அறிய வேண்டும் என்ற கருத்து மேலோங்கி, சபை நிகழ்ச்சிகளைத் தொகுத்து அரசிதழில் வெளியிட வழிவகை செய்யப்பட்டது.

1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

இதன்படி வங்காள உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதி, சென்னை, பம்பாய், உத்தரப்பிரதேசம், வடமேற்கு மாகாணங்கள் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு பிரதிநிதி உட்பட பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்டதாக கவர்னர்–ஜெனரல் சபை அமைக்கப்பட்டது. சென்னை மாகாணத்திலிருந்து எலியட் என்பவர் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். சட்ட உறுப்பினர், சட்டமியற்றும் கூட்டங்களில் மட்டுமல்லாது, இதர கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் முழு உறுப்பினர் என்ற உரிமையைப் பெற, மெகாலே பிரபு வழிவகுத்தார். சட்டமன்றச் சிறப்புரிமைகளுக்கு வித்திட்டவரும் அவரே. 1853 ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் அமைந்த மன்ற நடவடிக்கைகளைக் காண, பொதுமக்கள் அனுமதிக்கப் பெற்றனர்.

1857 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி பிரகடனத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தின் கீழிருந்த இந்திய நாட்டின் பகுதிகள் இங்கிலாந்து மகாராணியின் நேரடி ஆட்சியின்கீழ் வந்தன. கம்பெனியின் பொறுப்புகளை இங்கிலாந்து பாராளுமன்றம் எடுத்துக் கொண்டது. இந்திய விவகாரங்களுக்கென அரசுச் செயலாளரும் அமர்த்தப் பெற்றார். அப்போது பொறுப்பிலிருந்த கவர்னர்–ஜெனரலான கானிங் பிரபு, வைசராய் என அழைக்கப் பெறலானார்.

இதற்கு அடுத்த ஆண்டுகளில் தன் உரிமைகளை நிலைநாட்ட விரும்பிய கவுன்சிலுக்கும், கவர்னர்–ஜெனரலுக்கும் இடையே மோதல்கள் ஏற்படத் தொடங்கின. சபை உறுப்பினர்களின் அதிகாரங்களையும், உரிமைகளையும் நிலைநாட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரசு, இம்மன்றத்திற்குச் சட்டமியற்றும் பணி தவிர, பிற விவகாரங்களில் தலையிட வழிவகையில்லை என்ற நிலையையே கடைப்பிடித்தது. எனினும், பின்னர் சில பொருள்களுக்கு வரிவிதிப்பு தொடர்பாக சென்னை மாகாண ஆளுநராக இருந்த சர். சார்லஸ் டிரெவெல்யன் என்பவருக்கும், இந்திய அரசுக்கும் எழுந்த பிணக்கே, 1861 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்திற்கு வழிகோலியது எனக் கருதுவாருமுண்டு.

1861 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம்

சட்டமன்றங்களின் வளர்ச்சியில் இச்சட்டம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. முன்னர் மாகாண ஆளுநரின் நிருவாகச் சபையிடமிருந்து பறிக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்கள், மீண்டும் அச்சபையிடம் அளிக்கப்பட்டன. சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் மட்டும் இயற்ற, தலைமை வழக்கறிஞர் மற்றும் நான்கு முதல் எட்டு வரையிலான கூடுதல் உறுப்பினர்களையும், ஆளுநர், தனது நிருவாகச் சபையில் சேர்த்துக்கொள்ள இச்சட்டம் வழிவகை செய்தது. இவர்களில் குறைந்தது பாதி பேருக்கு மேல் அதிகாரிகளாக இருக்கவேண்டும். இதன் உறுப்பினர்கள் இரண்டாண்டுக் காலம் பதவி வகிப்பர் என்றும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை இயற்ற நடைபெறும் கூட்டங்களில் மட்டுமே அவர்கள் கலந்துகொண்டு வாக்களிக்க முடியும் என்றும் இச்சட்டம் வரையறுத்தது. சட்டமியற்றும் பணியின்போது, அரசுக்குச் சில ஆலோசனைகளைக் கூறும் அளவுக்கு மட்டுமே இந்த நிருவாகச் சபை இருந்தது என்றாலும், பெரும்பாலான யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், இந்த மன்றத்திற்கு மதிப்பு வளர்ந்தது. எனினும், நிருவாகப் பொருட்கள் பற்றி விவாதிக்க, இந்தச் சபைக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந்தச் சபையின் நடவடிக்கைகளை முறைசெய்வதற்கான விதிகள் 1862–ல் இயற்றப்பெற்றன. அவையின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிடவும், சுருக்க நிகழ்ச்சிகளை அரசிதழில் வெளியிடவும் வழிவகை செய்யப்பட்டது. மாகாணச் சட்டங்களுக்கு கவர்னர்–ஜெனரலின் ஒப்புதல் அவசியம் ஆனது.

இதன்படி, முதன்முதலில் சபைக்கு நியமிக்கப்பட்ட இந்திய உறுப்பினர் திரு. வி. சடகோப்பாச்சார்லு ஆவார். அவர் மறைவிற்குப் பிறகு திரு. கே. இலட்சுமிநரசு செட்டி என்ற இந்தியர் நியமனம் செய்யப்பெற்றார். அவர் 1844–லிருந்தே சுதேசி மக்களின் எண்ணங்களை வெளியிடும் 'கிரசன்ட்' என்ற பத்திரிகையை நடத்தியவராவார்.

இச்சட்டத்தின்கீழ் அமைந்த மன்றத்திற்கு Madras Legislative Council என்று பெயரிடப்பட வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இது 'புனித ஜார்ஜ் கோட்டை ஆளுநரின் கவுன்சில்' என்றே அழைக்கப்படும் என இந்திய அரசு முடிவெடுத்தது. இந்த அவையில் திரு. சி. சங்கரன் நாயர், திரு. வெங்கடகிரி ராஜா, திரு. வி. பாஷ்யம் அய்யங்கார் போன்றோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பெற்றனர்.

1892 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம்

1885 ஆம் ஆண்டு முதலாகவே, தமது நாட்டின் நிருவாகத்தில் இந்திய மக்களுக்குப் பங்களிக்க வேண்டுமென்றும், சட்டமியற்றும் சபையில் அவர்களுக்கு சார்பாண்மைக் கொள்கைப்படி (Principle of Representation) தேர்தல்கள் நடத்தி, இடங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் வலுக்கத் தொடங்கின. இங்கிலாந்து காமன்ஸ் சபை உறுப்பினரான திரு. பிராட்லா இதற்கு உறுதுணையாகச் செயல்பட்டார்.

இதை அடுத்து, 1892 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி சட்டமியற்றும் மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்பட்டது. அதில் அரசு அதிகாரிகள் 9 பேர் அளவுக்கு இடம்பெறவும், அரசு சார்பற்றவர்கள் மீதமுள்ள இடங்களுக்குப் பொறுப்பு ஏற்கவும் இச்சட்டம் வகை செய்தது. இந்தச் சட்டம், முந்தைய சட்டத்தைவிட மேம்பட்டதாயிருந்தது. ஏனெனில், சார்பாண்மைக் கொள்கையை மறைமுகமாகப் புகுத்தியதோடு, சட்டமியற்றல் மட்டுமல்லாது, அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவாதிக்கவும், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, பொதுப் பிரச்சினைகளைப்பற்றி வினாக்கள் எழுப்பி அரசிடம் பதில் பெறவும் இது வழிகோலியது. இதன்படி அமைந்த மன்றத்தின் முதல் கூட்டம், 17–1–1893 அன்று மாலை 3–00 மணிக்கு புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் சட்டமன்றத்தின் முதலாவது வினாவை திரு. வி. பாஷ்யம் அய்யங்கார் என்னும் உறுப்பினரின் சார்பில் திரு. சி. சங்கரன் நாயர் எழுப்பினார். இந்த மன்றம் முதன்முதலாக 1893–94 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 2–5–1893 அன்று விவாதித்தது. விவாதத்தில் இரண்டு உறுப்பினர்கள் பங்குகொண்டனர். வாக்களிக்கும் உரிமை அப்போது இல்லை.

இச்சட்டம் அமலில் இருந்த காலத்தில் திருவாளர்கள் வி. பாஷ்யம் அய்யங்கார், சி. சங்கரன் நாயர், ஏ.டி. அருண்டேல், சி. ஜம்புலிங்க முதலியார், சி. விஜயராகவாச்சாரியார், ஐ. இரத்தினசபாபதிப் பிள்ளை, பி.எஸ். சிவசாமி அய்யர், பொப்பிலி ராஜா, முகமது உசேன் அலிகான் பகதூர் ஆகிய அறிஞர்கள் அரசு சார்பற்ற உறுப்பினர்களாக இடம்பெற்று மன்ற விவாதங்களுக்குச் சுவை கூட்டினர்.

1909 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இந்திய மக்களுக்குப் பொறுப்பாட்சியில் அதிக பங்கு வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்த கோரிக்கையின் விளைவாக, மின்டோ–மார்லி சீர்திருத்தங்களின் அடிப்படையில் இச்சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபதிலிருந்து அதிகபட்சம் ஐம்பதாக உயர்த்தப்பட்டது. ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்கள் நான்கு பேரைத் தவிர, இருந்த 42 உறுப்பினர்களில் 21 பேர் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள். மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், நிலச்சுவான்தார்கள், தோட்ட முதலாளிகள், வணிக நிறுவனங்கள், சென்னைப் பல்கலைக்கழகம் உள்ளிட்டோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. நியமனம் செய்யப்பெறும் 21 உறுப்பினர்களில், 16 உறுப்பினர்கள் அலுவலர்களாவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டுக் காலம் பதவி வகித்தனர். 1910, 1913, 1916, 1919 ஆகிய ஆண்டுகளில் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களே அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றனர். மக்களே அனைத்து உறுப்பினர்களையும் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களாக இவை அமையாவிட்டாலும், குறுகிய அளவில் மறைமுகத் தேர்தல்களை இச்சட்டம் அமலாக்கியது. பின்னாளில் அமைந்த மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமன்றத்திற்கு இது அடித்தளமாக அமைந்தது.

இச்சட்டத்தின்கீழ் வரவு–செலவுத் திட்டத்தை ஆய்ந்து, வரைவை முடிவு செய்ய நிதிக் குழு அமைக்கப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் உள்ள வரிகள் குறித்து தீர்மானங்கள் கொண்டு வரும் அதிகாரமும், பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் குறித்து தீர்மானங்கள் கொண்டுவரும் அதிகாரமும், துணை வினாக்கள் கேட்கும் உரிமையும், இச்சட்டத்தின்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறு நிதிநிலை அறிக்கை தொடர்பாக முதலாவது தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் திரு. கேசவப் பிள்ளை ஆவார். அதேபோன்று நீர்ப் பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகையினை அதிகரிக்கவும், மற்றொரு கட்டுமானப் பணிக்கான செலவைக் குறைக்கவும், ஆளுநருக்குப் பரிந்துரை செய்யவும் திரு. கே. சிதம்பர முதலியார் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இச்சட்டத்தின்கீழ், முதன்முறையாக, ஆளுநரின் நிருவாகச் சபையில் இந்தியர் ஒருவருக்கு இடம் அளிக்கப்பட்டது. பொப்பிலி ராஜா சர். வி.எஸ். ரெங்கா ராவ், முதலில் இவ்வாறு உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். பின்னர் அவர் இராஜிநாமா செய்தபோது, திரு. எம்.வி. கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் நியமிக்கப்பெற்றார். உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதால், சட்டமன்ற மண்டபம் புதியதாக 1910–ல் கட்டப்பட்டது. 1746–ல் பிரெஞ்சுக்காரர்களால் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்ட கருப்புப் படிகத்தாலான 32 தூண்கள், 1761–ல் மீண்டும் சென்னைக்கு எடுத்து வரப்பட்டன. 1910–ல் சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டபோது இவற்றில் 20 தூண்கள் கட்டடத்தில் நிறுவப்பட்டு, இப்போதும் அவை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இந்திய மக்களுக்கு ஒரு பொறுப்பான ஆட்சி அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும், ஆட்சியில் இந்தியர்களுக்கு அதிக அளவு பங்கு இருக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும், இச்சட்டம் நிறைவேற்றப்படக் காரணமாயிருந்தன. மான்டேகு–செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் இச்சட்டம் இயற்றப்பட்டது. வரி அல்லது தீர்வை செலுத்துவோருக்கு மட்டும் வாக்குரிமை இருந்தது என்றாலும், இந்தியாவில் முதன்முதலில் பெருமளவில் தேர்தல்கள் நடைபெற இச்சட்டம் வகை செய்தது. சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் மிக அதிக அளவில் இடம்பெற்றனர். அதிகாரிகளின் மேலாதிக்கம் குறைந்து, மக்கள் பிரதிநிதிகளின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. அதுவரை ஆளுநரின் நிருவாகச் சபையின் நிழலாக இருந்த சட்டமன்றம், தனித்து இயங்கும் ஓர் அமைப்பாக மாறியது. இம்மன்றமே தனித்தியங்கும் சட்டமன்றத்தின் தொடக்கம் எனக் கருதப்படுகிறது.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, Madras Legislative Council என்றழைக்கப்பெற்ற இச்சட்டமன்றம், 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 98 பேர். ஆளுநரால் நியமிக்கப்பெறும் 29 பேரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், அதிகாரிகளும் அடங்குவர். 4 பேர் ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்கள். இந்த நால்வரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தும், அவர்கள்மீது சட்டமன்றம்

ஆளுமை செலுத்த இயலாது. இச்சட்டத்தினால் மத்தியில் மாகாணங்களவை, சட்டமன்றப் பேரவை என்று இரு தட்டு அமைப்பு அமைந்தது. மேலும், இச்சட்டம் சட்டமன்றங்களில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியது. மாகாணம் சம்பந்தப்பட்ட பொருள்களில் காவல், பாசனம், நில வருவாய், வறட்சி நிவாரணம், கடன்கள், தொழிற்சாலைகள் போன்ற முக்கிய துறைகள், ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டன. இவை ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) எனவும், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையின் அதிகாரத்திற்குட்பட்ட பொருட்கள் (உதாரணம்: கலால், உள்ளாட்சி, பொதுச் சுகாதாரம், பொதுப் பணிகள், வேளாண்மை மற்றும் மீனளம்), மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) எனவும் அழைக்கப்பெற்றன.

ஆளுநரால் முன்கூட்டியே கலைக்கப்பட்டாலன்றி, பொதுவாக இச்சட்டமன்றத்தின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. சிறப்பு நேர்வுகளில் பதவிக் காலத்தை மேலும் ஒராண்டுக்கு நீட்டிக்க இச்சட்டம் வழிவகை செய்தது. பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் குறித்து விவாதிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கான உரிமை, முதன்முதலாக இச்சட்டமன்றத்தில் வழங்கப்பட்டது. எனினும், இது ஆளுநரின் ஒப்புதலுக்கு உட்பட்டது. வரவு–செலவுத் திட்டத்தின்மீது வாக்கெடுப்பு நடத்தவும் வழிவகை ஏற்பட்டது. மானியக் கோரிக்கைகளின் தொகையைக் கூட்டவோ, குறைக்கவோ அதிகாரம் இருந்தாலும், எல்லாவற்றுக்கும் ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டங்களைப் பொறுத்தவரையில் மாற்றப்பட்ட துறைகள் குறித்து இம்மன்றம் சட்டம் இயற்றினாலும், ஆளுநர் அதை நிராகரிக்கும் உரிமை பெற்றிருந்தார். ஒதுக்கப்பட்ட துறைகள் தொடர்பாக மன்றம் நிராகரித்த சட்டங்களைத் தேவையெனக் கருதினால், இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு ஒப்புதலுக்கு அனுப்பலாம். சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தை நிறுத்திவைக்கவும் ஆளுநர் உரிமை பெற்றிருந்தார்.

ஆளுநரே சட்டமன்றத்தின் கூட்டங்களை நடத்தாமல், அதற்கென தலைவர் நான்காண்டுகளுக்கு நியமிக்கப்படவும், பின்னர் தலைவர் தேர்ந்தெடுக்கப் படவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. அவ்வகையில், 1921 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் நாள் சர் பி. இராஜகோபால ஆச்சாரியார் முதலாம் சட்டமன்றத் தலைவராக ஆளுநரால் நியமிக்கப்பெற்றார். திவான் பகதூர் பி. கேசவப் பிள்ளை அவர்கள், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்நாளில் செயலாளராக இருந்த திரு. எல்.டி. சுவாமிகண்ணுப் பிள்ளை அவர்கள், 1924–ல் தலைவராக நியமிக்கப் பெற்று, 1925–ல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆளுநர் சட்டமன்றக் கூட்டங்களைக் கூட்டி, இறுதி செய்தார். அவ்வப்போது அவையில் உரையாற்றவும் உரிமை பெற்றிருந்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளைக் கொண்டு தனித் தன்மையுடன் செயல்பட்ட இச்சட்டமன்றம், 12–1–1921 அன்று கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. அப்போது விலிங்டன் பிரபு சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தார். ஆளுநரும், அவரது துணைவியாரும் சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த சட்டமன்றத் தலைவரின் இருக்கையை 6–3–1922 அன்று பரிசாக அளித்தனர். எட்டு அடி உயரம் கொண்ட இந்தப் பீடுமிகு இருக்கை, சிறந்த தேக்கு மரத்தால் ஆனது. கலை நுணுக்கம் மிக்க இந்த இருக்கையில் தலைவர் சில இரகசியமான தாள்களை வைத்துக்கொள்ளவும், தேவைப்படின் எழுதவும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இந்த இருக்கையே புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றத்தில் பேரவைத் தலைவரின் இருக்கையாக அமைந்துள்ளது.

இந்தியாவில் கட்சி ஆட்சி முறை நடைமுறைக்கு வர, 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் வழிவகை செய்தது. இச்சட்டத்தின்படி, முதல் தேர்தல் 30–11–1920, 1–12–1920, 2–12–1920 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை. 98 இடங்களில் 63 இடங்களை வென்று, நீதிக் கட்சி பெரும்பான்மை பெற்றது.

நீதிக் கட்சியின் தலைவர் சர் பிட்டி. தியாகராய செட்டியார், முதலமைச்சர் (Premier) பொறுப்பை ஏற்க மறுத்தார். எனினும், அவர் பரிந்துரையின் பேரில் 17–12–1920 அன்று மாநிலத்தின் முதலாவது முதலமைச்சராக திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் பனகல் ராஜா அவர்களும், திரு. கே.வி. ரெட்டி நாயுடு அவர்களும் பங்கேற்றனர். இக்காலக்கட்டத்தில், திரு. பி.டி. இராசன் அவர்கள், அவை நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் கலந்துகொள்வதில் பேரார்வம் காட்டி, கொறடா போலச் செயல்பட்டார். பின்னர் 1936–ல்

சில காலம் தற்காலிக முதலமைச்சராகவும் இவர் விளங்கியுள்ளார். 1921–ல் முதன்முதலாக அவை முன்னவர் பதவி தோற்றுவிக்கப்பட்டு, திரு. எல். டேவிட்சன் என்பவர் பொறுப்பேற்றார். திரு. எம். இராமச்சந்திரராவ் தேசிகாச்சாரி என்பவர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்டார்.

முதல் சட்டமன்றத்தின் காலம் முடிவடைந்தபின், 1923, 1926 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 1921–ல் நடந்த தேர்தலில் பெண்களுக்கு வாக்களிக்கத் தடையிருந்தது. சட்டத்தின் அப்பிரிவை நீக்கி, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அரசால் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம், 1–4–1921 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும், 1923–ல்தான் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர், 1926–ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, தேர்தலில் நிற்கவும், நியமிக்கப்படவும் பெண்கள் உரிமை பெற்றனர். அதனையொட்டி, 1926–ல் நடந்த தேர்தலுக்குப்பின் அமைந்த சட்டமன்றத்திற்கு, நியமிக்கப்பெற்ற முதல் பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார். அவரே சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து தேர்ச்சி பெற்ற முதல் பெண் மருத்துவரும் ஆவார். பின்னாளில் சட்டமன்றத் துணைத் தலைவராகவும் அவர் செயல்பட்டார். 1930–ல் அமைந்த சட்டமன்றத்தின் பதவிக் காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு 1936 இறுதி வரையில் நீடித்தது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இச்சட்டம், சட்டமன்ற வரலாற்றில் மற்றொரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது. 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று இச்சட்டம் அமலுக்கு வந்தது. சென்னை உட்பட சில மாகாணங்களில் ஈரவைகள் கொண்ட சட்டமன்றங்களை (Bicameral Legislatures) இச்சட்டம் அறிமுகப்படுத்தியது. இவை சட்டமன்றப் பேரவை (Legislative Assembly) எனவும், சட்டமன்ற மேலவை (Legislative Council) எனவும் அழைக்கப் பெற்றன.


இச்சட்டத்தின்படி, மாகாணத் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டபோது, மாகாணச் சட்ட மன்றங்களுக்கு முன்பிருந்ததைவிட அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. மத்திய அரசுக்கும், மாகாணங்களுக்கும் இடையே அதிகாரங்கள் பிரிக்கப்பட்டன. மத்தியப் பட்டியல் (Federal List), மாகாணப் பட்டியல் (Provincial List), பொதுப் பட்டியல் (Concurrent List) என்று துறைகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டன. மாகாணப் பட்டியலில் வரும் பொருள்கள் குறித்தும், பொதுப் பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்தும் மாகாணச் சட்டமன்றங்கள் சட்டம் இயற்றலாம். எனினும், பொதுப் பட்டியலில் உள்ள பொருள் குறித்து மாகாணச் சட்டமன்றம் சட்டம் இயற்றினாலும், அதே பொருள் குறித்து மத்தியச் சட்டமன்றம் சட்டம் இயற்றினால், அச்சட்டமே மேலாண்மை பெறும். இந்திய அரசுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின்படி உறுப்பினர்களுக்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டன. சட்டமன்றத்தில் பேச்சுச் சுதந்திரமும், சட்டமன்றத்தில் ஆற்றும் உரைகளுக்குச் சட்ட நடவடிக்கைகளிலிருந்து காப்புரிமையும் அளிக்கப்பட்டன.

சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டமுன்வடிவிற்கு அனுமதி மறுக்கவும் கவர்னர்–ஜெனரல் பார்வைக்கு அனுப்பவும் அல்லது மீண்டும் சில திருத்தங்களைச் செய்வதற்காக சட்டமன்றத்தின் மறு ஆய்வுக்கு அனுப்பவும் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பெற்றது. இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு எதிராகவோ, கவர்னர்–ஜெனரல் மூலம் நிறைவேற்றப்பெற்ற சட்டத்திற்கு அல்லது அவரது விருப்புரிமைக்கு மாறாகவோ, ஐரோப்பியர்கள் தொடர்பான குற்றவியல் நடைமுறைக்குச் சம்பந்தப்பட்டதாகவோ உள்ள சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு முன்னர், கவர்னர்–ஜெனரலின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். அதேபோல, சில வகையான சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு ஆளுநரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மாகாணத்தில் பொது அமைதியை நிலைநாட்டும் தனது சிறப்புப் பொறுப்புக்கு ஒரு சட்டமுன்வடிவு குந்தகம் விளைவிக்கும் என ஆளுநர் கருதினால், அச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ, அது தொடர்பான நடவடிக்கைகளை ஆளுநர் நிறுத்தி வைக்கலாம். மிக அவசர நேர்வுகளில் சட்டமன்றம் கூடாத காலங்களில் அவசரச் சட்டத்தை வெளியிடலாம். சற்று அவசரம் பொருந்திய நேர்வுகளில் ஆளுநரின் சட்டம் என வெளியிட்டு, அதன் காரண காரியங்களை விளக்கி சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம். சட்டமன்றம் அனுமதி மறுத்தாலும் தனது சிறப்புப் பொறுப்புக்குத் தேவையெனக் கருதக்கூடிய நேர்வுகளில் கோரப்பட்ட மானியத் தொகைகளுக்கு ஆளுநர் மானியம் வழங்கலாம். அது வாக்களித்து வழங்கப்பட்டதாகக் கருதப்பெறும்.

பிரிவு 93–ன்கீழ், அவசர காலங்களில் அரசியல் சட்டத்தின் செயல்பாட்டை நிறுத்திவைத்து,

நிருவாகத்தையும், சட்டமியற்றும் பணியையும் மேற்கொள்ள ஆளுநருக்கு உரிமை வழங்கப்பட்டது.

பொதுவாக, இங்கிலாந்து மன்னரின் சார்பாகச் செயல்படும் ஆளுநரின் பெயரில் அனைத்து அரசாணைகளும் வெளியிடப்பட்டன. முன்பிருந்ததைப் போலல்லாமல், அனைத்துத் துறைகளும் அமைச்சர்களின் பொறுப்பில் இருந்தன. சில முக்கிய விஷயங்களில் ஆளுநர் தனது தனித்த கருத்துப்படி முடிவெடுக்கலாம். அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில் ஆளுநர் செயல்பட்டாலும், அமைச்சரவையின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆளுநர் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்றார். அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரமும், சட்டமியற்றும் பணியில் மேல் ஆதிக்கமும் ஆளுநரிடமிருந்தன. ஆளுநர் முடிவுக்குட்பட்ட சாட்டப்பட்ட செலவுகள் (Charged Expenditure) அரசின் வரவு–செலவில் 40 விழுக்காடு வரை அமைந்தன. பேரவையின் காலம் ஐந்தாண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டாலும், அதற்குமுன் பேரவையைக் கலைக்கவும் ஐந்தாண்டுகளுக்கு மேல் நீட்டிக்கவும் சட்டத்தில் இடமளிக்கப்பட்டது.



14-7-1937 அன்று பேரவை தற்காலிகத் தலைவர் திரு. வில்லியம் ரைட் உரையாற்றுதல்

இச்சட்டத்தின்கீழ், சட்டமன்றப் பேரவைக்கு 215 இடங்களும், மேலவைக்கு 56–க்கு மிகாத இடங்களும் அனுமதிக்கப்பெற்றிருந்தன. மேலவைக்கு 10 பேருக்கு மிகாமல் ஆளுநர் நியமிக்கலாம்.

வரி செலுத்துதல், சொத்துக்கள் வைத்திருத்தல், குறிப்பிட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல், இராணுவப் பணியில் ஈடுபட்ட அனுபவம் என பல்வேறு தகுதிகள் வாக்காளருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததால், பேரவைக்கான தேர்தலில் வாக்களிப்பதற்கான தகுதிகள் மாகாணத்திற்கு மாகாணம் வேறுபட்டன. கல்வியறிவுள்ள பெண்கள் வாக்களிக்க வகை செய்யப்பட்டிருந்தது. பொதுத் தொகுதிகளுடன் தாழ்த்தப்பட்டவர்கள், இஸ்லாமியர்கள், ஆங்கிலோ–இந்தியர்கள், ஐரோப்பியர்கள், இந்தியக் கிறித்தவர்கள் ஆகியோருக்கென சிறப்புத் தொகுதிகள் இடம் பெற்றிருந்தன. இவை தவிர, வணிகர்கள், நிலச்சுவான்தார்கள், பல்கலைக்கழகங்கள், தொழிலாளர்கள் மற்றும் பெண்களுக்கான பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டிருந்தது. வரிவிதிப்பு, கடன் பெறுதல் அல்லது மாகாணத்திற்கு நிதிச் செலவை ஏற்படுத்தும் சட்டமுன்வடிவுகள் பேரவையில் மட்டுமே அறிமுகம் செய்யப்பட வேண்டுமெனவும், மற்ற சட்டமுன்வடிவுகள் மேலவையிலும் அறிமுகம் செய்யப்படலாமெனவும் இச்சட்டத்தின்மூலம் வரையறுக்கப்பட்டது. ஆளுநரின் பரிந்துரையின்பேரில் நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டது.

இச்சட்டத்தின்படி, பேரவைக்கு நடந்த முதல் தேர்தலில் மொத்தம் 215 இடங்களில் காங்கிரஸ் கட்சி 159 இடங்களைப் பெற்று பெரும்பான்மை பெற்றது. காங்கிரஸ் அமைச்சரவை அமைவதற்கு முன்னர், திரு. கே.வி. ரெட்டி நாயுடு அவர்கள் தலைமையில், 1–4–1937 அன்று இடைக்கால அமைச்சரவை அமைந்தது. பின்னர், 14–7–1937 அன்று திரு. சி. இராஜாஜி அவர்கள் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தது. இதனைத் தொடர்ந்து சட்டமன்றப் பேரவை சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட் மண்டபத்தில் காலை 11–00 மணிக்கு முதன்முதலில் கூடியது. சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்ட அம்மண்டபத்தில், வில்லியம் ரைட் என்பவர் தற்காலிகப் பேரவைத் தலைவராக இருந்து உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர், திரு. புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பின்னர், திருமதி ருக்மணி லட்சுமிபதி அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

சட்டமன்ற மேலவை என்பது கலைக்கப்படாத ஒரு நிரந்தர அமைப்பாக விளங்கியது. உறுப்பினர்களின் பதவிக் காலம் 9 ஆண்டுகள் எனவும், ஒவ்வொரு மூன்றாண்டு முடிவிலும் மூன்றில் ஒரு பங்கு

உறுப்பினர்கள் பதவி விலகுவர் எனவும் இச்சட்டம் வழிவகை செய்தது. அக்காலக்கட்டத்தில் மேலவைக்கு நடந்த தேர்தலுக்குப் பிறகு, 55 உறுப்பினர்கள் மன்றத்தில் இடம்பெற்றனர். மேலவை உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க சர் முகமது உஸ்மான் நியமிக்கப்பெற்றார். 14–7–1937 அன்று கோட்டையில் மேலவை கூடி, உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்தனர். மறுநாள், தலைவராக டாக்டர் யு. ராமா ராவ் அவர்களும், துணைத் தலைவராக திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். செனட் மண்டபத்தில் பேரவை கூடிய காலத்தில், கோட்டையில் உள்ள சட்டமன்ற மண்டபத்திலேயே மேலவை கூடியது. சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையின் கூட்டுக் கூட்டத்தில் 31–8–1937 அன்று ஆளுநர் உரையாற்றினார். 27–1–1938 முதல் 26–10–1939 வரை பேரவைக் கூட்டம் சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள, தற்போது இராஜாஜி மண்டபம் எனப்படும், விருந்தளிக்கும் மண்டபத்தில் (Banquetting Hall) நடைபெற்றது.

1939–ல் இரண்டாவது உலகப் போர் தொடங்கியபோது, போரில் இந்தியாவை ஈடுபடுத்துவது தொடர்பாக பிரிட்டிஷ் அரசின் கொள்கையை எதிர்த்து காங்கிரஸ் அமைச்சரவை 29–10–1939 அன்று இராஜிநாமா செய்தது. 30–10–1939 முதல் 30–4–1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. இடையில் 1–10–1945 அன்று சட்டமன்றப் பேரவை ஆளுநரால் கலைக்கப்பட்டது.

போர்க் காலத்தில் மேலவைக் கூட்டம் நடைபெறாவிட்டாலும், மேலவை என்ற அமைப்பு இருந்து வந்தது. மீண்டும் இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்று, திரு. டி. பிரகாசம் அவர்கள் தலைமையில், 30–4–1946 அன்று காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது. 25–5–1946 அன்று திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நாளன்று மேலவையில் திரு. ஆர்.பி. இராமகிருஷ்ண ராஜூ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, 1950ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். அரசமைப்பு அவைக்கு (Constituent Assembly) சென்னை மாகாண உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 22–7–1946–ல் தேர்தல் நடைபெற்றது. பொதுப் பிரிவில் 45 உறுப்பினர்களும், முகமதியர்கள் நால்வரும் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையில், முகமதியர்கள் நால்வர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுப் பிரிவின்கீழ் போட்டியிட்ட 53 பேரில், 45 பேர் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டம்

1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி 15 ஆகஸ்ட் 1947 முதல் இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆளுநர்கள், அரசமைப்பின்படி மாநிலத்தின் தலைவர்களானார்கள். ஆளுநரிடமிருந்த சட்டமியற்றும் அதிகாரம் நீக்கப்பட்டது. சட்டமன்றம் கூடாத நாட்களில் மட்டும் அவசரச் சட்டம் இயற்றலாம். மத்தியிலிருந்த ஃபெடரல் சட்டமன்றத்தின் பொறுப்புகளை அரசமைப்பு அவை ஏற்றுக்கொண்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தை வடித்தளித்தது. 26–1–1950–ல் அமலுக்கு வந்த அரசமைப்புச் சட்டம், நாட்டின் பாதுகாப்பு, நிதித் தன்னிறைவு, பொது அமைதி ஆகியவற்றுக்குட்பட்டு, தன்னாட்சி உரிமை கொண்ட மாநிலங்களும், இறையாண்மை பெற்ற சட்டமன்றங்களும் உருவாக வழிகோலியது. இச்சட்டம் அமலுக்கு வந்தபோது இருந்த சட்டமன்றப் பேரவை 1952 வரை நீடித்தது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சட்டமன்றம்

அரசமைப்புச் சட்டத்தின்படி, 1952 முதல் பேரவை, மேலவை என இரு அவைகளைக் கொண்டதாக சட்டமன்றம் அமைந்தது. முன்கூட்டி கலைக்கப் பட்டாலன்றி, பேரவையின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களில் ஆங்கிலோ–இந்தியர் எவரும் இல்லையெனில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 333–இன்படி ஆங்கிலோ–இந்தியர் ஒருவரை ஆளுநர் நியமிப்பார். நிரந்தர அமைப்பான மேலவையின் உறுப்பினர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகள் எனவும், மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர், ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்கும் பதவி விலகுவர் எனவும் இச்சட்டம் வரையறுத்தது. முதலில் இரண்டாவது, நான்காவது, ஆறாவது ஆண்டுகளில் யார், யார் பதவி விலகுவது என்பது குலுக்கல் முறையில் முடிவு செய்யப்பட்டது. மேலவை, பேரவை இரண்டின் உறுப்பினர்களும் அமைச்சர்களாக இருக்க வழிவகை செய்யப்பட்டது. மாநில அமைச்சர் மற்றும் மாநில அரசு தலைமை வழக்குரைஞர் ஆகியோர் சட்டமன்றத்தின் இரு அவைகள் மற்றும் அவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பெறும் சட்டமன்றக் குழுக்கள் ஆகியவற்றின்

கூட்டங்களில் பங்குகொண்டு உரையாற்றலாம். எனினும், அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

1952–ல் நடைபெற்ற முதல் தேர்தலில் வயதுவந்த குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டது. நமது மாநிலத்தில் அமைந்த சட்டமன்றப் பேரவைக்கு 309 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன; 375 உறுப்பினர்கள் என வரையறுக்கப்பட்டது. 243 தொகுதிகள், ஓர் உறுப்பினர் கொண்டவை; 62 தொகுதிகள் இரு உறுப்பினர்கள் கொண்டவை (ஒரு இடம் ஆதி திராவிடருக்கானது), 4 தொகுதிகள் இரு உறுப்பினர்கள் கொண்டவை (ஒரு இடம் பழங்குடியினருக்கானது). முதல் தேர்தலின்போது 372 இடங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. 3 தொகுதிகளில் போட்டியில்லை. காங்கிரஸ் பெரும்பான்மை பெற்று மேலவை உறுப்பினரான திரு. சி. இராஜாஜி அவர்கள் தலைமையில் 10–4–1952 அன்று அமைச்சரவை அமைந்தது. அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து 13–4–1954 அன்று பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்தின் முதலமைச்சரானார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி, 21–4–1952–ல் அமைக்கப்பட்ட மேலவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 72 ஆக நிர்ணயிக்கப்பெற்றது. அதில் உள்ளாட்சித் தொகுதியைச் சேர்ந்தவர்கள் 24 பேர்; சட்டமன்றப் பேரவை தொகுதி உறுப்பினர்கள் 24 பேர்; பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர் தொகுதிகள் இரண்டிற்கும் 6, 6 பேர்; மீதமுள்ள 12 பேர் ஆளுநரால் நியமனம் செய்யப்பெற்றனர்.

பேரவையின் உறுப்பினர்கள் 375 பேர் என்ற நிலையில், கோட்டையில் உள்ள பேரவை மண்டபம் போதுமானதாக இருக்காது என்பதால், சென்னை, அரசினர் தோட்டத்தில் சட்டமன்றப் பேரவை மண்டபம் ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. 2–5–1952 அன்று ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா அதைத் திறந்து வைத்தார். சிறந்த இருக்கை வசதியும், ஒலிபெருக்கி வசதிகளும் அங்கு செய்யப்பட்டிருந்தன. 3–5–1952 அன்று பேரவைத் தற்காலிகத் தலைவர் திரு. பி.டி. இராசன் உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். 3–5–1952 முதல் 27–12–1956 வரை, பேரவை, அம்மண்டபத்தில் கூடியது. அம்மண்டபம் அமைந்த இடமே, பின்னர் 1957 முதல் பாலர் அரங்கமாகவும், கலைவாணர் அரங்கமாகவும் திகழ்ந்தது.

ஆந்திர மாநிலம் 1–10–1953 அன்று பிரிந்ததோடு, முந்தைய பெல்லாரி மாவட்டத்தின் கன்னடர்கள் வாழும் பகுதி மைசூரோடு இணைக்கப்பட்டதை யொட்டி, நமது மாநிலத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 231 ஆகக் குறைந்தது. 1–11–1956–ல் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்ட பின்னர், 190 ஆக அது மேலும் குறைந்தது. 1956 ஆம் ஆண்டு தொகுதி வரையறைக்குப் பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 இடங்களாக உயர்ந்தது. இவற்றில், ஓர் உறுப்பினர் கொண்ட தொகுதிகள் 129; இரு உறுப்பினர்கள் கொண்ட தொகுதிகள் 38 ஆகும். மொத்தத்தில் 37 இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், ஒரு இடம் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டது. தொகுதி வரையறுக்கப்பட்டபின் உறுப்பினர் எண்ணிக்கை இறுதியில் 205 ஆக இருந்தது.

28–9–1955 அன்று சட்டமன்றப் பேரவையும் 30–9–1955 அன்று சட்டமன்ற மேலவையும் நிறைவேற்றிய தீர்மானங்களையடுத்து, காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் கிளை, சென்னையில் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.



சென்னை, அரசினர் தோட்டத்தில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா 2–5–1952 அன்று திறந்து வைத்து உரையாற்றுதல்

1957 ஆம் ஆண்டு இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர், 13–4–1957 அன்று திரு. கே. காமராஜ் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்தது. 1959–ல் ஆந்திரா மற்றும் தமிழகத்திற்கிடையே எல்லை சீரமைக்கப்பட்ட பின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 206 ஆக உயர்ந்தது. 1961 ஆம் ஆண்டு இரு உறுப்பினர் தொகுதிகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, 38 இரு உறுப்பினர் தொகுதிகள் ஒழிக்கப்பட்டு அதே எண்ணிக்கையிலான ஓர் உறுப்பினர் தொகுதிகள் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கப்பட்டு, மொத்த எண்ணிக்கை 206–ஆகவே நீடித்தது.

மூன்றாவது பேரவைக்கான தேர்தலுக்குப் பின், பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான அமைச்சரவை 15–3–1962 அன்று பதவியேற்றது. 2–10–1963 அன்று அமைச்சரவை இராஜிநாமா செய்ததையடுத்து, திரு. எம். பக்தவத்சலம் அவர்களது தலைமையில் அன்றையதினம் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றது.

1965 ஆம் ஆண்டு தொகுதி வரையறைக்குப் பின், ஆளுநரால் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர் நீங்கலாக, தேர்ந்தெடுக்கப்படும் இடங்கள், 234 ஆக உயர்ந்தது. இவற்றில் 42 இடங்கள் ஆதி திராவிடர்களுக்கெனவும், 2 இடங்கள் பழங்குடியினர் களுக்கெனவும் ஒதுக்கப்பட்டன.

நான்காவது பேரவைக் காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் 6–3–1967 ஆம் நாள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், மாநிலத்தின் பெயரை "மதராஸ்" என்பதற்கு பதிலாக "தமிழ்நாடு" என அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யக் கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1968 ஆம் ஆண்டு மையச் சட்டம் எண் 53–இன்படி, 14–1–1969 முதல் மாநிலத்தின் பெயர் "தமிழ்நாடு" என மாற்றப்பட்டது. அதையடுத்து, "மதராஸ் சட்டமன்றப் பேரவை" என்பது "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை" என மாற்றப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னர் அவரது அமைச்சரவையில் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த, 'கலைஞர்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டுவரும் திரு. மு. கருணாநிதி அவர்கள் 10–2–1969 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இவரது தலைமையில் 7 உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவை அமைந்தது.

அதனையடுத்து நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு 15–3–1971 அன்று மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான அரசு மீண்டும் அமைந்தது. 31–1–1976 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டது.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை (Census) அடிப்படையாகக் கொண்டு, தொகுதிகள் மறுசீரமைப்பு ஆணையம் 1–1–1975–ல் தனது ஆணையை வெளியிட்டது. தொகுதிகளின் எண்ணிக்கையிலோ, ஒதுக்கீடுகளின் எண்ணிக்கை யிலோ மாற்றம் ஏதுமில்லை.

ஆறாவது பேரவைக் காலத்தில் 30–6–1977 அன்று திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது. பேரவையின் காலம் முடிவதற்கு முன்பே, குடியரசுத் தலைவரின் பிரகடனத்தின்படி 17–2–1980–ல் பேரவை கலைக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு, தொகுதி வரையறை ஆணைக்குத் திருத்தம் செய்யப்பட்டு, உப்பிலியாபுரம் பொதுத் தொகுதி பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டது. இதனால், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்து அந்நிலை தொடர்ந்து வருகிறது.

9–6–1980 அன்று அமைக்கப்பட்ட ஏழாவது பேரவை, 15–11–1984 அன்று இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 174–ன்கீழ் கலைக்கப்பட்டது.

16–1–1985–ல் அமைக்கப்பட்ட எட்டாவது பேரவைக் காலத்தின்போது, முதலமைச்சராக இருந்த திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 24–12–1987 அன்று மறைவுற்றதையடுத்து, திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களது துணைவியார் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்கள் தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சராக 7–1–1988 அன்று பொறுப்பேற்றார். எனினும், 30–1–1988 அன்று பேரவை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்தது.

1989 ஆம் ஆண்டு ஒன்பதாவது பேரவைக்கு நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின், 27–1–1989 அன்று மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களது

தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றது. 30–1–1991 அன்று பேரவை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்தது.

அதன்பின் அமைந்த பத்தாவது பேரவையில் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அமைச்சரவை 24–6–1991 அன்று பொறுப்பேற்றது.

பதினோராவது பேரவைக்கான தேர்தலுக்குப் பின்னர், 13–5–1996 அன்று மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களது தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றது.

பன்னிரண்டாவது பேரவைக்கான தேர்தலுக்குப் பின்னர், 14–5–2001 அன்று செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றது. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21–9–2001 அன்று பதவி விலகினார்.

திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் அன்றையதினமே முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு 2–3–2002 வரை முதலமைச்சர் பொறுப்பிலிருந்தார். செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 2–3–2002 அன்று மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

பதின்மூன்றாவது பேரவைக்கு நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மாநில வரலாற்றில் இல்லாதவாறு ஐந்தாவது முறை முதலமைச்சராக மாண்புமிகு கலைஞர் அவர்கள் 13–5–2006 அன்று பொறுப்பேற்றார்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 29–5–2009 அன்று துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதல் துணை முதலமைச்சர் என்கின்ற சிறப்பும், பெருமையும் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களையே சாரும்.

மேலவையைப் பொறுத்தவரை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதன் உறுப்பினர் எண்ணிக்கை அவ்வப்போது மாறுபட்டு வந்தது. 1952–ல் அமைக்கப்பட்ட மேலவையில் 72 உறுப்பினர்கள் இருந்தனர். 1–10–1953–ல் ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டபோது, மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆகக் குறைந்து, 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்ட பின்னர் 48 ஆகக் குறைந்து, பின்னர் திருத்தச் சட்டத்தின்மூலமாக 50 ஆக உயர்ந்தது.

1957 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவைகள் சட்டத்தின்படி உறுப்பினர்களின் எண்ணிக்கை 50–லிருந்து 63 ஆக உயர்த்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புத் தொகுதிகளுக்கு 21 பேரும், சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கு 21 பேரும், ஆசிரியர் தொகுதிக்கு 6 பேரும், பட்டதாரிகள் தொகுதிக்கு 6 பேரும், கலை, இலக்கியம், அறிவியல், சமுதாயப் பணி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிலிருந்து ஆளுநரால் நியமிக்கப்பெற்ற 9 பேரும் இதில் அடங்குவர்.

1952 முதல் 1957 வரை சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்த புதிய சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவை நடைபெற்றபோது, மேலவை, சென்னை புனித ஜார்ஜ் கோட்டைப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. 1957 முதல் கோட்டையிலுள்ள பேரவை மண்டபத்தில் பேரவை மீண்டும் நடைபெறத் தொடங்கியபோது, அதன் அருகிலேயே நிருவாகச் சபைக் கூட்டங்கள் நடைபெற்ற அறை விரிவாக்கப்பட்டு, அங்கு மேலவைக் கூட்டமும் நடைபெறத் தொடங்கியது.

20–4–1959 முதல் 30–4–1959 வரையிலான காலத்தில் 9 நாட்கள் உதகமண்டலத்தில், தற்போது 'தமிழகம்' என அழைக்கப்படும் அரண்மூர் மாளிகையில் பேரவை கூடியது. இதே மாளிகையில் 4–5–1959 முதல் 9–5–1959 வரையிலான காலத்தில் 6 நாட்கள் மேலவைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இரண்டு அவைகளும் மிகச் சிறப்பாக நல்லுறவுடன் செயல்பட்டு வந்துள்ளன. 1947 ஆம் ஆண்டு முதலில் மேலவையில் நிறைவேற்றப்பட்ட ''சென்னை விலங்குகள் மற்றும் பறவைகள் பலியைத் தடை செய்யும் சட்டமுன்வடிவு'' பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமானது. அதேபோன்று, 1958 ஆம் ஆண்டு ''சென்னை பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், திறந்தவெளிகள் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு'' பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேரவையில் நிறைவேற்றப்பட்ட 14 சட்டமுன்வடிவுகளுக்கு திருத்தங்களையும், பரிந்துரைகளையும் மேலவை செய்து, அவற்றில் 12 நேர்வுகளில் மேலவையின் திருத்தங்களைப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது. ஒரு சட்டமுன்வடிவு மேலவையின் ஆய்வுக்கு விடப்பட்டது. மேலவையின்

திருத்தங்களைப் பேரவை நிராகரித்ததால் சட்டமுன்வடிவுகள் மேலவையால் மறு ஆய்வு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வும் உண்டு. இவ்வாறு 1986 வரை சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து பணியாற்றி வந்தன.

தமிழ்நாட்டில் மேலவை நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம், எட்டாவது பேரவையில் 14–5–1986 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டு, அதற்கான சட்டமுன்வடிவு பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, 1–11–1986 முதல் மேலவை நீக்கப்பெற்றது.

அதன் பின்னர், ஒன்பதாவது பேரவையில், தமிழ்நாட்டில் மீண்டும் சட்டமன்ற மேலவை தோற்றுவிக்கப்படவேண்டுமென்று கோரும் தீர்மானம் 20–2–1989 அன்று நிறைவேற்றப்பட்டது.

அடுத்து வந்த பத்தாவது சட்டமன்றப் பேரவையில் மேலவையைத் தோற்றுவிக்கக் கோரிய 20–2–1989 ஆம் நாளிட்ட தீர்மானத்தை விலக்கிக்கொள்ளும் தீர்மானம் 4–10–1991 அன்று நிறைவேற்றப்பட்டது.

பதினோராவது சட்டமன்றப் பேரவையில், மேலவையைத் தமிழ்நாட்டில் மீண்டும் தோற்றுவிக்க வேண்டுமென்ற தீர்மானம் 26–7–1996 அன்று நிறைவேற்றப்பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. பதினோராவது பேரவையில் நிறைவேற்றப்பெற்ற இத்தீர்மானத்தை நீக்கிக்கொள்ளும் தீர்மானம் பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையில் 12–9–2001 அன்று நிறைவேற்றப்பெற்றது.

சட்டமன்றம் தொடர்பான விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள்

சட்டமன்றத்தின் நீண்ட நெடிய வரலாற்றில், பல விழாக்களும் நடைபெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கன:

24–7–1948 அன்று மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவப் படத்தை, அப்போதைய கவர்னர்–ஜெனரல் திரு. சி. இராஜாஜி அவர்களும், 23–8–1948 அன்று திரு. சி. இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தை, அப்போதைய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், 22–3–1964 அன்று அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை, அப்போதைய குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜாகீர் ஹுசேன் அவர்களும், 18–8–1977 அன்று திரு. கே. காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை, அப்போதைய குடியரசுத் தலைவர் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களும், 9–8–1980 அன்று தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் ஆகியோரது திருவுருவப் படங்களை, அப்போதைய கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும், 31–1–1992 அன்று டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திருவுருவப் படத்தை, அப்போதைய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களும் பேரவை மண்டபத்தில் விழா நடத்தி திறந்து வைத்தனர்.



இராஜாஜி மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா திருவுருவப்படம் திறந்து வைத்தல்

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர், அவரது திருவுருவப் படத்தை, அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், சட்டமன்றம் ஒரு காலத்தில் கூடிய இராஜாஜி மண்டபத்தில் 10–2–1969 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி, 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14 ஆம் நாள், ஆளுநர் தலைமையில் சிறப்புக் கூட்டம் ஒன்று நள்ளிரவில் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. அப்போதைய பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் அதில் பங்கேற்றனர்.

இந்தியா விடுதலையடைந்து, 40 ஆண்டுகள் நிரம்பப்பெற்றதைக் கொண்டாடுமுகத்தான், 1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9 ஆம் நாள் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டக் களங்களிலிருந்து தியாக சீலர்களால் கொண்டுவரப்பட்ட புனித மண் அடங்கிய பேழைகள் டெல்லி மாநகருக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

தமிழகச் சட்டமன்றப் பேரவையின் பொன் விழா 5–5–1989 அன்று பேரவை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மூத்த உறுப்பினர்கள் உள்ளிட்டோர் சிறப்பிக்கப்பட்டு, விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றம் அமைக்கப்பெற்று 75 ஆண்டுகள் நிறைவுற்றதைக் குறிக்கும் வகையில், சட்டமன்றப் பவள விழாவும், பேரவை தொடங்கி 60 ஆண்டுகள் நிறைவுற்றதைக் குறிக்கும் சட்டமன்றப் பேரவை வைர விழாவும் 14–7–1997 அன்று, சென்னை பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஆளுநர் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மூத்த உறுப்பினர்கள் சிறப்பிக்கப்பட்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டு காலச் சட்டமன்றப் பணியைப் பாராட்டும் வண்ணம் “சட்டப் பேரவையில் கலைஞர் பொன்விழா” புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 11–5–2007 மற்றும் 12–5–2007 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முன்னாள் மற்றும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அமைச்சர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விழாவில் கலந்து கொண்டனர். முதல் நாள் விழாவின்போது தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இரண்டாம் நாள் விழாவில் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மாண்புமிகு திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ‘கலைஞரின் சட்டமன்ற உரைகள்’ என்ற புத்தகத் தொகுப்பினை வெளியிட்டார்.

12–5–2007 அன்று சட்டமன்றப் பேரவையில் தனது ஏற்புரையின்போது சட்டமன்றப் பேரவைக்குப் புதிய கட்டடம் கட்டப்படும் என்ற பொன்விழா அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள். அதனையொட்டி, இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கக்கூடிய, அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய, எழிலார்ந்த கட்டடம், சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைப்பதென முடிவு செய்யப்பட்டு 12–6–2008 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பில் மிகக் குறுகிய காலத்தில் இம்மாபெரும் கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடர் புனித ஜார்ஜ் கோட்டை மண்டபத்தில் 6–1–2010 அன்று தொடங்கி 11–1–2010 அன்று முடிவுற்றது.

இந்திய பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் புதிய சட்டப் பேரவை வளாகத்தை திருவள்ளுவர் ஆண்டு 2041, மாசி 29, (13–3–2010) சனிக்கிழமையன்று திறந்துவைக்கிறார்கள். பின்பு புதிய சட்டப் பேரவை வளாகத்தில் 13–வது சட்டப் பேரவையின் பதின்மூன்றாவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

இந்துக்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்

திருக்கோயில்களில் வரையறுக்கப்பட்ட தகுதிகளுக்குட்பட்டு அனைத்து சாதியைச் சேர்ந்த இந்துக்களும் அர்ச்சகர்களாக நியமிக்க வகை செய்யும் அரசாணை 23–05–2006–ல் வெளியிடப்பட்டது. இதனை சிறப்பாக நடைமுறைப்படுத்த நீதியரசர் திரு. அ.க. இராஜன் (ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி) தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு 23–11–2006–ல் ஓர் அறிக்கையை அரசுக்கு அளித்தது. அதன் அடிப்படையில், சென்னை, ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் வைணவக் கோவில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்களையும், திருவண்ணாமலை, மதுரை, திருச்செந்தூர், பழனி ஆகிய இடங்களில் சைவக் கோவில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்களையும் துவக்க, 15–03–2007–ல் அரசாணை வெளியிடப்பட்டு பயிற்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய முதல் உரை - 30-4-1957

"சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும், இதிலே பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான் மாணவனாய் இருந்த பருவத்திலும், அரசியல் நடவடிக்கைகளை கவனித்துப் பார்த்த காலத்திலு மிருந்தே நன்கு அறிந்திருக்கிறேன். தங்களைப்போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் பொருத்தமானது. என்றாலும், ஜனநாயக அமைப்பிலே சில பல தவிர்க்கமுடியாத கடமைகளுக்கு உட்பட்டு போட்டி இருந்தது என்றும், அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப்படுத்துவதாக முடிந்தது என்பதையும் அறிவோம்.



பாராளுமன்ற நடவடிக்கை களில் தங்களுடைய அறிவையும், ஆற்றலையும் நன்கு அறிந்திருக்கக் கூடிய எங்களுக்கு அதிலே அதிகமான அனுபவம் இல்லாததை தாங்கள் அறிந்துகொள்ள வேண்டு மென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் தாங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பதுபோலவே தாங்கள் ஈடுபட்டிருக்கிற மருத்துவத் துறையில் யார் யார் தங்களிடம் இளைத்து வருகிறார்களோ, அவர்களுக்கு பலமூட்டுகின்ற காரியத்தில் நீண்ட நாளாக ஈடுபட்டிருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலமூட்டுவதைப்போலவே, அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில், நம் நாட்டு ஜனநாயக ஆட்சியில் என்போன்றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அனுபவம் இல்லாதது மட்டுமல்ல; பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு, ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள், இந்தப் பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக, குழந்தைத்தனமாக நடந்துகொண்டாலும், தாய்போன்று எங்களை அன்புடன் அணைத்து, அதிகமாக அடிக்காமல், கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகின்றேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் அனுபவம் உள்ளவர்கள், அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் என்ற இரண்டு வகை மட்டுமல்ல. இதையே பச்சைத் தமிழில் சொன்னால் ஞானவான்கள், அஞ்ஞானம் நிரம்பியவர்கள் என்ற இரண்டு வகை மட்டும் அல்ல; ஞான சூன்யர்கள் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது. எங்களைப்போன்றவர்களை ஞான சூன்யர்கள் என்றால் கவலை இல்லை. ஞான சூன்யர்களைத் திருத்தமுடியும். ஞானவான்களாக்க முடியும். ஆனால், அஞ்ஞானிகளைத் திருத்துவது என்பது மிக மிகக் கடினம்.

என்னைப் பொறுத்தவரையில், நாங்கள் சேர்ந்திருக்கிற இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அரசியல் அனுபவத்தையும், ஆற்றலையும் அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை. ஆனால் நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கும்போதே நாங்கள் அதிகமாகப் பயிற்சி பெறாமல் இருப்பது அதற்கு ஏற்ற காலத்தில் பயிற்சிபெறத் தவறிவிட்டது ஒன்றைத் தவிர, பயிற்சி பெற முடியாது என்பது அல்ல. பயிற்சி பெற்றால், எங்களுக்கு அந்த அறிவு கைகூடாது என்பதும் அல்ல என அரசியல் அனுபவம் பெற்ற தாங்கள் நிச்சயமாக நன்கு உணர்ந்திருப்பீர்கள். அரசியல் துறையில் குழந்தைகளாக எதிர்வரிசையில் உட்கார்ந்திருக்கும் நாங்கள் இந்தச்

சபையின் நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல்படுவோம் என்றாலும், குழந்தைத்தனமாக சில பல நேரங்களில் தவறுவதும் இயற்கை. அந்த நேரங்களில் தாங்கள் அன்புகூர்ந்து தங்கள் கட்டளைகளைப் புன்சிரிப்போடு கலந்து, கருணையிலே குழைத்து உபயோகிப்பது எங்களை எல்லாம் நல்ல ஜனநாயகப் பண்புடையவர்களாக்கப் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள், ஆளுங்கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையையும் எதிர்ப்போம் என்று அல்ல. ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவுபோல இருக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேரங்களில் மாப்பிள்ளை, தம்முடைய தோழர்களின் குறும்புகளை வெறுப்பதுபோல, ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எங்களைக் கருதக்கூடும். அப்படிப்பட்ட நேரத்தில், நாங்கள் மிகவும் சோர்ந்து போகாமல் இருக்க, தாங்கள் அருள்கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புகளை வழங்கவேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அரசியல் பெருந்தன்மை நம் நாட்டில் மிக மிக அவசியம் என்பதை நல்ல பெருந்தன்மை உடைய தகப்பனாருக்குப் பிள்ளையாயும், நல்ல பெருந்தன்மையுள்ள தொழிலில் ஈடுபட்டவராயும், அரசியல் பெருந்தன்மையை நிலைநாட்டும் பதவிக்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ள தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

அரசியல் பெருந்தன்மை, கொடுத்து வாங்குவது ஒன்றே தவிர, ஒரே வழியில் செல்கிற வியாபாரம் அல்ல என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்படி அரசியல் பெருந்தன்மையைக் கொடுத்து வாங்கவேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் கவலையோடு போற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும், சில பல நேரங்களில் தவறுகள் இழைக்க நேரிட்டால், அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் நாங்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, தவறுகளைத் திருத்தி நல்வழிப் படுத்துகின்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிற தாங்கள் கொடுக்கும் ஆணைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள்; இந்தச் சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்றால், எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர நிலைமைதான் என்பதை யாவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே ஒரேவிதமான உடற்கூறு படைத்தவர்கள் சிற்சில வியாதிகளுக்கு உட்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறந்த மருத்துவர் என்ற முறையில் அவர்களுடைய வியாதிக்கு மூல காரணம் என்ன என்பதைப் பற்றியும் நீங்கள் ஆராய்ந்து சிகிச்சை செய்திருப்பீர்கள். வெளியே தோற்றுகின்ற புறக் குறிகளை மாத்திரம் பார்த்து சிகிச்சை அளிக்கக்கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களுடைய பேட்டையில் எத்தனையோ நோயாளிகள் இளைத்தவர்களாக உங்களிடம் வந்து திடகாத்திரர்களாகத் திரும்பி இருக்கிறார்கள். அவ்வாறு திரும்பிய பல பேர்களிடத்தில் இருந்து நான் அறிந்துள்ளபடி தாங்கள் முதலில் புறத்திலே தோற்றும் குறிகளைக் கண்டு, அக்குறிகளைத் தோற்றுவித்த மூல காரணத்தை உணர்ந்து சிகிச்சை செய்யும் வழக்கத்தை இங்கும் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் படைத்துள்ள நல்ல ஜனநாயகக் கண்ணோட்டத்தோடு எங்களுடைய குறைபாடுகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் அரசியலில் மட்டும் அல்ல; இரயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட யார் முதலில் வண்டியில் ஏறி இடம் பிடித்துக்கொள்கிறார்களோ அவர்கள் அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறோம். சட்டமன்றத்திலும் அந்த மனப்பான்மை நீண்ட காலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக் கொண்டு தங்களை ஏறவிடாமல் தடுக்கின்றவர்களின் மனம் புண்படாமல், மெல்ல உள்ளே ஏறி நுழைந்து கொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத்தடுமாறி இந்தச் சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் இரயில் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுணங்கும் வகையில், அவர்களைப் பார்த்து காலை மடக்கிக்கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினாலேயே அவர்கள் காலை மடக்கிக் கொண்டு எங்களுக்கும் இடந்தரச் செய்ய வேண்டும். நியாயத்திற்காக, கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய ஆட்சியின்கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி, இந்தச் சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதுகாப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி, வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்."

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
சட்டமன்றத்தில் ஆற்றிய முதல் உரை - 4-5-1957

"அவைத் தலைவர் அவர்களே, இன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை; தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி இங்கு நண்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்த நேரத்தில், எதிர்க் கட்சியினரைப் பற்றி இங்கு பேசப்பட்ட நேரத்தில், குறை கூறுவதையே எதிர்க்கட்சியினர் தொழிலாகக் கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. குறைகளை எடுத்துச் சொல்லி, நிறைபெறுவதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, செய்திருக்கிற காரியங்களைப் பன்னிப் பன்னிச் சொல்லி, அவைகளைப் பாராட்டுவதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல்லாம், வெளியிலே அந்தக் காரியங்களால் பயன் பெறுகிறவர்களால் நடத்தப்படுவது மிகப் பொருத்தமுடையது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்துகொள்வதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம்.



அந்தக் காலத்தில் மன்னர்கள், மக்களின் குறைகளைத் தெரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்கு இரவு நேரங்களில் "நகர் சோதனை" என்ற பெயரால் மாறுவேடம் தாங்கி, மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எல்லாம் தெரிந்து, கொலுமண்டபத்தில் உட்கார்ந்து அந்தக் குறைகளைப் போக்கினார்கள் என்று பழைய கால சரித்திரத்திலிருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் ஆளும் காலம் அல்ல; மக்கள் ஆளுகின்ற காலம். இந்தக் காலத்திலும், அதேபோல் மந்திரிகள் மாறுவேடம் தாங்கி மக்களின் குறைகளைக் கண்டு வரவேண்டுமென்று நான் கோரவில்லை. நாடகத்திலே அனுபவம் பெற்ற நாங்கள், ஒருவேளை ஆளுங்கட்சியினராக வந்தால், அந்த வேடங்களைப் போட்டு, மக்களின் குறைகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்யவேண்டுமென்று நான் கோரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி ஒன்று தேவையென்பது, எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதற்காக அல்ல என்பதை இங்கு பேசிய பலர் சுட்டிக்காட்டினார்கள். ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளல் வேண்டுமென்பதைப் பற்றி, வள்ளுவர் பெருமான், தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணைக் கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டுமென்று கூறினார் என்றால், எதையும் "சரி, சரி" என்று சொல்லிக் கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரி லானும் கெடும்"

என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிறார். சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன் பகைவர்கள் இல்லையாயினும் தன்னைத் தானே கெடுத்துக்கொள்வான்; கெட்டுவிடுவான் என்று

சொல்லியிருக்கிறார். அந்த முறையிலே இடித்துச் சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெறவேண்டுமென்று வள்ளுவர் அந்தக் காலத்திலேயே உணர்ந்து சொன்னார் போலும்! கவர்னருடைய உரையைப் பற்றி இங்கு பேசிய பல நண்பர்கள் "கன்னியாகுமரியை வரவேற்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்றுகொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்றுகொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது, தேவிகுளம், பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை; கவர்னர் உரையில்–என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அடுத்து, நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் பேரால், நியாய வாரச் சட்டங்களின் பேரால் விவசாயிகள் திருப்தியடைந்து சுமுகமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பொறுத்தவரையிலும், திருச்சி மாவட்டத்திலும் இன்றையதினம் இந்த நியாய வாரச் சட்டத்தின் காரணமாகவும் சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் எழுந்த வழக்கு உயர் நீதிமன்றம் சென்று, அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாரும் மறந்துவிடவில்லை; மறுத்துவிடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில் தங்களுடைய மனைவி மக்களுடன் வேதனை அடைந்து புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள்; குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாய வாரச் சட்டம் காரணமாக குளித்தலைத் தொகுதி நங்கவரம் பகுதியிலும், திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தினம் தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கண்டும், விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படும் கூக்குரலைக் கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு கையேரு வாரம் என்றும், மாட்டு வாரம் என்றும் இரண்டு வித வாரம் இருக்கின்றன. இப்படி இரண்டு விதமான வாரம் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நியாய வாரச் சட்டம் பயன்படக்கூடாது என்று கருதி, அதை விவசாயிகள் பயன் அடையாத முறையில் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாய வாரச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும், வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் இருக்கிறார்கள். இன்றையதினம் உயர் நீதிமன்றம் அந்த ரீதியில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதன் காரணமாக மாட்டு வார ஏருக்காரர்கள் என்றால் யார், கையேருக்காரர்கள் என்றால் யார் என்ற பிரச்சினை எழும்பி அதைப்பற்றி விளக்கத்தை கவனிக்கும்போதுதான் நிலைமை தெரிய வருகிறது. மாடும் தந்து, அவர்களுடைய சொந்த உழைப்பை சிந்தி நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், எரு இவைகளைப்பெற்று அப்படிப் பெறுகிற அந்தப் பொருள்களுக்காக விளைச்சலில் அவர்கள் தனியாக தானியமாகவோ அல்லது பொருளாகவோ எடுத்துக்கொண்ட பிறகு 60:40 என்று பெற வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், இன்றையதினம் மாட்டு ஏருக்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப்போலவே

கையேருக்காரர்கள் யார் என்றால் அவர்கள் பெரும்பாலும் ஆதி திராவிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; பழங்குடி மக்கள் என்கின்ற பிற்பட்ட மக்கள்; பாட்டாளி மக்கள். அப்படிப்பட்ட வர்க்கத்தினருக்காகத்தான் இந்த நியாய வாரச் சட்டம் செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுக்கென்று இந்த நியாய வாரச் சட்டத்தையும், நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தாலும், அவர்கள் அவைகளின் பயனை அடைய முடியாமல் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து விட்டது. அந்த அடிப்படையிலாவது எந்த அளவிலாவது இந்த நியாய வாரச் சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கி இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட மாட்டு ஏருக்காரர்களும், கையேருக்காரர்களும் சாகுபடியாளர்கள் அல்ல என்கின்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகி இருக்கிறார்கள். அதன் மேல் அப்பீல் செய்யப்பட்டு, மீண்டும் வழக்கு, வரும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் எடுத்துக்கொள்ளப் போவதாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்னவென்றால், முத்து முத்தாக வியர்வை சிந்தி, மணி மணியாக நெற்குவியலைத் தந்தவர்கள் களத்துமேட்டிலே காவலர் புடைசூழ அதைக் கொட்டிவிட்டு, வீட்டிலே வறுமைத் தேள் கொட்டிட, வாடிக் கிடக்கிறார்கள். குளித்தலைத் தொகுதியில் இப்பொழுது நிலவி வருகிற இப்படிப்பட்ட நிலைமையைப் பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிக்கு ஆளாகி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உயர் நீதிமன்றம் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக புதிய ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரிதமாகக் கொண்டு வரவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுடைய, ஏழை விவசாயிகளுடைய அவல நிலைமையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலை கொண்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுப் பற்றாக்குறை நிலைமையைப் பற்றியது! கவர்னர் அவர்களுடைய உரையில் உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும், உணவு விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விஷம் போல் தினம் தினம் ஏறிக்கொண்டு இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆந்திராவிலுள்ள பெருவாரியான உபரி அரிசி தமிழகத்திற்குப் பயன்படாமல் வட நாட்டில் சோளப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையைக் கொண்டு வடக்கே சரிக்கட்டுவதற்குப் பதிலாக, ஆந்திராவிலுள்ள உபரியான அரிசியைத் தமிழ் நாட்டிற்குப் பயன்படாத முறையில் எடுத்துச் சென்றதானது, இங்கு விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. இதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை. இப்படி விலைவாசிகள் உயர்வைத் தடுக்க எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை.

உணவு நிலைமையைச் சமாளிப்பதற்கு, சர்க்கார் உணவுப் பெருக்கத்திற்கு திட்டங்கள் செய்யவேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலைமையில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து, சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால், உணவு நிலை பற்றாக்குறை இதுபோன்றே எப்பொழுதும் நீடித்துக்கொண்டே இருக்கும். இத்தகைய நிலைமைகளிலிருந்து திராவிடம் விடுபட்டு, திராவிடம் தனித்து, செழித்து நின்று, வளம்பெற, வாழ, நல்ல முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்குக் குறிப்பாக, உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்கிறேன். குடகனாறு திட்டம் தேவையென்று முயற்சி ஒன்று குளித்தலைத் தொகுதியில் 1952 ஆம் ஆண்டு முதற்கொண்டே இருந்து வருகிறது. அதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும், கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களிடமும், கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடமும், கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் பல தடவை பல மனுக்கள் மூலமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்குள்ள P.W.D. சூப்ரவைசர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து துரிதமாக நிறைவேற்றவேண்டும் என்பதை ஆய்ந்து சொல்லியிருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலமாக சுமார் பத்தாயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றக்கூடிய வசதி இருக்கிறது. அதற்கு 12 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுவதைப் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.”

சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழை அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்குமாறு மேதகு குடியரசுத் தலைவரைக் கோரும் தீர்மானம்

“சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1)–வது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு–7ன்படி, உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயல்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென இந்த சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.”

(இத்தீர்மானம் 6–12–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.)

RESOLUTION REQUESTING HIS EXCELLENCY THE PRESIDENT OF INDIA TO GIVE CONSENT FOR INTRODUCING TAMIL LANGUAGE IN THE PROCEEDINGS OF HIGH COURT OF MADRAS

All the proceedings of the High Court of Madras are at present being conducted in the English language. Article 348 (1) of the Constitution of India provides for all proceedings in both the Supreme Court of India and the High Courts to be in the English language. However, Article 348 (2) r/w Section 7 of the Official Languages Act, 1963 provides for the proceedings of the High Court to be in the official language of the State subject to the authorization of the Governor of the State, after obtaining the consent of His Excellency the President of India.

In accordance with the policy, that all administrative activities must be carried on in the official language of the State, the Government has decided to introduce Tamil in orders, decrees and other proceedings of the Madras High Court as per Article 348 (2) of the Constitution of India r/w Section 7 of the Official Languages Act, 1963. This is a historical decision and the Legislative Assembly unanimously resolves to request His Excellency the President of India to accord his consent for implementing this decision expeditiously.

(This resolution moved by Hon. Chief Minister, was carried unanimously in the Tamil Nadu Legislative Assembly on 6-12-2006.)

The Office of Speaker

The first Speaker of whose name we are certain is Sir Peter de la Mare, in the Good Parliament of 1376. But to assign that date as necessarily the origin of the office would go beyond anything the records justify. The journals of the House of Commons do not begin until 1547, because down to about that time its proceedings were conducted neither geographically nor legally in Parliament. It was a semi-secret assembly, debating apart, and summoned into Parliament only to receive the royal instructions and later to report back what it had decided upon the subject-matter proposed to it. For each purpose a representative was required, who thus came to speak for the King's authority in the House and for the House to the King. There are glimpses of some such spokesmen a good deal earlier in the reign of Edward III than Sir Peter de la Mare.

In the fifteenth century the Speaker was so predominantly the King's servant that he was commonly paid or pensioned from the revenues of the Duchy of Lancaster, the Sovereign's personal appanage. It is not till the reign of Henry VIII that, when petitioning for confirmation of the privileges of the House, the Speaker begins to claim the right of free speech for members in debate, and not merely for himself when addressing the Throne. The greatest man ever to occupy the Chair, Sir Thomas More, certainly thought of himself as the King's officer. So it continued after Edward VI had given the Commons a meeting-place, St. Stephen's chapel within the Palace of Westminster, and this brought them into Parliament.

Change of emphasis

The change of emphasis comes with the rise of the power of the Commons and their capacity, in Stuart times, to challenge the authority of the Crown. The progress of their bid to bring the Speakership over to their side of the controversy may be illustrated by two famous utterances of successive Speakers : Sir John Finch, in 1629, protesting against the clamour of the House that he disregard the royal instructions to adjourn: "I am not less the King's servant for being yours"; William Lenthall in 1642, called on by the King to disclose the whereabouts of the five Members: "Sir I have neither eyes to see nor tongue to speak in this place, but as the House may please to direct me, whose servant I am here."

That display of moral courage was a flash in the pan from Lenthall, a weak Speaker; and it was not much before the end of the century that the Speaker could be called effectively the servant of the House and not of the Crown. Even when that was achieved he tended to be the agent of the party in power; so far are we from the modern conception of impartiality that Robert Harley, the future Prime Minister, could in the reign of William and Mary combine the Speakership with the office of Secretary of State. In the eighteenth century the Chair became the sport of party politics, going always with the Whig or Tory majority in heated contests; and the Government of the day kept a hold on the Speaker by assigning to him some sinecure to supplement the fees of office by which he lived.

Onslow's Reform

The great Speaker Arthur Onslow, who occupied the Chair throughout the 33 years of George II, set his face against this system, resigned the Treasureship of the Navy and succeeded in living on his fees. After him there were relapses towards government control, but the trend was steadily towards the detached Speakership we know. In the year of the great Reform Bill the allotment of a statutory salary raised the Speaker above dependence on ministerial favour; and the recognition of his habitual impartiality made contested elections to the office rare.

In 1839 Charles Shaw-Lefevre ("Oh, the weary dull Lefevre, oh, the barren barren Shaw") was elected by a narrow majority of Whigs in a strictly party vote against the former Tory Home Secretary Henry Goulburn. But after that there was not another contest until 1895, when the Conservatives

unsuccessfully put up Sir Matthew White Ridley against Mr. Gladstone's nominee, William Court Gully, an industrious lawyer who was scarcely more than a name to most members, having spent the nine years of his parliamentary life almost entirely in the library, working on his legal papers. Gully, however, having with the aid of the Whigs scraped home by 11 votes, proved a very competent Speaker, rather dry and pedantic, but scrupulously fair, patient, and courteous. It was no fault of his that, on an occasion when 28 Irish members, whom he had "named" for disorderly conduct, defied his order to withdraw, he was compelled to create a new and unhappy precedent by introducing a substantial body of police on to the floor of the House to remove them by force.

Gully served through the decade of Conservative Government that began a few months after his first accession to the Chair, and went to the other place as Lord Selby in the middle of 1905, when the Balfour adminstration was on the verge of collapse. Consequently the Conservatives had the initiative in finding a successor, and their choice of James William Lowther was not opposed, either then or in the Liberal Parliaments over which he was destined to preside.

Deputy's claim

Lowther was already well known to the House as Deputy Speaker. This office had existed only since 1855, before which date, if the Speaker was incapacitated, the House could not sit. The holding of it, which is generally combined with the Chairmanship of Committees, conveys of course no prescriptive right of succession but inevitably gives the incumbent a strong claim to be the first candidate considered on a vacancy of the Chair. Lowther was a parliamentarian dyed in the wool, descended from a Westmorland and Cumberland family of country squires which had been continuously represented in the House of Commons for more than 200 years. Like his predecessor he had begun his career at the Bar, but he was an altogether warmer character, who rode the House on an easy rein, relying for his control, which under the velvet glove was as firm as that of any Speaker, less often on direct rebuke than on his delicate gift of wit and irony.

Many a parliamentary indiscretion expired like a damp squib through being conveniently inaudible to the Chair: Lloyd George ranked "the discriminating ear" high among Mr. Speaker Lowther's attributes. Lowther, too, passed through stormy times, less in the First World War, which he saw through to the end, than in the bitter controversies over Home Rule and the Parliament Bill which preceded it. There was a night in July 1911, when the Prime Minister himself was denied a hearing by the Opposition, who howled him down with shouts of "Traitor!" A series of finely worded appeals from the Chair to the ancient tradition of free debate proved ineffective, and Lowther at last had to resort to the rarely used power "in case of grave disorder" to adjourn the House without question put.

Wish overruled

During the war the Speaker presided over the all party conference which planned the vast extension of the suffrage in 1918; and when the first Parliament of peace met, the new House, conscious of its inexperience and the changing constitution insisted on overruling his wish to retire and retaining his experienced judgment over the period of transition. He retired at last in 1921 and, as Viscount Ullswater, lived to the age of 93 and the year 1949.

Hitherto it had been the invariable tradition in modern times to take a Speaker from either the landed gentry or the Bar, often from both. John Henry Whitley, who succeeded Lowther, was the first Speaker who had been engaged in trade. He had begun at the bottom of the ladder in the cotton-spinning firm of S. Whitley and Co. of Halifax and graduated through the Halifax Town Council before being elected in 1900 as a Liberal member for the town. Before reaching the Chair he had ensured his eponymous fame by presiding over the committee out of which came the industrial negotiating machinery of the Whitley Councils. He was then Chairman of Committees and Deputy Speaker, and had held that position 10 years when the Coalition Government put him forward as

their nominee for the Chair. The Conservative majority among their supporters objected, on the ground that the election of two successive Deputy Speakers would create a precedent damaging to the House's freedom of choice, but withdrew their candidate before the vote.

Whitley's great quality as Speaker, at a time when passions often ran high in debate, was his extreme placidity of temper. He never raised his voice, but addressed recalcitrant members in the quiet tones of a friendly and confidential adviser for their own good, rather than with the hauteur of unanswerable authority. He had, however, the pride of his great office and could not be deflected from his duty even when the general strike of 1926 threatened to spread to the servants of the Palace, of Westminster itself. "If it becomes necessary," he announced firmly, "I shall conduct the business of the House without any printing or any electric light," Whitley resigned after a tenure of seven years, declined the customary peerage, and ended his days in 1935, aged 68, as Chairman of the Governors of the B.B.C.

After the first industrialist came the first soldier. The succession of Deputy Speakers was broken, for the Deputy of 1928. J.F. Hope, afterwards Lord Rankeillour, believed himself to have alienated the Opposition and stood aside; but 120 Conservative members petitioned Mr. Baldwin in favour of the next in the hierarchy, Edward Algernon Fitz Roy, the Deputy Chairman of Ways and Means, who was elected unopposed. Fitz Roy, who was descended in direct male line, through the Dukes of Grafton, from Charles II and Barbara Palmer, had been originally commissioned in the Life Guards and commanded the mounted troops of the Guards Division in France in 1915 and 1916. He had already the habit of authority and although he spoke quietly it was in accents that were always obeyed - or nearly always, for when Mr. John Bennett, in 1930, seized the Mace and tried to carry it out of the House it required more than the Speaker's words to stop him. His fine presence enhanced the dignity of the Chair; and, though he was himself conscious that his manner appeared cold, he would explicitly assure the House that it concealed a warm heart. That came to be recognized as true, and the real personal affection he had won was movingly demonstrated when the House-in its exile in Church House, Westminster-saluted his golden wedding in November, 1941.

When, after three unopposed re-elections at Daventry, a Labour candidate appeared against him at the general election of 1935, he silently rebuked the constitutional solecism by refusing to take any part in the campaign; the intruder was of course overwhelmed at the polls. Mr. Speaker Fitz Roy died in office in March 1943; and the viscounty of Daventry, which would have been his had he lived to retire, was bestowed upon his widow.

Yet again the Deputy Speaker succeeded, in the person of Douglas Clifton Brown. Appropriately enough to the moment, since the war was at its crisis, he too was a soldier-a gunner-turned cavalryman who had been on active service in France and Belgium from beginning to end of the previous war. The ambition he set before himself was to be remembered as neither the Government's man nor the Opposition's man but the guardian of the rights of private members; and he did indeed used his personal popularity as a weapon to secure a fair hearing for unpopular opinion. He once called Mr. Winston Churchill at the height of his authority to order for (inadvertently, as it appeared) "gate-crashing on a back-bencher." He cherished a three-fold ambition - to lead the House to St. Margaret's to return thanks for victory, to sit in the Speaker's Chair of the rebuilt House of Commons, and to turn the switch to relight the lantern in the Clock Tower when peace should come. He might have left more mark if the strain of dealing with a series of "privilege" claims had not begun to affect his health. Having realized all three of his ambitions, he withdrew to the House of Lords as Viscount Ruffside in 1951 (to die in May 1958); and Mr. W.S. Morrison (diu qui vivat) reigned in his stead.

(From "The Times" (London), October 19, 1959)

சட்டமன்றப் பேரவை நடைபெற்ற இடங்கள்

சட்டமன்ற மண்டபம், புனித ஜார்ஜ் கோட்டை

1640 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டை, ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக மையமாக முதலில் செயல்பட்டு, காலப்போக்கில் படிப்படியாக நிருவாகத் தலைமையிடமாக மாறியது. 1687 முதல் 1692 வரை கோட்டைக்குப் பொறுப்பேற்றிருந்த திரு. யேல் என்பவர் கம்பெனியின் பேரவை மண்டபத்தை உள்ளடக்கிய கோட்டை இல்லத்தில் வாழ்ந்து வந்தார். இந்த இல்லம் 1694–1695–ல் இடிக்கப்பட்டு, மூன்றடுக்குக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. இதுவே இன்றைய தலைமைச் செயலகக் கட்டடமாகும். இதன் பக்கவாட்டில் உள்ள கட்டடங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டு இதனுடன் சேர்க்கப்பட்டன. இக்கட்டடம் புனித மேரி கிறித்துவ ஆலயத்தைவிட 15 ஆண்டுகள் இளமையானதாகும்.



இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் மதராஸ் மாகாணம், பம்பாய் மாகாணம், கல்கத்தா மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களாக அமைக்கப்பட்டு, பின்னர் 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, மாகாணங்களின் ஆளுநர்களுக்கு சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தியாவில் 1799 முதல் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஆளுநரின் நிருவாக சபை என்ற அமைப்பு இருந்து வந்தாலும், 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்தே சட்டமன்றம் என்ற அமைப்பு முறைப்படுத்தப்பட்டது. இதன்மூலம் மாகாண ஆளுநர்களின் சட்டமியற்றும் அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

1857 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி பிரகடனத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்திலிருந்த இந்திய நாட்டின் பகுதிகள் இங்கிலாந்து மகாராணியின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டு, கம்பெனியின் பொறுப்புகளை இங்கிலாந்து பாராளுமன்றம் எடுத்துக்கொண்டது.

1861 ஆம் ஆண்டு இந்திய சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மாகாணங்களின் சட்டமியற்றும் அதிகாரம் திரும்ப அளிக்கப்பெற்று, ஆளுநரின் கவுன்சிலில் அரசு தலைமை வழக்குரைஞரும், 8 உறுப்பினர்கள் வரையும் நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது. 1892 ஆம் ஆண்டு இந்திய சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மதராஸ் மாகாண சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்பட்டது. மின்டோ–மார்லி சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட 1909 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தினால் சட்டமன்ற உறுப்பினர்கள் முழுவதுமாக நியமிக்கப்படும் முறை சற்று மாறினாலும், மக்களால் நேரடியாக உறுப்பினர்கள் பெருமளவு தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் நடைமுறைக்கு வரவில்லை. எனினும், சட்டமன்றத்தில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 20–லிருந்து 50 ஆக உயர்த்தப்பட்டதோடு, சட்டமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் இந்தியர்கள் இடம்பெற இச்சட்டம் வழி செய்தது.

உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து, சட்டமன்றத்திற்கென புதிய கட்டடம் புனித ஜார்ஜ் கோட்டையில் 1910 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் கோட்டையை முற்றுகையிட்டபோது எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் 1761–ல் திரும்பப் பெறப்பட்ட கரும்படிகத் தூண்களில் 20 தூண்கள் இக்கட்டடத்தில் நிறுவப்பட்டு, அதன் தோற்றத்திற்கு இன்று வரை அணி சேர்த்து வருகின்றன.

1911 அக்டோபர் 31 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் அப்போதைய ஆளுநர் சர் ஆர்தர் லாலி மற்றும் அவரது கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி முதன்முறையாக தேர்தல்கள் நடைபெற்று அமைக்கப்பட்ட சட்டமன்றம், 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இம்மன்றம் 1921 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 6–3–1922 ஆம் நாளன்று தலைவர்

அமரும் இருக்கையை சென்னை மாகாண ஆளுநர் விலிங்டன் பிரபு மற்றும் அவரது துணைவியார் பரிசளித்தனர். கவுன்சில் கூட்டங்கள் கோட்டையில் உள்ள சட்டமன்ற மண்டபத்தில் நடைபெற்றன.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி மாகாணத்தில் சட்டமன்றப் பேரவை தோற்றுவிக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின்னர் பேரவையின் கூட்டங்கள் 1937 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை (செனட்) மண்டபத்திலும், 1938 மற்றும் 1939 ஆம் ஆண்டுகளில் அரசினர் தோட்டத்திலுள்ள இராஜாஜி மண்டபத்திலும் நடைபெற்றன. புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றத்தில் சட்டமன்ற மேலவை கூடி வந்தது.

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்துவது குறித்து இங்கிலாந்து எடுத்த நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அமைச்சரவை 29–10–1939–ல் இராஜிநாமா செய்தது. 30–4–1946 வரை மாகாணத்தில் ஆளுநரின் ஆட்சி நடைபெற்றது. இடையில் 1–10–1945 அன்று சட்டமன்றப் பேரவை ஆளுநரால் கலைக்கப்பட்டது. மேலவை என்ற அமைப்பு இருந்தாலும் கூட்டங்கள் நடைபெறவில்லை.

மீண்டும் 1946 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற பின்னர் பேரவை 24–5–1946 முதல் 27–3–1952 வரை புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்த சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடியது. அதன் அருகிலிருந்த நிருவாக சபை மண்டபம் விரிவுபடுத்தப்பட்டு மேலவை மண்டபமாகச் செயல்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு, இந்தியா குடியரசாக மலர்ந்த பின்னர் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலையடுத்து 375 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப் பேரவை சென்னை அரசினர் தோட்டத்தில் புதியதாகக் கட்டப்பட்ட பேரவை மண்டபத்தில் 3–5–1952 முதல் 27–12–1956 வரை அப்பேரவைக் காலம் முழுவதும் கூடியது.

1–10–1953 அன்று ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டு, 1956–ல் மொழிவாரி மாநிலங்கள் அமைந்து, தொகுதி மறுவரையறை செய்யப்பட்ட பின்னர் 1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது உறுப்பினர் எண்ணிக்கை 205 என்றிருந்த நிலையில், பேரவைக் கூட்டம் 29–4–1957 ஆம் நாள் முதல் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே நடத்தப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த சட்டமன்றப் பேரவை மண்டபம் செவ்வக வடிவில் அமைந்தது. தென்புறம் அமைந்த பேரவைத் தலைவர் இருக்கைக்கு இருபுறமும் தலா ஏழு வரிசைகளில் மொத்தம் 6 பிளாக்குகளாக, படிப்படியாக உயரும் இருக்கைகள் உறுப்பினர்களுக்கென அமைக்கப்பட்டிருந்தன.

சென்னை அரசினர் தோட்டத்தில் 1952–ல் கட்டப்பட்ட சட்டமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட நவீன இருக்கைகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குக் கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டன. பேரவை மாடங்கள் மறு வடிவமைப்பு செய்யப்பட்டன. பேரவை மண்டபத்திற்கு மேல்புறம் உப்பரிகையில் மூன்று பார்வையாளர் மாடங்கள் இருந்தன. பேரவைத் தலைவர் இருக்கைக்கு எதிர்புறம் மேலே அமைந்துள்ள மாடம் பேரவைத் தலைவர் மாடம் என அழைக்கப்பட்டது. இடப்புறம் அமைந்திருந்த மாடத்தின் ஒரு பகுதி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. பேரவைத் தலைவர் இருக்கைக்கு நேர் மேலே அமைந்த மாடம் பேரவை நடவடிக்கைகளை ஆளுநர் அமர்ந்து பார்க்க ஏதுவாக அமைக்கப்பட்டு 'ஆளுநர் மாடம்' என அழைக்கப்பட்டது. அதே வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் அமரக்கூடிய மாடங்களும் உள்ளன. 1957–ல் மறுசீரமைப்புக்குப் பின் பார்வையாளர்கள் மாடத்தில் 190 ஆண்களும், 42 பெண்களும், பேரவைத் தலைவர் மாடத்தில் 48 பேரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியமானவர்கள் அமரும் மாடத்தில் 12 பேரும் அமர இட வசதி செய்யப்பட்டிருந்தது.

பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறம் தலைமைச் செயலக மற்றும் துறை அலுவலர்கள் அமருவதற்கான அலுவலர் மாடம் அமைக்கப்பட்டிருந்தது. பேரவையின் புறத்தாழ்வாரத்திலிருந்து அதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது.

1957–க்கு முன்னர் பத்திரிகையாளர் களுக்கு குறைந்த அளவிலான இருக்கை வசதியே பேரவையில் செய்யப்பட்டிருந்தது. எனவே, பேரவைத் தலைவர் இருக்கைக்கு இடதுபுறம் ஏற்கெனவே இருந்த இடங்களோடு மேற்குப் புறத்திலும், பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறத்தில் அலுவலர்கள் மாடத்தையொட்டிய பகுதியிலும் கூடுதல் இடங்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. மேலும், மேற்குப் புறமிருந்த பார்வையாளர் மாடத்தில் முதல் வரிசையும் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப் பட்டிருந்தது. பேரவைச் செயலகத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். அடையாள அட்டை வழங்கும் பணியில் உதவுவதற்காக பத்திரிகையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பத்திரிகை ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பதென 1957 ஆம் ஆண்டு பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டது. பேரவையில் பத்திரிகையாளர்களுக்கு இருக்கைகளை ஒதுக்குவது குறித்து இக்குழு பேரவைத் தலைவருக்கு பரிந்துரைகளைச் செய்கிறது.

இம்மண்டபத்தில் பேரவையின் முதல் ஐந்து கூட்டத் தொடர்கள் 29–4–1957 முதல் 30–3–1959 வரை

நடைபெற்றன. அலுவல் ஆய்வுக் குழு முடிவிற்கிணங்க, பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர் 20-4-1959 முதல் 30-4-1959 வரை உதகமண்டலத்திலுள்ள அரண்மூர் மாளிகையில் 9 நாட்கள் நடைபெற்றது.

31-8-1959 முதல் பேரவை தொடர்ந்து புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே கூடி வந்துள்ளது.

1957 முதல் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பேரவை மீண்டும் நடைபெறத் தொடங்கியபோது, அதன் அருகிலேயே விரிவாக்கப்பட்ட மேலவை மண்டபத்தில் மேலவையின் கூட்டம், 1986-ல் மேலவை கலைக்கப்படும் வரை நடைபெற்றது.

இப்பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடரின் நிறைவு நாள் 11-1-2010 வரை புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை கூடியது. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 13-3-2010 அன்று திறந்து வைக்கப்படவிருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க, எழில்மிகு தோற்றத்துடன் அமைந்துள்ள புதிய சட்டமன்றப் பேரவையில் பதின்மூன்றாவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக செனட் மண்டபம்

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி மாகாணங்களில் சட்டமன்றப் பேரவை தோற்றுவிக்கப்பட்டு, 1937 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டம் 14-7-1937 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக் கட்டடத்தில் (செனட் மண்டபம்) நடைபெற்றது.

செனட் மண்டபம், இராபர்ட் பெல்லோஸ் சிஸ்ஹோம் என்ற புகழ்பெற்ற கட்டடக் கலை வல்லுநரால் வடிவமைக்கப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள் 1869 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1873 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. மரச் சாமான்கள் உட்பட இப்பணிக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.2,80,000 ஆகும். இஸ்லாமிய வடிவமைப்புடனான தூண்கள், இந்து ஆலயங்களின் கட்டட அமைப்பு, மேற்கத்திய கட்டடக் கலையின் பாரம்பரிய தொழில்நுட்பம், இவற்றை இணைத்து இந்தக் கட்டடத்தை திரு. சிஸ்ஹோம் கட்டினார். இக்கட்டடத்தில் ஏறத்தாழ ஆயிரத்து ஐநூறு பேர் அமரக்கூடிய Great Hall என்ற கீழ்த் தள அரங்கு ஒன்று நடுவிலமைந்திருந்தது. இது தவிர, நிலவறை ஒன்று, ஓங்கி உயர்ந்த கூரை, வாயில் ஸ்தூபிகள், குவி மாடங்கள், சிற்ப வேலைப்பாடு கொண்ட கிரானைட் தூண்கள், சுவர்க் கோல ஓவியங்கள், பல்வகை அலங்காரக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட கதவுகள் மற்றும் சாளரங்கள், விலையுயர்ந்த மர வேலைப்பாடுகள், இரும்பு வேலிகள் போன்ற சிறப்புகளை இந்த ஆட்சி மன்றக் கட்டடம் பெற்றிருந்தது. பட்டமளிப்பு விழாக்கள் நடந்த இந்த அரங்கம் 150 அடி நீளமும், 60 அடி அகலமும், 50 அடி உயரமும் கொண்டதாக அமைந்திருந்தது. 3 அடி விட்டமும், 25 அடி உயரமும் கொண்ட பிரமாண்டமான கல் தூண்கள் கொண்ட புறத் தாழ்வாரங்கள் அதற்கு அழகு சேர்த்தன. புகழ்மிக்க புரூம்ஹால் ஓடுகளால் மேற்கூரை வேயப்பட்டிருந்தது. ஒவ்வொரு பக்கத்திலும் 7 சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வடக்கு, தெற்கு சுவர்களில் ஸ்கிராபிட்டோ என்ற உட்செதுக்கு வண்ணச் சித்திர வேலைகள் அமைந்துள்ளன. அந்த அரங்கத்திற்கு மேல் படிக்கட்டுகளுடன் கூடிய நான்கு கோபுரங்கள் உண்டு.

1937 ஆம் ஆண்டு பேரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் சிற்சில மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. செனட் மண்டபத்தைப் பார்வையிட ஆளுநர் எர்ஸ்கின் வருகை புரிந்தார். 14-7-1937 அன்று தற்காலிகப் பேரவைத் தலைவரான திரு. வில்லியம் ரைட் என்பவர் பேரவைச் செயலாளர்



முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அமைச்சர்கள் ஏற்கெனவே ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதால் அவையில் எடுத்துக் கொள்ளவில்லை. தற்காலிகத் தலைவர் திரு. வில்லியம் ரைட் தலைமையேற்க, உறுப்பினர்கள் அறுவர் கொண்ட குழுக்களாகப் பதவியேற்றனர். பதவிப் பிரமாணங்கள் அனைத்துமே மன்னருக்கு விசுவாசம் தெரிவிக்கும் வகையில் அமைந்தன.

31-8-1937 அன்று செனட் மண்டபத்தில் நடைபெற்ற இரு அவை உறுப்பினர்களும் பங்குகொண்ட முதல் கூட்டுக் கூட்டத்தில் மேலவைத் தலைவர் திரு. யு. இராமா ராவ் தலைமையில், அவரது இருக்கைக்கு அருகில் பேரவைத் தலைவர் திரு. புலுசு சாம்பமூர்த்தி அமர்ந்திருக்க, ஆளுநர் உரை மிகச் சுருக்கமாக ஆற்றப்பெற்றது. காங்கிரஸ் கட்சியின் கொள்கையின்படி, அரசமைப்பு நிர்ணய சபை வேண்டுமென்ற தீர்மானத்தை முதல் நாள் பேரவைக் கூட்டத்திலேயே இராஜாஜி அவர்கள் முன்மொழிந்தார். 1-9-1937 அன்று முதலமைச்சர் திரு. இராஜாஜி அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தார். 14-7-1937 முதல் 21-12-1937 வரை பேரவைக் கூட்டம் செனட் மண்டபத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் 150 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தையொட்டி 2004–ல் பல இலட்ச ரூபாய் செலவில் நன்கொடை பெற்று மிகச் சிறந்த முறையில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 2006–ல் செனட் மண்டபம் தனது முந்தைய பொலிவைப் பெற்றது.

இராஜாஜி மண்டபம்

27–1–1938 முதல் 26–10–1939 வரை பேரவையின் கூட்டம் அரசினர் தோட்டத்திலுள்ள இராஜாஜி மண்டபம் என்று பின்னர் பெயரிடப்பட்ட, விருந்தளிப்பு மண்டபத்தில் (Banquet Hall) நடைபெற்றது.


பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் ஆளுநர் தாமஸ் ரூம்பால்ட் கோட்டையிலிருந்த ஆளுநரின் வசிப்பிடத்தை அரசினர் தோட்டம் அமைந்துள்ள இடத்தில் அமைக்க விரும்பி, அங்குள்ள கட்டடத்தை வாங்கி அரசு இல்லமாக்கினார். கோட்டையிலிருந்த ஆளுநர் இல்லம் தவிர இக்கட்டடமும் ஆளுநரின் இல்லமாகத் திகழ்ந்தது. இராபர்ட் கிளைவின் மூத்த மகனான எட்வர்டு கிளைவ் காலத்தில் அதனைச் சுற்றியிருந்த பகுதி மேலும் விரிவாக்கப்பட்டு, அங்கு 1797–1798–ல் ஆளுநரின் அதிகாரபூர்வ இல்லம் அமைந்தது.

1799 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கப்பட்டினத்தை ஆண்ட திப்பு சுல்தானை ஆங்கிலேயர் வெற்றிகொண்ட பின் அவ்வெற்றியைக் குறிக்கும் வண்ணமும், தனது தந்தை இராபர்ட் கிளைவ் 1757 ஆம் ஆண்டில் பிளாசி போரில் பெற்ற வெற்றியைக் குறிக்கும் வண்ணமும் ஒரு தலைசிறந்த நினைவு மண்டபத்தை எட்வர்ட் கிளைவ் அமைக்க விரும்பினார். ஏற்கெனவே அரசுத் தோட்டத்தை வடிவமைத்த டேனிஷ் நாட்டுப் பொறியாளர் திரு. ஜான் கோல்டிங்காம் என்பவரைக் கொண்டு கிரேக்கக் கோயில்களைப் போன்ற வடிவமைப்புடன் மிகப் பெரிய, உயர்ந்த முன் படிக்கட்டுகளைக் கொண்ட விருந்தளிப்பு மண்டபம் வடிவமைக்கப்பட்டது. இக்கட்டடம் 1802–1803–ல் ரூ.2,22,000 செலவில் கட்டப்பட்டு, ஆளுநரின் இல்லத்துடன் இணைந்த விருந்தளிப்பு மண்டபமானது. இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னமாகவும், ஆங்கிலேய கட்டடக் கலையின் எடுத்துக்காட்டாகவும் விளங்கியது.

மூலக் கட்டடத்தைச் சுற்றி 1875 முதல் 1895 இடையேயான காலத்தில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, மேற்கூரையைச் சுற்றி நாற்புறமும் தாழ்வாரங்கள் அமைக்கப்பட்டன. இக்கட்டடத்தில் தரை தளமும், மைய மண்டபம் மற்றும் தாழ்வாரம் உள்ள முதல் தளமும், போர்ட்டிக்கோ கொண்ட இரண்டாம் தளமும் உள்ளன. 9–4–1948 அன்று பொதுப் பணித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1222–ன்படி, விருந்தளிப்பு மண்டபம் இராஜாஜி மண்டபம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1949–1950–ல் ரூ.20,000 செலவில் வராந்தாக்களின் தரை சீர்செய்யப்பட்டு, சுதந்திரத்திற்குப் பின்னர் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள், படப்பிடிப்புகள் போன்றவற்றுக்கு இம்மண்டபம் பயன்பட்டதுடன், மிக முக்கிய நபர்களின் வருகையின்போது விருந்து மண்டபமாகவும் செயல்பட்டது.

முதல் குடியரசுத் தலைவர் திரு. இராஜேந்திர பிரசாத் அவர்கள் சுதந்திர தின விழாவிற்காக 15–8–1960 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் இரு அவைகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இங்கிலாந்து இராணி இரண்டாம் எலிசபெத் மற்றும் எடின்பரோ கோமகன் 19–2–1961 அன்று சென்னை வந்திருந்தபோது இராஜாஜி மண்டபத்தில் அரசு சார்பில் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



இராஜாஜி மண்டபம்

இரு அவைகளின் உறுப்பினர்களும் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

மறைந்த தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 10–2–1969 அன்று இராஜாஜி மண்டபத்தில் திறந்து வைத்தார்.

1946–ல் நடந்த தேர்தலுக்குப் பிறகு பேரவை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்ற மண்டபத்தில் கூடியது.

சட்டமன்றப் பேரவைக் கட்டடம், சென்னை அரசினர் தோட்டம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான முதல் தேர்தல் நடைபெற்ற பின்னர் அமைக்கப்பட்ட முதல் சட்டமன்றப் பேரவையில் 375 உறுப்பினர்கள் இருந்ததால்

புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்திருந்த பேரவை மண்டபத்தை மேலும் விரிவாக்கம் செய்ய இயலாத நிலையில், சட்டமன்றப் பேரவை கூடுவதற்கென தற்காலிகமாக ஒரு கட்டடத்தை சென்னை அரசினர் தோட்ட வளாகத்தில் கட்டுவதென முடிவு செய்யப்பட்டது. சட்டமன்றப் பேரவைக்கான குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க அளவில் மிதமான செலவினத்தில் கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டு கட்டப்பட்டது.

ரூ.10 இலட்சம் செலவில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நாடாளுமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கான மாடம் (60 இருக்கைகள்), தலைமைச் செயலக அலுவலர்களுக்கான மாடம் (6 இருக்கைகள்), பத்திரிகையாளர் மாடம் (40 இருக்கைகள்), பேரவைத் தலைவர் மாடம் (60 இருக்கைகள்), சிறப்புப் பார்வையாளர் மாடம் (200 இருக்கைகள்), பார்வையாளர்கள் மாடம் (500 இருக்கைகள்) மற்றும் பெண்கள் மாடம் (60 இருக்கைகள்) என ஏழு மாடங்கள் அமைக்கப்பெற்றன. முதல் மூன்று மாடங்களும் ஒதுக்கப்பட்டவர்களின் பயன்பாட்டுக்கு மட்டுமே உரியவை. பேரவைத் தலைவர் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு, மற்ற மாடங்களில் நபர்களை அமர்த்த உறுப்பினர்கள் அனுமதி கோரலாம். 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எந்த மாடத்திலும் அனுமதிக்கப்படுவதில்லை.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட அந்த மண்டபத்தில் 128 ஒலிவாங்கிகளையும், 248 ஒலி பெருக்கிகளையும் இணைக்கும் வண்ணம் ஒலிபெருக்கி அமைப்பு ஒன்று நிறுவப்பட்டது. சட்டமன்றப் பேரவை வளாகத்தினை அன்றைய ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா 2–5–1952 அன்று திறந்து வைத்தார். 3–5–1952 அன்று பேரவைத் தற்காலிகத் தலைவர் திரு. பி.டி. இராசன் அவர்கள் உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 6–5–1952 அன்று நடைபெற்ற தேர்தலின்போது முதல் பேரவையின் தலைவராக திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், துணைத் தலைவராகத் திரு. பி. பக்தவச்சலு நாயுடு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று மாலை, பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் கொண்ட கூட்டுக் கூட்டத்தில் முதன்முதலாக ஆளுநர் உரையாற்றினார்.



சட்டப் பேரவைக் கட்டடம், அரசினர் தோட்டம்

உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் விவாதத்தில் அதிக உறுப்பினர்கள் பங்குகொள்ள ஏதுவாக இப்பேரவைக் காலத்தில் 12 நாட்களில் இரவுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினையின்போது தெரிவிக்கப்படும் கருத்துகள், அதுதொடர்பான வழக்கு நிலுவையிலிருக்கும்போது வெளிவருவது பொருத்தமாக அமையாது என்பதால், உரிமைப் பிரச்சினை குறித்த பேரவைக் கூட்டத்தை இரகசியமாக (in-camera) நடத்த வேண்டும் எனக் கோரும் தீர்மானம் 10–2–1955 அன்று நிறைவேற்றப்பட்ட பின்னர், அன்று இரகசியக் கூட்டம் நடைபெற்றது. வழக்கு முடிவுற்றதால் மேற்குறிப்பிட்ட இரகசியக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை வெளியிடலாம் என்ற தீர்மானம் 25–8–1955 அன்று நிறைவேற்றப்பட்டது.

3–5–1952 முதல் 27–12–1956 வரை பேரவை, அரசினர் தோட்டத்திலுள்ள புதிய சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது.

1–10–1953 முதல் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் தெலுங்கு பேசுபவர்கள் இருந்த பகுதி ஆந்திர மாநிலமாகப் பிரிக்கப்பட்டு, பெல்லாரி மாவட்டத்தின் கன்னடம் பேசுபவர்கள் இருந்த பகுதி மைசூர் மாகாணத்துடனும் இணைக்கப்பட்டது. இதனால் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 231 ஆகக் குறைந்தது. 1–11–1956 அன்று மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர் எண்ணிக்கை 190 ஆக மேலும் குறைந்தது. 1956 ஆம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்புக்குப் பின்னர் தமிழக சட்டமன்றப் பேரவையில் 205 இடங்கள் இருந்தன.

1957 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர், பேரவை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்ற மண்டபத்தில் கூடத் தொடங்கியதையடுத்து, அரசினர் தோட்டத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபம் சில மாற்றங்களுடன் பாலர் அரங்கம் எனச் செயல்பட்டு வந்தது. ஏறத்தாழ 700 இருக்கைகளும், சிறிய மேடையும், 35 மி.மீ. படக் காட்சி நடத்த வசதிகள் கொண்டிருந்த அவ்வரங்கிற்கு 1971 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெயரைச் சூட்டினார்கள்.



1972 ஆம் ஆண்டு அக்கட்டடத்தைப் புதுப்பிக்கும் பணிகள் தொடங்கப்பட்டு 29–1–1974 அன்று புதிய கலைவாணர் அரங்கம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. குளிர்சாதன வசதி செய்யப்பட்ட, 1,040 இருக்கைகள் கொண்ட மிகச் சிறந்த அரங்கமாக அது திகழ்ந்தது. பின்னர் இவ்வரங்கம் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், திரைப்படக் காட்சிகளை நடத்தவும், முக்கிய அரசு விழாக்களை நடத்தவும் பயன்பட்டது. புதிய சட்டமன்ற வளாகம் அமைக்கப்படுவதையடுத்து இக்கட்டடம் இடிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக புதிய கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

அரண்மூர் மாளிகை, உதகமண்டலம்

மலைகளின் அரசியான உதகமண்டலம் ஆங்கிலேயர்களின் கோடை வாசஸ்தலமாக முதலில் விளங்கியது. மாகாண ஆளுநர்கள் தங்குவதற்கான ஆளுநர் மாளிகை அங்கு கட்டப்பட்டது. கோடைக் காலத்தில் தலைமைச் செயலகத்தின் ஒரு சில பிரிவுகள் சில மாதங்களுக்கு இங்கு தங்கிச் செயல்பட்டு வந்தன. விடுதலைக்குப் பின்னர் இந்த இட மாற்றம் கைவிடப்பட்டது. சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை அலுவல் ஆய்வுக் குழுக்களின் கூட்டுக் கூட்டத்தில் 1959 ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் பேரவை மற்றும் மேலவையின் குறுகிய காலக் கூட்டத் தொடர் ஒன்றை உதகையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இதற்கிணங்க, உதகை நகரத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள அரண்மூர் மாளிகையில் சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. அரண்மூர் மாளிகையானது, ஆங்கிலேயர் ஒருவரால் தோட்ட மாளிகையாகக் கட்டப்பட்டு, பின்னர் ஜோத்பூர் மன்னரிடமிருந்து 1958–ல் ரூ.5.50 இலட்சம் செலவில் தமிழக அரசால் பெறப்பட்டு "தமிழகம்" எனப் பெயரிடப்பட்டதாகும்.

பீடுமிக்க இக்கட்டடத்தின் மேற்குப் பகுதியில் நின்று பார்த்தால் உதகை பள்ளத்தாக்கின் காட்சி கண் முன் விரியும். அரண்மூர் மாளிகையில், அரசரின் அவையில் நடன நிகழ்ச்சிக்காக முன்னர் பயன்படுத்தப்பட்ட அரங்கம், சட்டமன்றம் கூடும் அரங்கமாக மாற்றப்பட்டது. சிறந்த வேலைப்பாடுகள் கொண்ட ஆடம்பர நாற்காலிகளும், அறைகலன்களும், மின் விளக்கு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்த அப்பெரிய அரங்கு மனதைக் கவருவதாக அமைந்தது. ஒரே நேரத்தில் 180 பேரவை உறுப்பினர்கள் அமரும் வண்ணம் இருக்கை வசதி செய்யப்பட்டது. மேலவைக் கூட்டத்தின்போது அனைத்து உறுப்பினர்களுக்கும் இருக்கைகள் போடப்பட்டு, முன்பக்கம் மேசைகளும் வைக்கப்பட்டன. தேவையான அளவுக்கு ஒலிவாங்கிகளும், ஒலிபெருக்கிகளும் சுற்றிலும் பொருத்தப்பட்டன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பார்வையாளர் மாட வசதி செய்யப்பட்டது. ஆளுநர் நடவடிக்கைகளை அமர்ந்து பார்க்கும் வண்ணம் ஆளுநர் மாடமும் அமைக்கப்பட்டிருந்தது. தற்காலிக ஏற்பாடு என்றாலும், நிரந்தர சட்டமன்ற மண்டபத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அங்கு செய்யப்பட்டிருந்தன.



அரண்மூர் மாளிகை

சட்டமன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர் 20–4–1959 அன்று தொடங்கி ஏப்ரல் 25, 26 ஆகிய நாட்கள் தவிர, தொடர்ந்து 9 நாட்கள் நடைபெற்று, 30–4–1959 அன்று முடிவுற்றது. சட்டமன்ற மேலவை 4–5–1959 முதல் 9–5–1959 வரை 6 நாட்கள் கூடியது. உதகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அதிகபட்சமாக 171 பேரவை உறுப்பினர்களும், 48 மேலவை உறுப்பினர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்க தாகும்.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தங்குவதற்கு உணவகங்களின் அறைகளும், தனியார் நிறுவனங்களின் விருந்தினர் இல்லங்களும் ஒதுக்கப்பட்டன. பேரவையின் பெண் உறுப்பினர்களும், மேலவையின் பெண் உறுப்பினர்களும் அரண்மூர் மாளிகையிலேயே தங்க வைக்கப்பட்டனர்.

சென்னை, கோட்டைக் கொத்தளத்தில் விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதன் முதலாக தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய உரை 15-8-1974

இந்தியப் பெருநாடு விடுதலைபெற்ற இந்தத் திருநாளில், என் அன்பு வாழ்த்துக்களைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்துபட்ட மான மறவர்களுக்கும், தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள்தான் இந்த நாளில் ஏற்றி வைக்க வேண்டுமென்று நமது தமிழக அரசு எழுப்பிய உரிமைக் குரலைப் புறக்கணிக்காமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு முதல்வர் தேசியக் கொடியை
ஏற்றி வைத்தல் (15–8–1974)

மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக் களிப்புடன் விண்முட்டப் பறந்து, பட்டொளி வீசிடும் இந்திய தேசியக் கொடியை மக்களால்

'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற நமது உறுதி படைத்த உள்ளத்திற்குக் கிடைத்த "விடுதலை நாள் பரிசு"

இதுவென எண்ணி மகிழ்கிறோம். அண்ணல் காந்தி யடிகளும், ஆசிய ஜோதி நேருவும், திலகரும், தீனபந்துவும், திறன்மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், வித்தகர் இராஜாஜியும், வீரர் நேதாஜியும்–எண்ணற்ற இந்தியப் பெரு வீரர்களும் சிந்திய இரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம். அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தோள்மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.


இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், “1947 ஆகஸ்டு 15–அந்நிய ஆதிக்கத்திற்குக் கணக்குத் தீர்த்த நாள்” என்றும், “ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15–சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள்” என்றும் அழகுபடக் கூறினார்கள்.

சுதந்திர முழக்கம் செய்த தியாக சீலர்கள் எவரையும் இந்த அரசு மறக்கவில்லை; மதிக்கத் தவறவில்லை. பூலித்தேவனைத் தொடர்ந்து வெள்ளையரை எதிர்த்துக் குரல் ஒலித்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அழிந்துபோன பாஞ்சாலங் குறிச்சியையும் இதோ–மீண்டும் உருவாக்கிவிட்டோம், அந்தத் தீரனின் திருநாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்! தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.



மாண்புமிகு முதல்வர்
சுதந்திர தின விழாப் பேருரை ஆற்றுதல்

சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டுபிடித்துச் சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம். கவிதை வடிவில்



மாண்புமிகு முதல்வர் சுதந்திர தின அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளுதல்

விடுதலைப் போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொடுத்த கவியரசன் பாரதிக்குச் சிலை மட்டுமல்ல; எட்டையபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கியிருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முடியும் தறுவாயிலிருக்கிறது.

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்குத் திங்கள்தோறும் மானியம்–தமிழக அரசின் சார்பில் விடுதலைப் பட்டயம்–இப்படிக் கடமை தவறாது, அந்நாளில் சுதந்திரப் போர்க்களங் கண்டவர்க்கு வழங்கிடும் அன்புக் காணிக்கையை இந்த அரசு தட்டாமல் தயங்காமல் வழங்கி வருகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே! மக்களுக்குச் சுக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோள் அன்றோ?

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள்–இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்றுதானே பதில் எழுந்து தொல்லை தருகிறது மனத்துக்கு?

தமிழகத்தைப் பொறுத்தவரையில்–நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு இயன்ற வரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம். அடித்தளத்து மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏழை எளியோர் மேன்மைபெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

நமது கண்ணொளி வழங்கும் தீவிரப் பணிகள், காடாரம்பப் பகுதிகளிலும் நடைபெற்று மக்களைக் களிப்பில் ஆழ்த்துகின்றன.

காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கி, கை ரிக்ஷாக்களை அறவே அகற்றி விட்டோம். ஊனமுற்றோர்க்கு உதவிட இந்த ஆண்டு முனைந்துள்ளோம். குடியென்னும் கொடுமையை மட்டுமல்ல; குதிரைப் பந்தயமெனும் தீமையையும் இந்த ஆண்டு ஒழித்துவிட்டோம். இதோ பறக்கிற தேசியக் கொடி, இந்திய ஒருமைப்பாட்டுச் சின்னமெனத் திகழ்கிறது. ஆனால்—மதுவிலக்கும், குதிரைப் பந்தய ஒழிப்பும்—மகாத்மாவின் கொள்கைகள் எனினும், அவை அனைத்திந்திய அளவில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்திய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட, தமிழகம் எடுத்துள்ள இந்த நல்ல முடிவுகளை இந்திய மாநிலங்கள் அனைத்தும் பின்பற்ற, பேரரசின் அதிகாரத்திலிருப்போர் வழிவகை காண வேண்டும்.

தன்னிறைவுடன் விளங்கிய தமிழ் மாநிலத்தில் உணவுப் பிரச்சினை நமக்கு வேதனையளிக்கும் ஒரு சம்பவம்!

சமுதாயத்தின் தேவைகளை தனியொருவன் தன் சுய நலத்திற்காகச் சுருட்டிக்கொள்ள முற்படுவதால் ஏற்படும் தீமைகளில் ஒன்றுதான் இந்த உணவுப் பிரச்சினை!

பிரச்சினையைக் கண்டு ஓடாமல், ஒளியாமல் அல்லது அலட்சியப்படுத்தாமல் அரசு எடுத்த நடவடிக்கைகள்—பொது மக்கள் தந்த ஒத்துழைப்பு—இவைகளின் காரணமாக—சமூக விரோத வன்முறைச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

பதுக்கல் பூதங்கள்—கடத்தல் பிசாசுகள், தங்கள் பேழைகளை நிரப்பிக்கொள்ள ஏழைகளின் வயிற்றில் அடிப்பது மன்னிக்க முடியாத துரோகம். அவர்கள் கடுமையான சட்டத்துக்குள், பொறியில் அகப்பட்ட எலிபோல் ஆக்கப்படுவார்கள் என்பதை இந்த நாளில் நான் எச்சரிக்காமல் இருக்க முடியாது. எதையும் பேசித் தீர்க்க முன்வராமல் சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைய முனைவது—சமுதாய நலனுக்காகச் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கக் குறுக்கே நின்று மிரட்டுவது—இவைகளை இந்த அரசு தயவுதாட்சண்யமில்லாமல் சந்திக்கும், சமாளிக்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம்—எல்லா மக்களுக்கும்தான்! ஒருவர் வாழ—ஒருவர் வீழ அல்ல! சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் நெற்சேர உழுது உழுது பயன்விளைக்கும் நிறை உழைப்புத் தோள்களுக்குப் பயன்படாத சுதந்திரம்—பொற்றுகளைக் கடல் முத்தை, மணிக் குலத்தைப் போய் எடுக்க மூச்சு அடக்கியோர்க்குப் பயன்படாத சுதந்திரம்—பாலைவனத்து நிலவாகத்தான் கருதப்படும்—அதனைச் சோலைவனத்துச் சுந்தர நிலவாக்க இந்த நாளில் அனைவரும் உறுதி எடுப்போம்.

விலைவாசி ஏற்றம்—வேலையில்லாத் திண்டாட்டம்—எனும் வேதனைச் சூழலுக்கிடையே சுதந்திரத் திருநாள் எனும் மகிழ்ச்சி ஒரு தேன் துளிதான் எனினும், அதன் சுவை குன்றிடும் எனக் கூறுவார் இல்லை. ஆயினும், தேசிய அளவில் மிகப் பெரியதொரு பொருளாதார மாற்றத்தைச் செய்து தீர வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்திடலாகாது. அரசியல் அமைப்பிலும், பொருளாதாரத் துறையிலும் துணிந்து எடுக்கின்ற புரட்சிகரமான நடவடிக்கைகளின் மூலமே இந்தியாவை ஒளிபொருந்திய நாடாகத் திகழ வைக்க முடியும். இந்த அசைக்க முடியாத பேருண்மைக்குத் தலைவணங்கி, தொண்டினைத் தொடருவோம்! தூய நல்விளைவுகளைச் சேர்ப்போம்—என்று கூறி, என் இதய வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

விடா முயற்சி இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்;
தூற்றினோரே துதிபாடுவர்;
ஏளனம் பேசியோர் ஏத்தித் தொழுவர்!

– பேரறிஞர் அண்ணா

சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளும் குடியிருப்பு வளாகமும்


சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி

(Old MLAs' Hostel)

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்திருந்த "அட்மிரால்டி ஹவுஸ்" என அழைக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி, 250 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கட்டடமாகும். இக்கட்டடம் 1749 ஆம் ஆண்டிற்கு முன் கட்டப்பட்டது. இது செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டு, தரை மற்றும் மூன்று தளங்களைக் கொண்டிருந்தது. இக்கட்டடத்தின் கதவுகள், சாளரங்கள், படிக்கட்டுகள் ஆகியவை பர்மா தேக்கு, கருங்காலி முதலிய உயர்ந்த வகை மரங்களால் அமைக்கப்பட்டிருந்தன.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் சுல்தான் தாவிது என்பவரிடமிருந்து கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த லார்ட் தாமஸ் ரூம்பால்ட் என்பவர் வாங்கி 'தோட்ட வீடு' எனப் பெயரிட்டுப் பயன்படுத்தி வந்தார். அவருக்கு ஏற்கெனவே புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த அலுவலக வீட்டுடன் கூடுதலாக இத்தோட்ட வீடும் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர், லார்ட் எட்வர்டு கிளைவ் காலத்தில் அக்கட்டடத்தின் சுற்றுப்புறத்திலுள்ள குடியிருப்புகளை அப்புறப்படுத்தி விரிவுபடுத்தப்பட்டு, 'அட்மிரால்டி ஹவுஸ்' என்றழைக்கப்பட்டு வந்தது. இத்தோட்ட வீடானது, 1797–1798–இல் ஆளுநரின் முதல் அலுவலக வீடாகப் பயன்படுத்தப்பட்டது.

1946 ஆம் ஆண்டு கிண்டி ராஜ் பவன் மாளிகைக்கு ஆளுநரின் மாளிகை மாற்றப்படும் வரையில் 'அட்மிரால்டி ஹவுஸ்' ஆளுநரின் அதிகாரபூர்வ மாளிகையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. 1946 ஆம் ஆண்டு முதல் இக்கட்டடம் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களின் விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு, பின்னாளில் சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி என அழைக்கப்பட்டது. இந்த உறுப்பினர் விடுதியில், பிரதான கட்டடத்தின் 28 அறைகள் உள்பட மொத்தம் 37 அறைகள் இருந்தன. முதல் தளத்தில் குழுக்கள் கூடும் மர வேலைப்பாடுடைய இந்தக் கட்டடத்தின் பிரதான அறைகளில் 1985 மே வரை



உறுப்பினர் பழைய விடுதி – இராஜாஜி மண்டபம்

சட்டமன்றக் கட்சிகளின் அலுவலகங்கள் இயங்கி வந்தன.

3–12–1994 முதல் இந்தக் கட்டடத்தில் காவல் துறை கூடுதல் இயக்குநர் அலுவலகம், குற்றப் புலனாய்வுத் துறை தலைமை அலுவலகம் ஆகியவை செயல்பட்டு வந்தன. புதிய சட்டமன்ற வளாகம் கட்டப் படுவதற்காக மட்டுமின்றி ஏற்கெனவே கட்டடத்தின் முக்கிய பகுதிகள் இடிந்துவிட்ட நிலையில், மேலும் பராமரிக்கத்தக்க வகையில் இல்லாததைக் கருத்திற்கொண்டு, 2008 ஆம் ஆண்டு இக்கட்டடம் இடிக்கப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர் முந்தைய புதிய விடுதி

(Erstwhile New Legislators' Hostel)

1956–57 ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்களின் ஆணைக்கிணங்க, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்காக, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் முந்தைய புதிய விடுதி (Erstwhile New Legislators' Hostel) கட்டப்பட்டது. இக்கட்டடம், தரை தளம் 1,293 சதுர மீட்டர், முதல் மற்றும் இரண்டாவது தளம் தலா 1,230 வீதம் 2,460 சதுர மீட்டர், ஆக மொத்தம் 3,753 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ.1,42,07,140/– (ஒரு கோடியே 42 இலட்சத்து 7 ஆயிரத்து 140 ரூபாய்) செலவில் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் காரை ஆகியவற்றால் கட்டப்பட்டது.

கீழ்த் தளம் மற்றும் இரு தளங்களுடன் இவ்விடுதி மொத்தம் 105 அறைகள் கொண்டது. இங்கு

102 ஒரு நபர் அறைகளும், 3 இரு நபர் அறைகளும் இருந்தன. இவ்விடுதி வளாகத்திற்குள் பூங்கா ஒன்றும் பராமரிக்கப்பட்டு வந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் வசதிக்காக இவ்விடுதியில் மின்னணு தொலைத் தொடர்பகம் 2000 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. இவ்விடுதிக்குத் தேவையான தண்ணீரை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடமிருந்து பெற்று வழங்கும் பணியையும், பராமரிப்புப் பணியையும் பொதுப் பணித் துறை மேற்கொண்டிருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருந்தபோது அவர்கள் வசதிக்காக விடுதி அறைகளில் தொலைபேசி வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைக்கப் பட்டிருந்தன. பேரவைச் செயலகத்தின் நூலகம் ஒன்றும் அமைந்திருந்தது.

12–6–2000 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி



அவர்களால் திறக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் (ஏ, பி, சி மற்றும் டி தொகுப்புகள்) சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு வந்த பின்னர், இவ்விடுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் விருந்தினர்கள் தங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.


இவ்விடுதி, புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டப்படுவதற்காக 2008 ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது.

அடுக்கு மாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதி

(Multi-storeyed Legislators' Hostel)

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், 5–1–1968 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களால் அடுக்கு மாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதி (Multi-storeyed Legislators' Hostel) திறந்து வைக்கப்பட்டது. கீழ்த் தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட எழில்மிக்க அடுக்கு மாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதியின் கட்டடப் பணி 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 3 கோடியே 76 இலட்சத்து 45 ஆயிரத்து 882 ரூபாய் செலவில் ஓர் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டது.

இக்கட்டடத்தின் பரப்பளவு தரை தளம் 2,839 சதுர மீட்டர், ஒன்று முதல் ஆறு தளங்கள் தலா 1,114.50 வீதம் 6687 சதுர மீட்டர், ஆக மொத்தம் 9,528 சதுர மீட்டர் ஆகும். இவ்விடுதியில் தரை தளத்தில் 11 அறைகளும், ஆறு தளங்களிலும் சேர்ந்து 192 அறைகளும், ஆக மொத்தம் 203 அறைகள் உள்ளன. இதில் 168 ஒரு நபர் அறைகளும், 24 இரு நபர் அறைகளும் அடங்கும். கீழ்த் தளத்தில் குழுக் கூட்ட அறை, உள் விளையாட்டு அரங்கம், இரயில்வே பயணச்சீட்டு வழங்கும் அறை, சுகாதாரப் பணியாளர் அறை போன்றவை உள்ளன. கீழ்த்தளத்தில் அறைகள்



தற்போது ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. பேரவைச் செயலகத்தின் நூலகம் ஒன்றும் இங்கு அமைக்கப் பட்டுள்ளது. இது தவிர மூன்று துயிலறைகளும் (dormitories) உள்ளன. 6 மின் தூக்கிகள் இவ்விடுதியில் உள்ளன. சைவ மற்றும் அசைவ உணவகங்களுக்காக, கீழ்த் தளத்தில் விசாலமான இரு கூடங்கள் உள்ளன. தற்போது அசைவ உணவகம் மட்டும் நடத்தப்பட்டு வருகின்றது. அடுக்கு மாடி விடுதியின் முன்புறம் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடுதியில் 12–6–2000 ஆம் தேதி வரை சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு இட வசதி அளிக்கப்பட்டது.

12–6–2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் (ஏ, பி, சி மற்றும் டி தொகுப்பு வீடுகள்) பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின், இந்த விடுதியின் அறைகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் விருந்தினர்கள், வெளி மாநில சட்டமன்றக் குழுவினர் மற்றும் வெளி

மாவட்டங்களிலிருந்து பணியின் பொருட்டு சென்னை வரும் அரசு ஊழியர்கள் ஆகியோர் தங்குவதற்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. இந்த விடுதியின் கட்டடப் பகுதிகள் இடிந்துள்ளதால் சில அறைகள், மின் தூக்கிகள், படிக்கட்டுகள் ஆகியவை பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. இதன் காரணமாக இவ்விடுதி இடிக்கப்படவுள்ளது.



சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம்
(MLAs' Residential Quarters Complex)

12-6-2000 ஆம் நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கான குடியிருப்பு வளாகம் திறந்து வைக்கப்பட்டது. இக்குடியிருப்பைக் கட்டுவதற்கான நிர்வாக அனுமதி 19-3-1997 அன்று வழங்கப்பட்டது. 5.36 ஏக்கர் நிலத்தில் ரூ.4,461.97 இலட்சம் மதிப்பீட்டில் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் ஹட்கோ நிறுவன கடன் உதவியுடன் கட்டப்பட்டுள்ளன. திருவாளர்கள் தலா குப்புசாமி ரிபெல்லா இத்திட்டத்திற்கு கட்டட நிபுணர்களாக இருந்து செயல்பட்டனர். இக்குடியிருப்பின் கட்டுமானப் பணிகள் திருவாளர்கள் ஹிந்துஸ்தான் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

இக்குடியிருப்பு வளாகம், அரசினர் தோட்டத்தில் உள்ள மரங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாவண்ணம் அமைக்கப் பெற்றதனால், தற்போது வளாகத்தைச் சுற்றிலும் உள்ளே மரங்கள் மற்றும் செடிகளால் சூழப்பட்டு இயற்கை அழகுடன் காட்சியளிக்கிறது. இக்குடியிருப்பு வளாகம் ஏ, பி, சி மற்றும் டி என 4 தொகுப்புகளாக, தொகுப்புகள் ஒவ்வொன்றிலும் (கீழ்த் தளம் நீங்கலாக) பத்து அடுக்கு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப் பெற்றுள்ளது. ஒரு மாடியில் இரு படுக்கை அறை கொண்ட 6 குடியிருப்புகளாக, 10 மாடிகளில் மொத்தம் 60 குடியிருப்புகள் (ஒவ்வொரு தொகுப்பிலும்) இருக்கின்றன. இவ்வாறு நான்கு தொகுப்பு கட்டடங்களில் (Block A,B,C,D) மொத்தம் 240 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு குடியிருப்பின் பரப்பளவு 1,553 சதுர அடி ஆகும். கீழ்த் தளத்தில் வரவேற்பறை, காவலர் அறை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடியிருப்பிலும் தேக்கு மரத்தினாலான கதவுகளும், கொசு வலையுடன்கூடிய அலுமினிய கண்ணாடி ஜன்னல்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அறைகளின் தரையில், வெள்ளை சலவைக் கற்களும், சமையல் அறையில் சஹாஜாபாத் கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், சோபாக்கள், கட்டில்கள் உள்ளிட்ட அறைகலன்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுப்புக் கட்டடத்திலும் தலா இரண்டு வீதம், மொத்தம் 8 நவீன மின் தூக்கிகள் தொலைபேசி வசதியுடன் ஜான்சன் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மேலும், மின் தடை ஏற்படின், பொது விளக்குகள் மற்றும் மின் தூக்கிகளை இயக்க மின் ஆக்கி இயந்திர (ஜெனரேட்டர்) வசதியும் செய்யப் பட்டுள்ளது. தீ விபத்தினைத் தடுக்கும் கருவிகள் குடியிருப்பின் ஒவ்வொரு தளத்திலும் பொருத்தப்பட்டு உள்ளன.

குடியிருப்பு வளாகத்தைச் சுற்றிலும் தெரு விளக்குகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடியிருப்பு வளாகத்தில், நடைபாதைகளுடன் கூடிய அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, சிறுவர் விளையாட்டுப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் உறுப்பினர்களின் வசதிக்காக குளிர் சாதன வசதியுடன் கூடிய உணவக விடுதி, நூலக அறை, குழுக் கூட்ட அறைகள், அலுவலர்கள் அறை ஆகிய வசதிகளும் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகள் அனைத்திலும், குழாய்கள் மூலம் வெந்நீர் வழங்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலமாக, சூரியக்கதிர் மூலம் தண்ணீர் சூடேற்றும் கருவிகள் குடியிருப்புகளின் மேல்தளத்தில் பொருத்தப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்பு வளாகத்தில் இந்தியன் வங்கியின் கிளை ஒன்றும், சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் வசதிக்காக இரயில்வே பயணச்சீட்டு வழங்கும் மையம் ஒன்றும் இயங்கி வருகின்றன.



சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் அதன் தொடர்புடைய அலுவலகங்களுக்கும் 'அகத் தொலைபேசி' (intercom) வழங்கும் பணி நடைபெற்று, விரைவில் முடிவு பெறும் நிலையில் உள்ளது.


இக்குடியிருப்பில் தங்கும் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு மாத வாடகையாக ரூ. 250/– வசூலிக்கப் படுகிறது.

சட்டமன்றப் பேரவை அவைக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, அவ்வப்போது சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகளில் கூடுதல் வசதிகளை சட்டமன்றப் பேரவைச் செயலகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாகச் செய்து வருகிறது.

நவீன உடற்பயிற்சிக் கூடம்








சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள குடியிருப்பு வளாகத்தில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான நவீன உடற்பயிற்சிக் கூடம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 16-7-2009 அன்று திறந்து வைக்கப்பட்டது.

"சட்டப் பேரவையில் கலைஞர் பொன் விழா" - சில முக்கிய உரைகளின் தொகுப்பு
(11-5-2007 மற்றும் 12-5-2007)

சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களின் வரவேற்புரை - 11-5-2007



சமுதாயக் கொடுமைகள் என்ற சமூகச் சரிவுகளில் சிக்கித் தவித்த தமிழ் மக்களைக் கரையேற்ற வந்த கலங்கரை விளக்கமாய், ஒளி விளக்காய், உழைப்புச் செம்மலாய், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1957 ஆம் ஆண்டு முதல் போட்டியிட்ட ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்று, 50 ஆண்டுகளுக்கு மேல் சட்டமன்றத்தில் பங்குபெற்று பெருமைக்குரிய வரலாறுகளைப் படைத்து வரும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்துகின்ற இந்நாள் ஒரு திருநாள், தமிழகத்தின் வருங்கால வரலாற்றை உருவாக்கும் ஒரு பொன்னாள்.

தமிழக வரலாற்றின் பொன்னேட்டில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குகிற நிகழ்ச்சியாக தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே, உலகிலேயே எந்த முதல்வருக்கும் இல்லாத பெருமை, ஐந்தாம் முறையாக முதல்வராக அமர்ந்து நல்லாட்சி நடத்தி வரும் சிறப்பு நம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மட்டுமே உரியது. ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவரும், இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் ஜனநாயக நெறிகளைக் கட்டிக் காப்பவரும், மனித உரிமைக்கு உரத்த குரல் கொடுப்பவரும், பெரியாரின் சலியாத உழைப்பும், பெருந்தலைவர்

காமராஜர் அவர்களின் அயராத தொண்டும், அண்ணா அவர்களின் பரந்த உள்ளமும், இவை அனைத்திற்கும் இலக்கணமாகத் திகழ்பவரும், தமிழனுக்காகவும், தமிழ்



மொழிக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்பவரும், தன் அரசியல் அனுபவங்கள் அத்தனையையும் மனித நேயத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே பயன்படுத்திக் கொண்டு இருக்கும் நம் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இப்பொன் விழா நிகழ்ச்சியில் பாராட்டுரை வழங்க வந்துள்ள, ஹரியானா மாநிலத்தில் பிறந்து, சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்று, வழக்கறிஞராகப் பணியாற்றி, சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, மத்திய அமைச்சராக, பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சராக, இன்றையதினம் தமிழகத்தில் இரண்டாவது முறையாக ஆளுநராக இருக்கும் மேதகு திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!

நெல்லைச் சீமையிலே சாமானியனாகப் பிறந்து, வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கிய என்னை, சரித்திரப் புகழ் வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் பேரவைத் தலைவராக உயர்ந்த நிலையில் அமர வைத்து சிறப்புச் சேர்த்த என் குடும்பத் தலைவர், தமிழ் இனத்தின் பகைக் கூட்டத்தை எதிர்க்கும் உறுதி படைத்தவர், தமிழ் மொழியைப் பாதுகாக்கும் உணர்வுக்கு வடிவம் தந்தவர், நீதிமன்றத்தில் தமிழில் வாதாட உரிமையைப் பெற்றுத் தந்தவர், ஆதி திராவிட மக்களின் உரிமைகளை நிலைநாட்டி அவர்கள் வாழ்க்கையில் வளம் சேர்த்தவர், பகுத்தறிவு தந்த தந்தை பெரியாரின் கரம் பற்றி, அவர்தம் பாசறையில் பயிற்சி பெற்று பேரறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் இடம் பெற்று, இன்று தமிழக மக்களின் உள்ளங்களில் கொலு வீற்றிருக்கும் பொன் விழா நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே! பேரவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்களே மற்றும் அமைச்சர் பெருமக்களே! சட்டமன்றக் கட்சித் தலைவர்களே! பேரவை உறுப்பினர்களே! சிறப்பு அழைப்பாளர்களே! பத்திரிகையாளர்களே! வருகை தந்திருக்கும் அறிஞர் பெருமக்களே!

நான் நெல்லை மாவட்டத்திலே மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றியபோது, இயக்கத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழா மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து சிறப்பாக நடத்தும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதே வகையில் ஐந்தாவது முறையாக அரியணையில் வீற்றிருக்கும் கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா நிகழ்ச்சியிலும் பேரவைத் தலைவராக இருந்து கலந்துகொள்கின்ற ஒரு பெரும் பேறு எனக்குக் கிடைத்துள்ளது. இது யாருக்கும் கிடைக்காத அரிய பேறு. (மேசையைத் தட்டும் ஒலி) இதனைப் பெற நான் என்ன தவம் செய்தேன் என பூரிப்பும், பெருமையும் அடைகின்றேன்.

நான் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்ற அன்றையதினம் என்னை இந்தப் பதவியில் அமர்த்தி, தமிழ்நாடு ஒரு ஜனநாயகத் தோட்டம் என்பதனை நாட்டுக்கு, உலகுக்கு அறிவிக்க அனைவரும் உதவிடுவோம் என்று என்னை வாழ்த்தி, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இருக்கையிலே அமர வைத்தார்கள். 1957 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் முதன்முதலாக அன்றைய அவைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்களைப் பாராட்டிவிட்டு கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:

“நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. நாங்கள் இதுபோன்ற பாராளுமன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள், தங்களுடைய புன்சிரிப்போடு கூடிய கட்டளையினால் எங்களைத் திருத்தவேண்டும். பண்படுத்தப்பட்ட ஜனநாயகவாதிகளாக ஆக்கவேண்டும். இன்று இந்த நாட்டில் அரசியல் பெருந்தன்மை என்பது அதிகமாகத் தேவைப்படுகிறது. அரசியல் பெருந்தன்மை என்பது கொடுத்து வாங்கப்படவேண்டிய ஒன்றே தவிர, ஒரு வழி வியாபாரம் இல்லை” என்றார்.

இன்றையதினம் கலைஞர் அவர்கள், எதிர்க்கட்சிகளுடைய கருத்துகளுக்கு மிகுந்த மதிப்பளித்து, ஜனநாயக மரபுகளைக் காத்து, அவர்களின் பேச்சுக்கு முதலிடம் கொடுத்து, பதிலுக்குப் பதில் அளித்து, சுவை கெடாது, விரசம் தலை நீட்டாது, விரோத உணர்ச்சிகளுக்கு வித்திடாமல் ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காத்து பெரும் பெருமை பெற்ற ஜனநாயகவாதியாக பீடுநடை போடுகிறார்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும், எதிர்க்கட்சிகளை எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசி அலட்சியப் படுத்துவது ஓர் ஆளுங்கட்சியின் இலக்கணமாக அமைந்துவிடக் கூடாது என்று 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்து பேசியது மட்டுமின்றி, இன்றையதினம் ஆளுங் கட்சியாக இருந்துகொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தை அளித்து, ஏன், சில நேரங்களில், பிரதான எதிர்க்கட்சிகள் விதிகளுக்கு முரணாக செயல்பாடுகளில் ஈடுபடுகின்றபொழுதுகூட, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தில் குரல் எழுப்பியபோதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்க்கட்சிகளும் தங்களது ஜனநாயகக் கடமைகளை நெறிபிறழாது ஆற்ற வேண்டும் என்ற உயரிய கருத்தை வழங்கினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறந்த ஜனநாயக



வாதியாக சட்டமன்றத்தில் செயல்படும் விதம் சபையோருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகளையும், கண்டனங்களையும் திறந்த மனத்தோடு எதிர்கொள்கின்ற அரசியல் நாகரிகம் மிக்கவர் நம் முதல்வர் ஒருவரே. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டசபை விவாதங்களில் வேகம் இருந்தால்கூட வெப்பம் ஏற்பட்டுவிடக் கூடாது, வெப்பத்திற்குப் பதில் ஒளி கிடைக்கவேண்டும் என்ற கருத்தை இன்றையதினம் அவையில் செயல்படுத்தி வருகிறார். சூடாகத் தொடங்கும் வாக்குவாதங்களைக் கூட சுவையாகவும், அவையைச் சிரிப்பில் ஆழ்த்தும் விதமாகவும் முடிக்கும் பாங்கு நம் முதல்வர் அவர்களுக்கே உரியது.

தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் இன்றையதினம் சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா கொண்டாடுவதில் பூரிப்பெய்தியுள்ளது. இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகத்தில் வாழும் கோடானுகோடி தமிழ் மக்களும் இன்றையதினம் நம் தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகின்றார்கள். ஆனால், மாண்புமிகு கலைஞர் அவர்களே! கடல் அலைகள் கடும் புயலை பயன்படுத்திக்கொண்டு வானத்தைத் தொட்டுவிடலாம் என உயர்ந்து உயர்ந்து பார்க்கின்றன. தொட முடியாத கோபத்தில் தம்மைத் தாங்கிக்கொண்டு இருக்கும் பூமியின் பகுதிகளை அழிக்க முயலுகின்றன. இன்றையதினம், தலைவர் கலைஞர் அவர்களின் புகழைக் கண்டு பொறுக்க முடியாத சிலர் கழகத்தின் முன்னேற்றத்திற்கும், தங்களது உன்னத முயற்சிகளுக்கும் தடைக் கற்களாக இருக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், அத்தனை தடைக் கற்களையும் படிக் கற்களாக ஆக்கி வரும் பாங்கு தங்களுக்கே உரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, நாட்டுக்குப் பெருமையையும், புகழையும் தேடித் தந்து, தன்னுடைய நேரத்தையும், உழைப்பையும், பெருமையையும் பயன்படுத்தி, அவற்றின் மூலம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மேம்பாடு தந்து, சமுதாயத்திற்கும் ஏற்றம் தந்து, இந்நாட்டுக்கு நன்மையைத் தேடித் தரும் தங்கள் பணியினை நாட்டு மக்கள் மனதெனும் மணி மண்டபத்தில் வைத்து போற்றிப் பாராட்டுகிறார்கள். இன்றையதினம் ஆன்றோர்களும், சான்றோர்களும் உலகத்தில் வாழும் இலட்சோபலட்சம் தமிழ் உள்ளங்கள் அனைத்தும் தங்களைப் பாராட்டுகின்றார்கள். அய்யன் வள்ளுவர் கூறுகின்றார்:

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

அதாவது, நன்மையையும், தீமையையும் காத்து பிறருக்கும், தமக்கும் நன்மைகள் பயக்கும் பயன்களை விளைவிக்கின்ற அளவுக்கு, யார் யார் பாடுபட்டு வருகிறார்களோ, அவர்களுடைய பண்புகளை இந்த உலகம் பாராட்டும். அந்த வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சலியாத உழைப்பும், விடாத முயற்சியும், இன்றையதினம் தமிழர்கள் ஆகிய நமக்கெல்லாம் முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கின்றன.


ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளப் பெருங்குடி மக்கள், பாடுபட்டு உழைத்து வாழ்க்கை நடத்துவோர், திக்கற்றவர்கள் ஆகியவர்களுக்கு எல்லாம் வழிகாட்டவும், உற்ற துணையாக இருக்கவும், உதவி புரிய வேண்டுமென்ற எண்ணத்துடனும், எந்தெந்த வகையில் உதவி புரிய வேண்டுமோ, அந்தந்த வகைகளில் உதவிகளைப் புரிந்து அந்த நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற முறையில் தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் பயன்படுத்தி வருகின்றார் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றையதினம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொன் விழா நிகழ்ச்சியில் தலைவர்கள் எல்லாம் வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

இந்தியாவில் எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு நலத் திட்டங்களை அளித்திருக்கிறார்கள். அடித்தள மக்களுக்குக் குரல் கொடுக்கும் இயக்கமாக இருக்க வேண்டுமென்ற அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அடித்தள மக்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும்முகமாக எத்தனையோ திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளார்கள்.

இன்று தங்களை வாழ்த்த வயதில்லை என்றாலும், தங்களை வணங்கி போற்றக் கடமைப்பட்டுள்ளேன். சட்டமன்றத்தில் பொன் விழா கண்டுள்ள கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே பொன் விழா காண வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) புகழுடன் நிறை வாழ்வு வாழ வேண்டும் என வாழ்த்தி, வணங்கி இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்று, அமர்கின்றேன். வணக்கம்.

அவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் உரை - 11-5-2007

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே, சட்டமன்றத்தில் பொன் விழா காணுகின்ற பெருமைக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, வாழ்த்துரை வழங்கி உரையாற்றி இருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, விருந்தினர்களாக வந்திருக்கின்ற மைய அரசின் அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே, பெரியோர்களே, நண்பர்களே, இந்த விழாவில் சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் எட்டி இருக்கின்ற, தொடர்ந்து மேலும் பல ஆண்டுகள் நீடிக்க இருக்கின்ற கலைஞரை வாழ்த்துகிற இந்த விழாவில் தமிழ் கற்றுக்கொள்வதிலே ஆர்வம் கொண்டு கற்று, இங்கே ஆற்றிய உரையெல்லாம் கேட்டு மகிழ்கின்ற சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுடைய வாழ்த்தும் இடம் பெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.



பாராட்டப்படுவது கலைஞர்தான், வாழ்த்துரைக்கப் படுவது கலைஞர்தான். ஆனால், நான் உடல் எல்லாம் மெய் சிலிர்த்து, புளகாங்கிதத்திலே ஆழ்ந்து, என்ன பேசுவது என்றே தெரியாமல் தவித்துக் கொண்டே நிற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசத் தொடங்கிய அந்த நாட்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு விழாவிலே, மாணவனாக இருந்த நான், அந்த விழாவிலே பேசுகிறபோது என்னுடைய உரையைக் கேட்டுவிட்டு, புரட்சிக் கவிஞர் சொன்னார். ''நானும், என்னைப் போன்றவர்களும் பிறந்து வளர்ந்து பேசக் கற்றுக் கொண்டோம், பேசுகிறோம். அன்பழகன், பேசிக்கொண்டே பிறந்தவன். அதனால் இப்படிப் பேசுகிறான்'' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், இன்று நான் பேச முடியாதவனாக நிற்கிறேன். ஏனென்றால், இந்த அவையில் இன்றைக்குப் பேசிய கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவருடைய பேச்சும், இன்னும் ஒரு முறை பேச மாட்டார்களா, தொடர்ந்து

கேட்க மாட்டோமா, (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பேச எங்கேதான் கற்றுக் கொண்டார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் கலைஞர் இடம் பெற்றிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இந்தப் பேச்சுக் கலையும் வந்துவிட்டதோ! (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது அவர்கள் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட அந்தப் பொருள் அவ்வளவு உயர்ந்த பொருளாக ஆகிவிட்ட காரணத்தால், அவர்களும் உயர்ந்து விட்டார்களோ! (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் எண்ணுகிறேன், வியக்கிறேன்.

என்னுடைய உள்ளத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று இருந்து, இதைக் காணவில்லையே என்ற ஓர் ஏக்கம் பிறக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்கள் எல்லாம் பேசிய பல அருமையான கருத்துகளை நூலாக அச்சிட்டு, வெளியிடப்பட்டு, பல இலட்சக்கணக்கான ஏடுகள்மூலமாக பரப்பப்பட வேண்டிய கருத்துகளை இங்கே உரையாற்றினார்கள். அவற்றை வெளியிடும் அந்தக் கடமையை இந்த விழாக் குழுவினுடைய பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே கலைஞரை வாழ்த்துவதற்கு எங்களுக்கு வயதில்லை என்று என்னுடைய நண்பர் சுதர்சனம் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். ஆனால், எனக்கு அந்தப் பஞ்சம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வயதும் இருக்கிறது, வாழ்த்துகிற உரிமையும் இருக்கிறது, வாழ்த்திய பழக்கமும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவரை வைவதற்குத்தான் எனக்குச் சந்தர்ப்பம் இல்லை. (சிரிப்பு) தொடக்கத்தில் கலைஞரை அறிஞர் அண்ணா அவர்கள் பார்த்த அந்த நாளில் நானும் அவரை ஒரு மாணவனாகப் பார்த்தேன். யாரோ சொன்ன நினைவு, எனக்குச் சரியாக நினைவில்லை, அரைக்கால் சட்டை மாணவனாக கலைஞரை 14 வயதில் அண்ணாவோடு பார்த்தவன் நான்.

திருவாரூர், விஜயபுரத்தில் சிக்கந்தர் ஹயத் கான் என்ற சிந்து மாநிலத்தினுடைய தலைவர், முஸ்லீம் லீக் ஜனாப் ஜின்னாவினுடைய கட்சியிலே விளங்கியவர், அவர் மறைவுக்கு ஒரு இரங்கல் கூட்டம், அதை நடத்திய நிகழ்ச்சியில் பேச அண்ணா வந்தார். அவருக்குத் துணையாக நான் சிதம்பரத்திலிருந்து சென்றிருந்தேன். அங்கே கலைஞரை அழைத்து வரச் சொல்லி அண்ணா பேசினார். அதற்குப் பின்னர் இந்தச் சட்டமன்றத்திலே நுழைகிறபோது நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் நுழைந்தோம். நானும், அவரும் ஒன்றாகவே நுழைந்தோம், அவர் எங்கோ போய்விட்டார்! (மேசையைத் தட்டும் ஒலி) நானும் எங்கெங்கோ போய்விட்டு இங்கே வந்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் பாராளுமன்றத்திலே 4 ஆண்டு காலம் திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்திலே இடம் பெற்றவன். மேலவையிலே 5 ஆண்டு காலம் இடம் பெற்றவன். அவருக்குப் பெருமை சேர்ப்பதற்காக நான் இரண்டு முறை தேர்தலிலே தோற்றவன்! (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கலைஞர் அவர்களும், நானும் பெரியாரிடத்திலே பற்றுகொண்ட சிறுபிள்ளைகளாக அவரைப் பார்த்தவர்கள், கண்டவர்கள், அவரிடத்திலே சென்று பணியாற்றிய அந்தப் பெருமை அண்ணாவுக்கு உண்டு, கலைஞருக்கு உண்டு, என் தோழர் நாவலருக்கு உண்டு. நான் ஐயாவினிடத்திலே பற்றுகொண்டவன். குடும்ப வழியிலேயே என்னுடைய தந்தையார் மூலமாகப் பழகிப் பற்றுகொண்டவன். 7 வயதிலேயே பார்த்தவன், 9 வயதிலேயே அவருடைய பேச்சைக் கேட்டவன். ஆனால், அவருடைய பேச்சைக் கேட்டு புரிந்துகொள்ளாத காரணத்தால் நான் அவர் பின்னால், நேராக அவரிடத்திலே பணியாற்றச் செல்லவில்லை. அந்தக் கருத்துகளிலே ஒரு தெளிவு பிறந்த மனம் கலைஞரிடத்திலே இருந்த காரணத்தால் 14 வயதிலேயே எழுதத் தொடங்கினார், கொள்கையைப் பரப்பத் தொடங்கினார்.

நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதுபோல, மன்னார்குடி வரையிலே நடந்து சென்று நன்கொடை பெற்று வந்து ஏடு நடத்த வேண்டிய நிலையிலே அவர் இருந்தார். ஆனால், அப்போது நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவன், என்னை அழைத்து ஒரு ஆண்டு விழாவிலே, அவருடைய ஏட்டினுடைய வெளியீட்டு ஆண்டு விழாவிலே பேச வைத்தார். அது முதல் அவரை நேராக அறிகிற வாய்ப்பு எனக்கு உண்டு. ஆனால், இளமையிலே அவருடைய எழுத்தாற்றலினுடைய திறமை எனக்குத் தெரியவில்லை. அறிஞர் அண்ணா புரிந்துகொண்டார். 'நீ எழுதுவது நன்றாக இருக்கிறது, ஆனால் இன்னும் கொஞ்சம் படித்துவிட்டு எழுது' என்றார். அவர் பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது அந்தப் படிப்பிலே அவருக்கு ஈடுபாடு அதிகமில்லை. ஆனால், அதிகம் படித்தார். அதைவிட

பல மடங்கு படித்தார். இன்னும் சொல்லப்போனால், ஒரு எழுத்தாளனாக உயர்கிற நோக்கத்துடனேயே படித்தார், கொள்கையைப் பரப்புவதற்காகவே படித்தார். அப்படி எல்லாம் படித்து, எழுதி, பெரியாருக்குப் பக்கத்திலே இருந்து தொண்டாற்றி, பெரியாருடைய அன்பைப் பெற்று, பாராட்டைப் பெற்று, இன்றைக்கு அவருக்கு ஈடாக யாரும் இல்லை என்ற அந்த நிலையில் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பாராட்டைப் பெற்று வருகிறார்.

நான் தொடக்க காலத்திலே என்னுடைய அறிவு, என்னுடைய மன நிலை, என்னுடைய மனப் போக்கு இவை காரணமாக, யார் எழுதியதையும் ஒரு முறைக்கு மேல் மறு முறை படிக்க மாட்டேன். படிக்க ஆர்வம் வராது. ஆனால், நேற்றையதினம் இந்த அவையில் பராசக்தி வசனத்தை எடுத்துரைத்து ஓ. சுப்பிரமணியம் பேசுகிறபோது, அந்த பராசக்தி திரைப்படப் பேச்சு, வசனத்தை அப்படியே இங்கே பேசியபோது, இன்னும் 50 ஆண்டுகள் கழித்துப் பேசினாலும் அதே அளவுக்கு ஈர்க்கக்கூடிய ஆற்றல் அந்த வசனத்திற்கு இருக்கிறது என்று உணர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு வசனம், உரையாடல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பொருத்தமாக இருந்தால் அது வசனம். அது பாராட்டப்படும். இந்த வசனம் எவ்வளவு காலத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது என்று பார்க்கிறபோது, கலைஞருடைய காலமெல்லாம் பேசப்படுகிற வசனமாக, இந்த இயக்கம் உள்ளளவும் பேசப்படுகிற வசனமாக, கருத்துக் கருவூலமாக, சிந்தனைக் களஞ்சியமாக விளங்குகிற ஓர் உரையாடலை, வசனத்தை அவரால் அந்த வயதிலேயே எழுத முடிந்தது என்று சொன்னால், அவர் பெற்றிருந்த அறிவாற்றல் சாதாரணமானது அல்ல. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நான் அறிந்த பெரும் புலவர்கள், தமிழ் அறிஞர்கள், என்னோடு பழகியவர்கள், எனக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் அவர்களெல்லாம்கூட கலைஞரைப்போல் இன்னொருவரால் தமிழை வளர்க்க முடியாது, எழுத முடியாது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

அவர் சங்கத் தமிழ் எழுதிய காரணத்தால்தான் சங்கத் தமிழுக்கே பெருமை ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் சங்கத் தமிழைப் படித்தவன்தான், அதைப் போற்றுகிற உணர்வைப் பெற்றவன்தான், புறநானூறும், அகநானூறும் ஓரளவு தெரிந்தவன்தான். ஆனால், அதை இவ்வளவு அழகான பா வடிவில் சொல்லக்கூடிய வாய்ப்புடையதாக அந்த இலக்கியம் இருக்கிறது என்பதை கலைஞர் எழுதிய சங்கத் தமிழ்தான் காட்டியது.

திருக்குறள் வெண்பாக்கள் அறிவுரையாகத்தான் இருக்கும். ஆனால், குறளோவியமாக அவராலேதான் மலர்ந்தது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அவர் எழுதிய சிலப்பதிகாரத்தைப் பூம்புகாராக மாற்றினாரே அந்தப் பூம்புகார், அறிஞர் அண்ணாவால் வியந்து பாராட்டப்பட்டது. எனவே, இவைகளையெல்லாம் நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது என்பது, இந்த நேரத்தில் போதுமான அளவு காலம் இல்லாத சூழ்நிலையில், அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அவருடைய புகழ், பெருமை இவையெல்லாம் சட்டமன்றத்திற்கே பெருமை சேர்த்திருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சட்டமன்றத்திலே எண்ணங்களை வெளியிடுவது என்பதுதான் மரபு. எண்ணங்களைச் சற்று அழகுபடுத்தி எடுத்துச் சொல்வது என்பது சட்டமன்றத்திலே உரையாற்றுவதற்குச் சிறப்பு. மற்றவர்களுடைய எண்ணங்களையெல்லாம்கூட தன்னுடைய எண்ணத்திற்கு உட்பட்டதாக வைத்துக்கொண்டு, அதைவிட்டு மிஞ்சிப் போகாமல், ஆட்கொள்வது என்பது கலைஞருடைய தனிச் சிறப்பு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அது காரணமாகத்தான், இந்த அவையில் வேண்டுமென்றே பல நேரத்தில், பல நோக்கத்தோடு, பல உறுப்பினர்கள் நடந்துகொள்கிற நிலைமை இருந்தாலும்கூட, அமைதி, அடக்கம், ஒழுங்கு காக்கப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இவற்றைக் காப்பாற்றுகிற ஓர் அமைப்பாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அமைப்பை கலைஞர் அவர்கள் வழி நடத்திச் சென்றிருக்கிறார்கள்.

கலைஞர் எங்களையெல்லாம், உடனிருக்கிற நண்பர்களை, தோழர்களையெல்லாம் ஏமாற்றி அறிஞர் அண்ணா அவர்களுடைய இதயத்தை இரவலாக வாங்கிக் கொண்டார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனால், நான் அறிஞர் அண்ணாவின் இதயத்திலேயே இருந்தவன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனால், அவர் இரவலாக வாங்கியபோது நானும் அவருக்குள்ளேயே அடக்கமாகிவிட்டேன்! (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், என்னை எம்.ஜி.ஆர். அவர்களே அழைத்தபோதுகூட, என்னையா அழைத்தீர்கள் என்றுதான் நான் கேட்டு அனுப்பினேன்.

மறுபடியும் அவரிடமிருந்து பேச்சு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் சொல்வதற்குக்கூட காரணம், கலைஞரை ஆதரித்ததற்காக அல்ல. திராவிட இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் எந்த நோக்கத்தோடு தோற்றுவித்தார்களோ, சுய மரியாதை உணர்வை ஊட்டினார்களோ, பகுத்தறிவு இயக்கக் கருத்தைப் பரப்பினார்களோ, எதற்காக உழைத்து, உழைத்து, உழைத்து, அலைந்து, அலைந்து, அலைந்து, தன்மானத்தைப் பற்றிப் பேசினார்களோ, அதைக் காப்பாற்றுவதற்கு, அவரைவிட்டால் ஒரு திறமையுள்ள தலைவர் தமிழகத்திலே இல்லை என்பதால். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா அவர்கள் எந்த இலட்சியத்தோடு தந்தை பெரியாரைவிட்டு வெளியே வந்து தந்தை பெரியாருடைய இலட்சியத்தைக் காப்பாற்றுகிற பணியையே தான் மேற்கொண்டு, அதை அரசியல் இயக்கமாக வளர்த்து, கொள்கைகளை நாட்டில் சட்டப்படி நிறைவேற்றக்கூடிய ஒரு வாய்ப்பை சட்டமன்றத்தின் மூலமாக உருவாக்க வேண்டுமென்ற உணர்வோடு, ஜனநாயகப் பாதையிலே இந்த இயக்கத்தை அழைத்துச் சென்றார்களோ அந்தப் பாதையில் நடைபோடக்கூடிய, வழிகாட்டக்கூடிய ஆற்றல் கலைஞருக்கு ஈடாகப் பெற்றவர்கள் வேறு யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றையெல்லாம்பற்றி இன்னும் எந்த வகையிலே அவரைப் பெருமைப்படுத்திப் பேசுவதாக இருந்தாலும், நான் பேசினாலும்கூட, அவரோடு உள்ளவன் பேசுகிறான் என்ற வகையிலேயும் மற்றவர்கள் எல்லாம் பேசினாலும்கூட, அவரைவிட இளைஞர்கள் பேசுகிறார்கள் என்ற முறையிலேயுந்தான் உலகம் கருதும். அவரைப் பார்த்துத் தெரிந்து கொண்டதை நாம் பேசுகிறோம் என்று கருதுவார்கள். நான் தெரிந்து கொண்டதைப் பேசுகிறபோது, நம்மைவிட வளர்ந்தவரைப் பற்றிப் பேசுகிறோம், நம்மைவிட உயர்ந்த நிலையிலே உள்ளவரைப் பற்றிப் பேசுகிறோம். நாமெல்லாம் வியக்கக்கூடிய அளவிற்கு ஆற்றல் படைத்தவரைப் பற்றி நாம் பேசுகிறோம் என்று நாம் நம்முடைய பேச்சு ஏற்கப்படுவதற்கு ஓர் எல்லையிட்டுக் கொள்ளவேண்டிய அந்த ஒரு நிலையில்தான் இருக்கிறோம்.

ஆனால், அவரைப் பற்றி பெரியார் அவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார் சிறுவனாக கலைஞரைப் பார்த்த பெரியார், கலைஞரையும், என்னையும் நாங்கள் ஓரிடத்திலே பேசியதைக் கேள்விப்பட்டு பெரியாருக்கு கோபம் வந்த காரணத்தால், அன்பழகனையும், கருணாநிதியையும் இன்று முதல் நமது பத்திரிகையிலே அவர்களுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று பெரியார் அறிக்கை கொடுத்து, குத்தூசி குருசாமி அவர்கள் அதனை வெளியிட்டார்கள். அப்படிக் கண்டித்து வெளியிட்டாலும், மறுபடியும் பெரியாரிடத்தில்தான் நாங்கள் நின்றோம். அது வேறு. ஆனால், அவர்கள் சொல்கிறார்கள், நமது கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதியாவார். இத்தகைய பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்தரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன்மூலம், தமிழர்களுக்கு புது வாழ்வு தருபவர் ஆகிறார். அவர் பல்லாண்டு வாழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பணி வெற்றி அடைய வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

அவரே சொல்கிறார்; ஒரு கட்சியை ஆரம்பித்து, ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்து – இருந்தாரா என்று சில பேருக்கு சந்தேகம் – ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்து, அந்தக் கட்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து, அந்தக் கட்சியை நாடாளும் ஸ்தாபனம் ஆக்கியவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் அறிவில் சிறந்தவர், நிர்வாகத்தில் சிறந்தவர். பொதுத் தொண்டிற்காக தியாகம் செய்வதில் சிறந்தவர். இதைச் சொன்னவர் பெரியார். ஆட்சியிலே இருக்கிறபோது நிறைவேற்றிக் காட்டக்கூடியவற்றை வேறு எவருக்கும் தோன்றாத கருத்துகளைச் சிந்தித்து, வெளியிட்டு, நிறைவேற்றிக் காட்டக்கூடியவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட அவருடைய அறிவு, ஆற்றல், திறன், தொண்டு, தியாகம் இவற்றைப் பாராட்டிச் சொல்ல வேறு வார்த்தை இல்லை என்று நான் கருதுகிறேன்.

அறிஞர் அண்ணா சொன்னார்; தமிழ்நாட்டின் வரலாற்றில் அதன் முற்பகுதியை நான் பேசியுள்ளேன், மன்னார்குடி கூட்டத்தில் அதன் பிற்பகுதியை தம்பி கருணாநிதி பேசுவார் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொரு நேரத்திலே அண்ணா சொன்னார், தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்று சொன்னாலும், அமைச்சர் பொறுப்பேற்று பணி ஆற்று

என்று சொன்னாலும், இரண்டையும் ஒன்றேபோல் கருதி ஏற்பவன்தான் என் தம்பி கருணாநிதி என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

உணர்ச்சிக்கு உரு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியம் அல்ல. கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர். தமிழ் இலக்கியத்திற்கு நற்பணியாற்றியுள்ள கலைஞர் புகழ் திசை எட்டும் பரவுக. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா அவர்களே கலைஞருடைய புகழ் திசை எட்டும் பரவுக என்று வாழ்த்தினார்.

பலமுறை பலவாறு கலைஞரின் அறிவாற்றலை, இலக்கியப் புலமையை, நடைச் சிறப்பை, பாத்திரப் படைப்பை, அரசியல் பணியைப் பாராட்டியுள்ள அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார். என் தம்பி கருணாநிதியிடம் நாடு நிரம்பவும் எதிர்பார்க்கிறது. பல வகையிலும் தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற வல்லவர் என்று அவரை எதிர்ப்பார்க்கிறது என்று. அண்ணா குறிப்பிட்ட அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டு இருப்பவர் கலைஞர்.

மூதறிஞர் இராஜாஜி சொன்னார், கருணாநிதி வேறு எவரையும்விட ஒரு சிறந்த முதலமைச்சராக விளங்குவார் என்பதில் சந்தேகம் இல்லை. அவரும் முதலமைச்சராக இருந்தவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பதவிகளில் இல்லாவிட்டாலும் காங்கிரசிலே மிகப் பெரிய தொண்டு செய்தவர் என்ற பெருமைக்குரியவராக விளங்கிய டி. செங்கல்வராயன் அவர்கள், அண்ணாவினுடைய நண்பர், அவர் சொன்னார். கலைஞர் 20 ஆண்டுகள் தொடர்ந்து சட்டசபை அங்கத்தினராக இருந்து வந்தது ஒரு சரித்திரச் சாதனை. 20 ஆண்டிற்கே சரித்திரச் சாதனை என்றார். கலைஞர் சிறந்த பேச்சாளர், உயர்ந்த எழுத்தாளர். அவர் நிர்வாகத் திறமைபெற்றவர். செய்யாததைச் சொல்ல மாட்டார், சொன்னதைச் செய்யாமல் இருக்க மாட்டார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தச் சட்டமன்றத்திலேயே நிதியமைச்சராகவும் விளங்கி, மத்தியிலேயும் பெரிய பொறுப்புகளை ஏற்று, வேளாண்மைத் துறை முதலானவற்றினுடைய அமைச்சராக விளங்கிய சி.எஸ். அவர்கள், "இப்போது கலைஞர் சிறந்த அனுபவமும், அறிவாற்றலும் பெற்று சிறந்த முறையில் ஆட்சி நடத்தி வருகிறார்; பல எதிர்ப்புகளைச் சமாளித்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகிறார்" என்று பாராட்டினார்கள். பண்டித நேருவினுடைய குடும்பத்தினரில் புகழுக்குரிய தலைவராக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் கருணாநிதி அவர்களைப்பற்றி "உறவு என்றாலும், பகை என்றாலும் கருணாநிதி உறுதியோடு இருப்பார்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவினுடைய சமூக நீதிக் காவலராகப் பெருமைபெற்ற வி.பி. சிங் அவர்கள் தமது வாழ்த்தை எழுதியனுப்பினார்கள்--கடந்த முறை கலைஞருடைய பிறந்த நாளில். "Karunanidhi is a multi-faceted personality of Indian politics. He is not only my colleague, but a friend who is close to my heart. He is a popular leader and is highly regarded and adored by the minority, backward, dalit and unprivileged communities since he has relentlessly strived for their upliftment" என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் சொன்னார், "சிறு வயதிலேயே கலை மனம் கொண்ட கலைஞர், சமூகப் புரட்சிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, பெரியாரின் சீடராக திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். நாஸ்திகர்களைப் புறக்கணிக்காமல், ஆஸ்திகர்களுக்கு அபயம் கொடுக்கிற சிறந்ததொரு ஜனநாயகப் போக்கைக் கலைஞரிடத்திலே காணலாம்." இது கலைஞருடைய ஜனநாயகக் கடமை என்ற முறையில் அவர் அனைவருக்கும் உரிய கடமையை எப்படி நிறைவேற்றுகிறார் என்பதை பக்தவத்சலம் அவர்கள் பாராட்டிச் சொன்னது.

இங்கே சுதர்சனம் அவர்கள் பேசுகிறபோது, மூப்பனார் அவர்கள், கபிஸ்தலம் கருப்பையா மூப்பனார் அவர்கள், அந்த நாளில் மக்களிடம் வாழ்த்துமாறு சொன்ன, அந்த கருத்தைச் சொன்னார்கள். "சுதந்திர இந்தியாவில், தமிழகத்தில் தமிழகத்தினுடைய சரித்திரம் கலைஞருடன் பின்னிப் பிணைந்தது என்று சொன்னால் அதில் தவறில்லை." (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொல்கிறார், "ஓர் அரசியல் கட்சியின் தளபதியாக, சிறந்த சிந்தனையாளராக, அற்புதமான இலக்கிய வாதியாக, கவிஞராக, நிர்வாகத் திறமைகொண்ட

முதலமைச்சராக, வாதிடும் வல்லமை கொண்ட எதிர்க்கட்சித் தலைவராக, சிறந்த பத்திரிகையாளராக, இப்படிப் பல்வேறு பரிமாணங்களில் முழுமையாகப் பரிணமித்த கலைஞர் தமிழினத்திற்குக் கிடைத்தது மிகப் பெரிய சிறப்பு.'' (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியலிலே மாறுபட்டு, கலைஞரிடமிருந்து சற்று வேறுபட்டு, வேறு கட்சியைத் தொடங்கிய புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். இந்த இயக்கத்திலே இருக்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள். ''கலைஞர் ஒரு ரோஜா மலர். எல்லோருக்கும் பிறந்த நாள் வருகிறது. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரது பிறந்த நாள்தான் சமுதாயத்தின் கவனத்தைக் கவரும் சிறப்பைப் பெறுகின்றது. ஒரு சகாப்தம். அந்த சகாப்தம் தொடரும். தொடர்வதன் மூலமாக திராவிடர் இயக்கத்தினுடைய பொது நோக்கம் மேலும் மேலும் இந்த நாட்டில் உரம் பெறும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிந்திக்கும் முறையினாலே, சீரோங்கிய நோக்கத்தாலே, செந்தமிழ்ப் பண்பாலே, செஞ்சொல் நலத்தாலே, பகுத்தறியும் பாங்காலே, சீர்திருத்தும் நெறியாலே, பண்படுத்தும் திறத்தாலே, விரவி வரும் சுவையாலே, விளக்கிடும் உவமையாலே, பரவி நிற்கும் தமிழர் நெஞ்சம் தடவி வரும் பேருரை ஆற்ற வல்லவர் கலைஞர் என்று அவரை நான் பாராட்டி, உரைப்பதுடன்-- (மேசையைத் தட்டும் ஒலி)



நாள்தோறும் இந்த நாட்டு மக்களுக்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த பாதையில், மகத்தான சாதனைகளைச் செயல்படுத்தி வரும் வேகத்தால், கலைஞரின் பிறந்த நாள் ஆண்டுக்கு ஒரு முறை அல்ல, பல முறைகள் வருவதுபோல் மனதில் பசுமையாக இருந்து வருகிறது.'' (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து ஒவ்வொரு நாளையும் அவருடைய பிறந்த நாளாகக்கொண்டு கலைஞரை வாழ்த்துகிற அந்த உணர்வை அவர் வெளியிட்டிருக்கிறார்.

குறிப்பாகச் சொன்னால், கலைஞர் ஒரு சகாப்தம். தந்தை பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர்

குறள் கூறும் தூங்காமை என்றால் ஒய்வு கொள்ளாமை என்று பொருள். ஆம்!

> ''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
> நீங்கா நிலனாள் பவர்க்கு''

என்று சொன்னார் வள்ளுவர். இந்த மூன்றும் ஒருவருக்கு உரியது இன்றியமையாதது என்பதைக் கலைஞரைப் பார்த்துத்தான் வள்ளுவர் எழுதியிருப்பார் என்று எண்ணுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ''வாழ்க கலைஞர், வளர்க அவரது தொண்டு'' என்று என்னுடைய வாழ்த்தைக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன் வணக்கம்.

தமிழக ஆளுநர் மேதகு திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களின் சிறப்புரை - 11-5-2007

His Excellency Thiru Surjit Singh Barnala: It gives me great pleasure to felicitate the Hon. Chief Minister of Tamil Nadu Dr. Kalaignar M. Karunanidhi on the occasion of the completion of his 50 years of public service as Legislator. (Thumping of desks)

As Makwell Droke said, "In every field of endeavour those who put their hearts in their work are the real leaders." Dr. Kalaignar has put his heart and soul in his work and leading Tamil Nadu on the path of becoming the best State in India. (Thumping of desks)

I know Dr. Kalaignar for nearly four decades. When he visited Punjab 40 years back, I was then Education Minister there. He has stood firm during difficult times and had undergone trials and tribulations for the cause of the Tamils and Tamil Nadu. He is a leader of repute who has brought name and fame to Tamil Nadu. (Thumping of desks)

John Stuart Mill, a great Parliamentarian said that in a representative democracy, the legislature acts as the eyes, ears and voice of the people. The legislature represents the public will. The legislature operates under a system of collective decision making. In addition to official law making capacity, most legislatures perform an educational role by simplifying complicated issues and defining policy choices. It is, in this context, that we have to appreciate the services of Dr. Kalaignar in that he has on many occasions thrown light on several complicated issues and made them easy for solution.

Dr. Kalaignar has been an extremely successful participant in Assembly debates and discussions. This could have been possible only due to the hard work, study and day-to-day preparations. Insights into economic problems with rare mastery over details could have been possible only due to a deep study made of the issues. Dr. Kalaignar has a sharp intellect reinforced by interest in public affairs. (Thumping of desks) Moreover, he has a high sense of responsibility with everlasting loyalty to Tamil Nadu and Tamils.

Dr. Kalaignar is held in high esteem for his vast knowledge in variety of fields. He has administrative dynamism and is extremely brilliant in debate. He has a vision for social justice. Few people in India have a more intimate knowledge than Kalaignar of the intricacies of politics and administration. He has contributed a lot in bringing in new industries to Tamil Nadu, (Thumping of desks) creating new avenues for employment and economic progress of this State. The bureaucracy also moves on with a new vigour thanks to his dynamic leadership.

Thomas Mann said, "Speech is civilization itself. The word, even the most contradictory words, preserve contact - it is silence which isolates". In this context, Dr. Kalaignar in his innumerable speeches in the Assembly has preserved contacts with several issues which face the common man. Wit along with deep meaning has helped to defreeze many a piquant situations and has also resulted in solutions to different problems.


Greatness by men is not reached without special merit. For a person to be a Chief Minister of Tamil Nadu five times and to win every election (Thumping of desks) that he fought in his political career is indeed remarkable. He entered politics at the tender age of only 14 years. He was inspired by the leaders of the Justice Party. He founded a student organization called "Tamil Nadu Tamil

Maanavar Mandram" which was the first student wing of the Dravidian Movement and through this youth movement he worked up to the legislature. He was elected to the Assembly first in 1957 and won all the 11 Assembly elections that he contested. (Thumping of desks)

I had the opportunity on two occasions as Governor of Tamil Nadu to see for myself the deep sense of involvement of Kalaignar in social reforms, his profound understanding of politics and his amazing administrative capacity.

him. When Kalaignar, the young boy was produced before him, Anna hugged him in surprise and in ecstasy.

Similarly, the incident in which Periyar accepted Kalaignar as his student is worth recalling. I am told that in 1945 there was a meeting in Pondicherry in which Kalaignar participated along with Periyar and Anna. In that meeting, the political enemies attacked Kalaignar and threw him in a gutter and ran away. Periyar searched for Kalaignar and attended on the wounds suffered by him



Generally, the cadres go in search of their leader. However, it amazed me when I came to know that the late leader Anna went in search of Kalaignar, (Thumping of desks) who at the age of 14, contributed an article to "Dravida Nadu" a magazine published by Anna. This article was greatly appreciated by Anna. Later, when he visited Tiruvarur to participate in a function, he enquired in the village about Kalaignar and was keen to see

(Thumping of desks) and felt very sorry for him. Later, Periyar took Kalaignar along with him to Erode and made him the sub-editor of "Kudiyarasu". This is how Kalaignar became a student of Periyar and till date is giving a legal shape to the various social reforms of Periyar. (Thumping of desks) Particular mention should be made of the recent act by which people of all castes among Hindus are entitled to become Archakars. This is a great deed by which

the dream of Thanthai Periyar has become a reality. (Thumping of desks)

Dr. Kalaignar through his powerful writings has the capacity to touch the hearts of the people. He has created a revolution in society through his books which number over 150. (Thumping of desks) He is widely seen as a great person who has given a new life to Tamil literature. Kalaignar has also effectively conveyed social reform messages to the people through Cinema.

Apart from literature, Kalaignar has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam which Kalaignar wrote about Thirukkural, he, through the construction of Valluvar Kottam gave an architectural presence to Thiruvalluvar. (Thumping of desks) At Kanniyakumari, Dr. Kalaignar has constructed a 133 feet high statue of Thiruvalluvar which effectively portrays the feelings of Kalaignar towards the great immortal scholar.

The basic foundation of the fame of Kalaignar and the fulcrum of his greatness lies in his extraordinary command over language. This mesmerizes even his political adversaries. Thiruvalluvar has in one of his couplets said that, "Mighty in word, of un-forgetful mind, of fearless speech, it is hard for hostile power such man to over reach". In line with above poem, Kalaignar has a fantastic command over language. He never tires. Fearlessness is one of his greatest qualities. (Thumping of desks) I am sure that, for this even his adversaries could not disagree.

I wish to recall an incident in 1972 which speaks highly of the political decency of Kalaignar. In 1972, several freedom fighters including Rajaji were chosen for awards in appreciation for their services and their participation in the freedom struggle. Rajaji could not come in person and could not attend the function on 2nd of October 1972 and Rajaji requested Kalaignar to get the award on his behalf from the Governor and send it across to him. On 2nd of October 1972, Kalaignar received the award on behalf of Rajaji and on 3rd of October 1972, he went to Rajaji's home (Thumping of desks) and garlanded him and handed over the award. This was greatly appreciated by Rajaji and the gesture of the Chief Minister going in person and handing over the award was well taken.

Similarly, though Kalaignar and Kamaraj had some political differences of opinion, yet there has been none other than Kalaignar who had honoured Kamaraj. (Thumping of desks) In fact, Kalaignar was highly appreciated by Kamaraj.

Dr. Kalaignar has won the hearts of the people of Tamil Nadu especially the poor and downtrodden. He is called a 'people's Chief Minister'. (Thumping of desks) His novel schemes like scheme for restoration of Vision, Beggars' Rehabilitation programme, introduction of cycle rickshaws instead of hand rickshaws, Slum Clearance, marriage assistance scheme, distribution of waste land to the landless farmers, free colour T.V.s (Thumping of desks) and gas connection to the poor and the downtrodden, (Thumping of desks) rice at subsidized price of Rs.2 a Kilo, (Thumping of desks) speaks volumes of his dedicated service for the upliftment of the poor.

Generally in politics, people succeed better if they are good speakers and mix good humour and comments in their speeches and they carry a wonderful memory also. Good speakers are able to quote verses after verses from various original sources in order to convince their listeners. Such capabilities are rarely seen and one such person who has all these capacities is Dr. Kalaignar. (Thumping of desks)

India is the biggest democratic country in the world with the best form of Government with people's representatives in the Legislatures and in the Parliament. It is a democracy with dignity and stability. Good and able administration combined

with simplicity has made Dr. Kalaignar M. Karunanidhi win people's faith and has earned him the pride of being elected again and again in all the Assembly elections since last 50 years. (Thumping of desks)

His eloquent speech, poetic talents, political sagacity have made him win the hearts of the people of Tamil Nadu. (Thumping of desks) Dr. Kalaignar as he is affectionately called has carved a niche and is the ambrosia of the people of Tamil Nadu. (Thumping of desks) He stands as a role model for the members of the Legislature at all times. (Thumping of desks)

We have seen many types of Golden Jubilee Celebrations. The only person in India who has seen Golden Jubilee in Legislature (Thumping of desks) through 50 years of democracy is Dr. Kalaignar. This goes to prove that he is a great genius as far as the philosophy of democracy is concerned. (Thumping of desks)

In the interest of democracy and the people, we need meaningful articulations in the Assembly. In this connection, the services rendered by Dr. Kalaignar are eminently laudable. May his service to the cause of Tamil Nadu and India continue forever. (Thumping of desks) May his life stand as an example for the serving and the budding politicians. I wish him a healthy and long life and pray to Almighty that he be blessed with many more years of fruitful service to the State and the Country. (Thumping of desks)

Fortunately, today is the 150th celebrations of the First Independence Movement in India. (Thumping of desks) I congratulate you all on this Golden Jubilee and also the 150 years celebrations of the independent Bharat, India. (Thumping of desks)

Thank you very much. நன்றி, வணக்கம், ஜெய் ஹிந்த். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழ்நாட்டின் மாவட்டங்கள்

1. அரியலூர்
2. இராமநாதபுரம்
3. ஈரோடு
4. கடலூர்
5. கரூர்
6. கன்னியாகுமரி
7. காஞ்சிபுரம்
8. கிருஷ்ணகிரி
9. கோயம்புத்தூர்
10. சிவகங்கை
11. சென்னை
12. சேலம்
13. தஞ்சாவூர்
14. தருமபுரி
15. திண்டுக்கல்
16. திருச்சிராப்பள்ளி
17. திருநெல்வேலி
18. திருப்பூர்
19. திருவள்ளூர்
20. திருவண்ணாமலை
21. திருவாரூர்
22. தேனி
23. தூத்துக்குடி
24. நாகப்பட்டினம்
25. நாமக்கல்
26. நீலகிரி
27. புதுக்கோட்டை
28. பெரம்பலூர்
29. மதுரை
30. விருதுநகர்
31. விழுப்புரம்
32. வேலூர்

தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களின் ஏற்புரை - 11-5-2007

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களே, அவை முன்னவரும், என்னுடைய அன்புக்குரியவருமான பேராசிரியர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே வாழ்த்துரை வழங்கி, என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தியுள்ள, உணர்ச்சிவசப்படுத்தியுள்ள சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. சுதர்சனம் அவர்களே, திரு. கோ.க. மணி அவர்களே, திரு. கோவிந்தசாமி அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்களே, திரு. செல்வம் அவர்களே, வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர்களே, நண்பர்களே!

இன்றையதினம் இந்த அவையிலே என்னுடைய பணியின் 50 ஆவது ஆண்டு பொன் விழா என்ற பெயரால், என்னுடைய உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க உணர்ச்சிவயப்படுகின்ற அளவிற்கு நம்முடைய ஆளுநர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றி இருக்கின்றீர்கள். அந்த உரையை வரவேற்று எழுப்பிய கையொலி இத்தனை நாளும் ஒரு பக்கத்திலே கேட்டுக்கொண்டிருந்த கையொலி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஒருசேர இருபுறத்திலும் கேட்டு, இப்படியும் எல்லா நாளும் இருக்கக்கூடாதா என்ற ஏக்கப் பெருமூச்சை எனக்கு வரவழைக்கின்ற அளவிற்கு இருந்தது என்பதை நான் மறக்க முடியாது.

நம்முடைய நண்பர் கோவிந்தசாமி பேசும்போது, எண் 11 என்பதைக் குறிப்பிட்டு, 11 ஆம் தேதிதான் இந்த ஆட்சிக்கான அறிகுறி தோன்றி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது என்று தேதி 11–ஐக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த விழா நடைபெறுகின்ற நாளும் 11 என்று குறிப்பிட்டார்கள். 11 அதோடு முற்றுப்பெறவில்லை. இந்த அவையிலே உள்ள கட்சிகளுடைய எண்ணிக்கையும் 11 தான். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., சி.பி.எம்., சி.பி.ஐ., ம.தி.மு.க., வராவிட்டாலும் பெயரைக் குறிப்பிடுவது நல்லது அல்லவா? விடுதலைச் சிறுத்தைகள், தே.மு.தி.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், புரட்சி பாரதம், ஆக, 11 கட்சிகள் இந்த அவையிலே இடம் பெற்றுள்ள கட்சிகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் 11 தான்.

1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு, தேர்தலிலே நிதி திரட்டியபோது கிடைத்த தொகையும் 11 இலட்சம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், சைதாப்பேட்டை தொகுதியில் நிற்கப் போவது யார் தெரியுமா? Mr. 11 இலட்சம் என்று குறிப்பிட்டதும் என்னைத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 11 இலட்சம் இப்பொழுது உங்களுக்கு நன்றி கூறப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியில் நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருப்பேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஏனென்றால், 50 ஆண்டுக்கால சட்டமன்ற வாழ்வில், இந்த மன்றத்தை 50 ஆண்டுக்காலமாகப் பார்த்துக்கொண்டிருக்கிற நான், பழைய நினைவுகளையெல்லாம் சேகரிக்கிறேன் நினைவில். அப்படிச் சேகரிக்கும்போது, எனக்கு இங்கே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராசர் தெரிகிறார். அவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே அமர்ந்திருந்த பெரியவர் பக்தவத்சலம் தெரிகிறார், வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அமர்ந்திருந்த என் ஆசான் அறிஞர் அண்ணா தெரிகிறார், (மேசையைத் தட்டும் ஒலி) அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தெரிகிறார், (மேசையைத் தட்டும் ஒலி) அவரை ஆரத் தழுவி அன்பைப் பரிமாறிக் கொண்டு இங்கே பேசுகின்றேன். எத்தனையோ பெரியவர்கள், தலைவர்கள் அலங்கரித்த இடம் இந்த இடம். நான் சிலருடைய பெயரை இங்கே குறிப்பிடாவிட்டாலும்கூட, நேரம் இல்லாத காரணமே தவிர வேறல்ல. அவர்களுக்கெல்லாம் நாம் வணக்கம் செலுத்தி, தொடர்ந்து இந்த அவையிலே ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு இந்த நாளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேதான் என் எதிரே இருக்கின்ற வள்ளுவருடைய படத்தைப் பார்க்கிறேன். பக்தவத்சலத்தினுடைய நினைவு எனக்கு வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையிலே, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, இந்தப் படம் மயிலாப்பூரிலே முதன்முதலாக வரையப்பட்டு, அதை வரைந்த நண்பர் இந்தப் படத்தை அரசின் சார்பிலே நீங்கள் வெளியிடலாம் என்று என்னிடத்திலே சொன்னார். அந்தப் படத்தை அறிஞர் அண்ணா சென்று பார்த்தார், பெரியவர் பக்தவத்சலம் பார்த்தார், நாவலர் நெடுஞ்செழியன் பார்த்தார், நம்முடைய பேராசிரியர் அன்பழகனார் பார்த்தார், நான் சென்று பார்த்தேன்; புலவர் பெருமக்கள் எல்லாம்

பார்த்தார்கள். அது அரசின் சார்பிலே வெளியிடப்பட்டால் இதுவரையிலே திருவள்ளுவருக்கு என்று ஒரு உருவம் அறுதியிட்டு அடையாளமாகக் காட்டப்படாதிருக்கிற அந்த நிலையை மாற்றலாம் என்ற எண்ணத்தோடு, சட்டமன்றத்திலே நான் ஒருநாள் எழுந்து, 'இப்படி ஒரு படம் மயிலாப்பூரிலே ஒரு அருமையான ஓவியரால் தீட்டப்பட்டிருக்கிறது, அந்தப் படத்தை இங்கே சட்டமன்றத்திலே வைப்பீர்களா?" என்று கேட்டேன். ஆனால், பெரியவர் பக்தவத்சலம், அப்போது வைக்கப்படும் என்றோ, முடியாது என்றோ சொல்லாமல் மிகத் தந்திரமாகச் சொன்னார்.

ஆகவே, இங்கே வள்ளுவர் இருப்பதற்குக் காரணம் என்னுடைய கேள்வியும் (மேசையைத் தட்டும் ஒலி) பெரியவர் பக்தவத்சலனார் அவர்களுடைய நல்ல தன்மையும்தான். அதற்குப் பிறகு, இன்றைக்கு வள்ளுவர் எந்த அளவிற்கு தமிழகத்திலே பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறார், எந்த அளவிற்கு அவருடைய உருவங்கள் பரவியிருக்கின்றன, அவருடைய கருத்துகள் எந்த அளவிற்கு இப்போதும் பரப்பப்படுகின்றன என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சட்டமன்றத்திலே வள்ளுவருடைய திருவுருவத்தைப் பார்த்தவுடன் எனக்கு வந்த நினைவை நான் இங்கே



'சட்டமன்ற உறுப்பினர், இந்தக் கேள்வியைக் கேட்ட சட்டமன்ற உறுப்பினர் அவருடைய செலவிலே அந்தப் படத்தை இங்கே வைப்பதாக இருந்தால் வைக்கப்படும்' என்று சொன்னார். தயங்காமல் நான் மறுநாளே, 'அதற்கு எவ்வளவு செலவாகும்? நேற்று சொன்ன, முதலமைச்சர் சொன்ன அந்த உறுதியை நான் காப்பாற்றுகிறேன்' என்று கடிதம் எழுதினேன். இவன் வம்புக்காரனாக இருப்பான் போலிருக்கிறது என்று கருதி மறுநாள் பக்தவத்சலமே கருணாநிதி வாங்கி அந்தப் படத்தை வைத்தான் என்று வந்து விடக்கூடாது காங்கிரஸ் ஆட்சியிலே, ஆட்சிக்கு அந்த அவப் பெயர் வந்து விடக்கூடாது என்ற காரணத்தால் அவரே, இங்கே வேணுகோபால் சர்மா தீட்டிய அந்த வள்ளுவர் படம் கருணாநிதி அன்றைக்குக் கேட்டுக்கொண்டாரே அந்த அடிப்படையில் வைக்கப்படும் என்று சொன்னார். அவர் சொன்னபடி அந்தப் படம் இங்கே வைக்கப்பட்டது.

சொல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே, சொன்னேன்.

இங்கேதான் பெருந்தலைவர் காமராசர் எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் அதிகம் பேசுவது இல்லை; இன்னும் சொல்லப்போனால், பேசுவதேகூட இல்லை. அவருக்குப் பதிலாக சி. சுப்ரமணியம் அவர்கள்தான் பேசுவார்கள். அவர் பேச வேண்டிய கருத்துகளை, சி. சுப்ரமணியம் நிதி அமைச்சர் அப்போது, அவர்தான் பேசுவார். ஒன்றிரண்டு கருத்துகளை அவர் சொல்லி மற்றவர்கள் பேசுவார்கள்.

ஆனால், ஆட்சியின் சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தவர் பெருந்தலைவர் காமராசர் என்பதை நாடறியும்; உலகறியும்; நானிலம் அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இலக்கண,

இலக்கியத்தோடெல்லாம் பேசக்கூடியவர் அல்ல. அவர் பேசும் தமிழ் கொச்சையான தமிழாக அப்பொழுது இருக்கும். ஆனால், அந்தக் கொச்சைத் தமிழ் கேட்பதற்கு மேலும் மேலும் நமக்கெல்லாம் எவ்வளவு இச்சையாக இருக்கும் என்பது அந்தக் கருத்துகளில் விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடத்திலேதான் இன்னும் நெருக்கமாக மேசைகள் போடப்பட்டிருக்கும்.

ஒரு பக்கத்திலே பெருந்தலைவரும், மற்ற அமைச்சர்களும் அமர்ந்திருப்பார்கள். இங்கே அண்ணாவும், நானும், பேராசிரியர், நாவலர் போன்றவர்களெல்லாம் அமர்ந்திருப்போம். ஒரே நேரத்திலே நாங்கள் இங்கே அமர்ந்து இருந்ததில்லை. ஆனால், அண்ணா இருக்கும்போது நான் இங்கே இருந்தேன். அப்போது கல்யாணசுந்தரம் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் இங்கே இருந்தார். யார் யார் பெரியவர்களெல்லாம் இங்கே இருந்தார்கள் என்பதற்காக அவர்களையெல்லாம் நினைவுபடுத்து கின்றேன். அவர் இங்கே இருந்தார். அவர் ஒரு நாள்



தமிழ்தான் இங்கே ஆட்சி மொழியாக வைக்கப்பட வேண்டும், ஆங்கிலத்தை அறவே அகற்றவேண்டு மென்று வேக வேகமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது பெருந்தலைவர் காமராசர் என் பக்கமாகக் குனிந்து, கையை அசைத்தார்கள், 'இங்கே கிட்டே வாருங்கள் என்று'. இப்பொழுது சொன்னால் வரமுடியாது. அப்பொழுது மேசை இருந்த நிலையில், அண்ணாவும், நானும் குனிந்து என்னவென்று கேட்டோம். அப்பொழுது தலைவர் காமராசர் சொன்னார், கல்யாணசுந்தரம் பேசுகிறார் என்றால், நீங்களும் தலையாட்டுகிறீர்களே, இது நியாயமா என்று அவருடைய தமிழிலேயே கேட்டார். உங்களுக்கு நியாயம்தானா என்று நாகரிகமாகக் கேட்டார். புத்தி இருக்கிறதா என்று கேட்கிறமாதிரி இருந்தது. நீங்களும் தலையாட்டுகிறீர்களே என்றார். என்ன என்றார் உதாரணத்தில் சொன்னார் பார்த்தாயா? ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால், அங்கே தமிழ் வந்து கொஞ்சி விளையாடாது. அங்கே இந்தி வந்து குந்திக்கும் என்று சொன்னார். அதுதான் காமராசர், ஞாபகம் வைத்துக்கொள் என்று அண்ணா சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு இரகசியத்தை உணர்வதற்கு இந்தச் சபை எனக்கு ஒரு காலத்திலே வாய்ப்பாக இருந்தது.

என்னுடைய பேச்சு, நான் குளித்தலை தொகுதியிலே வெற்றி பெற்று இங்கே முதன்முதலாக வந்து அமர்ந்தபோது 170 ஆவது இடமோ, 171 ஆவது இடமோ தெரியவில்லை. இங்கே பின்னால்தான் அமர்ந்திருந்தேன். முன்வரிசையில் அண்ணா, வி.கே. இராமசாமி முதலியார் போன்றவர்கள் எல்லாம் அமர்ந்திருப்பார்கள்.



சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சி

அண்ணா. ஒன்றுமில்லை, அவர் சொல்கிறாரே, English வேண்டாம், தமிழ்தான் முழுக்க முழுக்க இருக்கவேண்டுமென்று சொல்கிறாரே, தமிழையே முழுக்க வைத்துவிட்டால் என்ன ஆகும்? இப்பொழுது English இருக்கிற இடத்தில் இந்தி வந்து குந்திக்கும் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியே சொன்னார். இவ்வளவு பெரிய இந்தி எதிர்ப்பாளரைப் போய், நாம் இந்தி ஆதரவாளர் என்று நினைத்தோமே என்று அண்ணா என்னிடத்திலே சொன்னார்.

பிறகு காரில் போகும்போது, அண்ணா முன்வரிசையில் உட்கார்ந்திருக்கிறார். நான் பின்வரிசையில் உட்கார்ந்திருக்கிறேன். கருணாநிதி, காமராசர் பேசியதைப் புரிந்துகொண்டாயா என்றார் அண்ணா. என்ன அண்ணா என்றேன். எவ்வளவு பெரிய தத்துவத்தை, அதுவும் கொச்சையாக, அதுவும் சாதாரண

நான் பேசிய பேச்சு, முதல் பேச்சு, கன்னிப் பேச்சு, என்னுடைய தொகுதியிலுள்ள நங்கவரம் பண்ணையைப் பற்றியது. 'கையேர் வாரம், மாட்டேர் வாரம்' என்ற ஒரு பிரச்சினை பற்றியது. கையேர் வாரம் என்றால்—உழவர்கள், அவர்களே ஏர் எடுத்துக்கொண்டு சென்று, மாடும் ஓட்டிக்கொண்டு சென்று, அவர்களே அங்கே பணியாற்றி, மிராசுதாரர்களுக்கு உதவினால், அதற்குப் பெயர் மாட்டேர் வாரம்——உழவர் மாத்திரம் அங்கே போய், பண்ணையார் மாடும் கொடுத்து, ஏரும் கொடுத்து, கலப்பையும் கொடுத்து அங்கே உழுதால், அதற்குப் பெயர் கையேர் வாரம். வெறும் கையோடுதான் போவார்கள். அதனால் கையேர் வாரம். மாடும், மற்ற பொருட்களும் கொடுப்பதால் அது மாட்டேர் வாரம். அதில் கையேர் வாரத்திற்குள்ள கூலி என்ன, மாட்டேர் வாரத்திற்குள்ள கூலி என்ன என்பதிலே பெரிய

வித்தியாசம் இருந்தது. வித்தியாசத்தைக் குறைக்கவேண்டுமென்பதற்காகப் போராட்டம் நடக்கிறது. அப்பொழுது நாங்களும் கம்யூனிஸ்டு கட்சிகளும் சேர்ந்துதான் நங்கவரத்திலே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தோம்.

கேள்விப்பட்டிருப்பீர்கள், "நாடு பாதி, நங்கவரம் பாதி" என்று. அவ்வளவு பெரிய பண்ணை அது. அங்கே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். நாங்கள் அசெம்பிளிக்கு வரவேண்டிய நாள் அன்று. காலையில் என்னுடைய வீட்டிலே எம்.எல்.ஏ.க்களுக் கெல்லாம் விருந்து. முதன்முதலாக சட்டமன்றத்திற்கு வரப் போகிறோம். அதனால் வீட்டில் விருந்து. அண்ணா ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்று சொன்னார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் சொல்கிறேன் என்றால், நீங்களும் இப்படி ஒத்திகை பார்த்துவிட்டு வந்து பேச வேண்டும். அதற்கு நானே உதாரணமாக அன்றைக்கு இருந்திருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நான் அதை நினைவூட்டினேன்.

இப்படி ஒரு வேடிக்கையையும் சொல்ல வேண்டும்; அது இந்த அசெம்பிளியில் நடந்தது. கிருஷ்ணாராவ் பேரவைத் தலைவராக இருந்தார். அவருக்குத் தமிழ் அதிகம் வராது. மழலைக் குரலிலே பேசுவார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவார். பெரிய மனிதர்,



இருக்கின்றார். நாவலர் அப்பொழுது அசெம்பிளிக்கு வர முடியவில்லை. காரணம், அவர் சேலத்திலே வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார். நம்முடைய பேராசிரியர் இருக்கிறார்; எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது நாவலர் கேட்டார், "என்னய்யா கையேர் வாரம், மாட்டேர் வாரம் என்று சும்மா, சும்மா சொல்லுகின்றீர்களே! அது என்ன?" என்று கேட்டார். நான் அதை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

ஒரு பத்து நிமிடமாக நான் சொல்லச் சொல்ல, அவரும் தோண்டித் தோண்டிக் கேட்டார். நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். இதைத் தொலைவிலே உட்கார்ந்திருந்த அண்ணா கவனித்தார். கவனித்து விட்டு, நாவலரைக் கூப்பிட்டு, "நெடுஞ்செழியன், கருணாநிதி உனக்கு விளக்கம் சொல்லிக்கொண் டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இல்லை, அவன் இன்றைக்குப் பேசப் போகிறான், உன்னிடம் மேதை, ரொம்ப நல்லவர். அண்ணாவிடத்திலே, எங்களிடத்தில் எல்லாம் மிகுந்த அன்பு கொண்டவர். ஒரு நாள் சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் பேசினார்.

சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் என்றால் எங்களுக்கெல்லாம் கோபம். ஏனென்றால், நாவலரைத் தோற்கடித்தவர் அவர். மாரியப்பன் என்று பெயர். கொஞ்சம் வித்தியாசத்தில், 200 ஓட்டிலே நாவலரைத் தோற்கடித்தவர். அந்தக் கடைசியிலேதான் அவர் உட்கார்ந்திருந்தார். இலக்கிய சர்ச்சை ஒரு நாள் பேச்சிலே வந்தபோது, மாரியப்பன் எழுந்திருந்து, எங்களுக்குப் பதில் சொல்வதாகக் கருதிக் கொண்டு-- அவருக்கு இந்த லகர, ளகரம் சரியாக வராது-- "திருவல்லுவரை எடுத்துக் கொல்லுங்கள், கம்பரை எடுத்துக் கொல்லுங்கள்" என்று சொன்னார். நான் இதுதான் சமயம் என்று பார்த்து, அவர் மேலே உள்ள கோபத்திலே, "அவைத் தலைவர் அவர்களே!" என்று

கிருஷ்ணாராவ் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். என்ன என்றார் அவர். "இந்த அவையிலே பலாத்காரமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா? இது Point of Order–க்கு உட்பட்டதல்லவா? Parliamentary வார்த்தையா?'' என்றேன். "No, No, No." என்று திரு. கிருஷ்ணாராவ் சொல்லிவிட்டு, "Mr. Mariappan, ஜாக்கிரதையாகப் பேசுங்கள். அது பலாத்காரமான வார்த்தை, அதைப் பயன்படுத்தாதீர்கள்'' என்று சொன்னார். (சிரிப்பு)

இப்படியெல்லாம் நடைபெற்ற வேடிக்கைகளை, விளையாட்டுகளை, தமாஷ்களை எல்லாம் நான் இங்கே எண்ணிப் பார்க்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் எல்லாம் இப்போது இல்லையே! பேராசிரியர் பேசும்போது சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்க, ரசிக்க அண்ணா இல்லையே என்று சொன்னார்கள். அம்மா இல்லை என்ற கவலையைவிட, அண்ணா இல்லையென்ற கவலை எனக்குப் பெருங்கவலை என்பதை அவரும் அறிவார், எல்லோரும் அறிவார்கள். ஆனால் எல்லாக் கவலைகளையும் போக்குகின்ற அளவிற்கு, அந்தக் கவலைகளையெல்லாம் தீர்க்கின்ற அளவிற்கு, அதற்கெல்லாம் பரிகாரமாக நீங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள் என்ற ஒரே ஒரு ஆறுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) உங்களோடு கூட நான் இருக்கிறேன். நீங்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து இந்த நாட்டை வாழ வைக்க, இந்தச் சமுதாயத்தை முன்னேற்றப் பாடுபட இன்றைக்குச் சூளுரை மேற்கொள்வோம்.

அதுதான் இந்த நாளில் நீங்கள் என்னைப் பாராட்டி, ஊக்கப்படுத்திய இந்த விழாவில் நாம் எடுத்துக்கொள்கின்ற சூளுரை என்று குறிப்பிட்டு, இந்தச் சூளுரையையே என்னுடைய ஏற்புரையாகக் கருத வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைகிறேன். நன்றி, வணக்கம்.

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி



13–5–2006 ஆம் நாளன்று மாண்புமிகு கலைஞர் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற விழா மேடையிலேயே முதல் கையெழுத்திட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்க ஆணையிட்டார்.

மக்கள் மேலும் பயனடையும் வகையில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு தினமான 15–9–2009 அன்று ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் கொண்டு வந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டம் குறித்த விவரம் 2009 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களின் இரண்டாம் நாள் வரவேற்புரை - 12-5-2007

முதுபெரும் அறிஞர் பெருமக்களும், ஆன்றோரும், சான்றோரும் அலங்கரித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் நடைபெறும் பொன் விழா நிகழ்ச்சிக்கு, அழியாப் புகழும், சிறப்பும் பெற்று, வரலாறுகளைப் படைத்து, வரலாறாக வாழ்ந்து வரும் வரலாற்று நாயகன், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்தில் இடம் பெற்று, இன்று கோடானுகோடி தமிழ் மக்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல், சமுதாய வாழ்விற்கான விடிவெள்ளி, 1957 ஆம் ஆண்டு முதல் இதுவரை நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று, ஐந்தாம் முறையாக முதல்வராக வீற்றிருக்கும் பொன் விழா காணும் புது யுகத்தின் தலைவர் கலைஞர் அவர்களின் பொன் விழா நிகழ்ச்சியில் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கலந்துகொள்ள வருகை தந்து இருக்கும் இந்தியத் திருநாட்டின் அரசியல் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்து, புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று, தலைசிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்னர் 9 முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது பெருமை மிக்க நம் நாட்டின் மக்களவைத் தலைவராக, அனைத்துக் கட்சிகளின் அன்பிற்கும், பாராட்டிற்கும் உரியவராக இந்திய ஜனநாயக நாடாளுமன்ற மரபுகளை நேர்மையுடனும், பாரபட்சமின்றியும் கடைப்பிடித்து வருபவரும், இந்தியப் பாராளுமன்றத்தின் தனித் தன்மையை எந்தச் சூழ்நிலையிலும் எந்த அமைப்பிற்கும் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டைக் கொண்டவரும், வங்கத்தின் சிங்கமாக விளங்கும், பொதுவுடைமைப் பூங்காவில் பூத்த மலராம் மாண்புமிகு சோம்நாத் சட்டர்ஜி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களவையில் பல்வேறு கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்களது கருத்துகளை, கண்டனங்களை எடுத்து வைக்கும்போது, சூடான வாதங்கள், விவாதங்கள் நடைபெற்று, மக்களவை பரபரப்பான சூழ்நிலையில் இருந்தாலும்கூட, தாங்கள் தங்களுக்கே உரித்தான அறிவு, ஆற்றல், திறமை ஆகியவற்றின் காரணமாக, எந்தவித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாமல், கட்சிப் பாகுபாடின்றி அவையை நடுநிலையோடு நடத்திச் செல்லும் பாங்கு, சட்டமன்றத் தலைவர்களாகிய எங்களுக்கு ஒரு பாடமாகவும், வழிகாட்டுதலாகவும் அமைகிறது. தங்களைப்போன்ற சட்ட அறிவும், பாராளுமன்ற அனுபவமும் உள்ள தலைவர்கள் மென்மேலும் வளர்ந்து, இந்தியத் திருநாட்டுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்றும், தாங்கள் இந்தியத் திருநாட்டில் மென்மேலும் பல்வேறு உயர் பதவிகளைப் பெற வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன். இப்பொன் விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் உங்களை வருக, வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருக்குவளை கண்டெடுத்த மாவீரன், அய்யன் திருக்குறளைக் கற்றறிந்த மேலோன், தமிழர்கள் வாழ்வை நிர்ணயிக்கும் வைகறை வானம், தெற்கே குடியிருக்கும் இந்தியாவின் வழிகாட்டி, சமுதாயத்தில் அழுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கேடயம், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் தலைவர், எதிரிகளின் ஆர்ப்பரிப்பை தன் பண்பாலும், அடக்கத்தாலும் அடக்கும் செயல் வீரர், உலகில் பரந்து வாழும் கோடானுகோடி தமிழர்களின் விடிவெள்ளி, என் ஊனும், உயிரும் உள்ள வரை எனக்கு வழிகாட்டும் தலைவர், அவர் வாழும் காலம் நானும் வாழ்ந்தேன் என்று பெருமைப்படும் வகையில், அய்யன் வள்ளுவர் வழியில் ஆட்சிபுரியும் முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞருக்கு உற்ற தனயனாய், நல்ல துணையாக விளங்கும் மாண்புமிகு அவை முன்னவர் இனமானப் பேராசிரியர் அவர்களே, ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, சிறப்பு அழைப்பாளர்களே, அன்பான பத்திரிகையாளர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்தப் பொன் விழாவைக் கண்டு பூரிக்க தங்களைப் பெற்றெடுத்த தாய், தந்தை, அறிவூட்டிய தந்தை பெரியார், ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா ஆகியோர் இங்கில்லையே என்ற ஆதங்கம் தங்களுக்கு மட்டும் அல்ல, தங்களை நெஞ்சில் வைத்து பூஜிக்கும் எங்களுக்கும் அந்த ஆதங்கம் இழையோடாமல் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களது பேச்சால், மொழி நயத்தால், நிர்வாகத் திறமையால், உலக அளவில் தனி முத்திரையைப் பதித்தவர் தாங்கள் ஒருவரே. தங்கள் அரசியல் அனுபவங்கள் அனைத்தையும் மனித நேயத் திட்டங்களை நிறைவேற்றவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். தங்கள் சாதுரியத்தால் பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய இராஜதந்திரியாகவும், தமிழகத்தில் வாழ்ந்த பெரியவர்கள், தலைவர்கள் அத்தனை பேரையும் அரசியல் வேறுபாடு கருதாமல், போற்றிப் பாதுகாத்துக்கொள்வது தங்களிடம் உள்ள சீரிய பண்புகளில் ஒன்று. ஒப்பறியா தமிழ் மன்னன் நீங்கள். நீங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு அரிய பொக்கிஷம். மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு பெருமை பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணம், எங்களது அரிய பொக்கிஷமான கலைஞர் அவர்களது தனித் திறமையே ஆகும்.

தங்களது சட்டமன்றப் பொன் விழா என்பது வரலாற்றில் ஒரு பெரும் பகுதி. தாங்கள் 1957 முதல் 2007 வரை சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து வெளியிட்டால், அதுவே ஒரு சரித்திரம். தங்களுடைய சட்டமன்ற உரையில் உயர் இலக்கிய நயத்தைக் காணலாம், நல்ல தமிழின் இனிமையைச் சுவைக்கலாம், நகைச்சுவை ததும்பும் 'சட்டயர்' (satire) எனப்படும் உயர் தகுதியைக் காணலாம், கவிதையின் ஓட்டத்தைக் காணலாம், தவறுகளைச் சாடும் ஆவேசத்தைக் காணலாம், ஆளுமைத் திறமையைக் காணலாம், அதில் விவேகம்கூடிய விரைவைக் காணலாம், அசைக்க முடியாத திண்மையைக் காணலாம். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். தங்கள் சட்டமன்ற வரலாறு ஒரு சகாப்தம்.

'நெஞ்சுக்கு நீதி' என்ற நூலில் தாங்கள் குறிப்பிட்டீர்கள்; "என்னுடைய வாழ்க்கையில் மிகப் பெரும்பகுதி பொது வாழ்விற்கே செலவாகியிருக்கிறது என்பது என் இதயத்திற்கு ஆறுதலைத் தரக்கூடியதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும், சிறப்பாக தமிழுக்கும், தமிழின மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை. நடந்து வந்த பாதையை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, ஏய் அப்பா! இவ்வளவு தூரம் நடந்து வந்துவிட்டோமா, இனிமேல் நடக்க முடியாது என்று அயர்ந்து போவதற்குப் பதிலாக, பரவாயில்லை, இவ்வளவு தூரம் நடந்துவிட்டோம்; இன்னும் சிறு தூரம்தான், புதிய விறுவிறுப்பைப் பெற்றாக வேண்டுமென்ற அந்த விறுவிறுப்பைப் பெறத்தான் என் வாழ்க்கையை நான் திரும்பிப் பார்த்துக்கொள்கிறேன். வாழ்க்கை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் இருக்கிறார்கள். எனக்கோ, போராட்டமே வாழ்க்கையாகிவிட்டது!" என்று எழுதியிருக்கிறீர்கள். ஆம், தங்களின் வாழ்க்கையே போராட்டம் நிறைந்ததுதான். ஆனால், தலைவர் அவர்களே, உங்கள் போராட்டம் என்ற வயலில் விளைந்தவை அத்தனையும் சாதனைகள் என்ற நன்முத்துக்கள். தங்கள் வியர்வையில் உயர்ந்தது தமிழகம். தாங்கள் சிந்திய இரத்தத்தில் நிலைத்திருப்பது தங்கள் தலைமையிலான திராவிட இயக்கம்.

தனிமைச் சிறையில் வாடிய கொடுமை எந்த அரசியல் தலைவனுக்கும் நேர்ந்ததில்லை. ஆனால், தங்களை மட்டும்தான் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்து வாட்டினார்கள். ஆனால், தாங்கள் அந்தச் சிறைக் கொடுமையையும் புன்சிரிப்போடு ஏற்றீர்கள். அதனால்தான் அண்ணா தங்களைச் சந்தித்து வந்தபின், தாமிரபரணி மணற்பரப்பில் நடந்த பொதுக் கூட்டத்தில், 'என் தம்பி கருணாநிதி இருக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை, நான் போற்றும் திருத்தலம்' என்று மனம் உருகிக் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான் என்று அந்த சிறைக் கூட முகப்பில் பொறித்திருக்கிறார்கள். ஆம், என் தம்பி தன்னையும் வெல்வான், தரணியையும் வெல்வான்" என்று அண்ணா அவர்கள் அன்றே குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், முதல்வர் அவர்களே, தாங்கள் இச்சட்டமன்றப் பொன் விழா காணும் இந்நேரத்திலே மட்டுமே அல்ல, என்றுமே இந்தத் தரணியை வெல்பவர்கள் நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது சான்றோர்கள் வாக்கு. அத்தகைய வாக்கின்படி கற்றுத் தமிழ்க் கனியாக விளங்கும் தங்களை, மாண்புமிகு சோம்நாத் சட்டர்ஜி போன்ற கற்றறிவாளர் வாழ்த்துவதையே பெரும் சிறப்பாகக் கருதுகிறேன்.

இன்று தங்களை சட்டமன்றம் மட்டுமல்ல, மாண்புமிகு பாராளுமன்றத் தலைவர் அவர்கள் இங்கே வருகை தந்து வாழ்த்துவதன்மூலம் இந்தியத் திருநாடே தங்களை வாழ்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலகம் பரவி வாழும் தமிழினமும் உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறது. தங்களின் பொற்கால



சட்டப் பேரவையில் கலைஞர் உரைகள் – புத்தகங்கள் வெளியிடுதல்

சரித்திரம், நிகழ்கால மற்றும் வருங்கால சமுதாயத்திற்கு வழிகாட்டும் வரலாறு ஆகும்; அரசியல் நன்னெறியும் ஆகும். தாங்கள் என்றும் இளமை உணர்வோடு, நிறைவான நலத்தோடு எங்களுக்கு வழிகாட்டவும், தமிழகத்திற்கு வளம் சேர்க்கவும், உளமார வணங்கிப் போற்றுகின்றேன். வணக்கம்.

முதல்வர் கலைஞரின் பண்பும் எளிமையும்

''இந்த நேரத்திலே இப்போது எனக்கு இரண்டு செய்திகள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று கவியரசர் கம்பருடைய அவை அடக்கப் பாடல்.

"ஓசை பெற்றொரு பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசைபற்றி அறையலுற் றேன்மற்றுஇக்
காசில் கொற்றத்து இராமன் கதைஅரோ''

அதாவது, ஒரு பூனை தனது நாவினால் நக்கி பாற்கடல் முழுவதையும் குடிக்க ஆசைப்பட்டதைப்போல, இராமாயணத்தை எழுத ஆரம்பிக்கிறேன் என்று கம்பர் கூறுகிறார்.

இரண்டு, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதுகிறபோது, முகவுரையிலே குறிப்பிட்டிருக்கிறார், 'இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியிலே ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான் என்பதை நான் அறியாதவன் அல்ல' என்று தன்னுடைய அடக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தப் பண்பும், எளிமையும்தான் இப்பொழுது இந்த நேரத்தில் எனக்கு நினைவுக்கு வந்து கொண்டிருக்கிறது.''

சட்டப் பேரவையில் துணை முதல்வர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் (30–1–2009)

மக்களவைத் தலைவர் மாண்புமிகு திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களின் சிறப்புரை - 12-5-2007

Hon. Thiru Somnath Chatterjee: Most Respected Hon'ble Chief Minister Mr. Karunanidhiji, Hon'ble Speaker of the Tamil Nadu Legislative Assembly, Hon'ble Speaker of Andhra Pradesh Assembly, Hon'ble Leader of the House, Hon'ble Members of the Assembly, Ladies and Gentlemen, எல்லோருக்கும் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

I am indeed honoured and it is a measure of great pleasure for me to have the opportunity to associate myself with this function organised to felicitate Kalaignar Dr. M. Karunanidhi on his long and eventful association with the legislative parties of Tamil Nadu and I am particularly honoured to be here in this sacred place of Indian democracy namely, Tamil Nadu Assembly building. (Thumping of desks) And it is a great hall where Dr. Karunanidhi has been associating for so many years, 50 years. (Thumping of desks) I feel also energised like the young old man who is here, (Thumping of desks) and he is indeed an example before all of us whom we should follow, (Thumping of desks) and at the very outset I would like to take this opportunity to heartily congratulate my distinguished friend Dr. Karunanidhi on his rare accomplishment.

Friends, it is undoubtedly a momentous occasion in the life of the outstanding leader who has played and continues to play a very significant role in the State of Tamil Nadu as also in our national politics. Dr. Karunanidhi has the unique distinction of having been elected to the Tamil Nadu Legislative Assembly as many as 11 times. (Thumping of desks) It is only 10 times for me. I cannot reach his success. (Thumping of desks) This is besides, his membership in the State Legislative Council in the mid 1980s. To be a member of a Legislature for such a long period of time is, indeed, a remarkable achievement, testifying to the high esteem in which the people held him, which conclusively establishes Thiru Karunanidhi's popularity amongst the people of this progressive State and his great contribution for its speedy development.

His popularity and reach is not limited to any particular region or Constituency as such. In fact, the whole State and in a larger measure, the whole country has been his stage. (Thumping of desks) His own electoral records reveal that whichever Constituency he chose to contest from, the people have expressed their confidence in him and have extended him unhesitatingly the honour to represent them in the Assembly which is an unique distinction and honour. (Thumping of desks)

During his long innings in the Legislature, he has had the privilege of seeing the temper and tide of the House both from the Treasury and the Opposition Benches. He has held the august office of the Chief Minister of Tamil Nadu five times which in itself is a record for the State (Thumping of desks) and he has almost touched the record of my leader and his good friend Shri. Jyothi Basu. (Thumping of desks) He has thus had rich and varied experience as a member of the Legislature, as a Minister, as the Leader of the Opposition, as the Chief Minister and, above all, as the unquestioned leader of the Dravida Munnetra Kazhagam, (Thumping of desks) the party that he co-founded with some other great leaders, way back in 1949 and has passionately nurtured ever since. And it adds lustre to his public life that he has discharged these varied responsibilities with great distinction. (Thumping of desks)

As elected representatives of a progressive State and of a very dynamic and highly industrious people, the legislators of the State of Tamil Nadu have onerous responsibilities to shoulder. In Thiru Karunanidhi, they had and have a great leader and pathfinder to emulate. During his distinguished public life and as a member and leader of the State Legislature, Dr. Karunanidhi has earned tremendous goodwill and enormous support of the people and his constituents. He has overcome, time and again, all hurdles in retaining the trust and faith of the people, which eloquently speaks of his charisma and public appeal. (Thumping of desks)

Thiru Karunanidhi's life and times is a shining example of the great virtues of service, of dedication and commitment, always remaining accessible to the people, sharing their sorrows and joys and in being pro-active in addressing their grievances. Even at the pinnacle of his political career and success, he has not lost touch with the man on the street-he continues to be in close communion with grass-root workers, always fighting for their cause, particularly of those belonging to the weaker and the vulnerable sections of society. (Thumping of desks)



The record of his performance over the past nearly four decades, as the President of the Party, has indeed been most commendable. He is the true link between the leaders and the workers of his generation and those belonging to the present generation. All these years, he has, in fact, been a source of inspiration for generations of public-spirited people, young and old alike, in involving themselves in public affairs. The high level of political awareness, and the healthy political culture that the people of Tamil Nadu have been demonstrating can be attributed equally to the ceaseless and committed efforts of leaders like Dr. Karunanidhi (Thumping of desks) and to the wisdom, maturity and to the sense of responsibility of the people of the State. Under such enlightened leadership, the people of this State have been making significant contributions towards the development of the State and to nation-building.

As a charismatic mass leader, Dr. Karunanidhi occupies a special place in the hearts and minds of the people of Tamil Nadu. (Thumping of desks) A man of compassion, and commitment to public causes, he is among those select few who have always remained wedded to certain principles and ideals and ever ready to make any sacrifice for defending them against onslaught of any kind. The saga of his life symbolizes a spirit of sacrifice, of courage, of conviction and a rare sensitivity to the cause of the poor and the deprived. As the Chief Minister, five times in the past nearly three and a half decades, he has not only spearheaded a socio-economic revolution in the State, but also laid a firm foundation for a modern Tamil Nadu, (Thumping of desks) by introducing many path-breaking schemes and enacting pioneering legislative measures. It is known that it was Thiru Karunanidhi who constituted a Backward Classes Commission in the State, the first of its kind (Thumping of desks) anywhere in India. He has always given special attention to the problems being faced by the deprived and the downtrodden and he set up a separate Ministry for specially looking into their matters way back in 1989. (Thumping of desks)

It is his farsightedness and sagacity which have enabled the State of Tamil Nadu to produce commendable results on various developmental parameters in recent decades.

Deeply committed to secularism, a progressive social order, and other larger national values, Dr. Karunanidhi's model of development has been an all inclusive one. He views politics as a means for social transformation and as a potent instrument for development and growth. He believes that the State has a moral obligation to uplift the vulnerable sections of the society and that they cannot be left alone to protect themselves. He has initiated several progressive measures for their uplift. His initiative to provide spectacles to the needy among the poor strata of society, for free surgeries in hospitals, for the abolition of hand-pulled rickshaws and for the free distribution of cycle rickshaws, (Thumping of desks) for providing developed land free of cost to the landless agricultural families, (Thumping of desks) legislation for equal property rights for women, for free education for the girl child, marriage-grant for poor girls, among others, are just a few examples of his empathy with the poor, the women and the downtrodden.

I wish every State follow his example. (Thumping of desks) Homes for the homeless, highly subsidized foodgrains to the poor, television sets and cooking gas connections and gas stoves to the poor households which do not have these facilities, rehabilitation of beggars, etc. are some of the issues which he has proactively addressed and has found solutions, (Thumping of desks) always in favour of the vulnerable sections of the society.



As a crusader for the welfare of the weaker sections, Thiru Karunanidhi has made seminal contributions for their socio-economic empowerment, both as a legislator and as an administrator. Needless to say, such affirmative action is a pre-requisite for building an equitable, egalitarian and inclusive society. As a tireless champion of the Dravidian identity, he has very adroitly used his oratorial and literacy excellence to disseminate the egalitarian and rationalist ideals of the Dravidian movement, as articulated by the great leader, the legendary Annadurai. (Thumping of desks) Thiru Karunanidhi held aloft the torch of social empowerment with great zeal and commitment all these years. As a socially sensitive

leader, he ensured that men belonging to all castes could become priests in the Hindu temples. In a way, indeed, he has been a great social reformer too, whose contributions in facilitating a classless and casteless society will always be remembered. (Thumping of desks)

Dr. Karunanidhi has also contributed significantly to the success of both coalition governance and cooperative federalism in the country. He firmly believes that only a union of strong States can make a strong Union. (Thumping of desks) At the national level, he has been contributing immensely for the strengthening of the federal polity by fighting for the rightful place of the States of the Union without compromising with national unity and integrity. For him, decentralization is both a political and an economic necessity in a diverse society like ours. It is worth recalling what he said about decentralization, while speaking at the National Development Council meeting in May 1972 and I quote: (Thumping of desks)

"Decentralization is particularly necessary" - I am quoting - "if a large country like ours is to cope with the problems of a modern economy. It is in this context that our demand for State autonomy should be understood, as a request for more efficient management of the country's resources, as a means to enable the Centre to be strong in areas of vital national concern, as a method of enabling the minimum demands of our people to be met in the quickest time and in the most efficient manner".

I believe this is the crux of the main issue of decentralization and federalism. (Thumping of desks)

Indeed these views show his great statesmanship and his efforts to strengthen the federal structure of our country. Dr. Karunanidhi is totally committed to national unity and integrity. His poetic observations in the State Legislative Assembly on 16th April 1974, while articulating his Government's views on the Rajamannar Committee appointed by the Tamil Nadu Government on the issue of State autonomy, are equally eloquent, I quote:

"The National Flag of India flutters in the glittering sun. We lift our eyes to the high skies beyond the clouds in our attempt to enjoy the majesty of the Flag. We hear the National Anthem composed by Tagore, the golden voice of Bengal. The sweet melody of the Anthem rings in our ears like the soft music of the Courtallam Falls. Yes, Our country has awaken from its slavery liberating itself from foreign dominations. The epic story of our heroic struggle for liberation of India from which we emerged, holding our heads high, is writ large in the history of the world". (Thumping of desks) Indeed a poet leader of our country. (Thumping of desks)

Friends, Dr. Karunanidhi is verily a versatile personality, who encompasses in his repertoire, the supreme attributes of an eminent litterateur, a prolific script writer and a consummate orator known for his quick wit and repartee. His contribution to Tamil literature covers a wide canvass covering poetry, drama, fiction, short stories and cinema. Through his sensitive writings, Dr. Karunanidhi has used literature as a potent weapon against the exploitative social order and to articulate the cause of the poor and the deprived. In fact, after I took over as the Speaker of Lok Sabha, I have had the honour of writing the foreword to the English translation of Thiru Karunanidhi's poetic version in Tamil of Maxim Gorky's eternal classic 'Mother' (Thumping of desks) and later I had the honour to release the book here in August 2005. Going through this work was, I must say, a very rewarding experience indeed. I wish we had many more Karunanidhis. (Thumping of desks)

His mastery over language and literature has also had its impact on his oratorical brilliance, enabling him to strike the right chord with the people. I am given to understand that so far he has addressed more than ten thousand public meetings, (Thumping of desks) — Of course, he didn't lose his voice, as I had — special meetings, seminars and conferences. I am sure the Chamber of the Tamil Nadu Legislature is a great place and will always resonate and reverberate with the masterly speeches, on many issues of the times, delivered by Dr. Karunanidhi. (Thumping of desks)

The numerous awards and the honorific titles he has earned over the years speak volumes about his learnings, scholarship and the love and respect that he enjoys in the country. But, beyond these awards and honours stand the man who is Thiru Karunanidhi, 'Kalaignar' to his people, a leader of

the masses, a champion of the poor and the working class, an eloquent articulator and the defender of the larger national values, (Thumping of desks) an advocate of inclusive development and one who commands immense respect across the political ideologies and party manifestoes in the country.

Being a legislator is at once a privilege and an honour, which also brings with it certain rights as well as responsibilities. It is through the elected representatives that the sovereign will of the people finds expression in our Legislative Bodies. The trust and faith which the people have reposed in us need to be justified with sincerity and commitment to their welfare. As people's representatives, we all are entrusted with the challenging task of keeping the flame of democracy burning bright. And Thiru Karunanidhi's legislative career has been a shining example of such commitment to the people, (Thumping of desks) which should be a beacon for the legislators everywhere.



The Parliamentary system of governance for our country was decided upon by the founding fathers of our Constitution as the most suitable method for the progress and development of our people. In this system, the legislative bodies are the most important institutions which the people elect and expect that their representatives will discharge their duties with commitment, sincerity and probity. It is a matter of greatest concern that, of late, the people are getting disillusioned, if not cynical, about the way the different legislatures are functioning in our country, which is greatly weakening the foundations of our polity and indeed our whole political structure itself. I urge upon the legislators in our country, with all humility, to introspect and see whether they are contributing towards strengthening the system or not and whether they are honouring their electors or not, as they are the real masters. Dr. Karunanidhi's life provides a shining example of a legislator's conduct and behaviour which can be properly emulated. (Thumping of desks)

Friends, distinguished Chief Minister Thiru Karunanidhi is respected and revered for his many accomplishments and for his sterling public service by the people of Tamil Nadu and is held in high esteem by the nation. His many splendoured contributions to our national life have made him a legend in his own life time. (Thumping of desks) More than anything else, he is truly a people's leader (Thumping of desks) who has brilliantly used the hall of the Tamil Nadu Legislature to effectively articulate the concerns, aspirations and urges of the people whom he represents in an exemplary manner. I join all of you in felicitating this outstanding leader of the masses on this momentous occasion. (Thumping of desks)

With these words, I wish Thiru Karunanidhi the best of health and many, many more years of service to the nation. (Thumping of desks) Thank you.

தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களின் இரண்டாம் நாள் ஏற்புரை - 12-5-2007

சட்டப் பேரவையில் நான் ஆற்றிய பணிகளுக்கான பொன் விழா நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வந்துள்ள நாடாளுமன்றத்தின் மதிப்புமிகு அவைத் தலைவர், அமைதியை உருவாக்கும் தலைவர் (சிரிப்பு) அமளிகளை அடக்கும் தலைவர் (பலத்த சிரிப்பு) திரு. சோமநாத் சட்டர்ஜி அவர்களே!

வரவேற்புரையாற்றிய மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் அவர்களே, அவை அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் உங்களுடைய காலடிகளிலே குவிக்கின்றேன்.

இந்த இனிய விழாவை, மணமிக்க விழாவை, எழில் பொதிந்த விழாவை, கடந்த இரண்டு நாட்களாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, நான் முதலிலே தடுத்தும்கூட, என்னை ஓரம் தள்ளிவிட்டு, ஒப்பற்ற முறையில் ''இந்தப் பொன் விழாவை நடத்தியே தீருவோம்'' என்று என்னிடத்திலே சூளுரைத்து,



முன்னவர் என் அன்புக்கினிய ஆருயிர் சகோதரர், பேராசிரியப் பெருந்தகை அன்பழகனார் அவர்களே!

ஆந்திர மாநில சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புதுவை மாநில சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!

வருகை தந்துள்ள மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, உங்கள்

நடத்திய பிறகு சொல்லுங்கள், எப்படி நடத்தினோம் என்று – அறைகூவலும் விடுத்து – அந்த அறைகூவலிலே வெற்றி பெற்றிருக்கின்ற விழாக் குழுவினர்களான – விழாக் குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களே, ஆற்காடு வீராசாமி அவர்களே, சுதர்சனம் அவர்களே, ஜி.கே. மணி அவர்களே, பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, கோ.சி. மணி அவர்களே, வீரபாண்டி ஆறுமுகம் அவர்களே, துரைமுருகன் அவர்களே, சி. கோவிந்தசாமி அவர்களே, சிவபுண்ணியம்

அவர்களே, மலர்க் குழுவிற்குப் பொறுப்பேற்று, அதை மகத்தான முறையிலே வெளியிட்டு வழங்கியுள்ள பொன்முடி அவர்களே, எ.வ. வேலு அவர்களே, செல்வப் பெருந்தகை அவர்களே, வெளிப்புறத்திலும், நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடுகளைக் கவனித்து, பாழ்பட்டுக் கிடந்த அந்த நிலத்தை, பசுமை நிறைந்த ஓர் இடமாக மாற்றியமைத்துள்ள வட சென்னை பலராமன் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேற்றையதினம் இந்திய அரசின் காவலர்களாக உள்ள பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், அங்கே நடைபெறுகின்ற அரசுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களும் என்னைப் பொதுக் கூட்டத்திலே பலப்பட வாழ்த்திப் பாராட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில்--சட்டமன்றத்திலே ஆளுநர் ஒரு நாள் அமர்ந்து, உங்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டியது போதாது என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலோ என்னவோ, இந்தியாவே, நாடாளுமன்றமே வாழ்த்துகிறது –



நம்முடைய நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் சட்டர்ஜி அவர்கள், நான் எந்த அளவிற்கு இந்த மாமன்றத்திலே பணியாற்றியிருக்கிறேன் – இந்த மாமன்றத்தை ஒரு பாசறையாகக்கொண்டு, எந்த அளவிற்குத் தமிழ் நிலத்திலே தொண்டு தொடர்ந்திருக்கிறேன், இந்த ஐம்பதாண்டுக்காலம் என்பதை அவருக்கே உரிய பாச உணர்வோடு, அவருக்கே உரிய கொள்கை உறுதியோடு இங்கே எடுத்துச் சொல்லி, என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள்.

சட்டமன்றம் இங்கிருந்து வாழ்த்தியது, நாடாளுமன்றம் வந்து வாழ்த்துகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையிலே நம்முடைய பெருந்தகை சட்டர்ஜி அவர்கள் என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள்.

நான் என்னால் இயன்ற அளவிற்கு, என்னுடைய அமைச்சரவை சகாக்களின் துணைகொண்டு, இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணைகொண்டு

ஆற்றிய காரியங்களை, நான் ஆற்றியதாகவே இங்கு என்னைச் சிறப்பிப்பதற்காக, இந்த ஐம்பதாண்டுக் காலத்திலே ஆற்றினேன் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும்கூட, பொன் விழா நடைபெறுகிறது, இவைகளையாவது சொல்லித்தானே ஆகவேண்டும் என்ற முறையிலே சொல்கிறான் என்ற அளவிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், ''ஆமாம், நான்தான் இந்தக் காரியங்களை ஆற்றினேன்; வேறு யாரால் இதை ஆற்ற முடியும்?'' என்று சொல்கின்ற வீம்பு, வீறாப்பு, ஆணவம், அகம்பாவம் எனக்கு ஏற்பட்டதும் இல்லை; ஏற்படப் போவதும் இல்லை. அதற்குக் காரணம், என்னை ஆளாக்கிய தந்தை பெரியாரும், வழி நடத்திய பேரறிஞர் அண்ணாவும் அந்தப் பாடத்தை எனக்குக் கற்றுத் தரவில்லை. எனவே, அவர்களுடைய வழியில் ஐம்பதாண்டுக்காலம், சட்டமன்றப் பொது வாழ்க்கையை நான் நடத்தியிருக்கின்றேன்.

இந்தச் சட்டமன்றத்திலேதான் சுய மரியாதைத் திருமணச் சட்டம் உருவாயிற்று. சுய மரியாதைத் திருமணங்கள், பல ஆண்டுக்காலம் சட்டரீதியாக நடைபெறாவிட்டாலும், தந்தை பெரியாருடைய கொள்கையை அவருடைய ஆணைக்கிணங்க சுய மரியாதைக்காரர்கள் தங்களுடைய வீடுகளிலே திருமணங்களை சுய மரியாதை முறையிலே நடத்திக்கொண்டார்கள் என்றாலும்கூட, அதற்கு நான் சட்டச் சம்மதம் பெற்றுத் தருகிறேன் என்று சபதம் செய்து, ஆட்சியைக் கைப்பற்றி, இந்த ஆட்சிப் பொறுப்பிலே வந்து அமர்ந்த அண்ணா அவர்கள், சுய மரியாதைத் திருமணத்திற்குச் சட்ட வடிவம் தந்ததும் இந்த அவையிலேதான் என்பதை நான் சட்டர்ஜி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

நான் ஏன் இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால், தம்பி டி.ஆர். பாலு அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு சட்டர்ஜி அவர்கள் ஒரு முறை வந்தபோது இதுபற்றிக் கூறியிருக்கிறேன். இப்படி இந்தத் திருமணம் மாத்திரம் சுய மரியாதைத் திருமணம் அல்ல. இதுபோல இந்தியா முழுவதும் நடைபெற வேண்டும். சுய மரியாதைக் கொள்கையின்படி நடைபெறுகின்ற இந்தச் சீர்திருத்தத் திருமணங்கள் அகில இந்திய அளவிலே நடைபெறுவதற்குத் தாங்கள் வழிசெய்ய வேண்டும் என்று நான் நம்முடைய சட்டர்ஜி அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். மறந்திருக்க மாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். எனவேதான், ஒருவேளை மறந்திருந்தால், அதை நடத்துவதற்கு அவர்கள் தூண்டுகோலாக அமைவார்கள் என்று இங்கே இந்த அவையிலே, இந்தப் பாராட்டு விழாவிலே நான் அவரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கேதான், தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டது. ஏற்கெனவே தமிழ்நாடு காங்கிரஸ் என்று இருந்தாலும்கூட, அச்சடிக்கப்பட்ட புத்தகங்களிலே, தமிழ்நாடு அரசு என்று இருந்தாலும்கூட, நாட்டிற்கு, இந்த மண்ணிற்கு தமிழ்நாடு என்று பெயரிடப்படவில்லை. இதற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற கோரிக்கையை, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே நிறைவேற்றி – நிறைவேற்றியது மாத்திரமல்ல, அவரே ஒரு தொண்டரைப்போல நின்றுகொண்டு – முதலமைச்சராக அல்ல – நான் தமிழ்நாடு என்பேன், எல்லோரும் வாழ்க என்று கூறவேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு, அவர் தமிழ்நாடு என்று கூற, எல்லோரும் வாழ்க, வாழ்க என்று ஒலித்த மாமன்றமும் இந்த மாமன்றம்தான்.

அதைப்போலவே, இரு மொழித் திட்டம் – இனி ஆதிக்க மொழிகளுக்கு இடமில்லை. ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டு மொழிகளுக்குத்தான் இடம், ஆதிக்க மொழிகள், கட்டாய மொழிகள் நம்மீது எதுவும் திணிக்கப்பட மாட்டாது என்பதற்கு அறிகுறியாக இரு மொழித் திட்டத்தை நிறைவேற்றியதும் இந்த மாமன்றத்திலேதான்.

நான் நேற்றைக்கு கவர்னர் அவர்களுடைய தலைமையிலே, இந்த விழாவிலே பேசும்போது சொன்னேன். இந்த அவையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், உருக்கமான நிகழ்ச்சிகள், வேடிக்கையான நிகழ்ச்சிகள், தமாஷான நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் என்று இவைகளைப்பற்றி எல்லாம் நேற்று நான் விவரித்தேன்.

இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் சொன்னால், இந்த மாமன்றத்தினுடைய மகிமை – பெருமை தெரியும், தெரியவேண்டு மென்பதற்காக அவைகளை எல்லாம் சொல்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்க, முதல் தடவையாக இந்தியாவிலே இந்த மாமன்றத்திலேதான் – தமிழ்நாட்டிலேதான் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

மின்சார விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று சூளுரைத்து, அனைத்துக்

கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தருவதற்கான திட்டம் இங்கேதான் வகுக்கப்பட்டது.

இரண்டு அல்லது மூன்று இலட்சம் மக்களுக்கு குடியிருப்பு மனை – அவர்கள் இருக்கின்ற குடியிருப்புக்கான மனை எந்த நேரத்திலும் முதலாளி பார்த்து, மிராசுதாரர் பார்த்து, பிரித்துக் கொண்டு போ என்று சொன்னால் பிரித்துக்கொண்டு போக வேண்டிய தற்காலிக நிலையில் இல்லாமல், யார் சொன்னாலும், அது அவர்களுக்கான சொந்த மனைதான் என்று குடியிருப்பு மனை குடியிருப்போருக்கே சொந்தம் என்று விவசாயத் தொழிலாளர்களுக்காக ஆக்கியதும் இந்த சட்டமன்றத்திலேதான். அதைப்போல, தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, கை ரிக்ஷாக்களை ஒழித்து, அதற்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கியதும், அதற்கான திட்டம் தீட்டப்பட்டதும் இந்த மாமன்றத்திலேதான்.

நில உச்சவரம்புச் சட்டம் – பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே கொண்டு வந்த சட்டம் – 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம் – அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கி, அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய இடமும் இந்த இடம்தான்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இஸ்லாமிய மக்களையும் இணைக்க வேண்டுமென்று குரல் எழுந்ததும் இங்கேதான். அப்படிக் குரல் எழுந்தபோதும், அதற்குச் சட்டத்திலே இடமில்லை என்று ஓர் அமைச்சர், என் தலைமையிலே இருந்த ஓர் அமைச்சர், உண்மை நிலையை எடுத்துச் சொன்னபோது, இஸ்லாமிய நண்பர்கள், உறுப்பினர்கள் சோர்ந்து உட்கார்ந்தபோது, சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொல்லி, அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்ட பிரிவிலே சேர்த்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்களுக்கு 33 சதவிகித ஒதுக்கீடு செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

பெரியாரின் கொள்கையான சமத்துவக் கொள்கையை நிறைவேற்ற பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறைவேற்றுவதற்கு வழிவகுத்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உருது அகாடமி உருவாக்கியதும் இந்த மாமன்றத்திலேதான். உழவர் சந்தைத் திட்டம் உருவானதும் இந்த மாமன்றத்திலேதான்.

இதுமாத்திரமல்ல, புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கும் என்று சட்டம் செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஆகலாம் என்று ஆணை பிறப்பித்து தந்தை பெரியாரினுடைய நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றுவதற்குச் செய்த ஏற்பாடும் இந்த மாமன்றத்திலேதான்.

மத மாற்றத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து சட்டம் கொண்டு வந்ததும் இந்த மாமன்றத்தில்தான்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு – விவசாயத் தொழில் புரிகின்ற இல்லங்களிலே வாடிக்கொண்டிருக் கின்ற ஏழைப் பெண்களுக்கு – தாய்மார்களுக்கு இந்த அரசு என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்பதற்கு அடையாளமாக, அவர்கள் கருவுற்றால், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம், குழந்தை பிறப்பதற்கு முன்பு 3 மாதங்களுக்கும், குழந்தை பிறந்த பிறகு 3 மாதங்களுக்கும் மொத்தம் 6 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

இந்த மாமன்றத்திலே நான் நுழைந்தபோது, என்னைப் பார்த்து சிரித்து வரவேற்ற முதலமைச்சராக இங்கே உட்கார்ந்த பெருந்தலைவர் காமராஜர் – அந்தப் பெருந்தலைவர் காமராஜரிடத்திலே எனக்கு சில நேரங்களிலே, பல நேரங்களிலே கொள்கைரீதியாக, அரசியல் நடப்புரீதியாக பல வேறுபாடுகள் ஏற்பட்டாலும்கூட, வணக்கத்திற்குரியவர், போற்றுதலுக்குரியவர், பின்பற்றுவதற்கு உரியவர் என்ற நிலையிலே அவருடைய புகழ் மேலும் மேலும் பரவிட வேண்டும் என்பதற்காக, காமராஜர் பிறந்த நாள் ஜூலை 15 ஆம் தேதியை, அவருடைய பிறந்த நாளை சட்டப்பூர்வமாக எல்லாப் பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும்; கல்விக் கண் திறந்த காமராஜருடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று அறிவித்த பிறகு, இடைக்காலத்திலே அது கிடப்பிலே போடப்பட்டு, இது சாதாரண அறிவிப்பாக இருப்பதால்தானே இடையிலே வருபவர்கள் கைவிட்டு விடுகிறார்கள் என்று, இதனைச் சட்டமாகவே ஆக்குகிறேன் என்று, இனி ஜூலை 15, காமராஜர் பிறந்த நாள், சட்டப்படி கல்விக் கண் திறந்த நாள் என்று சட்டம் நிறைவேற்றப்பட்ட இடமும் இந்த மாமன்றம்தான்.



எனவே, இந்த மாமன்றத்தின் வரலாற்றிலே இப்படிப்பட்ட பல அத்தியாயங்கள் – சீர்திருத்த அத்தியாயங்கள் – புரட்சிகரமான அத்தியாயங்கள் – நாட்டை முன்னேற்றவேண்டிய அத்தியாயங்கள் – பலப்படுத்தக்கூடிய அத்தியாயங்கள் அனைத்தும் நிறைவேறி இருக்கின்றன. அதற்கெல்லாம் ஒரு பெருமையாக இன்றைக்கு நம்முடைய பார் புகழும் பாராளுமன்றத்தில் வீற்று, இவருக்கு நிகராக இன்னொருவர் இருக்கிறாரா கொள்கை உறுதியில் என்ற கேள்விக்கே இடம் இல்லாத அளவிற்கு வாழ்ந்துகொண்டிருக்கின்ற நம்முடைய சட்டர்ஜி அவர்கள் இந்த விழாவிலே கலந்துகொண்டு என்னை வாழ்த்துவதும் ஒரு வரலாறுதான்.

அழைப்பிற்கு இணங்கி அமைச்சர் பெருமக்கள், மத்தியிலே உள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்களெல்லாம் வந்து குழுமியிருக்கிறீர்கள். நீங்கள் அமர்ந்திருக்கின்ற இடங்களைப் பார்க்கின்றேன். உங்களுக்கு இடம் போதுமானதாக இல்லை என்பது புரிகிறது. என்ன, இன்னமும் இவ்வளவு சிறிய இடம்தானே இருக்கிறது, பொன் விழா கொண்டாடிய பிறகுகூட பெரிய இடம் வேண்டாமா என்று உங்களில் பலர் எண்ணுவது எனக்குப் புரிகிறது. ஆகவே, சட்டமன்றத்திலே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் விடுத்த வேண்டுகோளை இன்றைக்குத் தொகுத்து, பொன் விழா நாள் அறிவிப்பாக, ஒரு புதிய சட்டமன்றக் கட்டடம் விரைவில் (மேசையைத் தட்டும் ஒலி) பழமையைப் பாதுகாப்போம், புதுமையை நாடுவோம் என்ற அந்த மொழிக்கேற்ப, வெகு விரைவிலே அதற்கான அடிக்கல் நாட்டப்படும் என்பதையும், அது, எந்தக் கல்விக் கூடங்களையும் இடித்தோ, (பலத்த சிரிப்பொலி) எந்தப் பல்கலைக்கழகங்களையும் பாழ்படுத்தியோ இல்லாமல், தனியாக ஒரு இடத்தில், பரவாயில்லை, நல்ல இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று எல்லோரும் சொல்லத்தக்க அளவிற்கு அந்த இடம் விரைவில் அமையும்.

அதனுடைய திறப்பு விழாவும் நடைபெற்று, நாமெல்லாம் அங்கே அமர்ந்து இன்னொரு விழா நடத்த (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி நடைபெறும்போதே அந்த இனிய வாய்ப்பு உங்களுக்கும், எனக்கும், எல்லோருக்கும் கிடைக்கும் என்று கூறி, என்னை நம்முடைய பெரியவர் சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் வாழ்த்தியதன்மூலம் எனக்கு அளித்துள்ள ஊக்கத்திற்கு, உற்சாகத்திற்கு, என்னுடைய இதயமார்ந்த நன்றியை அவருக்குக் காணிக்கையாக்கி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைத்திடவும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அம்மையத்தின் தலைவராகச் செயல்படவும் மத்திய அரசு அறிவிப்புச் செய்ததற்குப் பாராட்டு - தீர்மானம்

"கடந்த 150 ஆண்டுகளாகத் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவேண்டுமென்று பரிதிமாற்கலைஞர் காலந்தொட்டு, பல அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், புலவர்களும் மத்திய அரசினை வலியுறுத்தி வந்த சூழலில், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்த பிறகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சி மற்றும் தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழைச் செம்மொழியாக அறிவிப்பு செய்தார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, 2004 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையிலேயே தமிழ் மொழியைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவிப்புச் செய்தது.

இச்சூழலில் நேற்று 30-1-2008 அன்று பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சென்னையில் 17 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் எழுப்பப்படும் கட்டடத்தில் ரூ.76.32 கோடி செலவில் தமிழகத்தில் "செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்" அமைத்திடவும், இந்த ஆய்வு மையத்தின் தலைவராக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகிப்பார் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவினை எடுத்த மத்திய அமைச்சரவைக்கும், பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், இவற்றிற்கு உறுதுணையாக இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், இத்தகைய வெற்றிக்கு முழுமுதற்காரணமாக இருந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இப்பேரவை பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறது."

(இத்தீர்மானம், 31-1-2008 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் பேரவையில் கொண்டு வரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.)

RESOLUTION THANKING THE CENTRAL GOVERNMENT FOR SETTING UP A CENTRE FOR CLASSICAL TAMIL IN CHENNAI UNDER THE CHAIRMANSHIP OF HON. CHIEF MINISTER, DR. KALAIGNAR

Right from the days of Parithimarkalaignar for the last 150 years, Tamil Scholars, Savants and Tamil Enthusiasts had been insisting on the Central Government to declare Tamil as a Classical Language. Soon after the United Progressive Alliance Government headed by Dr. Manmohan Singh assumed office at the Centre, Tamil was declared as a Classical Language, pursuant to the continuous efforts of Dr. Kalaignar M. Karunanidhi and to the requests of the alliance parties. The Central Government, accepting the request of Dr. Kalaignar M. Karunanidhi, Chief Minister of Tamil Nadu, announced Tamil as a Classical Language in the Presidential Address in 2004.

Under these circumstances, in the meeting of the Central Cabinet held on 30-1-2008 under the Chairmanship of the Prime Minister, Dr. Manmohan Singh, it has been resolved to house the Centre for Classical Tamil in the buildings to be constructed at a cost of Rs.76.32 Crores on an extent of 17 acres of lands at Chennai and resolved that Dr. Kalaignar M. Karunanidhi, Chief Minister will be the ex-officio Chairman of this Centre.

This House expresses its profound thankfulness to the Union Cabinet, to the Prime Minister of India, Dr. Manmohan Singh, to the President of the Congress Party, Thirumathi Sonia Gandhi, who have been solidly supporting the proposal all along and to the Union Minister Thiru Arjun Singh, for taking this decision.

Further, this House expresses its gratitude and appreciation to the Chief Minister of Tamil Nadu, Dr. Kalaignar M. Karunanidhi, being the basic cause of this victory.

(This resolution moved by Hon. Finance Minister, was carried unanimously in the Tamil Nadu Legislative Assembly on 31-1-2008.)

மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழித் தமிழாய்வு அலுவலகத்தைத் திறந்துவைத்தல்



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம்



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010

"தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்து பெருமைப்படுத்தியதோடு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தையும் சென்னையில் அமைத்து, மத்திய அரசு பெருமைப்படுத்தியுள்ள சூழ்நிலையில், கோவை மாநகரில் வரும் ஜூன் திங்கள் 23 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்காக முதலமைச்சர் தலைமையில் மாநாட்டுத் தலைமைக் குழுவும், 20 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன" என்று 6-1-2010 அன்று நடந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-10-2009 அன்று உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு இலச்சினையை வெளியிட்டார்கள்.




மாண்புமிகு தமிழக முதல்வர் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் இலச்சினையை வெளியிடுதல்

இம்மாநாட்டை கோவை, கொடிசியா அரங்கில் நடத்தலாம் என்று 9-11-2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநாட்டுப் பணியினை நாள்தோறும் ஆய்வு செய்வதுடன் உரிய அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். அதிக அளவில் அறிஞர்களும், பேராளர்களும் கலந்து கொள்ளும் இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, உலகம் போற்றும் வகையில் நடைபெற உள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் பெங்களூருவில்
அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தல்





மாண்புமிகு முதல்வர் கலைஞர் சென்னையில்
கன்னட கவிஞர் சர்வக்ஞர் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தல்





கவிஞர் சர்வக்ஞர் சிலை திறப்பு

''தமிழகத்தில் வாழும் கன்னடர்களும், கர்நாடகத்தில் வாழும் தமிழர்களும் நீண்ட காலமாகக் கண்டுவரும் கனவு நிறைவேறிடும்வண்ணம், பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவர் சிலையும், சென்னையில் கவிஞர் சர்வஜ்னா சிலையும் விரைவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்திற்கு மாநிலம் இதுபோன்று நல்லுறவு செழித்தோங்கி வளர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் விருப்பமும் நோக்கமுமாகும்'' என 17-2-2009 அன்று நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் தெரிவித்ததையடுத்து, தெய்வப் புலவர் அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை 9-8-2009 அன்று கர்நாடக மாநிலம், பெங்களூரு நகரில் அல்சூர் ஏரியின் அருகே, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. பி.எஸ். எடியூரப்பா அவர்கள் முன்னிலையில் திறந்துவைக்கப்பட்டது.

அதேபோல், கன்னட கவிஞர் சர்வக்ஞர் சிலை சென்னை அயன்புரத்தில், 'ஜீவா' பூங்காவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. பி.எஸ். எடியூரப்பா அவர்களால் 13-8-2009 அன்று திறந்துவைக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கு இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.



தந்தை பெரியாருடன் முதல்வர் கலைஞர்


கவிஞர் சர்வக்ஞர் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி

''சுழலும் உலகொன்றே பருகும் நீரொன்றே
சுடுகின்ற தீயொன்றே சாதியும் குலமும்
நடுவே புகுந்ததெவன்?

இதுவும் சர்வக்ஞருடைய பாடல். சுழலும் உலகம் ஒன்று - பருகும் நீரும் ஒன்று - சுடுகின்ற தீயும் ஒன்று - சில சாதியும் குலமும் நடுவே எப்படி புகுந்தது என்று கேட்கிறார். இந்தக் கேள்வி திருவள்ளுவரை எனக்கு ஞாபகப்படுத்துகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அய்யன் வள்ளுவரை நினைவுபடுத்துவது மாத்திரமல்ல; இன்றைக்கும் தந்தை பெரியாருடைய கருத்துகள் வாழ்கின்ற தமிழ் நிலத்தில் பெரியாரை நினைவுபடுத்துகின்ற கருத்துகளை சர்வக்ஞர் எடுத்துக் கூறியிருக்கிறார்.''

புதிய சட்டப் பேரவையின் தோற்றம்

சட்டமன்றத்திற்கென தனியாக பல்வேறு வசதிகளுடன் கூடிய ஒரு கட்டடம் தேவையெனக் கருதி 1978 ஆம் ஆண்டிலேயே புதிய கட்டடம் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதன் அடிப்படையில், புனித ஜார்ஜ் கோட்டைக்கு எதிரில், அரசுக்குச் சொந்தமான காலியாகவுள்ள இடத்தில் புதிய




சட்டமன்றப் பேரவை கட்டடத்தைக் கட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதற்கிணங்க, சட்டமன்றக் கட்டடம் அமைப்பதற்காக, அகில இந்திய அளவில் 80-க்கும் மேலான வரைபடங்கள் பெறப்பட்டு 1983-84 ஆம் ஆண்டில் ஒரு கட்டட வரைபடப் போட்டியும் நடத்தப்பட்டது. இதில் மிகச் சிறந்த வரைபடங்களை வடிவமைத்த கலைஞர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்ட நிலையில், புனித ஜார்ஜ் கோட்டைக்கு எதிரே உள்ள காலியிடம் குறுகலாகவும், நீண்டும்



இருப்பதால் பொருத்தமான இடமாக இல்லை என்று கருதப்பட்டு சட்டமன்ற கட்டடத்தினை வேறு அதிக பரப்புள்ள இடத்தில் கட்டலாம் என முடிவு செய்யப்பட்டது. இதனால் இக்கருத்துரு கைவிடப்பட்டது.



கிண்டியில் உள்ள குதிரைப் பந்தய மைதானம் பயன்படுத்தப்படாமல் இருந்ததால் அந்த இடத்தில் சட்டமன்றப் புதிய கட்டடத்தைக் கட்டலாம் எனவும் பரிசீலிக்கப்பட்டது. பின் இக்கருத்துருவும் கைவிடப்பட்டது. பின்னர், தமிழக அரசின் புதிய தலைமைச் செயலக வளாகம் சென்னை மெரினா கடற்கரைக்கு அருகில் உள்ள இராணி மேரி கல்லூரி உள்ள இடத்தில் கட்டப்படும் என 4-4-2003 அன்று பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்ட போதிலும் அம்முயற்சியும் அன்றைய அரசால் கைவிடப்பட்டது. 2003, செப்டம்பரில் கோட்டூர்புரத்தில் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஆகியவற்றிற்குச் சொந்தமான சுமார் 43 ஏக்கர் நிலத்தில் புதிய தலைமைச் செயலக வளாகம் கட்ட அன்றைய ஆட்சியில் முடிவு எடுக்கப்பட்டு அத்திட்டமும் கைவிடப்பட்டது.





12–5–2007 அன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற "சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா"வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையின் புதிய வளாகம் கட்டப்படும் என அறிவிப்பு செய்தார்கள். அவ்வறிப்பினையொட்டி 12–6–2008 அன்று ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட முக்கிய விருந்தினர்கள் கலந்து கொண்ட ஒரு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.425.57 கோடி செலவில் சட்டமன்றப் பேரவை புதிய வளாகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

இக்கட்டட வடிவமைப்பைப் பெற சர்வதேச டெண்டர் விடப்பட்டது. இதில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி.எம்.பி. இண்டர்நேஷனல் நிறுவனத்தின் வடிவமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்நிறுவனம் பூனாவில் உள்ள திருவாளர்கள் ஆர்க்கிவிஸ்டா என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் பூனாவிலுள்ள ஒய்.எஸ். சானே கட்டட அமைப்பு ஆகியோருடன் இணைந்து இக்கட்டடத்திற்கான திட்ட வரைபடங்கள் மற்றும் கட்டட வடிவமைப்புகளை உருவாக்கியது. பின்னர் இக்கட்டடப் பணிகளை செய்வதற்கு தேசிய அளவிலான டெண்டர் விடப்பட்டு



அதில் திருவாளர்கள் ஈ.சி.சி.ஐ. லிமிடெட் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு 18 மாதங்களில் இப்பணியை நிறைவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன், இந்நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கட்டடம் திராவிட கலாச்சாரத்தையும் சக்கரவியூகத்தையும் அடிப்படையாகக் கொண்டு 4 சக்கரங்களை (4 Circles) உள்ளடக்கியது ஆகும். கோலம் உருவாகுவதற்கு புள்ளிகளை ஒன்று சேர்த்து வடிவம் கொடுப்பதுபோல் இச்சக்கரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கட்டட வடிவமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பு அம்சமாக திராவிட கலாச்சாரத்தின் வெளிப்பாடாக தமிழ் கலாச்சாரத்துடன் ஒருங்கிணைந்து திராவிட சிகரம் என்னும் கோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய சிற்பக் கலை வேலைப்பாடுகளும் நவீன அலுமினியத் தகடுகளும் பொருத்தி இயற்கை வெளிச்சம் சட்டசபை உள்ளே வருமாறு மிகவும் நேர்த்தியான தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்

ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னை கோட்டூர்புரத்தில் நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட நவீன மாநில நூலகம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் 16–8–2008–ல் அடிக்கல் நாட்டினார். ஒன்பது மாடிகளைக் கொண்டு கவின்மிகு கலை நுணுக்கத்தோடு வேகமாக கட்டப்பட்டுவரும் இந்நூலகம் 3.75 இலட்சம் சதுர அடி பரப்பைக் கொண்டதாகவும், 11 இலட்சம் புத்தகங்களுக்கும் அதிகமாக வைக்கக்கூடிய வசதியைப் பெற்றதாகவும் அமையும். இந்நூலகத்திற்கு நூற்றுக்கணக்கான புத்தகங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் வழங்கியதோடு, நூலகத்திற்குத் தேவைப்படும் நூல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து, அறிஞர்களும், பொதுமக்களும் பலவிதமான நூல்களை அளித்து வருகின்றனர். இது ஒரு மாபெரும் மாதிரி நூலகமாக அமையப்பெறும்.

இத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.166 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதோடு இதுகுறித்த விவரங்கள் 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு முதல்வர் புதிய அரசு நூலக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

புதிய சட்டப் பேரவை வளாகம் – தொழில்நுட்ப அறிக்கை

NEW LEGISLATIVE ASSEMBLY COMPLEX (BLOCK-A),

OMANDURAR GOVERNMENT ESTATE, CHENNAI - 2 - TECHNICAL REPORT

- During the Golden Jubilee Celebration of Kalaignar in Legislative Assembly held on 12-5-2007, the Hon'ble Chief Minister, in the presence of Hon'ble Speaker of Lok Sabha, announced that a new Complex for Legislative Assembly will be constructed at a suitable site.
- In the high level meeting convened on 26-3-2008, under the Chairmanship of Hon'ble Chief Minister it was decided that the New Complex will consist of 2 blocks of which the first block viz. Block-A will house the Legislative Assembly with certain key common Departments (Home, Finance, Public, Law, Legislative Assembly, Planning & Development and related service facilities) and Block-B will accommodate all other Departments of Secretariat with required facilities.
- In the high level meeting convened by the Hon'ble Chief Minister on 17-4-2008 and 11-6-2008, the scheme and design concept for Block-A and Block-B presented by M/s.GMP International Architect, Germany was accepted. Accordingly, the programme charts have been prepared and planned to complete the project before March 2010.
- The Tender Award Committee, in its meeting held on 17-10-2008 decided to accept the lowest negotiated tender of M/s. East Coast Constructions after four negotiations and work order was issued to lowest negotiated tender and preliminary works commenced on 12-11-2008.

Important features of the building

- Global level competition for Architectural consultant.
- Applied for Green Building certification for a GOLD rating.
- Traffic impact study was conducted by Anna University. Based on this report, necessary widening of roads outside the complex was done.
- Environmental clearance from the Government of India was obtained.
- About 95 meetings were convened at all levels of Government to arrive at decisions and sort out the bottlenecks.
- Total built up area : 87058 Sq.m (9,30,297 Sq.ft.)
- Storeys : Ground + 6 Floors
- Height : 100 feet above the average road level of Anna Salai
- Dome : Steel dome of 45m dia (147.26 feet) and 29m (95.12 feet) height over the Assembly Hall roof.
- Required space for respective administrative departments were provided as per the decision of the Committee constituted by the Government.
- Structural Glazing and metal screen, fulfilling Green Building criteria.
- Natural stone cladding with sapphire Blue Granite for facade.
- To reflect Tamil culture "Kolam" pattern extensively used.
- Enclosed driveway with Landscaping.
- Having four pylon structures with connecting corridor.
- Dholpur sand stone dry cladding.
- Two roof gardens one above Chief Minister Circle and Library Circle.
- Rainwater harvesting and treated water reuse being done.
- Roads and driveways - 1000 M

- 1.7 km long compound wall with Reception centre.
- Air-conditioning and ventilation - 4100 TR installed capacity.
- Generators 2 Nos. - 2000 KVA.
- High Speed Lifts - 17 Nos.
- Transformers - 7 Nos of 1600 KVA.
- Total number of Labourers engaged Minimum - 2000 Nos., Maximum - 4300 Nos. excluding sub-vendors.
- Total quantity of Steel used about 1,12,60,400 Kgs.
- Total quantity of Cement used about 2,37,60,000 Kgs.
- Even though, the soil tests were conducted properly as per the I.S.codes, initially, driving the driven pile foundation was found difficult, since unexpected hard strata at a shallow depth was found in a particular contour of the site, which was not permitted. Alternatively bored pile was adopted which in turn delayed the programme chart for 1 month. This delay was adjusted in rest of the works with good quality.
- The plaza first floor is approached by climbing 48 steps provided around the circle for 1760 ft. length. This along with hefty pylon columns, give a gigantic aesthetic look for the building.
- The Assembly Hall is located in the ground floor of the Assembly circle, circular in shape with a diameter of 120 ft., head room of 100 ft. and 11500 sq. ft. plinth area.
- The structural designs for huge span of Assembly circle roof top beam, slabs and the beam between 2 pylon columns in plaza circle was verified by PWD and 3rd party verification (Anna University) was obtained and suggested modifications in structural designs were incorporated for safety of the structure. The time loss due to this was adjusted by expediting the finishing works with good quality.
- All codal provisions, circulars and other relevant instructions were adhered to during construction for safety and stability of the structure.
- This prestigious project with specialized structural members with gigantic aesthetic architectural look was completed in stipulated time with a lot of appreciation from the public.

Hon'ble Chief Minister inspected the site several times, in spite of busiest, important schedule and gave valuable suggestions, which were found to be very useful for implementation during construction. This encouragement given by the Hon'ble Chief Minister boosted the working energy of the Public Works Department Engineers.

On behalf of Public Works Department, I thank the Hon'ble Chief Minister and Government for having given the Buildings Wing of this Department, the opportunity to construct the above building.

Er. S. Karunagaran,
Chief Engineer (Buildings)
Public Works Department

புத்தகத்தில் உலகத்தைப் படித்தால்
அறிவு செழிக்கும்!
உலகத்தையே புத்தகமாகப் படித்தால்
அனுபவம் தழைக்கும்!

– கலைஞர்

சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர்கள்
ஒரு கண்ணோட்டம்

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ்

(1) 1937 ஆம் ஆண்டு அமைந்த முதல் சட்டமன்றப் பேரவை

கூட்டத் தொடர்கள் – 4
மொத்தம் கூடிய நாட்கள் – 109

(2) 1946 ஆம் ஆண்டு அமைந்த இரண்டாவது சட்டமன்றப் பேரவை

கூட்டத் தொடர்கள் – 10
மொத்தம் கூடிய நாட்கள் – 412

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் அமைந்த
முதலாவது பேரவை
1952–1957

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	03–05–1952 – 12–05–1952	7
2.	27–06–1952 – 31–07–1952	29
3.	03–11–1952 – 12–12–1952	19
4.	07–03–1953 – 30–07–1953	39
5.	14–12–1953 – 11–01–1954	17
6.	22–02–1954 – 13–08–1954	44
7.	01–12–1954 – 02–04–1955	60
8.	01–8–1955 – 06–04–1956	72
9.	08–08–1956 – 27–12–1956	27
	மொத்தம்	**314**

இரண்டாவது பேரவை

1957–1962

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	29–04–1957 – 27–07–1957	32
2.	25–10–1957 – 16–11–1957	20
3.	08–02–1958 – 10–04–1958	36
4.	03–09–1958 – 05–11–1958	27
5.	04–02–1959 – 30–03–1959	35
6.	20–04–1959 – 30–04–1959	9
7.	31–08–1959 – 12–09–1959	12
8.	05–12–1959 – 30–04–1960	39
9.	05–08–1960 – 10–09–1960	19
10.	19–01–1961 – 15–12–1961	76
	மொத்தம்	**305**

மூன்றாவது பேரவை

1962–1967

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	29–03–1962 – 02–11–1962	40
2.	28–01–1963 – 01–04–1963	35
3.	06–08–1963 – 23–11–1963	16
4.	16–01–1964 – 28–07–1964	46
5.	16–10–1964 – 24–10–1964	8
6.	18–01–1965 – 03–04–1965	34
7.	27–07–1965 – 12–11–1965	23
8.	28–01–1966 – 30–03–1966	35
9.	01–08–1966 – 09–11–1966	15
	மொத்தம்	**252**

நான்காவது பேரவை

1967–1970

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	15–03–1967 – 18–07–1967	37
2.	24–11–1967 – 23–01–1968	6
3.	10–02–1968 – 30–03–1968	34
4.	16–08–1968 – 31–08–1968	13
5.	25–01–1969 – 31–03–1969	33
6.	14–08–1969 – 13–09–1969	15
7.	19–01–1970 – 09–04–1970	41
8.	24–08–1970 – 09–09–1970	14
9.	25–11–1970 – 02–12–1970	6
	மொத்தம்	**199**

ஐந்தாவது பேரவை

1971–1976

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	22–03–1971 – 03–04–1971	10
2.	19–06–1971 – 30–07–1971	36
3.	21–10–1971 – 18–12–1971	17
4.	22–01–1972 – 06–04–1972	35
5.	09–08–1972 – 13–11–1972	13
6.	02–12–1972 – 15–12–1972	12
7.	02–02–1973 – 05–04–1973	41
8.	02–08–1973 – 14–08–1973	11
9.	19–11–1973 – 04–12–1973	14
10.	17–01–1974 – 20–04–1974	48
11.	12–08–1974 – 28–08–1974	14
12.	12–12–1974 – 23–12–1974	10
13.	20–02–1975 – 02–05–1975	47
14.	22–10–1975 – 12–11–1975	17
	மொத்தம்	**325**

ஆறாவது பேரவை

1977–1980

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	04–07–1977 – 29–08–1977	38
2.	28–12–1977 – 07–04–1978	51
3.	30–08–1978 – 14–09–1978	10
4.	09–02–1979 – 30–04–1979	58
5.	26–10–1979 – 10–11–1979	13
6.	30–01–1980 – 13–02–1980	9
	மொத்தம்	**179**

ஏழாவது பேரவை

1980–1984

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	19–06–1980 – 12–08–1980	39
2.	21–01–1981 – 14–05–1981	67
3.	21–08–1981 – 01–09–1981	10
4.	01–02–1982 – 07–04–1982	47
5.	06–09–1982 – 10–09–1982	5
6.	24–01–1983 – 27–04–1983	61
7.	24–10–1983 – 18–11–1983	17
8.	13–02–1984 – 28–04–1984	48
9.	08–10–1984 – 15–10–1984	7
	மொத்தம்	**301**

எட்டாவது பேரவை

1985–1988

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	25–02–1985 – 19–07–1985	59
2.	8–1–1986 – 15–05–1986	52
3.	12–11–1986 – 22–12–1986	11
4.	27–02–1987 – 11–05–1987	43
5.	09–11–1987 – 18–11–1987	8
6.	25–01–1988 – 28–01–1988	2
	மொத்தம்	**175**

ஒன்பதாவது பேரவை

1989–1991

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	06–02–1989 – 12–05–1989	43
2.	30–10–1989 – 02–11–1989	4
3.	18–01–1990 – 27–01–1990	7
4.	17–03–1990 – 12–05–1990	40
5.	20–08–1990 – 23–08–1990	4
6.	18–01–1991 – 25–01–1991	6
	மொத்தம்	**104**

பத்தாவது பேரவை

1991–1996

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	01–07–1991 – 13–07–1991	9
2.	04–09–1991 – 04–10–1991	23
3.	29–01–1992 – 05–05–1992	42
4.	21–09–1992 – 25–09–1992	5
5.	04–02–1993 – 30–04–1993	36
6.	25–10–1993 – 05–01–1994	11
7.	16–03–1994 – 05–05–1994	33
8.	03–11–1994 – 10–11–1994	6
9.	13–03–1995 – 06–05–1995	34
10.	02–11–1995 – 28–12–1995	8
11.	14–02–1996 – 01–03–1996	11
	மொத்தம்	**218**

பதினோராவது பேரவை

1996–2001

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	22–05–1996 – 01–06–1996	8
2.	16–07–1996 – 31–08–1996	38
3.	22–01–1997 – 30–04–1997	45
4.	13–10–1997 – 18–10–1997	6
5.	18–03–1998 – 30–05–1998	43
6.	23–11–1998 – 28–11–1998	6
7.	17–02–1999 – 18–05–1999	47
8.	17–11–1999 – 24–11–1999	6
9.	01–03–2000 – 18–05–2000	42
10.	06–11–2000 – 13–11–2000	7
11.	19–01–2001 – 02–02–2001	10
	மொத்தம்	**258**

பன்னிரண்டாவது பேரவை

2001–2006

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	22–05–2001 – 01–06–2001	7
2.	16–8–2001 – 14–09–2001	24
3.	09–03–2002 – 10–05–2002	35
4.	24–10–2002 – 31–10–2002	6
5.	23–01–2003 – 10–05–2003	34
6.	03–11–2003 – 07–11–2003	5
7.	04–02–2004 – 13–02–2004	7
8.	22–07–2004 – 31–07–2004	8
9.	16–11–2004 – 22–11–2004	5
10.	31–01–2005 – 13–04–2005	34
11.	21–09–2005 – 29–09–2005	7
12.	13–01–2006 – 27–01–2006	10
	மொத்தம்	**182**

பதின்மூன்றாவது பேரவை

2006 முதல்

கூட்டத் தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	17–05–2006 – 31–05–2006	8
2.	22–07–2006 – 02–09–2006	31
3.	04–12–2006 – 07–12–2006	4
4.	20–01–2007 – 27–01–2007	5
5.	22–03–2007 – 14–05–2007	35
6.	17–10–2007 – 22–10–2007	4
7.	23–01–2008 – 01–02–2008	6
8.	19–03–2008 – 14–05–2008	33
9.	10–11–2008 – 14–11–2008	5
10.	21–01–2009 – 26–02–2009	13
11.	17–06–2009 – 21–07–2009	26
12.	06–01–2010 – 11–01–2010	4
	மொத்தம் (11–1–2010 வரை) ★	**174**

★ அடுத்த, 13–வது கூட்டத் தொடர், சென்னை – 2, அண்ணா சாலையில் அமைந்துள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் தொடங்கப்படவுள்ளது.

அண்ணாவின்
இரட்டைக் குழல் துப்பாக்கி



அரசியல் வானில் கலைஞர் அவர்களும் புரட்சித் தலைவர் அவர்களும் இரு துருவ விண்மீன்களாக இருந்தபோதிலும், நட்பு வளையத்திற்குள் எப்பொழுதும் அவர்கள் நல்ல நண்பர்களாகவே இருந்தார்கள். 15-7-1977 அன்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டது:-

"ஒன்று மட்டும் சொல்வேன். எங்களால், மத்திய அரசால் செய்யக்கூடிய அனைத்தையும் நாங்கள் செய்வோம். மத்திய அரசால் செய்யக்கூடியவைகளைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்வோம். வேறு வழி இல்லை என்றால்–இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், சில கொள்கைகளுக்கு நாங்கள் உங்களுக்குத் துணையாக இருப்போம், உங்களுடன் ஒன்றுபட்டிருப்போம் என்று சொன்னதுபோல்–அவர்களது கொள்கைகளில் அவர்கள் நம்புவது உண்மையானால்–அந்தக் கொள்கைகளை நாம் நிறைவேற்றுவதற்காக ஒரு போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியத்தில், அந்தச் சூழ்நிலை உருவாக்கப்படுமானால் நான் நம்புகிறேன், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எங்கள் பக்கத்தில் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு அதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்)

மொழிப் பிரச்சினையானாலும் சரி, பொருளாதாரப் பிரச்சினையானாலும் சரி, 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்றால் எவ்வளவு செலவாகும் என்பதை நிதி அமைச்சராக இருந்த அனுபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு சில கருத்துக்கள் சொன்னார்கள்.

ஒன்றை நான் சொல்லிக்கொள்ள முடியும். சில எண்ணங்களை வெளியிடும்போது, அதில் பணியாற்றுகின்ற செயலர்களையும் அலுவலர்களையும் கலந்து விவரங்களைப் பரிமாறிக்கொண்டு, அதிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களை வைத்துக்கொண்டுதான், அதன் பிறகு எங்கள் எண்ணங்களையும் அதில் சேர்த்து பரிசீலித்த பிறகுதான், இப்படிப்பட்ட எண்ணங்களை இந்த ஆளுநர் உரையில் வைத்திருக்கின்றோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நியாயவிலைக் கடைகளை இந்த நாட்டில் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இன்னும் ஆயிரத்து சொச்சம் கிராமங்களை சேர்த்துக் கொள்ளக் கூடாதா என்று கேட்டார்கள். அதுபற்றி நிச்சயமாக இந்த அரசு சிந்திக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சூசகமாகச் சொன்னார்கள். 15ஆம் தேதி நான் சொல்லுவதாகச் சொன்னேன். அதை நான் சொல்லிவிட்டேன். ஆனால், எனக்கு முன்னால் இருக்கின்ற ராமச்சந்திரன் 15ஆம் தேதி சொல்லுவதாகச் சொன்னதை சொல்லுவதற்கு அவர்கள் தயாராய் விட்டார் என்று நான் கருதுகிறேன் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னதை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை.

அவர்களே (டாக்டர் கலைஞர்), சொன்னார்கள். என்னைப் பற்றி முதலமைச்சருக்கும் தெரியும், அவரைப்பற்றி எனக்கும் தெரியும் என்று அவர் சொன்னதைத்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னைப்பற்றி அவர் புரிந்து கொண்டிருக்கிறார், அவரைப் பற்றியும் நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். ஒருவருக்கொருவர் இடையில் கொஞ்சகாலம் பிரிந்திருந்தோம் என்றாலும் ஒருவருக்கொருவர் புரியாமல் இல்லை. இங்கு கனம் உமாநாத் அவர்கள்கூட சொன்னார்கள், ஏன் ஒருவருக்கொருவர் பெயரைக்கூட சொல்லுவதில்லை என்று கேட்டார். பெயர் சொல்லுவது மட்டுமல்ல, ஒருவருக்கொருவர் ஆண்டவனே என்று கூப்பிட்டுக் கொள்வது உண்டு. பெயரைச் சொல்வது முக்கியமல்ல, பொதுத் தன்மையில், பொதுப் பிரச்சினையில், மொழிப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளில் நாங்கள் நிச்சயமாக **"அண்ணா அவர்களின் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருப்போம்"** என்பதை இந்த நாட்டு மக்களுக்கு இதன் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா - சட்டப் பேரவை வைர விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை - 14-7-1997

"இந்த விழா நிகழ்ச்சியை அற்புதமாக ஏற்பாடு செய்து எழிலும், எழுச்சியும் குலுங்க இந்த நல்ல மாலை நேரத்தில் பெரியவர்களையெல்லாம் அழைத்து, அவர்களுடைய அறிவுரைகளை வழங்கிடச் செய்த – அதற்கென பல நாட்கள் அரும்பாடுபட்டு உழைத்த பேரவையினுடைய தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கும், பேரவையைச் சார்ந்த அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல்கள்மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, அந்த அமைப்பினுடைய 75 ஆவது ஆண்டு நிறைந்த பவள விழாவையும், தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப்பட்டு, அந்தப் பேரவையின் 60 ஆண்டுகள் நிறைந்த வைர விழாவையும் இங்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

1972 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் இங்கே முதலமைச்சராக இருந்தேன். 1989–இல் சட்டமன்றப் பேரவையினுடைய பொன் விழாவைக் கொண்டாடிய போதும் நான்தான் முதலமைச்சராக இருந்தேன். இப்போது இந்திய நாட்டின் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் முதலமைச்சராக இருக்கிறேன். இன்று – இந்தப் பவள விழா, வைர விழாவைக் கொண்டாடும்போதும் நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனவே, நீங்கள் எனக்கு ஒரு பட்டம் கொடுக்கலாம் – "விழா முதலமைச்சர்" என்று.

இப்படி, நானே முதல்வராக இருந்து இந்த விழாக்கள் நடப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்.

தேர்தல்கள்மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆயிற்று என்று சொன்னேன். அதனுடைய பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதை நீங்கள் அறிவீர்கள்.

தேர்தல் என்பது தமிழர்களுக்குப் புதிய ஒன்று அல்ல. பிற்காலச் சோழர்கள் காலத்திலேயே தமிழ் நிலத்திலே கிராமப் பகுதிகளில் தேர்தல் முறை இருந்தது என்பதற்கு உத்தரமேரூர் கல்வெட்டு சாட்சியாக இருக்கிறது. யார், யார் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுவதைவிட, விதிமுறை இருப்பதைவிட, யார், யார் ஊராட்சித் தேர்தலுக்கு நிற்கக் கூடாது; மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடாது என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. நல்லவர்கள் அல்லாதவர்கள், ஊழல் புரிகிறவர்கள், பிறர் பணத்திற்கு ஆசைப்படுகிறவர்கள், காமவேட்டைக்காரர்கள், குடிகாரர்கள் – இவர்கள் எல்லாம் தேர்தலிலே ஈடுபடக்கூடாது; ஈடுபடுவது தடுக்கப்படும் என்ற விதிமுறையின் அடிப்படையில் பிற்காலச் சோழர்களுடைய காலத்திலே கிராமப் பகுதிகளிலே தேர்தல்கள் நடைபெற்றன என்பதற்குச் சான்று பகன்று இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கல்வெட்டுதான் உத்தரமேரூர் கல்வெட்டு.

நான் பிற்காலச் சோழர்களைக் குறிப்பிட்டேன். சங்க காலத்திலேயே, பழந்தமிழ் காலத்திலேயே இந்த வாக்குச் சீட்டு முறை இருந்திருக்கிறது. வாக்குச் சீட்டு என்றால் அச்சடித்த காகிதம் அல்ல. ஓலைகளிலே இந்த ஊருக்குத் தலைவராக யார் வர வேண்டும் என்று ஊர் மக்கள் விரும்புகிறார்களோ – அந்தப் பெயரை ஓலைகளிலே எழுதி, அங்கே நடு மண்டபம் ஒன்றிலே வைக்கப்பட்டிருக்கின்ற குடத்திலே அந்த ஓலைகளை இடுவது ஒரு தேர்தல் முறை. இதை ஒரு சங்ககாலப் புலவன் ஒரு போர்க்களக் காட்சியை பாடுகின்ற நேரத்திலே நமக்குச் சுட்டிக்காட்டுகிறான். போர்க்களத்திலே பலர் மாண்டு கிடக்கிறார்கள். அப்படி மாண்டு கிடக்கும்போது, மாண்டு கிடக்கின்ற அந்த

பிணங்களின் வயிற்றையும், நெஞ்சையும், தலையையும், கழுகுகளும் பருந்துகளும் குத்திக் கீறி, உணவாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகின் செயலைப் பார்க்கிறான் புலவன். மாண்டு கிடக்கின்ற ஒரு வீரனின் குடலை உருவி, அது உண்ணுகின்ற காட்சியை சங்ககாலப் புலவன் வர்ணிக்கின்றான். எப்படி என்றால், குடவோலை முறையிலே குடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள ஓலைகளை வெளியே இழுப்பதைப் போல அந்த வீரனுடைய குடலை இந்தக் கழுகும், பருந்தும் வெளியே இழுக்கின்றன என்று குறிப்பிடுகிறான்.

அந்தப் பாடல் மூலமாக குடவோலை முறை பழந்தமிழர் காலத்திலேயிருந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது. இப்படி பன்னெடு நாட்களுக்கு முன்பு

இந்தச் சட்டமன்றத்திலே பல ஆண்டுக்காலம் பணியாற்றியவன் – 1957 ஆம் ஆண்டிலேயிருந்து பணியாற்றியவன் – பணியாற்றிக்கொண்டிருக்கின்றவன் என்ற முறையில் இந்த இரு விழாக்களிலும் கலந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே எந்தெந்த முதலமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்? “தாடி வைக்காத பெரியார்” என்று புகழப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்திருக்கிறார்.

பேச மாட்டார்; ஆனால் அரிய செயல்களைப் புரிவார் என்று புகழ்பெற்ற – பேச்சில் என்ன இருக்கிறது;



பழந்தமிழர் காலத்திலேயே இந்த மக்களாட்சி மாண்பினை உணர்ந்தவர்களாக தமிழ்நாட்டு மக்கள் இருந்திருக்கிறார்கள். நம்மின மக்கள் அதை உணர்ந்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவ்வழியிலே வந்த – ஆங்காங்கு சில தடைகள், இடையூறுகள் இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் கடந்து மக்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்து சட்டம் இயற்றுவது – சமுதாயத்தை முன்னேறச் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்வதற்குத்தான் சட்டமன்றங்கள், பாராளுமன்றங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன.

செயலில்தான் எல்லாம் இருக்கிறது என்று செய்து காட்டிய பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். நிருவாகத்திலே இவருக்கு நிகர் யாருமில்லை என்று பெயரெடுத்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று, எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களையெல்லாம் சட்டமன்றத்திலே தாங்கிக்கொண்டு “Your days are

numbered” என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சொன்னபோதுகூட, “My steps are measured” என்று சொன்ன பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

என்னுடைய இனிய நண்பர் – அருமை நண்பர் – மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றியவர்கள் எல்லாம் பல பெரும் பதவிகளுக்கும் சென்றிருக்கிறார்கள். நம்முடைய சி. சுப்ரமணியம், மாநில அமைச்சராக இருந்தார். அவர் மாநில அமைச்சராக இருந்தபோது – 1957 ஆம் ஆண்டு நான் சட்டசபைக்குள் நுழைந்தவன். அப்போது அவர்கள் நிதியமைச்சர். நான் நுழைந்த இரண்டாம் ஆண்டு – 1958–இல் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது “நான் இன்றைக்குச் சதம் அடிக்கப் போகிறேன்; ‘செஞ்சுரி’ போடப் போகிறேன்” என்று சொன்னார்கள். நாங்கள் அகல விழிகளை விழித்து என்னவென்று பார்த்தோம். இந்த பட்ஜெட் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் என்று சொன்னார்கள்.

1957–58–இல் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் அவ்வளவு பெருமையாக இருந்தது. இன்றைக்குப் பதினைந்தாயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டாலும், அதனுடைய பலன்களை மக்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையிலே நாடு இருக்கிறது.

அன்று மாநில அமைச்சராக இருந்த சி.எஸ். அவர்கள் மத்தியிலே அமைச்சரானார்கள். மராட்டியத்தின் ஆளுநராகவும் ஆனார்கள். அதைப்போலவே, இங்கே மாநில அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மத்தியிலே அமைச்சராகவும், குடியரசுத் துணைத் தலைவராகவும், குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள். அதைப்போலவே, இங்கே சென்னை மாகாண முதல்வராக (பிரதமராக) இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வங்காள மாநில ஆளுநராகவும், முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆகவும் ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த வி.வி. கிரி அவர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், கேரள மாநில ஆளுநராக ஆனார்கள். இங்கு அமைச்சராக இருந்த பிரம்மானந்த ரெட்டி அவர்கள் (ஒன்றாக இருந்தபோது – சென்னை மாகாணமாக இருந்தபோது) ஆந்திர முதலமைச்சராக ஆனார்கள். பின்னர், ஆளுநராகவும் ஆனார்கள். நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள், இங்கே அமைச்சராக இருந்தார்கள். பின்னர் ஆந்திர முதல்வராகவும் ஆனார்கள். பிறகு இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள்.

இந்த அளவிற்குப் பல இந்தியக் குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய சட்டமன்றம், தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை நான் தவறாகச்



சொல்லியிருந்தால் திருத்திக்கொள்ளவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

தற்கால மக்களாட்சித் தத்துவத்திற்கும், மக்கள் சேவை உணர்விற்கும் அக்காலத்திலேயே சோழ மன்னர்கள் வித்திட்டார்கள் என்று கூறினேன். அந்த மக்கள் சேவை எப்படியிருக்க வேண்டும் என்பதை "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று உத்தமர் காந்தியடிகளும், அறிஞர் அண்ணா அவர்களும் சொல்லி செயல்பட்டதைப்போல, "சேவை என்பது மற்றவர்கள் நன்மையடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காக, தான் செய்யும் காரியம்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லி செயல்பட்டதைப்போல, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்கள் நலனையே உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஒரு தேசத்தை ஒருவர் ஆட்சி புரிவது என்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவேயொழிய, ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்ல என்பதை ஒவ்வொருவரும் மனதிலே கொள்ள வேண்டும். ஜனநாயகம் என்பது மக்களாட்சி எனும் அரசாங்க முறை; "மக்களுக்காக – மக்களால் நடத்தப்படும் – மக்கள் அரசாங்கம்" என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டதை மறந்துவிட முடியாது. தற்காலத்தில் ஜனநாயக நாடுகள் யாவும் மக்களாட்சி முறை என அழைக்கப்படும் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை மேற்கொள்கின்றன.

மக்களின் சார்பில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறார்கள். தற்போது அரசிடமிருந்து மக்கள் அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். எனக்கும் புரிகிறது எல்லோருக்கும் புரிவதைப்போல.

அவைகளை நிறைவு செய்யவேண்டிய பொறுப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில்தான் இருக்கிறது. சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குப்படுத்துவது என்பது சலவை செய்யப்பட்ட உடைக்கு இஸ்திரி போடுவதைப்போல! ஏனென்றால் கொஞ்சம் கவனம் தவறினாலும் இஸ்திரி போடும்போது துணி கருகிவிடும். அதனால்தான், சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சர்வ ஜாக்கிரதையாகச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சட்டங்கள் என்பது குடிமக்களின் ஏற்புடைய விருப்பை அறிவிக்கும் முறையாகும். சட்டமன்றம் என்பது குடிமக்களின் முடிவை வெளிப்படுத்தும் நிறுவனமாக அமைகிறது. மக்களிடையே பொருளாதாரச் சமத்துவம் உருவாக்கப்பட, வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதோடு, இந்திய நாட்டிற்கே முழுமைக்கும் வழிகாட்டத்தக்கதாக அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

ஒரு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும்; ஆளுங்கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணங்களைப் பேரறிஞர்கள், பெரியவர்கள் பலரும் எடுத்துக்காட்டி அதைச் செயல்படுத்தியும் உணர்த்தியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியைப் பற்றி ஒரு முறை அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது சொன்னார்கள்:

"கேரளத்திலே ஒரு திருவிழா நடைபெறும். அந்தத் திருவிழாவிலே யானையின் துதிக்கையிலே ஒரு கம்பத்தைக் கொடுப்பார்கள். அந்த யானை அந்தக் கம்பத்தை – குறிப்பிடப்பட்ட குழியிலே கொண்டு போய் நடும். அது நட்ட பிறகுதான் திருவிழா தொடங்கும். இப்படி ஒரு நாள் ஒரு திருவிழாவில் யானையின் துதிக்கையிலே இரும்புக் கம்பத்தைக் கொடுக்க, அந்த யானை குழிக்கு அருகே சென்று, அதை நட மறுத்துவிட்டது. எல்லோருமே ஆச்சரியத்தால் அதிர்ச்சியடைந்தார்கள். அது நாட்டிற்கே நல்லதல்ல என்று கவலை கொண்டார்கள். பலமுறை பாகன் அடித்தும்கூட, அதைக் குத்தியும்கூட, வதைத்தும்கூட – அந்த யானை அந்தக் குழியிலே அந்தக் கம்பத்தை நட மறுத்துவிட்டது. ஏனென்று தெரிந்துகொள்ள – பிறகுதான் எல்லோரும் குழியைப் போய் எட்டிப் பார்த்தார்கள். குழிக்குள்ளே ஒரு சின்ன பூனைக் குட்டி இருந்தது. கம்பத்தை நட்டால் பூனைக் குட்டி இறந்துவிடும் என்பதற்காக யானை அந்தக் கம்பத்தை நட மறுத்தது என்பதை உணர்ந்தார்கள்."

அண்ணா சொன்னார் – சட்டசபையிலே "நீங்கள் யானையாக இருக்கின்ற ஆளுங்கட்சிக்காரர்கள் – பூனையாக இருக்கின்ற எங்களை – எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களை அந்த யானை எப்படி மதித்ததோ அப்படி மதியுங்கள்" என்று சுட்டிக்காட்டினார்கள்.

இன்னொரு முறை, நம் நண்பர் ஹண்டே அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது – அப்போது ஹண்டே அவர்கள் தோழமைக் கட்சி, சுதந்திரா கட்சி. ஹண்டே அவர்கள் தி.மு.கழகத்தின் ஆட்சி அண்ணாவின் தலைமையிலே நடைபெறுவதைப்பற்றி, அவர் தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட,

ஆட்சிக்குத் தேவையான கருத்துகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு எதிர்க்கட்சிக்காரர் எழுந்து "என்ன? ஹண்டே இவ்வளவு மென்மையாகப் பேசுகிறார்" என்று கேட்டார். அப்போது, அண்ணா சொன்னார்: "எப்போதும் எதிர்க்கட்சிதான் வேகமாகப் பேசும்; ஆனால், தோழமைக் கட்சி, பூனை தன் குட்டியைக் கவ்விக் கொண்டு போவதைப் போலத்தான் கவ்வும்; எதிர்க்கட்சியாக இருந்தால், பூனை எலியின்மீது பாய்வதைப்போல பாய்வார்கள்; ஹண்டே அவர்கள், பூனை தன் குட்டியைத் தூக்குவதைப்போல, பல் பதியாமல் எங்களைத் தூக்குகிறார்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

இது தோழமைக் கட்சிக்கு இருக்க வேண்டிய இலக்கணம் என்பதை அன்றைக்கே அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர்கள் சட்டமன்றத்திலே ஏற்கெனவே என்னோடு இருந்தார் என்று எனக்கு நினைவு. நல்ல சட்டமன்றப் பாரம்பரியம் கொண்டவர். நல்ல பண்பாளர். அவர்கள் சில கருத்துகளை இங்கே சொன்னார்கள்.

இப்போதெல்லாம் சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற விஷயங்கள் குறித்து – முன்புபோல அதிகாரிகள் மாலை நேரத்திலே எங்களிடம் வந்து கேட்டுத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொன்னார்கள். நானும் 1957–லிருந்து சட்டமன்றத்திலே இருக்கிறேன். நான் பேசிய பிறகு, அன்றைக்கு மாலையிலே எந்த அதிகாரியும் என்னை வந்து பார்த்து, என்ன பேசினீர்கள் என்று கேட்டதாக எனக்கு ஞாபகமில்லை. ஒருவேளை பாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால், என்னைக் கேட்டது கிடையாது. நான் 1957–லும் இருந்தேன்; 1962–லும் இருந்தேன்; எதிர்க்கட்சியாக இருந்தேன்; அதற்குப் பிறகு, 1967–ல் ஆட்சிக்கு வந்தேன். அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறேன். எந்த அதிகாரியும் என்னைக் கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை.

நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களுக்கு – கொஞ்சம் ஞாபக மறதி உண்டோ என்று எனக்கு எண்ணம். ஏனென்றால் – நான் சொன்னேன் முதலிலேயே, பெருந்தலைவர் காமராஜர் சட்டமன்றத்தில் பேசியதே கிடையாது என்று. அவர் இங்கே தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டுப் பேசியதாக ஒன்றை இங்கே பாலகிருஷ்ணன் படித்துக் காட்டினார். அந்தப் பேச்சு காமராஜர் பேசியது அல்ல. சி. சுப்ரமணியம் அவர்கள் பேசிய பேச்சு என்பதை, வரலாற்றிலே பிழை வந்துவிடக்கூடாது என்பதற்காக – அவர் சார்பாக அந்தப் பிழையை உங்கள் முன் திருத்தி – ஏதாவது தவறு செய்திருந்தால், அந்தத் தவறையும் திருத்துங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு – உங்களுடைய அன்பான வருகைக்கு நன்றி கூறி, இந்த அளவில் விடைபெறுகிறேன்."

தகவல் பெறும் உரிமைச் சட்டம்


நிர்வாகம் மற்றும் பல துறைகள் வாயிலாக, அரசு நிறைவேற்றும் செயல்திட்டங்கள் மற்றும் பணிகள் ஆகியன குறித்த தகவல்களைப் பெறும் உரிமையைப் பொது மக்களுக்கு வழங்கும் வகையில் இயற்றப்பட்ட சட்டம், தகவல் பெறும் உரிமைச் சட்டமாகும். இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாட்டில்தான் 1997 ஆம் ஆண்டில், தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, சட்டப் பேரவையில் 17–4–1997–ல் அறிமுகம் செய்யப்பட்டு, 30–4–1997–ல் சட்டம் இயற்றப்பட்டது. பின்னர் கோவா, இராஜஸ்தான், கர்நாடகா, டெல்லி, மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இச்சட்டம் இயற்றப்பட்டது. இந்திய அரசு 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தினை, 15–6–2005 அன்று நிறைவேற்றிய பின்னர், இந்தியா முழுவதும் இச்சட்டம் 13–10–2005 முதல் நடைமுறைக்கு வந்தது.

எனது சட்டசபை அனுபவங்கள்

திரு. சி.என். அண்ணாதுரை, எம்.எல்.ஏ.

சட்டசபையிலே நான் இடம் பெற்றதும், என்னைப்பற்றி அங்கு பலருக்கு ஐயப்பாடு ஏற்பட்டிருந்தது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்; எனக்கும் அதேபோலத் தான்!

ஒருவர் குறை கூறிக் கொள்ளாமலில்லை; கருத்து மோதுதல்கள் ஏற்படாமலில்லை; காரசாரமாக வாதிட்டுக் கொள்ளாமலில்லை. எனினும் இவற்றினுக்கூடே, ஓர் கனிவு இருந்திடக் காண்கிறேன்; களிப்படைகிறேன்.



பெரியாரும் அண்ணாவும்

கனிவு என் கண்களுக்கு முதலில் சட்டமன்றத் தலைவர் உருவில் தான்!

டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ் அவர்கள், பார்ப்பனர்; கன்னடக்காரர். நான், தமிழக மக்களிடம் பார்ப்பனர்களுக்குப் பகைவன் என்று பல காலமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளவன். தமிழர்கள் பிற மொழியினரைத் தாழ்த்த வேண்டும் என்ற கொள்கை கொண்டவன் நான் என்று பல காலமாகக் கூறி வைத்திருக்கிறார்கள். இந்த எண்ணத்துடன்தான், டாக்டர் அவர்கள் என்னை நோக்குவார் என்ற அச்சம் எனக்கு இருந்தது.

உள்ளே நுழைந்து ஏதேது பேசுவானோ, என்னென்ன கூறி ஏசுவானோ என்று என்னைக் குறித்து அருவறுப்புக் கலந்ததோர் அச்சத்துடன் கருதினர் பலர். நானும் அலட்சியப்படுத்துவார்கள், பகை பொழிவார்கள், ஒவ்வொரு வேளையும் அமளி மூட்டுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இரு பிரிவினரும் இப்போது பெருமளவுக்கு அந்த ஐயப்பாட்டினின்றும் விடுபட்டிருக்கிறோம் என்று நம்புகிறேன்.

கருத்துகளிலே மாறுபாடுகள் இருப்பினும், காட்டுணர்ச்சியின்றி, கனிவுடன் பழக, பேச, வாதிட முயற்சித்தால் முடியும் என்பது நான் பெற்ற முதல் அனுபவமாகும். அங்கு ஒருவரை



பேரறிஞருடன் கலைஞர்

"உன்னுடைய அச்சம் கிடக்கட்டும்; டாக்டர் ஒரு பார்ப்பனர் என்பதற்காகவே நீ என்னென்ன பழி பேசுவாயோ என்று அவருக்குச் சிலராவது அச்சமூட்டி இருக்க மாட்டார்களா? என்று கேட்பீர்கள்." உண்மைதான். அப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

ஆனால், டாக்டர் அவர்கள் கனிவான உள்ளம் படைத்தவர் மட்டுமல்ல; அவரிடம் தொடர்பு கொள்வார் அனைவருமே அவ்விதமான 'கனிவு' பெறத்தக்க வகையினைத் தமது பேச்சாலும் போக்காலும் வழங்கிடுபவர்.

மழலை ஓசையுடன் அவர் தமிழ் பேசுவது கேட்கவே ஓர் இனிமையாக இருக்கிறது. நல்ல தமிழ் பேச இயலுமா என்று அவர் எண்ணுகிறார். அவர் நல்ல தமிழைத் தேடிப்பிடித்து இழுத்துவரத் தேவையில்லை; உள்ளத்திலே அதற்கான 'ஒளி' அவரிடம் நிரம்ப இருக்கிறது. அவருடைய சீரிய முயற்சி, ஆட்சிமொழியாகியுள்ள தமிழின் பொலிவினை வளப்படுத்தி வருகிறது.

பொதுவாகவே, சட்டமன்றத்திலே தமிழ் மணம் கமழ்கிறது. திருக்குறளும் சிலப்பதிகாரமும் மன்றத்திலே பலராலும் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. ஓர் இரகசியம் – வெளியே சொல்லிவிடாதீர்கள்! சட்டமன்றத்திலே உள்ள ஆரணங்குகள் அவ்வளவு பேருமே பேச்சுத் திறனிலும் தமிழார்வத்திலும், வேண்டுமென்றே ஆடவர்களை முன்னணியில் விட்டு வைத்திருக்கிறார்களே தவிர, அவர்கள் விரும்பினால், ஆடவர்கள் ஆயாசமடையத்தக்க வகையில் முன்னணியில் அம்மையரே இருந்திடுவர். எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி இதிலே! ஆமாம்; நான் என்னையும், நான் போற்றுகின்ற கொள்கைகளையும், அம்மையர் சிலர் கடிந்துரைக்கும்போதுகூட, நான் அவர்களிடம் உள்ள பேச்சுத் திறனில் லயித்து விடுகிறேன். தமிழார்வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். என்னதான் நாம் போற்றினாலும், பாராட்டினாலும், தாய் மொழிதானே தமிழ்! அவர்கள் பக்கம்தான் சேரும்!

இன்று ஆளும் கட்சியினருக்கு மிகப் பெரிய எண்ணிக்கை பலம் இருக்கிறது. நான் சார்ந்த கட்சிக்கு உள்ள எண்ணிக்கை மிகக் குறைவு.

பிரச்சினைகளின் நியாய அநியாயம், அவை குறித்துக் கூறப்படும் வாதங்களில் உள்ள தரம், திறம் இவை எப்படி இருந்தபோதிலும், அவை குறித்து எவ்வளவு வியந்து பேசினாலும், பாராட்டினும் இறுதியில், 'எண்ணிக்கை' தானே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது? வெளிப்படையாகக் கூறுவதென்றால் பிரச்சினைகள் விளக்கப்பட்டு, கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்று கூறுவது 'சம்பிரதாயம்.' பொதுவாகவே சம்பிரதாயங்களுக்கு இப்போது வலிவு குறைந்துவிட்டதல்லவா? அதுபோலத்தான் இந்த சம்பிரதாயமும்!

என் அனுபவத்தில், ஆளும் கட்சியினரில் பலர் எங்கள் வாதங்களில் உள்ள உண்மைகளை ஒப்புக் கொள்பவர்களாகவே இருந்திடத் தெரிகிறது –ஆனால் சட்டசபைக்கு உள்ளே அல்ல; வெளியே! அமைச்சர்கள் பார்வைபடாத இடத்திலே! முடிவுகள் எடுக்கப்பட்டான பிறகு!

சட்டசபையிலே நாங்கள் இடம் பெற்ற துவக்கத்தில், 'அடுக்கு மொழி' என்பது குறித்து ஆளும் கட்சியினர் பலர் கேலி பேசினர். இப்போது, அவர்கள் அதே முறையில் பேச முற்படுகின்றனர்.


என் நண்பர் ஆசைத்தம்பி இம்முறை பேசும்போது, பல முறை தமது வாக்கியங்களை முடிக்கும்போது, 'ஆசைப்படுகிறேன், ஆசைப்படுகிறேன்!' என்று கூறி வந்தார். நிதி அமைச்சர் என்னைப் பார்த்து, 'ஆசைத்தம்பி ஆசைப்படுகிறார்' என்று கூறியபோது, நானாக எண்ணிக்கொண்டேன், "சரி சரி, இவருக்கும் அடுக்குமொழி இனிக்கிறது!" என்று!

முதுகுளத்தூர் சம்பவம், சட்டப் புத்தக எரிப்பு தடுப்புச் சட்டம் பற்றிய பேச்சு, நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அடக்குமுறை பற்றிய கண்டனம் என்பவை, பண்பு குறைந்தவர்கள் சட்டமன்றத்திலே அதிகமாக இருந்திருந்தால், அமளியை மூட்டி விட்டிருக்கக் கூடியவை.

ஆனால், நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்; மன எழுச்சியும் நெகிழ்ச்சியும், ஆத்திரமும் கோபமும் பொங்கிடத்தக்க நிலையினை மூட்டும் அந்தச் சம்பவங்களைக் குறித்து விவாதம் கடுமையாக நடைபெற்றபோதும், கட்டுப்பாடு மீறப்படவில்லை; முறைகள் கெடவில்லை; விதிகள் பாழ்படவில்லை; கலகம் விளையவில்லை.

அவ்வளவு பண்பான முறையிலே சட்டசபை நடவடிக்கைகளை நடத்திச் செல்ல முடிகிறது. இதற்குக் காரணம், பொதுவாகவே, அனைவருக்கும் நல்ல முறையில் சட்டமன்றம் நடைபெற வேண்டும் என்பதில் உள்ள அக்கறைதான்.

– 1958 ஆம் ஆண்டு 'ஆனந்த விகடன்' இதழிலிருந்து



முதல்வராகப் பொறுப்பேற்கும் பேரறிஞர் அண்ணா




'தமிழ்நாடு'

மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்ய அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டுவரக் கோரும் தீர்மானம் 18-7-1967-இல் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவால் பேரவையில் முன்மொழியப்பெற்று, கட்சித் தலைவர்கள் கருத்துரைகள் வழங்கிய பின்னர், முதலமைச்சரின் பதிலுரைக்குப் பிறகு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்மானம் நிறைவேறியபோது, 'தமிழ்நாடு' என்று முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா மூன்று முறை முழக்கமிட்டதும் 'வாழ்க' என்று அவை உறுப்பினர்கள் அனைவரும் ஒவ்வொரு முறையும் ஒருமித்து குரலெழுப்பினர். பாராளுமன்றத்தால் இத்தீர்மானம் ஏற்கப்பட்டு, 16-1-1969 முதல் நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படலானது.

புனித ஜார்ஜ் கோட்டைப் பேரவை மண்டபத்தில் இறுதிக் கூட்டத்தின்போது சட்டமன்ற வரலாறு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை - 11-1-2010


"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரை குறித்தும், அதனைத் தொடர்ந்து இந்த அவையில் பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுடைய கருத்துகள் குறித்தும், நீண்ட நேரம் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் அளித்திருக்கின்றார்கள். நான் இப்போது ஆளுநர் உரை பற்றியோ அல்லது வரவிருக்கின்ற பட்ஜெட் பற்றியோ, வேறு பல நிலைமைகளைப் பற்றியோ பேச விரும்பவில்லை.



திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்

நான் உட்பட, நாம் எல்லாம் சேர்ந்து, இந்த அவையிலேயிருந்து வெளியேறப் போகிறோம். நம்மை யாரும் வெளியேற்றாமலே நம்முடைய விருப்பப்படி வெளியேறப் போகிறோம். சில பேர் வெளியேறுவதற்காக வந்து, வெளியேறியவர்களையும் சேர்த்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு நாம் வெளியேறப் போகிறோம். எங்கிருந்து? சரித்திரக் கீர்த்திமிக்க இந்தச் சட்டசபை நடைபெறுகின்ற இந்த இடத்திலிருந்து வெளியேறப் போகிறோம்.

அடுத்து வரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர் புதிய சட்டமன்றப் பேரவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.



திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா


இங்கே நடைபெறும் இறுதிக் கூட்டத் தொடர் இது என்பதால் இந்த நேரத்தில் இந்த அவையினுடைய வரலாற்றினை கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

டெல்லியிலுள்ள செங்கோட்டை, சக்கரவர்த்தி ஷாஜகானால் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மொகலாயப் பேரரசின் மிகப் பெரிய சின்னம் என்பதைப்போல, சென்னை மாநகரத்திலேயுள்ள இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை, 16 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

1640–ல் புனித செயின்ட் ஜார்ஜ் நினைவு தினமான ஏப்ரல் 23 அன்று இந்தக் கோட்டை கட்டப்பட்டதால், இதற்கு புனித ஜார்ஜ் கோட்டை (St. George Fort) என்று பெயரிடப்பட்டது.


1678–ல் இக்கோட்டை வளாகத்தில் மிகத் தொன்மையான புனித மேரி ஆலயம் கட்டப்பட்டது. அந்த தேவாலயத்தில்தான் 1753–ல் இராபர்ட் கிளைவின் திருமணம் நடைபெற்றிருக்கிறது. 1687 முதல் 1692 வரை ஆளுநராக இருந்த "யேல்" அவர்கள் காலத்தில்தான், ஆசியாவிலேயே மிக உயரமான கோட்டை கொடிமரத்தில் கம்பெனி கொடிக்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டது. 1746–ல் பிரெஞ்சுக்காரர்களால் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்த கறுப்பு படிகத்தாலான கிரானைட் போன்ற படிவங்களாலான 32

தூண்கள், 1761 ஆம் ஆண்டு மீண்டும் சென்னைக்கு எடுத்து வரப்பட்டு, அவற்றுள் 20 தூண்கள் இந்தக் கட்டடத்திலே நிறுவப்பட்டு, இப்போதும் அவை இக்கட்டடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. 1910 ஆம் ஆண்டில், அதாவது சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய சட்டமன்றப் பேரவை மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது என்பதை எண்ணும் போது, இதற்கும் ஒரு நூற்றாண்டு விழா கொண்டாடலாம்போல் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாகாண சட்டசபைக்கு 1920–ல் நடைபெற்ற முதல் தேர்தலில் திராவிட இயக்கத்தின் வேர்க் கட்சியான நீதிக் கட்சி வெற்றி பெற்று, திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள் முதலமைச்சர் ஆனார்.



மூதறிஞர் இராஜாஜி

சென்னை மாகாணத்திலேயே முதன்முதலாக 1920 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி சட்டமன்றத்தில் First Premier, "முதல் பிரிமியர்" என்ற முதலமைச்சர் பதவியைப் பெற்ற பெருமை நீதிக் கட்சிக்கும், அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பராயலு ரெட்டியாருக்கும்தான் சாரும். அப்பொழுது சட்டமன்றத்தை 12–1–1921 அன்று கன்னாட் கோமகன் தொடங்கி வைத்தார். அவ்வமயம் சென்னை மாகாண ஆளுநராக இருந்த விலிங்டன் பிரபு அவர்களும், அவரது துணைவியாரும் 6–3–1922 அன்று சட்டமன்றத்திற்கு வருகை தந்தார்கள். அப்போதுதான் தேக்கு மரத்தால் செய்யப்பட்ட, சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த, பேரவைத் தலைவருக்கான இந்த இருக்கையைப் பரிசாக அளித்தனர். அதுவே இன்றளவும் பேரவைத் தலைவரின் இருக்கையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இருக்கையை அவர்கள் வழங்கியதற்கு என்ன காரணம் என்பதை ஆளுநர் விலிங்டன் அவர்களே தன் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது அவருடைய தாத்தா 'ஹவுஸ் ஆப் காமன்ஸ்'



பெருந்தலைவர் காமராஜர்

அவையிலே ஸ்பீக்கராக இருந்தவர் என்றும், அவரது துணைவியாரின் தந்தையார் சிறந்த நாடாளுமன்றவாதியாக இங்கிலாந்தில் திகழ்ந்தார் என்றும் பேசியிருக்கிறார்.

1920 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி, 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஏறத்தாழ 17 ஆண்டுக்காலம் தொடர்ந்து ஆட்சியிலே இருந்தது. அந்த 17 ஆண்டுக்காலத்தில் நீதிக் கட்சியினுடைய ஆட்சி, இந்த நாட்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ., பெண்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட சரித்திரம் மறவாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. நீதிக் கட்சி ஆட்சியில் திரு. சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர், பி. சுப்பராயன், பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், பி.டி. இராசன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தார்கள்.


1921 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டு வரை இதே புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள பேரவை மண்டபத்திலே கவுன்சில் ஹாலில் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றது. பேரவையின் கூட்டமே இப்பொழுது இருக்கிற கவுன்சில் ஹாலில் அங்கேதான் நடைபெற்றது.

1937–ல் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை இடங்களை வென்றபோதும், சில பிரச்சினைகள் காரணமாக அமைச்சரவை அமைக்கவில்லை. கவர்னரின் வேண்டுகோள்படி இடைக்கால ஏற்பாடாக 1–4–1937 அன்று கே.வி. ரெட்டி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஒன்றரை மாதத்திற்குப் பின் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை மூதறிஞர் இராஜாஜி அவர்களின் தலைமையில் 14–7–1937 அன்று பதவியேற்றது. 1937 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை முதன்முதலாக சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பிரதான மண்டபத்தில்தான் (செனட் ஹால்) செயல்பட்டது.

14–7–1937 முதல் 21–12–1937 வரை சுமார் ஐந்து மாதங்கள் சேப்பாக்கத்தில் உள்ள செனட் மண்டபத்திலே சட்டப் பேரவை நடைபெற்றிருக்கின்றது.

27–1–1938 முதல் 26–10–1939 வரை சுமார் 20 மாதங்கள் அரசினர் தோட்டத்திலே உள்ள இராஜாஜி மண்டபத்திலே பேரவை நடைபெற்றது. இராஜாஜி மண்டபத்தை நினைத்துப் பாருங்கள்; பேரவையையும் ஒரு முறை உற்றுப் பாருங்கள்; இந்தப் பேரவை இராஜாஜி மண்டபத்திலே 27–1–1938 முதல் 26–10–1939 வரை 20 மாதங்கள் நடைபெற்றிருக்கின்றது.


திரு. எம். பக்தவத்சலம்

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்திய ஆங்கிலேய அரசைக் கண்டித்து, இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை 30–10–1939–ல் இராஜினாமா செய்தது. அன்று முதல் 30–4–1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. 1946–ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வென்று 30–4–1946 அன்று ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்கள் தற்போதைய தலைமைச் செயலக பிரதான மண்டபத்தில் பொறுப்பேற்றார்.

24–5–1946 முதல் புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள இதே மண்டபத்தில் பேரவை நடைபெற்றது. பிரகாசம் அவர்களின் அமைச்சரவை 23–3–1947 அன்று பதவி விலகியது. அன்று பிற்பகலில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஓமந்தூரார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேதான் — 15–8–1947–ல் இந்தியத் திருநாடு விடுதலை அடைந்தது. முதல் சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய முதல் முதலமைச்சர் என்ற பெருமையை ஓமந்தூரார் பெற்றார். அவரது பெயரைத்தான் Government Estate என்று இருந்த பகுதிக்கு "ஓமந்தூரார் வளாகம்" என்று நான் சூட்டினேன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

1950 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. 1952–ல் முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்று அப்பொழுது மேலவை உறுப்பினராக இருந்த திரு. இராஜாஜி தலைமையில் அமைச்சரவை அமைத்தது. பேரவையின் உறுப்பினர்கள் 375 பேர் என்ற நிலையில் கோட்டையிலே இருந்த பேரவை மண்டபம் போதுமானதாக இருக்காது என்பதால், சென்னை அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை மண்டபம் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. 10 இலட்சம் ரூபாய் அந்தக் காலத்திலே.

1952 ஆம் ஆண்டு அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டு, அதனை 2–5–1952 அன்று ஆளுநர் ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார். அதுவே பின்னர் பாலர் அரங்கமாகவும், கழக ஆட்சியிலே கலைவாணர் அரங்கமாகவும் பெயர் பெற்று விளங்கியது. 1957 தேர்தலுக்குப் பிறகு, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை மண்டபத்தில் பேரவைக் கூட்டங்கள் நடைபெறத் தொடங்கி, இன்று வரை 53 ஆண்டுகளாக இந்த மண்டபத்திலே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையிலே, 20–4–1959 முதல் 30–4–1959 வரை ஒன்பது நாட்கள் மட்டும் உதகமண்டலத்திலே உள்ள அரண்மூர் மாளிகையில் பேரவை நடைபெற்றதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஓமந்தூராருக்குப் பிறகு, குமாரசாமி ராஜா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்து இந்தக் கோட்டையில் கொலு வீற்றிருந்து கோலோச்சி இருக்கிறார்கள்.

1967–ல் பேறறிஞர் அண்ணா முதலமைச்சரானார். 1969–ல் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், 1971, 1989, 1996, 2006 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளேன்.

15–3–1971 அன்று தி.மு.கழக அமைச்சரவை என் தலைமையில் பதவியேற்றபோது, சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற அந்தப்

பதவியேற்பு விழாவிற்கு வந்திருந்த முக்கியப் பார்வையாளர்களில் ஒருவர் தந்தை பெரியார். பதவியேற்ற பிறகு நாங்கள் அனைவரும் அவர்களிடத்திலே ஆசி பெற்று வாழ்த்து பெற்றுச் சென்றோம்.


அதன் பின்னர் அருமை நண்பர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், ஜானகி அம்மையார் அவர்களும், ஜெயலலிதா அவர்களும், ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் முதலமைச்சர்களாக இந்த மாமன்றத்திலே இருந்திருக்கிறார்கள்.

இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சரித்திரப் புகழ்வாய்ந்த தீர்மானங்கள், சட்டங்கள், முடிவுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை நினைவுகூர விரும்புகிறேன்.

ஆலயங்கள் நுழைவுச் சட்டம் நிறைவேற்றப் பட்டதும் இந்த அவையிலேதான், கிட்டத்தட்ட அந்த ஆண்டுகளிலேதான்.

8–10–1928 அன்று இந்தப் பேரவையிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்:

சென்னை நகர காவல் துறையினர் பாரதியாருடைய பாடல்கள் அடங்கிய புத்தகங்களைப் பறிமுதல் செய்த நடவடிக்கை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் கொண்டு வந்தார். பாரதியார் பாடல்கள் பற்றி ஒரு மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதால், அதையொட்டிய கருத்துகளை அவையில் தெரிவிக்கக்கூடாது என்று பேரவைத் தலைவர் கூறினார்; விவாதம் ஏற்பட்டு பிரச்சினையை அடுத்த



சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் பேரறிஞர் அண்ணா

வாக்காளர் பட்டியலிலே மகளிரும் இடம் பெற வகை செய்யும் தீர்மானம் 1–4–1921 அன்று Justice கட்சி ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

தாழ்த்தப்பட்டவர்களை "பஞ்சமர், பறையர்" என்ற சொற்களால் குறிப்பிடுவது அரசு ஆவணங்களில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் 20–1–1922–ல் நிறைவேறியது.

நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவாயிற்று. அடுத்த நாள் இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் பாரதியாரின் பாடல்களை அவையிலே பாடி விளக்கமளித்தார். அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள மறுத்ததும், சத்தியமூர்த்தி அவர்களே அவையிலே எழுந்து நின்று பாரதியாருடைய



சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர்

பாடல்களைப் பாடி அந்தப் புரட்சியை செய்தார் என்பது அந்தக் காலத்து இந்த அவையினுடைய வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

கவர்னரால் இந்தப் பேரவைக்கு நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி திருமதி முத்துலட்சுமி ரெட்டி. அடுத்து நியமிக்கப்பட்டவர் திருமதி அலமேலு மங்கத் தாயாரம்மா.

3–11–1952–ல் கைத்தறிக்கென சில இரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானம். 29–7–1953 குலக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது பற்றிய தீர்மானம். அந்தக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று திருத்தத் தீர்மானம். வாக்கெடுப்பில் திருத்தத்திற்கு ஆதரவாக 138 வாக்குகளும், எதிர்த்து 138 வாக்குகளும் கிடைத்து, பேரவைத் தலைவர் திருத்தத்திற்கு எதிராக, அதாவது குலக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் அந்த நேரத்திலே திருத்தம் தோல்வியடைந்து, குலக் கல்வித் திட்டம் தப்பிப் பிழைத்தது. என்றாலும்கூட 18–5–1954–ல் குலக் கல்வி முறையைக் கைவிடுவதென்று, எத்தனை பேர் வாக்களித்தார்கள் என்றில்லாமல் எது நியாயம் என்பதை எண்ணிப் பார்த்து தமிழகத்திலே எழுந்த புரட்சியின் காரணமாக, மக்களுடைய கொந்தளிப்பின் காரணமாக அதைத் திரும்பப் பெற்றார்கள், குலக் கல்வித் திட்டத்தை; அதுவும் இந்த அவையிலே வரலாற்றுச் சான்றாகப் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏன் இந்த அவையினுடைய வரலாற்றை நான் சற்றுப் பின்னோக்கி திரும்பிப் பாருங்கள் என்று சொன்னேன் என்றால், இந்த அவையிலே எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ முடிவுகள் தமிழ்நாட்டு மக்களுக்காக என்று சிந்தித்து செயல்பட எடுக்கப்பட்ட முடிவுகள் எல்லாம் உண்டு. ஆனால் எல்லா முடிவுகளும் நான் இங்கே குறிப்பிட்டேனே, அதைப்போல 138–138 என்ற நிலையிலே இருந்தாலும்கூட, மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளித்து, அதற்கேற்ப சட்டங்களை வகுப்பது, ஆட்சியை நடத்துவது என்ற முறை அன்றைக்கு இருந்தது. அது இன்றைக்கும் இருக்க வேண்டும் என்ற முனைப்போடுதான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே நாங்கள் அமர்ந்திருக்கிறோம்.

இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்துக் கூறினார்கள். அவைகளுக்கெல்லாம் நான் பதில் அளித்தால் இந்தச் சட்டமன்றப் பேரவையைப் பற்றியும், புதிய வீட்டிற்கு நாம் குடிபோவதைப் பற்றியும் பேசுவதாகச் சொல்லிவிட்டு, மீண்டும் எங்கேயோ சென்றதாக நீங்கள் கருதக்கூடும். எனவே, நான் அவைகளைப் பற்றியெல்லாம் இங்கே

பேச விரும்பவில்லை. துணை முதலமைச்சர் அதற்கெல்லாம் பதில் அளித்திருக்கிறார்.

இடையிடையே அமைச்சர்கள் குறுக்கிட்டு விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று. ஒரு கருத்தைச் சொன்னால் அந்தக் கருத்தின்பால் எத்தகைய எதிரொலி ஏற்படும், எத்தகைய நிலைமைகள் உருவாகும், ஆகவே, அந்தக் கருத்துகளைச் சொல்லாமல் இருப்பது நல்லதல்லவா என்றெல்லாம் எண்ணிப் பார்த்து அந்தக் கருத்துகளைச் சொல்வதுதான் சிலாக்கியமான ஒன்று என்பதை உணர்ந்து, நான் அறிந்த வரையில் என்னுடைய வாழ்க்கையில், அரசியல் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றேன். அதைத்தான் இந்தச் சட்டமன்றப் பேரவையிலும் கடைப்பிடித்து வருகிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவையிலே எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. விரும்பத் தகாத நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. அவை என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே குறித்துப் பேசி மறுபடியும் அதே நிகழ்ச்சியினுடைய தொடர்ச்சியை இங்கே நான் ஏற்படுத்த விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு, நாம் குடிசெல்கின்ற புதிய இடத்திலாவது அந்த நிலைமை இல்லாமலும், நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப் பற்றிய நினைவு, இவைகளோடு நம்முடைய பணியை அங்கே தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையின் இறுதியிலே, புரட்சித் தலைவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாட்டைச் சொல்லிப் போனார்கள். அந்தப் பாட்டு அவர்களுக்காகப் பாடியது அல்ல. எனக்குத் தெரியும், எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை மனதிலே வைத்துப் பாடிய பாட்டு அது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், என்னுடைய 40 ஆண்டுக்கால நண்பர் அல்லவா? இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சித் தேர்தல் நடைபெற்றபோது, தலைவராக நான்தான் வரவேண்டும் என்று அதற்காகப் பாடுபட்டவர். அதற்காக ஆட்களைச் சேர்த்தவர். அந்த நன்றி இன்றைக்கும் எனக்கு உண்டு. சாகின்ற வரையிலே உண்டு. அதைப்போல, இந்தப் பொறுப்புக்கு நான் வரவேண்டும் என்று விரும்பியவர்களில் அவரும் ஒருவர். ஆகவே, நான் அவருக்கும், எனக்கும் உள்ள 40 ஆண்டுக்கால நட்பின் காரணமாகச் சொல்லுகிறேன், இந்தப் பாடலை இங்கே அவர் சொன்னாலும்கூட அதனை நான் இப்படித்தான் கருதிக்கொள்கிறேன்.

என்னதான் நடக்கும், நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளிவரும் தயங்காதே!
ஒரு "தலைவன்" இருக்கின்றான் மயங்காதே!
(மேசையைத் தட்டும் ஒலி)

"ஒரு தலைவி இருக்கின்றார் மயங்காதே" என்று சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) "ஒரு தலைவன் இருக்கின்றான் மயங்காதே" என்று அன்றைக்கே என்னைக் குறிப்பிட்டுச் சொன்னார். இதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருடைய அந்த நம்பிக்கையான வார்த்தையை ஏற்றுக்கொண்டு இந்த அவையைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்." (மேசையைத் தட்டும் ஒலி).

கடலில் தூக்கி எறிந்தாலும் அங்கேயும் கட்டுமரமாக மிதக்கக் கூடிய உறுதியும் பக்குவமும் உடையவர்கள்தான், கொண்ட கொள்கையில் வெற்றிபெற முடியும்.

– கலைஞர்

முக்கிய நிகழ்வுகள், தீர்மானங்கள் மற்றும் சட்டங்கள்

ஒரு நாட்டைக் கட்டுக்கோப்புடனும், அமைதி காக்கப்படும் வகையிலும் நடத்திச் செல்வதற்குச் சட்டங்கள் துணை புரிகின்றன. பண்டைய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் வாய்மொழியாகவும், ஓலைகள் மூலமும் பட்டயங்கள் மூலமும் அனுப்பப்பெற்ற ஆணைகளே நடைமுறைப்படுத்தப்பெற்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டபின் அவற்றைப் பொது மக்கள் அறியும் வகையில் gazette என அழைக்கப்பெறும் அரசிதழில் அச்சிட்டு வெளியிடும் வழக்கம் மேற்கொள்ளப்பட்டது. அதே வழக்கம் இன்றளவும் தொடர்ந்து வந்து, பெரும்பாலும் ஒரு சட்டம் அரசிதழில் வெளியிடப்படும் நாளே அச்சட்டம் அமலுக்கு வரும் நாளாக இருக்கின்றது.

ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலத்தில், மன்னரின் பிரதிநிதிமூலம் ஆட்சி நடைபெற்றதால் தற்போதுள்ள சட்டம் இயற்றும் முறை அப்போது நடைமுறையில் இல்லை. சட்டங்கள், 'Charter', 'Regulations', 'Act' என்று பல்வகையான பெயரிடப்பட்டு இயற்றப்பெற்றன. அரசின் வருவாயை உறுதி செய்தல், நாட்டில் அமைதிக் குலைவு ஏற்படுவதைத் தடுத்தல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டுதான் பெருவாரியான சட்டங்கள் இயற்றப்பெற்றன. அப்போது 'சென்னை ராஜதானி' என்று அழைக்கப்பெற்ற தமிழகத்தைப் பொறுத்த சட்டங்களும் பெரும்பாலும் இவ்வாறே அமைந்தன.

சில நேர்வுகளில் ஆளுநரின் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அரசமைப்புச் சட்டத்திற்கிணங்க பின்னர் சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவினைக் கொண்டு வருகின்ற நிலை தற்போது உள்ளது. மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு சட்டம் இயற்றுமாறு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானங்களும் அவ்வப்போது சட்டமன்றத்தில் நிறைவேறி வருகின்றன.

தமிழகத்தின் சமூக, அரசியல், பொருளாதார வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக்கொண்டு வரத்தக்க வகையில் தமிழகச் சட்டமன்றம் இயற்றிய ஒருசில சட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள், நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் இச்செயலகத்தின் மற்ற ஆவணங்களிலிருந்து திரட்டப்பட்டு, பட்டியலிட்டு இங்கே தரப்பட்டுள்ளன. இப்பட்டியல், சட்டமன்றப் பெட்டகத்தின் ஒட்டுமொத்தப் புதையல் அல்ல. விரிவுக்கு அஞ்சி தொகுக்கப்பட்ட பட்டியல். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் குறித்த சிறு குறிப்புகளும் ஒவ்வொரு பட்டியலின் முற்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு, 30–11–1920, 1–12–1920, 2–12–1920–ல் நடந்த தேர்தல்மூலம் முதன்முதலாக அமைக்கப்படுவதற்கு முன்பு, ஆளுநரால் நியமிக்கப்பெற்ற நியமன உறுப்பினர்களைக் கொண்ட 'கவர்னர்–இன்–கவுன்சில்' இம்மாநிலத்தில் இயங்கி வந்தது. ஆங்கிலேயர்கள் அந்த கவுன்சிலின் அவை உறுப்பினர்களை நியமித்தனர். அந்த நியமன உறுப்பினர்கள் இருந்தபோது இம்மாநிலத்திற்கென நியமிக்கப்பெற்ற 'கவர்னர்–இன்–கவுன்சில்' நிறைவேற்றிய சில முக்கிய சட்டங்களின் தொகுப்பு:

1. மாவட்ட எல்லைகள் சட்டம், 1865

அப்போதிருந்த மாநிலம் மிகப் பரந்து விரிந்திருந்தது. முதன் முதலில் இச்சட்டம் மாவட்டங்களின் எல்லையை வரையறுத்தது. 1956–ல் மாநிலங்கள் பிரித்து அமைக்கப்பெற்ற பின்னர் அவ்வப்போது மாவட்டங்கள் பிரிக்கப்பட்டும், புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டும் வருகின்றன.

2. நீர்ப்பாசன செஸ் சட்டம், 1865

பாசனத்திற்குப் பயன்படும் தண்ணீரின்மீது செஸ் வரி விதிக்க வகை செய்தது.

3. காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டம், 1873

காட்டு யானைகளைப் பாதுகாக்க வகை செய்தது.

4. உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1874

சென்னை மாகாணத்தில் இயங்கி வந்த உயர் நீதிமன்றத்தின்கீழ் செயல்பட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பான சட்டங்களைத் தொகுத்தமைத்தது.

5. நில வரி விதிப்புச் சட்டம், 1876

தரம், மண் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிலங்களை வகைப்படுத்தி நில வரி விதிப்பதற்கு வகை செய்தது.

6. வனங்கள் சட்டம், 1882

மாநிலத்தில் இருந்த வனச் செல்வத்தைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் முதன்முதலாக வகை செய்தது.

7. ஆறுகள் பாதுகாப்புச் சட்டம், 1884

தமிழக ஆறுகளின் வளத்தைப் பாதுகாக்க வகை செய்தது.

8. மாநகரக் காவல் சட்டம், 1888

சென்னை மாநகரில் ஒரு காவல் துறை ஆணையர் தலைமையில் காவல் துறை நிர்வாகம் அமைய வழிகோலியது. பிற்காலத்தில், மாநிலத்தின் முக்கிய நகரங்களில் காவல் துறை ஆணையர்கள் நியமிக்கப்பட இது மூல காரணமாய் அமைந்துள்ளது.

9. பொது இடங்கள் குறித்த சட்டம், 1888

மக்கள் அதிகம் கூடும் பொது இடங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வகைப்படுத்த வழிகோலியது.

10. கிராம நீதிமன்றங்கள் சட்டம், 1889

கிராம அளவில் ஏற்படுகின்ற சிறு பூசல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு கிராம நீதிமன்றங்கள் அமைய வகை செய்தது.

11. நகரங்களில் தூய்மைக் கேடு விளைவிப்போரை தடுக்கும் சட்டம், 1889

நகரங்களில் தூய்மையைப் பாதுகாக்கக் கொண்டு வரப்பட்டது.

12. பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1899

பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கும் வகையில் இயற்றப்பட்டது. மக்கள் தொகை வளர்ச்சி பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கு இது வகை செய்தது எனலாம்.

13. பிரிவினை அற்ற சொத்துக்கள் சட்டம், 1904

சில வகையான சொத்துக்கள் பிரிக்கக்கூடாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு, அவற்றின் உரிமையாளர்கள் அச்சொத்துக்களை உரிமை மாற்றம் செய்வதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

14. நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905

அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைக் கட்டுப்படுத்தி, தேவையான நேர்வுகளில் அவற்றை அகற்ற வகை செய்தது.

15. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகச் சட்டம், 1905

சென்னைத் துறைமுகத்திற்கு ஒரு பொறுப்புக் கழகம் அமைக்க வகை செய்தது.

16. குதிரை வண்டிகள் சட்டம், 1911

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் குதிரை வண்டிகளே பெருமளவில் போக்குவரத்துச் சாதனமாகப் பயன்பட்டு வந்தன. ஆகவே, அவற்றை முறைப்படுத்த இச்சட்டம் அப்போது இயற்றப்பட்டது.

17. மருத்துவர்கள் பதிவுச் சட்டம், 1914

மருத்துவர்களின் தகுதி குறித்து அறிந்து மக்கள் அவர்களின் உதவிபெறும் வகையில், மருத்துவக் கல்வித் தகுதி பெற்றவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற நிலையை உருவாக்கியது.

18. சென்னை மாநகராட்சிச் சட்டம், 1919

சென்னை மாநகராட்சிக்குப் பொருந்தும் அளவில் முதன்முறையாக இயற்றப்பட்டு இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. இதனை அடியொற்றி தேவையான மாற்றங்களுடன் தனித்தனிச் சட்டங்கள் பின்னர் பல்வேறு மாநகராட்சிகளுக்கென நிறைவேற்றப்பெற்றன.

19. இளஞ்சிறார்கள் சட்டம், 1920

குழந்தைகள் நலத்தில் முதன்முதலில் அரசு காட்டிய அக்கறையின் வெளிப்பாடாக அமைந்தது.

20. ஜில்லா போர்டுகள் சட்டம், 1920

அந்தந்த மாவட்டங்களில் சாலை வசதி, கல்வி வசதி போன்ற சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய பணிகளை ஆற்றுவதற்கு அதிகாரம் படைத்த அமைப்புகளாக ஜில்லா போர்டுகள் அமைய வழிவகை செய்தது.

21. மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920

மாவட்ட நகராட்சிகளுக்கும், நகரப் பஞ்சாயத்துக் களுக்கும் பொருந்துவதாக இயற்றப்பெற்றது.

22. தொடக்கக் கல்விச் சட்டம், 1920

தொடக்கக் கல்வி வளர்வதற்கு முதல் வித்து இதன்மூலம் விதைக்கப்பெற்றது.

'Madras Legislative Council'
என்றழைக்கப்பட்ட சட்டமன்றம்
(1921–1937)

முக்கிய நிகழ்வுகள்

1. தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்கள் பிரதிநிதிகளைப் பெருமளவு கொண்ட சட்டமன்றத்தின் முதல் கூட்டம் 8–1–1921–ல் துவங்கியது.

2. 12–1–1921 ஆம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் அதிகாரபூர்வ விழாமூலம் சட்டமன்றம் துவங்கி வைக்கப்பெற்றது.

3. மக்கள் பிரதிநிதித்துவம் கொண்ட இப்பேரவையின் காலத்தில் 1921–ல் இந்தியாவிலேயே முதல் முறையாக இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யும் Communal G.O. வெளியிடப்பட்டது.

4. வேல்ஸ் இளவரசர் 13–1–1922 அன்று அவைக்கு வருகை தந்தார்.

5. மாநிலத்தின் ஆளுநரும், அவரது துணைவியாரான விலிங்டன் சீமாட்டியும் சட்டமன்றத்திற்கு 6–3–1922 அன்று வருகை தந்தனர். எழிலார்ந்த இருக்கை ஒன்றினை அவைத் தலைவருக்கு வழங்கி, ஆளுநர் உரையாற்றினார்.

6. பாரதியாரின் பாடல்கள் கொண்ட புத்தகங்கள் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்படுவது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் தீரர் திரு. சத்தியமூர்த்தியால் 8–10–1928 அன்று எழுப்பப்பெற்றது. மறுநாளும் அத்தீர்மானம் விவாதிக்கப்பெற்று, எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பின்மூலம் நிறைவேறியது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 1–4–1921 தீர்மானம்

முதல் தேர்தலில் பெண்கள் வாக்களிக்க உரிமையளிக்கப்படவில்லை. வாக்காளர் பட்டியலில் பெண்களும் இடம் பெறச் செய்ய இத்தீர்மானம் கோரியது.

2. 20–1–1922 தீர்மானம்

தாழ்த்தப்பட்டவர்களைக் குறிக்கும் 'பஞ்சமர்கள்', 'பறையர்' என்ற சொற்கள் அரசு ஆவணங்களில் தவிர்க்கப்பெற வேண்டும் எனக் கோரியது.

3. மாநகர வாடகைக்குக் குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம், 1922

மாநகரத்திலுள்ள வீடுகளில் குடியிருப்போரை வீட்டின் சொந்தக்காரர்கள் தன்னிச்சையாக வெளியேற்றுவதிலிருந்து குடியிருப்போருக்குப் பாதுகாப்பு அளிக்க வகை செய்தது.

4. சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம், 1923

நாட்டின் தென் பகுதியில் மிகவும் தொன்மை வாய்ந்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கென இயற்றப்பெற்றது.

5. தொழில்களுக்கு மாநில உதவிச் சட்டம், 1923

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு அரசு உதவி தேவை என்பதை உணர்ந்து இயற்றப்பெற்றது.

6. சர்வே மற்றும் எல்லைகள் சட்டம், 1923

தங்களுக்கு உரிமையான நிலங்களின் எல்லைகள் குறித்து மக்களிடையே அடிக்கடி பூசல்கள் எழுவதைத் தடுக்கும் நோக்குடன் உரிய முறையில் நிலங்கள் சர்வே செய்யப்பட்டு, எல்லைக் கற்கள் நடப்படுவதற்கு வகை செய்கிறது.

7. தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகச் சட்டம், 1924

தூத்துக்குடி துறைமுகத்தின் வளர்ச்சியையும், மேம்பாட்டையும் உறுதி செய்ய, அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொறுப்புக் கழகம் ஒன்றினை அமைக்க வழிசெய்தது.

8. பார்ஸ்டல் பள்ளிகள் சட்டம், 1926

தீய வழிகளில் ஈடுபட்டு குற்றங்களில் சம்பந்தப்பட்டுவிடுகிற இளஞ்சிறார்களைச் சீர்திருத்தி, அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்கு சீர்திருத்தப் பள்ளிகளை அமைக்க வகை செய்தது.

9. செவிலியர்கள் மற்றும் தாதியர் சட்டம், 1926

நோயாளிகளுக்குக் கனிவுடன் பணி செய்யும் செவிலியர், மகப்பேறு காலங்களில் உதவிபுரியும் தாதிகளின் செயல்பாடு குறித்தது.

10. சென்னை உயர் நீதிமன்றச் (அதிகார வரம்பு) சட்டம், 1927

சென்னை உயர் நீதிமன்ற அதிகார வரம்பினை நிர்ணயித்தது.

11. கிருத்துவத் திருமணங்கள் செல்லத்தக்கதாக்குதல் சட்டம், 1928

மாகாணத்தில் நடைபெற்ற கிருத்துவத் திருமணங்களை சட்டப்படி செல்லத்தக்கதாக்குவதற்கு வகை செய்தது.

12. அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 1929

பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டிருந்த ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களுடைய பெரு முயற்சியாலும், தாராள உதவியாலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைய வழிகோலியது.

13. பந்தய வரிச் சட்டம், 1935

குதிரைப் பந்தயங்களிலிருந்து அரசு வரி வசூலிக்க வகை செய்தது.

14. கடன் பெற்றோர் பாதுகாப்புச் சட்டம், 1935

கடன் பெற்றோர் மீது கடன் கொடுத்தவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளிலிருந்து சில நேர்வுகளில் கடன் பெற்றோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நிறைவேற்றப்பெற்றது. இதனை அடியொற்றி பல்வேறு தருணங்களில் இத்தகைய பாதுகாப்புச் சட்டங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை (1937–1951)

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 31–8–1937 அரசினர் தீர்மானம்

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திற்குப் பதிலாக அரசியல் நிர்ணய சபையை அமைத்து புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கோரியது.

2. 22–4–1947 அரசினர் தீர்மானம்

மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்படவேண்டுமென்றும், அதற்கென எல்லை நிர்ணயக் குழு அமைக்கவும் கோரியது.

3. 15–9–1947 அரசினர் தீர்மானம்

இந்தியா விடுதலைபெற உதவிய அண்ணல் காந்தி அடிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்தும், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் நன்றி தெரிவித்தும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. சம்பளங்கள் வழங்கல் மற்றும் தகுதியின்மையை நீக்குதல் சட்டம், 1937

மாநில முதல்வர், அமைச்சர்கள், சட்டமன்றத் தலைவர்கள், பாராளுமன்றச் செயலாளர்கள், சட்டமன்ற

உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளங்களை இச்சட்டம் முதன்முதலில் நிர்ணயித்தது. மேலும், பாராளுமன்றச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டோர் அப்பதவியின் காரணமாக சட்டமன்ற உறுப்பினராக நீடிக்கலாகாது என்ற தகுதியின்மையை நீக்கியது.

5. மதுவிலக்குச் சட்டம், 1937

இந்திய நாட்டிலேயே மதுவிலக்கிற்கென முதன் முறையாக இயற்றப்பெற்று, சேலம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பெற்றது. அவ்வப்போது பல திருத்தங்களுக்கு ஆளாகியுள்ளது.

6. குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம், 1937

முதன்முறையாக சிறு குற்றம் இழைத்தவர்களைத் தண்டனைக்கு ஆளாக்காமல், ஒரு கண்காணிப்பு அதிகாரியின் கண்காணிப்பின்கீழ் அவர்கள் நல்ல முறையில் வாழ வகைப்படுத்துவதற்கு வழிகோலியது.

7. விவசாயிகள் நிவாரணச் சட்டம், 1938

இயற்கை இடர்களால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது, அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக முதன்முதலில் இயற்றப்பெற்றது.

8. சென்னை மின்சாரத் தீர்வைச் சட்டம், 1939

மின் வழங்கல் அரசுடைமை ஆக்கப்படுவதற்கு முன்னர், குறிப்பிட்ட அலகுக்கு மேல், மின்சார விற்பனைக்குத் தீர்வை விதிக்க வழி செய்தது.

9. கேளிக்கை வரிகள் சட்டம், 1939

திரையரங்குகள் தோன்றத் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே அவற்றின் கட்டணத்திலிருந்து வரி வசூலிக்க வகை செய்ய இயற்றப்பெற்றது.

10. மக்கள் நல்வாழ்வுச் சட்டம், 1939

மக்களை நோய் பாதிப்புகளிலிருந்து காப்பதை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பெற்றது.

11. தஞ்சாவூர் சத்திரம் (அறநிலையங்கள்) சட்டம், 1942

சத்திரங்கள் நிர்வாகத்திற்கென பண்டைய மன்னர்களால் ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களின் வருவாய் ஓரளவுக்கு கல்வி வளர்ச்சி போன்ற காரியங்களுக்குப் பயன்படுவதற்கு வகை செய்தது.

12. பொருள் அடமானத்தின் மீது கடன்பெறுவோர் சட்டம், 1943

பொருளை ஈடாகப் பெற்றுக் கொண்டு கடன் தருவதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் நடவடிக்கைகளை வரையறைப்படுத்துவதற்காக இயற்றப்பெற்றது.

13. பிச்சை எடுத்தலைத் தடுக்கும் சட்டம், 1945

பொது இடங்களில் பிச்சை எடுப்பவர்களை பிச்சைக்காரர்கள் இல்லங்களில் வைத்துப் பராமரிப்பதற்கு வகை செய்தது.

14. தேவதாசி (கோவிலுக்கு அர்ப்பணிப்புச் செய்வதைத் தடுத்தல்) சட்டம், 1947

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த பெண்கள், திருமணம்கூட செய்துகொள்ளாமல் கோவில் பணிக்கே தம்மை முழுமையாக ஆட்படுத்திக்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருந்த சமூகக் கொடுமையைப் போக்கியது.

15. கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

வணிகம் செய்யும் கடைகள் உரிமம் பெற வேண்டும் என்பது போன்ற வழிவகைகளைக் கொண்டு அவற்றின் செயல்பாடுகளை முறைப்படுத்தும் வகையில் அமைந்தது.

16. ஆலயங்கள் நுழைவுச் சட்டம், 1947

எவ்வித பாகுபாடுமின்றி அனைத்து இந்து மக்களும், தாங்கள் விரும்பிய ஆலயங்களுக்குச் சென்று வரத்தக்க ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நினைத்த அண்ணல் காந்தியின் நோக்கமும், அதற்காகவே ஒரு போராட்டத்தை நடத்திய தந்தை பெரியாரின் நோக்கமும் நிறைவேறத்தக்க வகையில் இயற்றப்பெற்றது.

17. எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றம்) சட்டம், 1948

ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்கு நில வரியாகச் செலுத்தி விட்டு விவசாயிகளிட மிருந்து தன்னிச்சையாக நில வரி வசூல் செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருந்த எஸ்டேட்டுகள் ஒழிக்கப்பெற்று, விவசாயிகள்

நேரிடையாக அரசுக்கு நில வரி செலுத்த வகை செய்தது.

18. பொது நூலகங்கள் சட்டம், 1948

நூலக இயக்கம் வளர்ச்சி பெற முதல் அடி எடுத்து வைக்கும் வகையில் நாட்டிலேயே முதல் முறையாக இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

19. வழக்கமாகக் குற்றம் புரிபவர்களைக் கட்டுப்படுத்தல் சட்டம், 1948

குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களை இனம் கண்டு, அவர்களுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வகை செய்தது.

20. மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டம், 1949

மருந்துப் பொருட்களின் தரத்தின்மீது அரசு கண்காணிப்புக்கு வகை செய்தது.

21. தொல்லையூட்டும் வழக்காடல் (தடுப்பு) சட்டம், 1949

நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுப்பதையே சிலர் வாடிக்கையாகக் கொண்டதால் நீதிமன்றத்தின் பணிக்கு ஏற்பட்ட இடையூறைக் களைய வகை செய்தது. தலைமை வழக்கறிஞர், இவ்வாறு தொல்லை அளிப்போர்மீது அளிக்கும் மனுவின் பேரில் உயர் நீதிமன்றம் அல்லது அந்தந்த மாவட்ட நீதிமன்றங்கள் அத்தகைய வழக்குகளுக்கு முன் ஒப்புதல் வழங்க வழி காணப்பட்டது.

22. சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம், 1949

சர்க்கரை ஆலைகள் நடத்த உரிமம் வழங்கல், அவற்றிற்குக் கரும்பு வழங்கல், சர்க்கரை விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றிற்கு வகை செய்தது.

23. கிராம ஊராட்சிகள் சட்டம், 1950

கிராம நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 500-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு ஊராட்சி மன்றங்கள் அமைப்பதைக் கட்டாயமாக்க வகை செய்தது.

24. அரசுத் தொகு நிதி (சாட்டப்பட்ட செலவுகள்) சட்டம், 1950

சில குறிப்பிட்ட செலவுகளை, சாட்டப்பட்ட செலவுகளாக வகைப்படுத்தும் முறையில் அவை தொடர்பான சட்டங்களைத் தகுந்த முறையில் மாற்றியமைத்தது. அத்தகைய செலவுகள் சட்ட மன்றத்தின் வாக்கெடுப்பிற்கு அப்பாற்பட்டவையாகும்.

25. சம்பளங்கள் வழங்கல் சட்டம், 1951

சட்டமன்ற உறுப்பினர்கள் ஊதியம் உயர வகை செய்தது. இதற்கு அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பெற்று வருகின்றன.

26. மனித உடல் உறுப்புகள் சட்டம், 1951

உயிரற்ற உடல்களை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்தது.

இந்தியா குடியரசு ஆன பின்னர் தமிழ்நாட்டில் அமைந்த முதல் பேரவை (1952–1957)

முக்கிய நிகழ்வுகள்

1. நாடு குடியரசானதும் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமைந்த பேரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிக அளவில் இருந்ததால் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முதன்முதலில் 3–5–1952 அன்று பேரவை கூடியது. தமிழவேள் திரு. பி.டி. இராசன் அவர்கள், தற்காலிகப் பேரவைத் தலைவராக ஆளுநரால் நியமிக்கப் பெற்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

2. 6–5–1952 அன்று பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர்

உரையாற்ற வந்தபோது முதன்முறையாக மேலவை உறுப்பினர் ஒருவர் ஒழுங்குப் பிரச்சினை எனக் கூறி ஓர் உரையை ஆற்றிவிட்டு வேறு சில உறுப்பினர்களோடு அவையை விட்டு வெளியேறினார்.

3. நாட்டிலேயே முதல் முறையாக அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் 3–7–1952 அன்று விவாதிக்கப்பட்டு நிறைவேறியது.

4. மூதறிஞர் இராஜாஜி தன் பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து, பெருந்தலைவர் காமராஜர் 13–4–1954 அன்று முதலமைச்சரானார்.

5. மதிப்பீட்டுக் குழு அமைப்பதற்காக பேரவை விதிகள் டிசம்பர் 1954–ல் திருத்தப்பெற்றன. மார்ச் 1955–ல் முதல் குழு அமைக்கப்பெற்றது. டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் குழுவின் முதல் தலைவராக இருந்தார்.

6. சட்ட விதிகள் ஆய்வுக் குழு (Committee on Subordinate Legislation), அரசு உறுதிமொழிகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு ஆகியவை தோற்றுவிக்கப்பெற்றன.

7. 28–9–1955 அன்று பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து காமன்வெல்த் பாராளுமன்றத்தின் கிளை சென்னையில் அமைக்கப்பட்டது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 3–11–1952 அரசினர் தீர்மானம்

கைத்தறிக்கென சில ரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும், சில வகை நூல் ரகங்கள் தட்டுப்பாடின்றி கைத்தறியாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் மைய அரசை வற்புறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. 12–12–1952 அரசினர் தீர்மானம்

தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட புயல் சேதம் பற்றி விவாதம் நடைபெற்றது.

3. 14–7–1953 அரசினர் தீர்மானம்

ஆந்திர மாநிலம் அமைப்பது குறித்த சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட வேண்டுமென்னும் தீர்மானம் 14–7–1953 அன்று முன்மொழியப்பெற்று 3 நாட்கள் விவாதிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆந்திர மாநில சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்னும் தீர்மானம் 17–7–1953 அன்று முன்மொழியப்பெற்று 9 நாட்கள் வரைவு சட்டமுன்வடிவின்மீது விவாதம் நடைபெற்று 27–7–1953 அன்று திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர், 1–10–1953 முதல் ஆந்திர மாநிலம் அமைக்கப்பெற்றது.

4. 29–7–1953 அரசினர் தீர்மானம்

குலக்கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது பற்றி விவாதிக்கப்பெற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்தக் கல்வி முறையின் அமலாக்கம் கைவிடப்பட வேண்டுமென, தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு, அதுவும் வாக்கெடுப்பிற்கு விடப்பெற்றது. திருத்தத்திற்கு ஆதரவாக 138 வாக்குகளும், எதிர்த்து 138 வாக்குகளும் பதிவாகின. திருத்தத்திற்கு எதிராகப் பேரவைத் தலைவர் தன்னுடைய வாக்கை அளித்ததால் திருத்தம் தோல்வியுற்றது. எனினும், இந்தக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்து இப்பொருள் பற்றி மேலும் ஆராய கல்வி ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதற்கு ஆதரவாக 139 வாக்குகளும், எதிர்த்து 137 வாக்குகளும் பதிவாகின. அரசினர் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பெற்று நிறைவேறியது. எனினும், குலக்கல்வி முறையைக் கைவிடுவதென அரசு முடிவெடுத்துள்ளதாக 18–5–1954 அன்று கல்வி அமைச்சர் அறிவித்தார்.

5. 21–11–1955 அரசினர் தீர்மானம்

மொழிவாரி மாநில அமைப்பு குறித்த குழுவின் அறிக்கையின்மீது 4 நாட்கள் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இந்திய அரசால்

அனுப்பி வைக்கப்பெற்ற 1956 ஆம் ஆண்டு மாநிலங்களைத் திருத்தியமைத்தல் சட்டமுன்வடிவின் வரைவு 28–3–1956 அன்று விவாதிக்கப்பெற்றது. அதற்குக் கொடுக்கப்பட்ட 94 திருத்தங்களில் சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' எனப் பெயரிடப்பெற்று அழைக்கப்பட வேண்டுமென்ற திருத்தமும் ஒன்று. அத்திருத்தம் 41 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

6. 30–1–1956 தனி உறுப்பினர் தீர்மானம்

1956 ஆம் ஆண்டு கோடை காலத்தில் பேரவையின் கூட்டங்கள் உதகமண்டலத்தில் நடத்தப்பெற வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை ஓர் உறுப்பினர் கொண்டு வந்தார். பல்வேறு அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அரசே தீர்மானத்தை எதிர்க்க வேண்டிய நிலையில் உள்ளதென அவை முன்னவர் குறிப்பிட்டதைத் தொடர்ந்து தீர்மானத்தை உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

7. 24–12–1956 அரசினர் தீர்மானம்

மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 63 ஆக உயர்த்த வழிவகை செய்தது.

8. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 1952

விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்க வகை செய்தது.

9. பழுப்பு நிலக்கரி (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம், 1953

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கமும், பின்னர் அனல் மின் நிலையங்களும் அமைய வழிகோலியது.

10. தனியார் மின் வழங்கல் நிறுவனங்கள் (அரசு மேற்கொள்ளுதல்) சட்டம், 1954

தனியார்வசம் இருந்த சில மின் வழங்கல் நிறுவனங்களை அரசு மேற்கொள்ள வகை செய்தது.

11. நாடகங்களை மேடையேற்றுதல் சட்டம், 1954

நாடக வசனங்கள், ஆட்சேபகரமான பகுதிகளைக் கொண்டவையாக உள்ளனவா என்பதைக் கண்டறிய அவற்றைத் தணிக்கைக்குட்படுத்துவதற்கு வகை செய்தது.

12. பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955

இப்பொருள் பற்றி நிறைவேற்றப்பெற்ற முதல் சட்டம். இதனைத் தொடர்ந்து இதே பொருள்பற்றி பல்வேறு சட்டங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பெற்றன.

13. அரசு ஆட்சிமொழிச் சட்டம், 1956

தமிழ், மாநிலத்தின் ஆட்சி மொழியாவதற்கு வழி வகுத்துக்கொடுத்தது.

இரண்டாவது பேரவை (1957–1962)

முக்கிய நிகழ்வுகள்

1. 1957 பொதுத் தேர்தலுக்குப் பின், அதுகாறும் அரசினர் தோட்டத்தில் அமைந்திருந்த புதிய சட்டமன்றக் கூடத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த பேரவை, சில மேம்பாடுகளுக்கு உள்ளான புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள மண்டபத்தில் செயல்படத் தொடங்கியது.

2. மேதகு ஆளுநர் திரு. ஏ.ஜே. ஜான் தன்னுடைய பதவிக் காலத்திலேயே 1957–ல் இயற்கை எய்தினார்.

3. 1959 ஏப்ரலில் 20 முதல் 30 வரையிலான தேதிகளில் சட்டப் பேரவை, உதகமண்டலத்தில், தற்போது 'தமிழகம்' எனப் பெயரிடப்பட்டுள்ள அரண்மூர் அரண்மனையில் கூடியது. 180 பேருக்கு மட்டுமே இருக்கை வசதிகள் இருந்தபோதிலும் பேரவை அங்கு 9 நாட்கள் நடைபெற்றது.

4. அப்போதிருந்த பேரவைத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், தன்னுடைய பதவிக்

காலத்திலேயே 1961–ல் இயற்கை எய்தினார். சட்டப் பேரவையின் காலம் 1962–ல் முடியும் வரை துணைத் தலைவரே பேரவைத் தலைவரின் பணிகளை ஆற்றி வந்தார்.

5. 1961–ல் நிறைவேற்றப்பட்ட மத்திய அரசு சட்டத்தின்படி, இரட்டை உறுப்பினர் தொகுதிகள் ஒழிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்த ஒதுக்கீடு மாறுபடாதவாறு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு என தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 4–9–1958 தனி நபர் தீர்மானம்

மத்திய அரசின் இராணுவத் தளவாடத் தொழிற்சாலையை ஆவடியில் அமைக்குமாறு திரு. எம். ஜெகநாதன் என்ற உறுப்பினரின் தீர்மானம் வலியுறுத்தியது. இதற்கு இணையான தீர்மானத்தை அரசே கொண்டு வந்ததையடுத்து அரசினர் தீர்மானம் நிறைவேறியது.

2. பஞ்சாயத்துக்கள் சட்டம், 1958

ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் அமைய வழிவகை செய்தது.

3. உணவகங்கள் சட்டம், 1958

உணவகங்களின் செயல்பாடு குறித்து விதிகள் வகுக்க வகை செய்தது.

4. பூதான யக்ஞ சட்டம், 1958

பூதான இயக்கத்தின்கீழ் வழங்கப்பெற்ற நிலங்களின் நிர்வாகத்திற்கு வகை செய்தது.

5. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம், 1958

மாவட்ட அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பரிந்துரை செய்யும் அமைப்புகளாக மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அமைந்தன.

6. இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டம், 1959

ஒரு வாரியத்தின்கீழ் முன்பிருந்த ஆலயங்கள் மற்றும் அறநிலையங்கள் நிர்வாகம் அரசுக்கு மாற்றப்பெற வழி செய்தது.

7. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியச் சட்டம், 1959

கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் வளர்ச்சிக்கென தனி வாரியம் அமைய வழிகோலியது.

8. கண் விழிப் படல மாற்று சிகிச்சை சட்டம், 1960

கண் விழிப் படல மாற்று அறுவை சிகிச்சைமூலம் பார்வை இழந்தோருக்குப் பார்வை மீளப்பெற வகை செய்தது.

9. வீட்டு வசதி வாரியச் சட்டம், 1961

சென்னை மாநகரில் மட்டும் செயல்பட்டு வந்த மாநகர வளர்ச்சிப் பொறுப்புக் கழகத்திற்குப் பதிலாக, மாநிலம் முழுவதும் செயல் எல்லை கொண்ட வீட்டு வசதி வாரியம் அமைக்க வழி செய்தது.

10. நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு விதித்தல்) சட்டம், 1961

சட்டத்தில் விலக்களிக்கப்பெற்ற சில வகை நிலங்களைத் தவிர ஏனைய வேளாண் நிலங்களுக்கு உச்ச வரம்பு 30 தர (standard) ஏக்கர்கள் என விதிக்கப்பட்டது. நிலக் குவிப்பினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பெற்ற முதல் சட்டமாக அமைந்தது.

மூன்றாவது பேரவை (1962–1967)

முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர், 15–3–1962 அன்று திரு. கே. காமராஜ் அவர்களின் தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது. 2–10–1963 அன்று இந்த அமைச்சரவை பதவி விலகி அதே நாளன்று திரு. எம். பக்தவத்சலம் தலைமையில் புதிய காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தது.

2. விதிகள் குழு ஒன்றினை அமைக்க பேரவை விதிகள் திருத்தப்பெற்றன.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 29–10–1962 அரசினர் தீர்மானம்

இந்திய எல்லையில் சீன ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்தும், ஆக்கிரமிப்பை எதிர்க்கும் பணியில் ஒரணியாகத் தமிழக மக்கள் பாரதப் பிரதமருக்குத் துணை நிற்பார்கள் என்ற உறுதிமொழியைத் தெரிவித்தும் நிறைவேற்றப்பெற்றது.

2. 3–11–1965 அரசினர் தீர்மானம்

இந்தியா மீது பாகிஸ்தான் கொண்டிருந்த ஆக்கிரமிப்புப் போக்கு கண்டனம் செய்யப்பட்டது.

3. ஊர்க்காவல் படைச் சட்டம், 1963

காவல் துறைக்கு உதவியாக இருக்கும் வகையில் ஊர்க்காவல் படை உருவாக்கப்பட்டது.

4. சென்னை மாநில இனாம்கள் (ஒழிப்பும் ரயத்வாரியாக மாற்றமும்) சட்டம், 1963

நிலங்களில், இனாம் நிலம் என்றிருந்த வகைப்பாடு அகற்றப்பட்டது.

5. மதுரைப் பல்கலைக்கழகச் சட்டம், 1965

சுதந்திரம் அடைந்த பிறகு தமிழகத்தில் அமைந்த முதல் புதிய பல்கலைக்கழகமாக மதுரைப் பல்கலைக்கழகம் உருவானது.

6. நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966

குறிப்பிட்ட அளவிற்கு மேல் நகர்ப்புற நிலங்கள் வைத்திருப்போரிடமிருந்து வரி வசூலிக்க வகை செய்தது.

நான்காவது பேரவை (1967–1971)

முக்கிய நிகழ்வுகள்

1. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் 9 பேர் கொண்ட தி.மு.க. அமைச்சரவை 6–3–1967 அன்று பதவி ஏற்றது.

2. புதிய பல்லடுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதி 5–1–1968–ல் துவங்கப்பெற்றது.

3. பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு 10–2–1969 அன்று கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதல் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவரது தலைமையில் 7 பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது.

1. 18–7–1967 அரசினர் தீர்மானம்

பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவாக நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 16–1–1969 முதல் மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட வகை செய்யப்பெற்றது.

2. 23–1–1968 அரசினர் தீர்மானம்

மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை நீக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமே தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், பாடத் திட்டத்திலிருந்து இந்தி அறவே நீக்கப்பட வேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்டது.

3. 27–8–1969 அரசினர் தீர்மானம்

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்களது சொத்துக்கள் பற்றிய விவரங்களை அவைக்கு அளிக்கும் முறை கொண்டுவரப்பட வகை செய்தது.

4. இந்து திருமணங்கள் (தமிழ்நாடு) திருத்த சட்டம், 1967

சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட வகை செய்தது. இந்த அங்கீகாரம், சட்டம் நிறைவேறுவதற்கு முன்பே நடைபெற்ற அத்தகைய திருமணங்களுக்கும் பொருந்துமாறு சட்டமியற்றப்பெற்றது.

5. நில வரி மற்றும் தண்ணீர் செஸ் (மேல் வரி) (நீக்கரவு) சட்டம், 1967

புஞ்செய் நிலங்களுக்கு நில வரி ரத்து செய்யப்பட்டது.

6. விளை நிலங்களின் குத்தகை உரிமைகள் குறித்த ஆவணங்கள் சட்டம், 1969

குத்தகைதாரர்கள் குறித்த விவரங்களை கிராம நிலையிலுள்ள ஆவணங்களில் பதிவதற்கு வகை செய்தது.

7. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் (நியாயமான கூலி) சட்டம், 1969

விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குப் பல்வேறுவிதமான பணிகளுக்கு நியாயமான கூலி நிர்ணயிக்க வகை செய்தது.

8. நிலச் சீர்திருத்த (உயரளவைக் குறைத்தல்) சட்டம், 1970

1961 ஆம் ஆண்டின் சட்டத்தில் 30 தர ஏக்கர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த நில உச்சவரம்பு 15 தர ஏக்கர்களாகக் குறைக்கப்பட வகை செய்தது.

9. தொழிலகங்கள் (தேசிய மற்றும் பண்டிகை நாள் விடுமுறை) திருத்தச் சட்டம், 1970

தொழிலகங்களுக்கு மே தினத்தைக் கட்டாய விடுமுறை நாளாக ஆக்கியது.

10. குடிநீர் வடிகால் வாரியச் சட்டம், 1970

முன்பு அரசுத் துறை செய்து வந்த குடிநீர் வடிகால் சார்ந்த பணிகள் புதிதாக வாரியத்திடம் ஒப்படைக்கப்பெற்று, விரைவாக நடப்பதற்கு வழி வகுத்தது.

ஐந்தாவது பேரவை (1971–1976)

முக்கிய நிகழ்வுகள்

1. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 14 பேர்கள் கொண்ட தி.மு.க அமைச்சரவை 15–3–1971–ல் பதவியேற்றது.

2. இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி சிறப்புக் கூட்டம் ஆளுநர் தலைமையில் பேரவை மண்டபத்தில் 14–8–1972 அன்று நள்ளிரவு நடைபெற்றது. பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் பங்குபெற்றனர். சரியாக நள்ளிரவு 12–00 மணிக்கு நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளை

நினைவுகூரும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

3. திரு. கே.ஏ.மதியழகன், பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து 2–12–1972 அன்று நீக்கப் பெற்றார்.

4. 31–1–1976 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்தது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 8–7–1971 அரசினர் தீர்மானம்

காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு நடுவர் மன்றம் அமைக்கக் கோரியும், அதன்மீதான முடிவு வெளிவரும் வரை கர்நாடக அரசாங்கம், ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி அணைகள் கட்டுவதைத் தடுக்குமாறும் கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. 6–12–1971 அரசினர் தீர்மானம்

இந்தியாமீது பாகிஸ்தானின் படையெடுப்பைக் கண்டனம் செய்தும், அந்த இக்கட்டான தருணத்தில் மக்கள் ஓரணியாகத் திரண்டு நின்று அரசுக்கு ஒத்துழைப்புத் தரக் கோரியும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. 17–12–1971 அரசினர் தீர்மானம்

புதிதாக உருவெடுத்த பங்களாதேஷ் நாட்டிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்து ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

4. 15–4–1974 அரசினர் தீர்மானம்

இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கு வகை செய்யும் ஒரு சட்டத்தை மாநிலச் சட்டமன்றம் இயற்றுவதற்கு உதவியாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துமாறு மத்திய அரசைக் கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. 16–4–1974 அரசினர் தீர்மானம்

மாநில சுயாட்சி குறித்த மாநில அரசின் கருத்துகளையும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளையும் ஏற்று, அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்ய மத்திய அரசைக் கோரி 5 நாட்கள் விவாதம் நடைபெற்று, நிறைவேற்றப்பட்டது.

6. 21–8–1974 அரசினர் தீர்மானம்

கச்சத் தீவு குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவை மாற்றிக்கொண்டு, கச்சத் தீவின்மீது இந்திய நாட்டின் இறையாண்மை நிலைப்பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டது.

7. வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டம், 1971

வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைக்கப் பட்டு, வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

8. குடிசைப் பகுதி மாற்று வாரியச் சட்டம், 1971

குடிசைப் பகுதிகளைப் படிப்படியாக அகற்றவும், அங்கு வாழ்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவும் வகை செய்தது.

9. மதுரை மாநகராட்சிச் சட்டம், 1971

மதுரை நகராட்சி, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பெற்றது.

10. குடியிருப்புகளுக்கு உரிமைகள் வழங்கல் சட்டம், 1971

விளை நிலங்களில் குடியிருக்கும் விவசாயக் கூலிகள் போன்றோருக்குக் குடியிருப்பு உரிமையைப் பெற்றுத் தந்தது.

11. நகர் ஊரமைப்பு திட்டமிடல் சட்டம், 1972

நகர்ப்புறங்களின் விரிவாக்கம் சீரான, திட்டமிட்ட வகையில் அமைய வகை செய்தது.

12. பேருந்துகள் மற்றும் ஒப்பந்த ஊர்திகள் (அரசு மேற்கொள்ளுதல்) சட்டம், 1973

சில நேர்வுகளில் பேருந்துகளையும் ஒப்பந்த ஊர்திகளையும் அரசு மேற்கொள்ள வகை செய்தது.

13. அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1974

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே சம்பளம் வழங்குவது போன்ற சில சீர்திருத்தங்களைக் கொணர்ந்தது.

14. மோட்டார் வாகன வரிகள் சட்டம், 1974

முன்பிருந்த சட்டத்திற்குப் பதிலாக இயற்றப் பெற்று, நடைமுறைக்கு வந்தது.

15. குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம், 1974

தமிழகத்தில் குதிரைப் பந்தயங்களை ஒழிக்க வகை செய்தது.

16. சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975

கலை, பண்பாட்டுச் சங்கங்கள் போன்றவை தங்களைப் பதிவு செய்துகொள்ள வகை செய்தது.

17. ஊரகக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உரிமை வழங்கல்) சட்டம், 1976

தச்சர், கருமார் போன்றோருக்கு ஊரகப் பகுதிகளில் அவர்கள் வசிக்கும் மனையின் குடியிருப்பு உரிமையைப் பெற்றுத் தந்தது.

ஆறாவது பேரவை (1977–1980)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவை 30–6–1977 அன்று பதவி ஏற்றது. அமைச்சர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பாராளுமன்றச் செயலாளர்களும் இந்தக் காலக்கட்டத்தில் நியமிக்கப்பட்டனர்.

2. சட்டப் பேரவையின் விதிகள் குழுவால், 1979 ஆம் ஆண்டு பேரவை விதிகளுக்குப் பல முக்கியத் திருத்தங்கள் கொண்டு வரப்பெற்றன.

3. 17–2–1980 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 24–8–1977 அரசினர் தீர்மானம்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த, அமைச்சர் அந்தஸ்திலுள்ள ஒரு பிரதிநிதியை மத்திய அரசு அங்கு அனுப்பி, அந்த அரசுடன் பேசி ஆவன செய்ய வேண்டும் என மத்திய அரசைக் கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் சட்டம், 1978

சென்னைப் பெருநகரின் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் பணிகளை நன்கு திட்டமிட்டு, புதிய செயல் திட்டங்களை மேற்கொள்வதற்காகத் தனி வாரியம் அமைக்கப்பெற்றது.

3. அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டம், 1978

கிண்டி பொறியியல் கல்லூரி மற்றும் சென்னையில் அமைந்துள்ள இரண்டு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை ஒன்றிணைத்து, தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்பெற்றது.

4. மதுரை காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்டம், 1978

மதுரைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என மாற்றப்பெற்றது.

5. நகர்ப்புற நிலங்கள் (உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டம், 1978

நகர்ப்புற நிலங்களை வைத்திருப்பதற்கு உச்ச வரம்பு விதிக்க வழிவகுத்தது.

6. தமிழ்நாடு குதிரைப் பந்தய (டர்ஃப் ஏஜென்சிகள் ஒழிப்பு) சட்டம், 1979

குதிரைப் பந்தயத்திற்குச் செல்லாமலேயே மக்கள் அவற்றில் பங்கு கொள்வதற்கு உதவி புரிந்த டர்ஃப் ஏஜென்சிகள் ஒழிக்கப்பெற்றன.

ஏழாவது பேரவை (1980–1984)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர், திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை 9–6–1980 அன்று பொறுப் பேற்றது.

2. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மற்றும் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் 18–8–1983 அன்று உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தனர்.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 21–8–1981 மற்றும் 25–10–1983 அரசினர் தீர்மானங்கள்

இலங்கைவாழ் தமிழர்களின் பாதுகாப்புக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமரைக் கேட்டுக்கொள்ள ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றன.

2. 31–8–1981 அரசினர் தீர்மானம்

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேட்டைத் தடுப்பதற்கான மத்தியச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப் பெற்றன.

3. வருவாய் வாரிய ஒழிப்புச் சட்டம், 1980

1803 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த வருவாய் வாரியம் ஒழிக்கப்பட்டது.

4. பகுதிநேர கிராம அதிகாரிகள் பதவிகள் ஒழிப்புச் சட்டம், 1981

பல ஆண்டுகளாக இருந்து வந்த கிராம அதிகாரிகள் பதவிகள் ஒழிக்கப்பெற்று அவர்களுக்குப் பதிலாக முழு நேர கிராம நிருவாக அலுவலர்கள் நியமிக்கப்பெற்றனர்.

5. பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981 மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம், 1981

தமிழுக்குத் தொண்டு செய்த மகாகவி பாரதியார் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் பெயரில் பல்கலைக்கழகங்கள் முறையே கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் துவக்கப் பெற்றன.

6. கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1981

கோவை நகராட்சி, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட வகை செய்தது.

7. தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம், 1981

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாட்களுக்கு மேல் பணிபுரிந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த வழிகோலியது.

8. உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1982

உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணியை வரன்முறைப்படுத்தவும், பணிச் சூழலை முறைப் படுத்தவும், பணிப் பாதுகாப்பு அளிக்கவும் வழிவகுத்தது. இதன்படி பின்னர் கட்டடத் தொழிலாளர்கள் நல நிதி ஒன்று 1994–ல் உருவாக்கப்பெற்றது.

9. கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், போதை மருந்துகள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் புரிவோர், விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துவோர் மற்றும் குடிசைப் பகுதிகளைக் கைப்பற்றுவோரின் அபாயகர நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டம், 1982

இது குண்டர் சட்டம் என வழக்காற்றில் பெயரிட்டு அழைக்கப்பெறுகிறது. சில வகைக் குற்றவாளிகள் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடும் எனக் கருதப்படும் நேர்வில் அதற்கென அமைக்கப்படும் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், ஓராண்டுக்

காலம் வரை அவர்களை சிறையில் வைத்திருக்க வகை செய்கிறது.

10. தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம், 1982

தமிழ் மொழிக்கென தனிப் பல்கலைக்கழகம் தஞ்சாவூரில் அமைக்க வழி செய்தது.

11. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983

கூட்டுறவு அமைப்புகள் பற்றிய சட்டம் முழுவதுமாகத் திருத்தி அமைக்கப்பெறும் வகையில் நிறைவேற்றப் பட்டது.

12. பட்டா பாஸ் புத்தகச் சட்டம், 1983

விவசாய நிலத்தின் பரப்பு, உரிமை மாற்றம் பற்றிய விவரங்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்ட பட்டா பாஸ் புத்தகத்தை வழங்குவதற்கு வழிவகுத்தது.

13. தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் சட்டம், 1983

அகவை முதிர்ந்த, தமிழாய்ந்த சான்றோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வகை செய்தது.

14. கடலில் மீன் பிடித்தலை முறைப்படுத்தும் சட்டம், 1983

பரம்பரை கட்டுமர மீனவர்களுக்கும், மீன் பிடிக்க விசைப் படகுகளை பயன்படுத்துவோருக்குமிடையே, கடலில் மீன் பிடிக்கும் எல்லை குறித்து அடிக்கடி நிகழ்ந்து வந்த பூசல்களைப் போக்க வழிவகுத்தது.

15. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 1984

மகளிரின் உயர்நிலைக் கல்விக்கென முதன் முறையாக தனிப் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் அமைக்கப்பெற்றது.

எட்டாவது பேரவை (1985–1988)

முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர், டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் 14–2–1985 அன்று அமைச்சரவை அமைந்தது.

2. கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின்கீழ், தமிழகச் சட்டமன்றத்திற்குப் பொருந்தும் விதிகள் 12–12–1986 முதல் அமலுக்கு வந்தன.

3. இந்திய நாடு விடுதலை அடைந்து 40 ஆண்டுகள் நிரம்பப் பெற்றதைக் கொண்டாடும் முகத்தான் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பேரவை மண்டபத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டக் களங்களிலிருந்து கொண்டு வரப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க புனித மண் அடங்கிய பேழைகளை தியாக சீலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு, டெல்லி மாநகருக்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டின் விடுதலைக்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துதல், நாட்டு ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டு உணர்விலும் வைத்துள்ள நம்பிக்கையை வலியுறுத்துதல், புதிய இந்திய சமுதாயத்தை உருவாக்கும் பணிக்கு நம்மை ஒப்படைத்தல் குறித்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

4. முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 24–12–1987–ல் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து, மறைந்த முதலமைச்சரின் துணைவியார் திருமதி ஜானகி இராமச்சந்திரன் தமிழ்நாட்டின் முதல் பெண் முதலமைச்சராக 7–1–1988 அன்று பதவியேற்றார்.

5. 30–1–1988 அன்று பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல் செய்யப் பட்டது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 1–7–1985 அரசினர் தீர்மானம்

'வணிக ஒற்றுமை' என்ற தமிழ் மாத இதழின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்மீது உரிமை மீறலுக்காக இரு வாரங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதிக்க வகை செய்தது.

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு அவர் செய்த மேல் முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டு, 13–1–1986 அன்று அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

2. 14–5–1986 அரசினர் தீர்மானம்

மாநிலத்தின் சட்டமன்ற மேலவை ஒழிக்கப் படுவதற்கான தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப் பட்டது. மத்திய அரசால் இத்தீர்மானம் பின்னர் ஏற்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சட்டமியற்றப்பட்டு 1–11–1986 முதல் மேலவை ஒழிக்கப்பட்டது.

3. 22–12–1986 அரசினர் தீர்மானம்

அரசமைப்புச் சட்டத்தின் 17–வது பாகத்தில் மத்திய ஆட்சி மொழியாக இந்தி இருக்கும் என்று இருப்பதை எதிர்த்து, அதன் நகலைப் பொது இடங்களில் எரித்தமைக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, பேராசிரியர் க. அன்பழகன் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள், தங்களுடைய உறுப்பினர் பதவிகளை இழக்க வகை செய்தது.

4. 4–4–1987 அரசினர் தீர்மானம்

'ஆனந்த விகடன்' வார இதழின் அட்டையில் அமைச்சர்களையும், உறுப்பினர்களையும் பாதிக்கும் வகையில் வெளியிடப்பட்ட ஒரு கேலிச் சித்திரம் தொடர்பாக அப்பத்திரிகை தன்னுடைய வருத்தத்தை வெளியிட வேண்டுமென பேரவைத் தலைவர் ஆணையின்படி பத்திரிகை ஆசிரியர் நடந்து கொள்ளாததால், அவருக்கு மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்க வகை செய்தது. இருப்பினும் 6–4–1987 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மூலம் அவர் அதுவரை அனுபவித்த சிறைத் தண்டனையே போதுமானது என்று கருதப்பட்டு, அன்றையதினமே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

5. அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம், 1985

காரைக்குடியில் வள்ளல் அழகப்பரால் நிறுவப்பட்ட சில கல்வி நிறுவனங்கள் இணைக்கப்பெற்று, அவர் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வழி செய்தது.

6. தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டம், 1987

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஒருங்கிணைந்த முன்னேற்றம் காணப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக தனி மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்க வழி வகுத்தது.

7. வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டம், 1987

வக்காலத்துப் படிவங்களில் ஒட்டப்பெறும் முத்திரைத் தாள்கள்மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு நல நிதி அமைத்து, தம் தொழிலைத் தொடர இயலாது மூப்படைந்த வழக்கறிஞர்களுக்கு நிதி வழங்குதல் போன்றவற்றிற்கு அந்த நிதியைப் பயன்படுத்த வகை செய்தது.

ஒன்பதாவது பேரவை (1989–1991)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை பெற்று கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மூன்றாவது முறையாக 27–1–1989 அன்று முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

2. 5–5–1989 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையின் பொன் விழா கொண்டாடப்பட்டது. விழாவினையொட்டி பேரவை மண்டபம் வண்ண விளக்குகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டது. மூன்று முறைகளுக்கு மேல் பதவி வகித்த உறுப்பினர்கள், முன்னாள் பேரவைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மேலவைத் தலைவர்கள், முன்னாள்

பேரவைச் செயலாளர்கள் மற்றும் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், பேரவைச் செயலாளர் ஆகியோரும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு, நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டு சிறப்பிக்கப் பெற்றனர். விழாவினையொட்டி ஒரு மலர் வெளியிடப்பட்டது. பேரவையின் சிறந்த பாரம்பரியத்தையும், வரலாற்றையும் குறித்த உரைகள் நிகழ்த்தப்பட்டன.

3. பேரவை 30–1–1991 அன்று கலைக்கப்பட்டு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 20–2–1989 அரசினர் தீர்மானம்

தமிழகத்தில் மீண்டும் மேலவை அமைய சட்டம் இயற்றுமாறு பாராளுமன்றத்தைக் கோரும் வகையில் நிறைவேறியது.

2. 12–5–1989 அரசினர் தீர்மானம்

பிற்படுத்தப்பட்டோரின் நலனுக்கான மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த மைய அரசைக் கோரியது.

3. 24–4–1990 அரசினர் தீர்மானம்

காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்ற நிலையை, மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கோரும் வகையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. 21–8–1990 அரசினர் தீர்மானம்

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியதற்காக மத்திய அரசுக்கு நன்றியும், வாழ்த்துகளும் தெரிவிக்கும் வகையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டம், 1989

பெண்களுக்கு சமத்துவம் அளிக்கும் வகையில் இந்துக் குடும்பத்தில் பிறந்த மகளிருக்கும் சொத்தில் சம உரிமை வழங்க வகை செய்தது.

6. பல்கலைக்கழகங்கள் குறித்த சட்டங்கள் (திருத்த) சட்டம், 1989

சட்டமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக அமைப்புகளில் உறுப்பினர்களாக இரு முறைகளுக்கு மேல் பதவி வகிக்கலாகாது என்றிருந்த தடையை நீக்கியது.

7. மோட்டார் வாகன வரி விதிப்பு (திருத்த) சட்டம், 1989

இரு சக்கர வாகனங்களை வாங்கும்போது வாகன ஆயுட்காலத்திற்கு மோட்டார் வாகன வரி செலுத்த வகை செய்தது.

8. ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டம், 1989

ஊராட்சி உறுப்பினர்கள் பதவிகளில் 30 சதவீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வழி வகுத்தது.

9. ஊராட்சிகள் (திருத்த) சட்டம், 1989

ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக் காலம், ஏற்கெனவே ஐந்திலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதை, மீண்டும் ஐந்து ஆண்டுகளாக ஆக்க வகை செய்தது.

10. கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்டம், 1989

கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கென புதிய பல்கலைக்கழகம் ஏற்பட வகை செய்தது.

11. சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டம், 1990

தன்னுடைய பதவிக் காலம் முடியும் முன்னர் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இயற்கை எய்தினால் அவருடைய குடும்பத்தினருக்கு ஒட்டுமொத்த உதவியாக ரூ.50 ஆயிரம் வழங்க வகை செய்தது.

பத்தாவது பேரவை (1991–1996)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 24–6–1991 அன்று அமைச்சரவை அமைந்தது.

2. நாடாளுமன்றச் செயலகத்தால் கூட்டப்பெற்ற சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களின் மாநாடு (Presiding Officers' Conference) 1993 ஜூன் திங்கள் 25 முதல் 27 வரை சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலமைந்த சட்டமன்ற வளாகத்தில் நடந்தேறியது.

3. சில அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து சிறப்புக் குறிப்பாக அவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

4. பல்கலைக்கழகங்களுக்கு ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சரே வேந்தராக இருப்பதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவிற்கு ஆளுநரின் ஒப்புதல், சட்டமன்றத்தின் காலம் முடியும் வரை கிடைக்கப்பெறவில்லை.

5. 20–4–1992 அன்று உரிமைக் குழு அளித்த அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பெற்று, முரசொலி இதழின் ஆசிரியர் திரு. செல்வம் அவர்கள் 21–9–1992 அன்று முதல் முறையாக அவைமுன் கூண்டில் நிறுத்தப்பெற்று கண்டிக்கப்பெற்றார்.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 8–7–1991 அரசினர் தீர்மானம்

தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. அடி காவிரி நீர் வழங்க வேண்டுமென்ற காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை மைய அரசு அரசிதழில் பிரசுரிக்க வேண்டுமென்றும், நடுவர் மன்றத்தின் ஆணையை கர்நாடக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்றும் கோரி பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. 30–9–1991 அரசினர் தீர்மானம்

மண்டல் கமிஷன் பரிந்துரையை ஒட்டி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ள ஒதுக்கீட்டினை 27 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்த வேண்டுமென்றும், இந்த ஒதுக்கீடு கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் கோரி ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

3. 4–10–1991 அரசினர் தீர்மானம்

தமிழகத்தில் மீண்டும் மேலவையைத் தோற்றுவிக்கக் கோரிய ஒன்பதாவது பேரவையின் 20–2–1989 நாளிட்ட தீர்மானம் நீக்கிக்கொள்ளப்பட்டது.

4. 9–11–1993 அரசினர் தீர்மானம்

தமிழக அரசின் 69% இட ஒதுக்கீட்டு முறை நிலைத்து நிற்கும் வகையில் இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென மைய அரசை வலியுறுத்தி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. 20–4–1994 அரசினர் தீர்மானம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொள்ள ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. 26–4–1995 அரசினர் தீர்மானம்

ஆளுநர் நியமிக்கப்படும் முன்பு, அம்மாநில முதலமைச்சரின் கருத்தைக் கேட்டு நியமிக்க வேண்டும் என்பதை சட்டபூர்வமாக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 156–வது பிரிவு திருத்தப்பெற வேண்டுமெனக் கோரி நிறைவேற்றப்பட்டது.

7. 5–5–1995 அரசினர் தீர்மானம்

அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் மனித உறுப்புகளை சிலர் வணிகப் பொருள் ஆக்குவதைத் தடுக்கும் நோக்கத்துடன் மைய அரசு 1994 ஆம் ஆண்டு நிறைவேற்றிய 'மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் சட்டத்தை' தமிழகத்தில் ஏற்றுக் கொள்வதற்காக நிறைவேற்றப்பட்டது.

8. பல்கலைக்கழகங்கள் குறித்த சட்டங்கள் (திருத்த) சட்டம், 1991

பேரவை உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் முடியும்போது அவர் பல்கலைக்கழக அமைப்பு ஏதாவது

ஒன்றில் உறுப்பினராக இருந்தால் அந்தப் பதவிக் காலமும் முடிவதற்கு வகை செய்தது.

9. இந்து சமய அறநிலையங்கள் (திருத்த) சட்டம், 1991

ஆலயங்கள் நிர்வாகத்திற்கென மாநில அளவில் முதலமைச்சரின் தலைமையில் ஒரு வாரியமும், மாவட்ட அளவில் ஒரு குழுவும் அமைப்பதற்கு வகை செய்தது.

10. பல்கலைக்கழகங்கள் குறித்த சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டம், 1991

ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு பல்கலைக்கழக அமைப்பில் உறுப்பினராக ஒரு முறையில் மூன்று ஆண்டுகளே பதவி வகிக்கலாம் எனவும், அவ்வாறு இரண்டு முறைகளே பதவி வகிக்கலாம் எனவும் வரையறை வகுக்க வகை செய்தது.

11. உயர் கல்விக்கான மாநிலக் குழு சட்டம், 1992

மாநில அளவில் உயர் கல்வி மேம்பாட்டை ஒருங்கிணைத்து செயல்படச் செய்வதற்காக ஒரு குழு அமைப்பதற்கு வகை செய்தது.

12. பொதுச் சொத்துகள் (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) குறித்த சட்டம், 1992

அரசு மற்றும் அரசு சாராத பொது அமைப்புகளின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளுக்கு வேண்டுமென்றே சேதம் விளைவிப்பதைக் குற்றமாக்குவதற்கு வழி வகுத்தது.

13. சிறப்புக் காவல் குழு சட்டம், 1993

முதலமைச்சர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் பாதுகாப்புக்கென ஒரு தனி சிறப்புக் காவல் குழுவை அமைப்பதற்கு வகை செய்தது.

14. ஊராட்சிகள் சட்டம், 1994

'பஞ்சாயத்து ராஜ்' சட்டம் என வழங்கப் பெறும் அரசமைப்புச் (73–வது திருத்த) சட்டத்தின் அடிப்படையிலான சட்டம் நிறைவேற்றப்பெற்றது. பஞ்சாயத்து அமைப்பில் மூன்று அடுக்கு முறையைக் கொண்டு வந்ததோடு, மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இடத்தை ஒதுக்கீடு செய்யவும் வகை செய்தது. மேலும், மாநிலத் தேர்தல் ஆணையம் ஒன்றை அமைக்கவும், மாவட்டத் திட்டக் குழுவை அமைக்கவும் வகை செய்தது.

15. கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம், 1994

பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களைக் கட்டாயப்படுத்தும் வகையில் இயற்றப்பட்டது.

16. மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டம், 1994

'நகர் பாலிகா' சட்டம் என்று வழங்கப்பெறும் அரசமைப்புச் (74–வது திருத்த) சட்டத்தின் அடிப்படையில் இது இயற்றப்பட்டது. நகராட்சிகளுக்கும் இது பொருந்துவதாக அமைந்தது. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் பதவிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யவும் வகை செய்தது.

17. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிச் சட்டங்கள், 1994

இந்நகராட்சிகள், மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட வகை செய்தன.

பதினோராவது பேரவை (1996–2001)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று நான்காவது முறையாக கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 13–5–1996 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

2. பதினோராவது பேரவை செயல்படத் துவங்கிய முதல் ஆண்டில் ஆளுநராக இருந்த டாக்டர் எம். சென்னா ரெட்டி 2–12–1996 அன்று தமது பதவிக் காலத்திலேயே இயற்கை எய்தினார்.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழாவும் மற்றும் சட்டமன்றப் பேரவை வைர விழாவும் 14–7–1997 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன. மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவினை சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் திரு. மன்மோகன் சிங் லிபரான் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழா மலரினை வெளியிட இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் சால்வைகள், நினைவுப் பரிசுகள் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டனர்.

4. இந்தியக் குடியரசின் பொன் விழாக் கொண்டாட்டங்களையொட்டி, 'குடியரசு வளர்ச்சியில் சட்டமன்றத்தின் பங்கு' எனும் தலைப்பில் குடியரசு தினப் பொன் விழா கருத்தரங்கம் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மாநாட்டு அரங்கத்தில் 22–1–2001 அன்று நடைபெற்றது.

5. பத்தாவது பேரவையில் விதியைத் தளர்த்தி ஆளுநரைப் பற்றி தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களையும், உண்மைக்கு மாறாகப் பதியப்பட்ட சில தகவல்களையும் நீக்க வேண்டுமென்று எழுப்பப்பட்ட கோரிக்கையின்மீது தீர்ப்பளிக்கையில், ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் மாற்றம், திருத்தம் அல்லது நீக்கம் செய்ய பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லையென 29–4–1997 அன்று பேரவைத் தலைவர் தீர்ப்பளித்தார். தீர்ப்பின்போது பேரவைத் தலைவர் அளித்த ஆலோசனையினை ஏற்று, பேரவைத் தலைவரால் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்ட பேரவை நடவடிக்கைக் குறிப்புகளைப் பின்னர் மாற்றவோ, நீக்கவோ, புதிதாக எதனையும் சேர்க்கவோ, இணைக்கவோ கூடாது எனப் பேரவை விதி 283–ல் காப்புரை சேர்க்கப்பெற்றதுடன், ஆளுநரின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் பேசக்கூடாது என்றுள்ள விதி 92 (vii)-ன் பயன்பாட்டை நிறுத்திவைக்க பேரவை விதி 287–ஐப் பயன்படுத்தக்கூடாது என்ற காப்புரையும் விதிகளில் சேர்க்கப்பெற்றது.

6. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் தேர்ந்தெடுக்கும் இடத்தில், தலா ரூபாய் 5 இலட்சம் மதிப்பிலான அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என பேரவையில் அறிவிக்கப்பட்டு பதினோராவது பேரவைக் காலம் வரை 215 தொகுதி அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

7. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென நான்கு தொகுப்புகள் கொண்ட 10 மாடிக் குடியிருப்பு வளாகம் ரூபாய் 51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 12–6–2000 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 26–7–1996 அரசினர் தீர்மானம்

தமிழகத்தில் மீண்டும் மேலவையைத் தோற்றுவிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றக் கோரி நிறைவேற்றப்பெற்றது.

2. 20–2–1999 அரசினர் தீர்மானம்

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாநில ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்படாமலிருக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. 11–5–1999 அரசினர் தீர்மானம்

மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைக் கட்டுதல் (தடுப்பு) சட்டம், 1993 (மையச் சட்டம் 46/1993)–ஐ தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

4. 8–3–2000 அரசினர் தீர்மானம்

சேலம் உருக்காலை நிருவாகம் தொடர்ந்து பொதுத் துறையின்கீழ் இருக்கவும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்கவும் தேவையான

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

5. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1996

அரசமைப்புச் சட்டத்தை வரைவதில் பெரும் பங்கு கொண்ட சட்ட வல்லுநர் அம்பேத்கர் பெயரில் தமிழகத்தில் ஒரு சட்டப் பல்கலைக்கழகம் அமைய வகை செய்யும் சட்டமுன்வடிவு 22–8–1996 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 29–8–1996 அன்று நிறைவேற்றப்பெற்றது.

6. மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டமுன்வடிவு, 1996

சென்னை மாநகரத்தின் பெயரை மெட்ராஸ் என்பதற்குப் பதிலாக சென்னை என்று பெயர் மாற்றம் செய்ய வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–8–1996 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப் பெற்றது.

7. கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டம், 1997

உயர் கல்வி நிலையங்களில் புதிதாகச் சேர்பவர்களை ஏற்கெனவே உள்ள மாணவர்கள் கேலிவதை என்ற பெயரால் அத்துமீறித் துன்புறுத்து வதைத் தடுக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 29–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

8. தனியார் பண்டுவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1997

பல்கி வரும் தனியார் மருத்துவமனைகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அவற்றைப் பதிவு செய்துகொள்ளுதல், ஆய்வுக்கு ஆட்படுத்துதல் போன்ற சில சட்டக்கூறுகளைக் கொண்டு இயற்றப்பெற்ற சட்டமுன்வடிவு 28–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது. ஆயினும் சில மருத்துவர் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க இதன் செயலாக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது.

9. மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டம், 1997

மாநகராட்சிகளின் துணை மேயர்களின் பதவிக் காலத்தை, மேயர்களின் பதவிக் காலம் போலவே 5 ஆண்டுகளாக உயர்த்த வகை செய்தது. மேலும் 30–11–1996 மற்றும் 1–12–1996 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த சில வாக்குறுதிகளுக்குச் செயல் வடிவம் தர வகை செய்யும் சட்டமுன்வடிவு 28–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

10. கடல்சார் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1997

ஏற்கெனவே இருந்து வந்த சட்டத்தின்படி தமிழகத்தில் கடல்சார் வாரியம் ஒன்று அமைக்கப் பெற்றது. இந்த வாரியத்தில் சில அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாகப் பங்கு பெற வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

11. பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1997

தமிழகத்தில் உள்ள சொத்துகளின் உரிமை மாற்ற ஆவணங்களை, குறைந்த பதிவுக் கட்டணம் கருதி, அண்டை மாநிலங்களில் பதிவு செய்வதால் அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பைத் தடுக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

12. பயிரிடு குத்தகையாளர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டம், 1997

வறட்சி, பெருமழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள பயிரிடு குத்தகையாளர்கள் தாங்கள் தரவேண்டிய குத்தகை பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவதிலிருந்து நிவாரணம் அளிக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

13. தகவல் அறியும் உரிமை சட்டம், 1997

அரசு இயந்திரத்தின் செயல்பாடு வெளிப் படையாக அமையும் வகையில், பொது மக்கள் தகவல்களைக் கேட்டுப் பெறுவதற்கு உரிமை அளிக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 17–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

14. குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1997

நிதி நிறுவனங்கள் என்ற பெயரால் பெறப்பட்ட காப்பீடுகளை உரிய காலம் முடிந்தவுடன் திரும்பத் தராமல் மக்களை ஏமாற்றியவர்களது சொத்துகளைக் கையகப்படுத்தி, அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர், உரியவர்களுக்குத் திருப்பி அளிக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 22–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

15. நகர் சார்ந்த பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1997

நகர்ப்பகுதிகளில் தங்கள் இல்லங்களுக்கு அருகிலேயே பெரும் எண்ணிக்கையில் கால்நடைகளை வளர்த்து அதன்மூலம் பொதுச் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிப்பதைத் தடுக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 25–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

16. நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு, 1997

ரிசர்வ் வங்கிச் சட்டத்தின்கீழ் வராத, உயர் வட்டி தருவதாக ஆசை காட்டி மக்களிடமிருந்து பணத்தை வைப்பீடுகள் என்ற பெயரில் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்படும் சில நிதி நிறுவனங்களின் தவறான செயல்பாட்டிலிருந்து மக்களைப் பாதுகாக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 30–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

17. பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1997

தந்தை பெரியார் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்று சேலத்தில் அமைய வகை செய்யும் சட்டமுன்வடிவு 30–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

18. தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 1998

பெண்களிடம் குறும்பு செய்து, கேலி செய்யும் செயல்களைத் (eve-teasing) தடுக்கும் வகையிலான சட்டமுன்வடிவு 24–11–1998 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 27–11–1998 அன்று நிறைவேற்றப்பெற்றது.

19. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1998

உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக இயங்கிட மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி) பொதுவான சட்டமுன்வடிவு 28–4–1997 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, ஆய்வுக் குழு (Select Committee) அமைத்து, ஆய்வு செய்யப்பட்டு அக்குழு திருத்தி அமைத்தவாறு 28–11–1998 அன்று அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

20. தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998

அரசுப் பணிகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன், ஒப்பந்தப்புள்ளிகள் கோரிப் பெற்று, ஏற்றுக்கொள்ளும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் சட்டமுன்வடிவு 27–5–1998 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 29–5–1998 அன்று நிறைவேற்றப்பெற்றது.

21. தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டம், 1999

'தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்கள் நல நிதி' என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களுக்கு ஓய்வூதியப் பலன்களையும், அவர்கள் இறந்துவிட்டால் அவர்களது வாரிசுகளுக்கு/ குடும்பத்தினருக்கு பண உதவியும் அளிக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 14–5–1999 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 17–5–1999 அன்று நிறைவேற்றப்பெற்றது.

22. தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞ) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

நன்கொடையாக ஏற்கெனவே வழங்கப்பட்ட நிலத்திற்கு மாற்றாக அதே மதிப்பிலான வேறொரு மாற்று நிலத்தை வழங்குவதற்கும், மாநில வாரியத்தின் பொறுப்பிலுள்ள நிலத்தை, நிலமில்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவாக வழங்குவதற்கும், பொது நோக்கங்களுக்காக நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ வழங்குவதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 18–5–2000 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–11–2000 அன்று நிறைவேற்றப்பெற்றது.

பன்னிரண்டாவது பேரவை (2001–2006)
முக்கிய நிகழ்வுகள்

1. பொதுத் தேர்தலுக்குப் பின்னர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 14–5–2001 அன்று அமைச்சரவை அமைந்தது. 21–9–2001 அன்று முதலமைச்சர் பொறுப்பிலிருந்து செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விலகினார்.

2. 21–9–2001 ஆம் தேதியிலேயே திரு. ஓ. பன்னீர்செல்வம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். 2–3–2002 ஆம் தேதிவரை அவர் முதலமைச்சர் பொறுப்பிலிருந்தார். செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 2–3–2002 அன்று மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

3. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் தலைமைச் செயலகத்தில் 21–4–2003 முதல் 13–5–2003 வரை நடைபெற்றது.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 12–9–2001 அரசினர் தீர்மானம்

சட்டமன்ற மேலவையை தமிழ்நாட்டில் மீண்டும் தோற்றுவிக்க வேண்டுமெனப் பதினோராவது பேரவையில் 26–7–1996 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

2. 16–4–2002 அரசினர் தீர்மானம்

திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்கவும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

3. 30–7–2004 அரசினர் தீர்மானம்

'தி இந்து' மற்றும் பிற நாளிதழ்கள் குறித்த உரிமைக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 7–11–2003 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இரத்துச் செய்வதுடன், அதன்படி எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் கைவிடப்பட வேண்டுமென்னும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

4. 13–4–2005 அரசினர் தீர்மானம்

திருக்குறளை இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

5. அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

அண்ணா பல்கலைக்கழகத்தை ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றி அமைத்து மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வருவதற்கான சட்டமுன்வடிவு 12–9–2001 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–9–2001 அன்று நிறைவேற்றப்பெற்றது.

6. தமிழ்நாடு புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2002

பொதுப் பணியாற்றும் இடங்களிலும், பொது இடங்களிலும், மக்கள் சேவை வாகனங்களிலும் புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் சட்டமுன்வடிவு 4–4–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

7. தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

ஊராட்சி மன்ற/ஒன்றிய/மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளுக்கு

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டியிடுவதைத் தடை செய்வதற்கான சட்டமுன்வடிவு 22–4–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

8. தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாநகராட்சி மேயர்/துணை மேயர், நகராட்சி/பேரூராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவியிடங்களுக்கு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டியிடுவதைத் தடை செய்வதற்கான சட்டமுன்வடிவு 22–4–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

9. தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் சட்டமுன்வடிவு, 2002

அத்தியாவசியப் பணிகளைப் பாதிக்கும் வேலை நிறுத்தங்கள்மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கும் சட்டமுன்வடிவு 6–5–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

10. சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

நிலத்தடி நீர் குறைந்து வருவதைத் தடுக்கும் வகையிலும், நிலத்தடி நீரை மறுசுழற்சிமூலம் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையிலும் மழை நீர் சேகரித்தலைக் கட்டாயமாக்கும் சட்டமுன்வடிவு 8–5–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

11. திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

வேலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்டமுன்வடிவு 10–5–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

12. தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

வழிபாட்டுத் தலங்களிலோ அல்லது அதன் வளாகத்திலோ உயிருடன் ஒருவரைப் புதைக்கின்ற சடங்கைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு 30–10–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–10–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

13. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

தரமான தொலைதூரக் கல்வியை வழங்கவும், மரபுசார் பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் வகையிலும், பாடத் திட்டங்களை மாநில மொழியில் அளிக்கக்கூடிய வகையிலும் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான சட்டமுன்வடிவு 10–5–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

14. தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

1998–ல் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு பெண்களைக் கேலி செய்வதைத் தடை செய்யும் சட்டத்தின் விதிகளைக் கடுமையாக்கி திருத்தி, "தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற சட்டம், 1998" என அதனை மாற்றும் சட்டமுன்வடிவு 30–10–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–10–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

15. தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

ஒருவரைக் கட்டாயப்படுத்தி மதம் மாற்றுவதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு 30–10–2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–10–2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

16. தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின்மூலம் தொலைக்காட்சித் திரையில் படக் காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2002

காணொலிப் பதிவுப் பேழைக் கருவி, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பின்மூலம் தொலைக்காட்சித்

திரையில் திரைப்படங்களைக் காட்டுவதைத் தடைசெய்வதற்கான சட்டமுன்வடிவு 9-5-2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10-5-2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

17. குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2002

சிறைச்சாலையில் விசாரணைக் கைதியாக உள்ள நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரிப்பதற்குப் பதிலாக நீதிமன்றங்களிலும், சிறைச்சாலைகளிலும் காணொலி ஒளிக்காட்சிமூலம் கைதிகளை விசாரிப்பதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 8-5-2002 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10-5-2002 அன்று நிறைவேற்றப்பெற்றது.

18. தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாநில அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படாதிருக்கவும், தடை செய்யப்பட்ட, கடும் தன்மைவாய்ந்த, தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகளைத் தனியார் சில்லறை விற்பனையாளர்கள் விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கும், மாநிலத்தின் பொது நிறுவனங்களில் ஒன்றான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) மட்டுமே இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்வதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 4-11-2003 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 7-11-2003 அன்று நிறைவேற்றப்பெற்றது.

19. தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப் படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2003

அதிக அளவிலான வட்டிக்குப் பணம் கொடுக்கும் செயல்களைத் தடுக்கவும், அவ்வாறு செய்பவருக்குக் கடுமையான தண்டனை வழங்கவும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 6-11-2003 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 7-11-2003 அன்று நிறைவேற்றப்பெற்றது.

20. தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004

தமிழ்நாட்டில் புதியதாக உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுவதற்கான சட்டமுன்வடிவு 31-7-2004 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப் பெற்றது.

21. தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

காணொலித் திருட்டை ஒழிக்கும் வகையில், அக்குற்றங்களில் ஈடுபடுபவர்களை குண்டர் சட்டத்தின்கீழ் காவலில் வைப்பதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 17-11-2004 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 18-11-2004 அன்று நிறைவேற்றப்பெற்றது.

பதின்மூன்றாவது பேரவை (2006 முதல்)

முக்கிய நிகழ்வுகள்

1. 2006 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, 13-5-2006 அன்று மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

2. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டு கால சட்டமன்றப் பணியினைப் பாராட்டி 11-5-2007 மற்றும் 12-5-2007 ஆகிய நாட்களில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ''சட்டப் பேரவையில் கலைஞர் பொன் விழா'' நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். 11-5-2007 அன்று முதல் நாள் நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். 12-5-2007 அன்று நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மாண்புமிகு

திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களும் உரையாற்றினார்கள். இரண்டாம் நாள் ஏற்புரையின்போது பொன் விழா நாள் அறிவிப்பாக, 'புதிய சட்டமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படும்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினைச் செய்தார்கள்.

3. தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 29–5–2009 அன்று தமிழக துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

4. பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடர் 2010 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாள் முதல் 11 ஆம் நாள் வரை நடைபெற்றது. அதுவே சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற கடைசி கூட்டத் தொடராகும். அக்கூட்டத் தொடரின் இறுதி நாளன்று புனித ஜார்ஜ் கோட்டை வரலாற்றைப் பற்றியும், சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்து உரையாற்றினார்கள்.

தீர்மானங்களும், சட்டங்களும்

1. 31–5–2006 அரசினர் தீர்மானம்

மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதியுதவி வழங்கப்படும் அனைத்து உயர் கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை வழங்க தொடர்ந்து செயலாற்றுமாறும், அதற்கென ஓர் அவசரச் சட்டத்தினைக் கொண்டு வருமாறும் மைய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. 6–12–2006 அரசினர் தீர்மானம்

சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு எடுத்துள்ள முடிவினைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. 7–12–2006 அரசினர் தீர்மானம்

இலங்கையிலே தமிழ் மக்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மேலும் மோசமான அளவில் தொடர்வதற்கு ஆழ்ந்த வேதனை தெரிவித்து, அதற்கு ஒரு முடிவினைக் காண, இலங்கைத் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று அமைதியாக வாழ்ந்திட உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

4. 30–3–2007 அரசினர் தீர்மானம்

மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பு குறித்து விவாதித்து நல்ல முடிவெடுக்க நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனே கூட்ட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

5. 31–1–2008 அரசினர் தீர்மானம்

செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைத்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அம்மையத்தின் தலைவராகச் செயல்பட மைய அரசு அறிவிப்புச் செய்ததற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. 27–3–2008 அரசினர் தீர்மானம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த்

திட்டத்திற்கு கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட மைய அரசின் ஒத்துழைப்பைக் கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

7. 1–4–2008 அரசினர் தீர்மானம்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடர்பாக அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிரான கர்நாடக வெறியர்களால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்திடவும், தமிழக மக்களின் உரிமைகளைக் காத்திடவும் முன்வரவேண்டுமென மைய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. 11–4–2008 தனி உறுப்பினர் தீர்மானம்

மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அறிவித்ததற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை செல்லாது என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும் எனப் பாராட்டுத் தெரிவிக்கும் திரு. ஜி.கே. மணி அவர்களின் தனி உறுப்பினர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

9. 23–4–2008 அரசினர் தீர்மானம்

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த, அங்கே மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கிடையே தமிழர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைக்கும், அங்கு முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கான பயனுள்ள பேச்சுவார்த்தைக்கும் ஏற்பாடு செய்ய முன்வரவேண்டுமென்று மைய அரசை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

10. 12–11–2008 அரசினர் தீர்மானம்

இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து தமிழர் பகுதியில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

11. 23–1–2009 அரசினர் தீர்மானம்

இலங்கையில் நடைபெறுகின்ற, தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட வேண்டுமென்றும், தமிழினம் அழிவதைத் தடுத்து, அமைதி மலர்ந்திட நடவடிக்கை எடுக்குமாறு "இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்" விடுக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

12. 11–1–2010 அரசினர் தீர்மானம்

நாடாளுமன்ற மக்களவையிலும், சட்டமன்றப் பேரவைகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ–இந்தியருக்கு உள்ள இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகள் நீட்டிக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதப்பெற்றுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

13. தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தினை நீக்கிக்கொள்ளும் சட்டமுன்வடிவு 29–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–5–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

14. தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

முந்தைய அரசால் கொண்டு வரப்பட்ட அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் சட்டத்தினை நீக்கிக்கொள்ளும் சட்டமுன்வடிவு 29–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–5–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

15. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு, 2006

சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் நீங்கலாக அரசு உதவி பெறாத அனைத்துத் தனியார் சுய நிதிக் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டமுன்வடிவு 31–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

16. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006

பள்ளிகளில் அனைத்து மாணவர்களும் தமிழ் மொழி பயில்வதைக் கட்டாயமாக்கும் சட்டமுன்வடிவு 31–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

17. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும், விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 27–7–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 2–9–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

18. தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மணல் திருட்டில் ஈடுபடும் குற்றவாளிகளால் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்படும் இழப்பினையும், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினையும் தடுப்பதற்கு, அத்தகைய குற்றவாளி எவரையும் குண்டர் சட்டத்தின்கீழ் சிறையில் அடைப்பதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 4–8–2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 28–8–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

19. தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாநகராட்சிகளின் மேயர்களையும், மூன்றாம் நிலை நகராட்சிகள் உள்ளடங்கலான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைமையாளரையும், மறைமுகமாக மன்ற உறுப்பினர்களால் அல்லது நேர்விற்கேற்ப உறுப்பினர்களால் அவர்களுக் கிடையேயிருந்து தேர்ந்தெடுப்பதற்கும், மேயர் அல்லது துணை மேயரை அரசு அறிவிக்கைமூலம் நீக்குவதற்கும், மற்றும் சிறப்பு ஊராட்சிகளை நகராட்சிகளாக அமைத்து உருவாக்குவதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 22–8–2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 31–8–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

20. தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை 'கல்வி வளர்ச்சி நாளாகக்' கொண்டாட வகைசெய்யும் சட்டமுன்வடிவு 31–8–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 2–9–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

21. தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006

நகர்ப்புற மாணவர்களுக்கும், கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சம வாய்ப்பை அளிக்கும்பொருட்டு தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வினை நீக்கும் சட்டமுன்வடிவு 6–12–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

22. சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தை மாதத்தில் ஒரு முறையாவது கட்டாயமாக நடத்த வேண்டும் என்பதற்கும், பிற மாநகராட்சிகளைப் போன்று சென்னை மாநகராட்சியிலும் மேயரும் துணை மேயரும் மறு தேர்தலுக்கு உரிமைத் தகுதியுள்ளவராவர் என்பதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 22–1–2007 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 23–1–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

23. தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007

மாநிலத்தில் ஊனமுற்றவர்களின் நலனுக்காக வாரியம் ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 8–5–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

24. தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007

நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் மற்றும் உழவர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட அனைத்து நலப் பயன்களும் மீனவர்களுக்கும், மீனைக் காய வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செய்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கும் நீட்டிக்கப்படுவதற்கான சட்டமுன்வடிவு 8–5–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10–5–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

25. தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

வாணிபம், வணிகம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் தேர்தல் நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்குவதை கடமையாக்குவதற்கும் மற்றும் மீறுகைக்கு 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் உள்ளது போன்று தண்டத் தொகை குறித்துரைப்பதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 10–5–2007 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 14–5–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

26. தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

தீப்பெட்டி அல்லது வாண வெடிப் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒவ்வொரு பணியாளரும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத் தொகைக்கு காப்பீடு செய்யப் பெறுவதையும், அதற்குரிய தவணைத் தொகையினை அளிப்பதனையும் அத்தகைய தொழிற்சாலை ஒவ்வொன்றின் கையுடைமையாளரின் கடப்பாடாக ஆக்குவதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 10–5–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

27. தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு எதிராக அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதால் மக்கள் நலன்கள் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த, நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது மற்றும் நிறைவேற்றுவது குறித்தான வகைமுறைகளை கடுமையாக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்களைத் திருத்தம் செய்வது குறித்த சட்டமுன்வடிவு 18–10–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 22–10–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

28. தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை தொடர்பாக கட்டணம் நிர்ணயம் செய்ய மாநில அரசுகள் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்திற்கும், வைப்பீட்டுத் தொகைக்கும் கூடுதலாக கட்டணம் எதனையும் வசூலிப்பதை குற்றச் செயலாக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 18–10–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 22–10–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

29. தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளுக்கான நியமனங்களிலும், பதவிகளிலும் கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தலா 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யும் சட்டமுன்வடிவு 22–10–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப் பெற்றது.

30. தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு, 2008

தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடும் வகையில் சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

31. திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

32. ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

33. தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

சிற்றூராட்சிகளின் துணைத் தலைவர்களுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைமையாளர்களுக்கும் துணைத் தலைமையாளர்களுக்கும் எதிராக கொண்டுவரப்பெறும் அதிகப்படியான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களால் ஊராட்சிகளின் நிருவாகம் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது மற்றும் நிறைவேற்றுவது குறித்தான வகைமுறைகளைக் கடுமையாக்கும் வகையில் திருத்தம் செய்வது குறித்த சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

34. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008

பெண்களின் நலனைப் பாதுகாத்து, அவர்களின் தகு நிலையினைச் சார்ந்துள்ள பொதுப் பிரச்சினைகளை உன்னிப்பாகக் கவனித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை வழங்கும் வகையில் மாநில மகளிர் ஆணையத்தை சட்டபூர்வமாக அமைத்துருவாக்கி, அதிகமான அதிகாரங்களை அளிப்பதற்கான சட்டமுன்வடிவு 22–4–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

35. வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 9–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

36. தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 9–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

37. தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

தெய்வீகச் சிலைகள் மற்றும் தலைவர்களின் சிலைகளைச் சேதப்படுத்தியும், விகாரப்படுத்தியும், இழிவுபடுத்தும் ஒருசில நபர்கள் ஊறுபாடுகளை விளைவிக்கிறார்கள். இத்தகைய நபர்களால் பொது ஒழுங்கானது பெருமளவில் பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்யும்பொருட்டு, அத்தகைய நபர்களை மேற்சொன்ன சட்டத்தின் "குண்டர்கள்" என்னும் வரையறைக்குள் கொண்டுவரவும், அத்தகைய நபர்களை தடுப்புக் காவலில் வைக்கவும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 13–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

38. தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008

தமிழ்நாடு மாநிலத்தில் காவல் பணியை அமைத்துருவாக்கி முறைப்படுத்துவது தொடர்பான சட்டங்களைத் தொகுத்து அமைப்பதற்காக, தற்போதைய காவல் சட்டத்திற்குப் பதிலாக புதிய காவல் சட்டத்தினை இயற்றுவதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு 14–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21–7–2009 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

39. சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008

சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தை இரண்டாகப் பிரிக்கவும், 1888 ஆம் ஆண்டு சென்னை

மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை சென்னைப் புறநகர்ப் பகுதிக்கு நீட்டிப்பதன்மூலம் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கென புதியதொரு ஆணையரகத்தை உருவாக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 11–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

40. தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்கு சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 2008.

பதிவு பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர் மாணவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் தமது மேன்மையான கடமையினைப் பயமின்றி இச்சமுதாயத்தின் நலனுக்கு ஆற்றுவதை உறுதி செய்யவும் அவர்களுக்கெதிரான மற்றும் இம்மாநிலத்தில் உள்ள மருத்துவ நிறுவனங்களின் சொத்துகளுக்கு எதிரான வன்முறை எதற்கும் தண்டனை வழங்குவதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 11–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

41. தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008.

கிறித்துவ சமூகத்தின் சார்பாற்றக் குழுவின் முறையீட்டின்பேரில் கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வகை செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்குள்ளாகவே போட்டியிட்டு பங்குபெறும் வகையில் அவர்களை இயல்விப்பதற்காக அவர்களுக்கு தனியே வழங்கப்பட்டுள்ள 3.5 சதவிகிதம் என்பதான ஒதுக்கீட்டினை விலக்கிக் கொள்ள வகை செய்யும் சட்டமுன்வடிவு 12–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

42. தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை, மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் போலிச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து அல்லது பதவியிடத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்றும் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள தண்டனை வழங்குவதுடன் குறைந்தது 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்ய வேண்டும் என்ற பட்டியல் சாதிகளுக்கும், பட்டியல் பழங்குடியினருக்குமான தேசிய ஆணையத்தின் பரிந்துரையின்படி இம்மாநிலத்திலுள்ள மாநகராட்சி களுக்கும் நகராட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் சட்டங்களைத் திருத்த வகை செய்யும் சட்டமுன்வடிவு 12–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

43. தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2009

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளுக்கான நியமனங்களிலும், பதவிகளிலும் அருந்ததியர்களுக்கு பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக 3 சதவிகிதம் வழங்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 26–2–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

44. தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டமுன்வடிவு, 2009

வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்கும், வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்கும் வேளாண்மை அல்லது தோட்டக் கலையில் தகுதிப்பாடு பெற்றுள்ள நபர்களின் பதிவேட்டினைப் பேணி வருவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 23–6–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 21–7–2009 அன்று நிறைவேற்றப்பெற்றது.

45. தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு, 2009

மாநிலத்தில் வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களாக இருக்கும் நபர்கள் அனைவருடைய திருமணங்களும் எந்த இடத்தில் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறதோ அந்த மாநிலத்தில், அந்த இடத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுவதற்கான சட்டமுன்வடிவு 30–6–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 21–7–2009 அன்று நிறைவேற்றப்பெற்றது.

46. தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2009

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், விலங்குகள், பங்கேற்பாளர்கள், பார்வையாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அத்தகைய நிகழ்ச்சிகளுக்கான நெறிமுறைகளை வகுத்துரைத்து முறைப்படுத்துவதற்குமான சட்டமுன்வடிவு 21–7–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப் பெற்றது.

47. தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 2010

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் போன்று தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை மாநில அளவில் உருவாக்குவதற்காக தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் ஒன்றை நிறுவும் வகையில் சட்டமுன்வடிவு 9–1–2010 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–1–2010 அன்று நிறைவேற்றப்பெற்றது.

48. தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்விமுறைச் சட்டமுன்வடிவு, 2010

மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு வகையான பள்ளிக் கல்வி முறைகள் இருந்துவருவதால் பாடத் திட்டங்கள், பாட நூல்கள், தேர்வுத் திட்டங்கள் வேறுபடுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் சமச்சீரான முறையை உருவாக்குவதற்கான சட்டமுன்வடிவு 9–1–2010 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–1–2010 அன்று நிறைவேற்றப்பெற்றது.

ஒரு வினா !

‘‘நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடமும் ஒரு கேள்வி. கடந்த சில நாட்களாக என்னுடைய மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிற ஒரு கேள்வியை உங்கள் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், நம்முடைய பேராசிரியப் பெருந்தகை அவர்களிடமும் வைக்கவேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

அதாவது, மனித வாழ்க்கையில் வயதாகின்ற போது கற்பனைகள் வறண்டு போகும் என்று சொல்வார்கள்; சிந்தனை ஓட்டம் குறைந்து போகும் என்று சொல்வார்கள்; எண்ணங்கள் வார்த்தைகளாக வடிவம் பெறுகின்றபோது வார்த்தைகள் வடிவம்கொள்ளத் தயங்கும் என்பார்கள்; நகைச்சுவை உணர்வு குறையும் என்பார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு வயதாக வயதாக கற்பனை அதிகரிப்பதும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நகைச்சுவை உணர்வு நாளுக்கு நாள் மெருகேறுவதும், எண்ணங்களும், புதிய சிந்தனைகளும், புதிய பார்வைகளும் ஒரு நாளைக்கு ஒரு நாள் போட்டிப் போட்டுக் கொண்டு, முகிழ்த்துக் கொண்டு வருவதையும் எங்களால் பார்க்க முடிகிறது. ஒரு மணி நேரம் அல்ல, 5 நிமிடம் நின்றாலே, எங்களைப் போன்றவர்களுக்கே, கால்கள் தடுமாறுகின்றன; வாய் குழறுகிறது. ஆனால் பேராசிரியப் பெருந்தகை அவர்கள் 3 மணி நேரம் நின்று ஒரு அட்சரம்கூடப் பிறழாமல் அற்புதமான அந்த உரையை ஆற்றி முடித்தார்கள். எனவே நீங்கள் இரண்டுபேரும் அந்த இரகசிய சூத்திரத்தை எங்களுக்குச் சொல்லித் தரவேண்டும். (சிரிப்பு)’’

– சட்டப் பேரவையில்
திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் (2–4–2008)

ஒகேனக்கல்
கூட்டுக் குடிநீர்த் திட்டம்

"ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தைப்பற்றி பலர் பல கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கேகூட, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த தங்கமணி அவர்கள் பேசுகிறபோது, இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்துவிடலாம் என்று நம்முடைய சொன்னார்கள். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலேதான் அந்த வார்த்தை வந்ததே தவிர, கால அட்டவணையின்படிதான் இன்றுவரையிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்தல்

முதல்வர் அவர்களே அறிவித்ததாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். அவர் எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்று சொன்னால், அப்போது தேர்தல் – கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் நடந்துகொண்டிருக்கக் கூடிய தேர்தல் – அந்தத் தேர்தல் நடந்த காரணத்தினாலே பல கலவரங்கள், பல சூழ்நிலைகள் இங்கே வந்துவிடக் கூடாது; ஒரு மாநிலத்திற்கு மாநிலம் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அதிகமாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்தக் கருத்தை எடுத்துச்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே ஃபுளோரைடு கலந்த நிலத்தடி நீர், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு, fluorosis என்ற கடுமையான நோய் பாதிப்பு. இவற்றால் இந்த இரண்டு மாவட்ட மக்கள் சிக்கி, ஒரு கொடுமையைச் சந்தித்துக்கொண்டிருந்தார்கள். அதற்காகத்தான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நீண்ட ஆண்டுக் காலமாக அந்த

மாவட்டத்திலே ஒரு கோரிக்கை இருந்து வந்தது. அதை நிறைவேற்றுகிற முயற்சியிலே பலர் பல சூழ்நிலைகளிலே ஈடுபட்டிருந்தாலும், பல நேரங்களில், பல சூழ்நிலையின் காரணமாக அது தடைப்பட்டுப் போயிருந்தது. ஆனால், 2006 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, ஆட்சிக்கு வந்தவுடனே இதிலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று எங்களுக்கு, இந்தத் துறைக்கு உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பணியிலே நாங்களும் ஈடுபட்டோம்.

ஜப்பான் நாட்டுக்கு என்னுடைய தலைமையிலேயே இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளோடு, பயணத்தை மேற்கொண்டோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய்ச் சந்தித்தோம். அதற்குப் பிறகு மத்திய அரசின் துணையோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற இந்த முயற்சியிலே ஈடுபட்டு, அதன் விளைவாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் மூலமாக 1,334 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றோம். அதைத் தொடர்ந்துதான் தருமபுரியிலே இதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும், கடந்த 26–2–2008 அன்று நடந்தது. முதல் கட்டப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் இப்பொழுது இறுதி செய்யப்பட்டு, இன்னும் மூன்று அல்லது நான்கு மாத காலத்திற்குள்ளாக பணிகள் எல்லாம் தொடங்கப்பட இருக்கின்றன.

இங்கேகூட, திரு. திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது, நிதிப் பற்றாக்குறை இருந்தால், அரசே அதிலே நிதியைச் செலுத்தி, திட்டத்தை நிறைவேற்றலாமே; விரைவுபடுத்த வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். நிதியைப்பற்றி எந்தப் பிரச்சினையும் கிடையாது. திட்டமிட்டபடி எல்லாப் பணிகளும் முறையோடு நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும்கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், இரண்டாவது கட்டப் பணிக்கான ஒப்பந்தமும், திட்டத்தின் செயல்பாடுகள்கூட திட்டமிட்டபடி காலக்கெடுவின்படிதான் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, வருகிற 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக அனைத்துப் பணிகளும் முடிவுற்று, அந்த இரண்டு மாவட்ட மக்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகக் குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும்கூட நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், எப்படி இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 3 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றுவோம் என்று முதலில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு முதல்வருடைய வேண்டுகோளையேற்று, அதை விரைவுபடுத்தி 2 ஆண்டுக் காலத்தில் முடித்து, அதிலே வெற்றி கண்டிருக்கிறோமோ, அதேபோல, இந்தத் திட்டத்தையும் விரைவுபடுத்துவதற்கான முயற்சியிலே இந்தத் துறை நிச்சயமாக ஈடுபடப் போகிறது என்பதையும் நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)''

சட்டப் பேரவையில் துணை முதல்வர்
மாண்புமிகு **திரு. மு.க. ஸ்டாலின்** (29–6–2009)

"முடியுமா நம்மால்" என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்!
"முடித்தே தீருவோம்" என்பது வெற்றிக்கான துவக்கம்

– கலைஞர்

மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்





மகளிர் சுய உதவிக் குழுக்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு அப்போதைய தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டன. வேளாண்மைக்கான பன்னாட்டு நிதியத்தின் நிதியுதவியில் இத்திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1997 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின்மூலம் நிதியுதவி அளித்து மகளிர் திட்டமாகத் தொடங்கி வைத்தார்.

சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த சுய உதவிக் குழுக்கள், 20-7-2006 முதல் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

தற்போது தமிழகத்தில் 4 இலட்சத்து 29 ஆயிரத்து 901 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இதில் 19 ஆயிரத்து 885 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களில் 68 இலட்சத்து 32 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதில் ஊரக சுய உதவிக் குழுக்கள் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 385 ஆகும். நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 520 ஆகும். இவர்களுடைய மொத்த சேமிப்புத் தொகை 2,536 கோடி ரூபாய் ஆகும். இதுவரை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூபாய் 7,576 கோடி ஆகும்.

கடந்த 3½ ஆண்டுகளில் மட்டுமே 1,17,545 மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. இதில், இந்த நிதியாண்டில் (2009-2010) மட்டும் 42 ஆயிரத்து 52 குழுக்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.


2006 முதல் 2010 பிப்ரவரி இறுதிவரை, 2 இலட்சத்து 23 ஆயிரத்து 509 மகளிர் சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி மானியம் பெற்றுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆன நிலையிலும், சுழல் நிதி மானியம் வாங்கத் தகுதியிருந்தும், அவ்வாறு மானியம் பெறாமல் இருந்த குழுக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன என்பதை அறிந்து 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இத்தகைய குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்குவதற்கு ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்து அரசு அறிவித்தது. இதனடிப்படையில், சுழல் நிதி மானியம் பெறத் தகுதியிருந்தும், சுழல் நிதி பெறாத ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குழுக்களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் சுழல் நிதி மானியமாக ரூபாய் 150 கோடி வழங்கப்பட்டது. இந்த நிதியாண்டில் (2009-2010) மட்டும் 43,509 குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் 2008-2009 ஆம் ஆண்டில் சுமார் 13 இலட்சத்து 74 ஆயிரத்து 579 சுய உதவிக் குழுக்கள் சுமார் 10 ஆயிரத்து 527 கோடியே 37 இலட்சம் ரூபாய் வங்கிக் கடனுதவி பெற்று பயனடைந்துள்ளனர். இதே காலத்தில் தமிழ்நாட்டில் மட்டும் 2 இலட்சத்து 30 ஆயிரத்து 485 சுய உதவிக் குழுக்களுக்கு 2 ஆயிரத்து 174 கோடி ரூபாய் வங்கியின்மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் வழங்கப்பட்ட கடன் தொகையில் இது 20 சதவீதமாகும்.

கடந்த 3½ ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிக் கடனாக ரூபாய் 5 ஆயிரத்து 810 கோடி வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் சுய உதவிக் குழுக்கள்மூலம் தொழில்கள் தொடங்குவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களைவிட முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

குடியரசுத் தலைவர்கள்

டாக்டர் இராஜேந்திர பிரசாத்




26–01–1950 – 13–05–1962

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்




13–05–1962 – 13–05–1967

டாக்டர் ஜாகீர் ஹுசேன்




13–05–1967 – 03–05–1969

திரு. வி.வி. கிரி




03–05–1969 – 20–07–1969
24–08–1969 – 24–08–1974

திரு. பக்ருதீன் அலி அகமது




24–08–1974 – 11–02–1977

திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி




25–07–1977 – 25–07–1982

திரு. கியானி ஜெயில் சிங்




25-07-1982 - 25-07-1987

திரு. ஆர். வெங்கட்ராமன்




25-07-1987 - 25-07-1992

டாக்டர் சங்கர் தயாள் சர்மா




25-07-1992 - 25-07-1997

திரு. கே.ஆர். நாராயணன்



25-07-1997 - 25-07-2002

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்



25-07-2002 - 25-07-2007


திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல்



25-07-2007 முதல்


பிரதம அமைச்சர்கள்

பண்டித ஜவஹர்லால் நேரு




15-8-1947 - 27-5-1964

திரு. குல்சாரி லால் நந்தா



27-5-1964 - 9-6-1964,
11-1-1966 - 24-1-1966 (தற்காலிகப் பொறுப்பு)

திரு. லால் பகதூர் சாஸ்திரி




9-6-1964 - 11-1-1966

திருமதி இந்திரா காந்தி




24-1-1966 - 24-3-1977,
14-1-1980 - 31-10-1984

திரு. மொரார்ஜி தேசாய்




24-3-1977 - 28-7-1979

திரு. சரண் சிங்




28-7-1979 - 14-1-1980

திரு. ராஜீவ் காந்தி




31-10-1984 - 2-12-1989

திரு. வி.பி. சிங்




2-12-1989 - 10-11-1990

திரு. சந்திரசேகர்




10-11-1990 - 21-6-1991

திரு. பி.வி. நரசிம்ம ராவ்




21-6-1991 - 16-5-1996

திரு. ஏ.பி. வாஜ்பாய்




16-5-1996 - 1-6-1996,
19-3-1998 - 22-5-2004

திரு. எச்.டி. தேவே கவுடா




1-6-1996 - 21-4-1997

திரு. ஐ.கே. குஜ்ரால்



21-4-1997 - 19-3-1998

டாக்டர் மன்மோகன் சிங்



22-5-2004 முதல்

